ஸ்ரீ:
ஆழ்வார் எம்பெருமானர் ஜீயர் திருவடிகளே சரணம்.

திருவரங்கத்தமுதனர் அருளிச்செய்த
ப்ரபந்ந காயத்ரி என்னும்

# இராமாநுச நூற்றந்தாதி.

[இயற்பாவின் சரம ப்ரபந்தம்.]

பெருமாள்கோயில்
ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமி
அருளிய
"திவ்யார்த்த தீபிகை" யென்னும்
உரையுடன்,

"திவ்யப்ரபந்த திவ்யார்த்த தீபிகை" ஆபீஸாரால்,
சென்னை, மாடல் அச்சுக்கூடத்தில்,
பதிப்பிக்கப்பட்டது.

இரண்டாம் பதிப்பு.

சுக்கில௵
1929.

Registered Copy Right.

http://acharya.org

## ஸ்ரீமத். உ. வே. (காஞ்சீபுரம்) பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்யர் ஸ்வாமிகள் அருளிச்செய்த க்ரந்தங்கள்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி விரிவுரை ... | 3 | 0 |
| திருப்பாவையின் விரிவுரை ... | 1 | 0 |
| ௸ காலிகோ பைண்ட் ... | 1 | 4 |
| நாச்சியார் திருமொழி விரிவுரை ... | 1 | 8 |
| ௸ காலிகோ பைண்ட் ... | 1 | 12 |
| பெருமாள் திருமொழி விரிவுரை ... | 1 | 4 |
| ௸ காலிகோ பைண்ட் ... | 1 | 8 |
| திருச்சந்த விருத்தத்தின் ௸ ... | 1 | 10 |
| திருமாலை, திருப்பள்ளியெழுச்சி, அமலனாதிபிரான், கண்ணிநுண் சிறுத்தாம்பு—இவற்றின் விரிவுரை ... | 1 | 0 |
| ௸ காலிகோ பைண்ட் ... | 1 | 4 |
| பெரிய திருமொழி விரிவுரை 1,2 பத்துக்கள் ... | 3 | 0 |
| முதல் திருவந்தாதி விரிவுரை ... | 1 | 8 |
| இரண்டாந்திருவந்தாதி விரிவுரை ... | 1 | 4 |
| திருவெழுகூற்றிருக்கையும், திருமடல்களும் விரிவுரை ... | 2 | 4 |
| திருவாசிரியம், பெரிய திருவந்தாதி ௸ ... | 2 | 0 |
| இராமாநுச நூற்றந்தாதி ௸ ... | 0 | 12 |
| கூரத்தாழ்வான் வைபவம் ... | 0 | 4 |
| ஸ்ரீவசநபூஷணஸாரம் (மூலத்துடன் கூடியது.) ... | 1 | 0 |
| ௸ காலிகோ பைண்ட் ... | 1 | 4 |
| முகுந்தமாலையின் தெளிவுரை ... | 0 | 6 |
| ஆளவந்தார் ஸ்தோத்ரத்தின் தெளிவுரை ... | 0 | 12 |
| ௸ காலிகோ பைண்ட் ... | 1 | 0 |
| ஸுதர்சநசதகம் மிகத்தெளிவான தமிழுரை ... | 1 | 0 |
| நமஸ்காரதத்துவம் ... | 0 | 2 |
| ஸ்தோத்ரவ்யாக்யான சோதநம் ... | 0 | 3 |
| ப்ரணவாதிகாரதத்துவம் ... | 0 | 4 |
| வாத்ஸல்யார்த்த விவரணம் ... | 0 | 2 |
| விதவாவபந வித்வம்ஸநம் ... | 0 | 4 |
| உபந்யாஸரத்நமாலா (க்ரந்த லிபி) ஸம்ஸ்க்ருத பாஷை ... | 0 | 6 |
| பாதுகாஸஹஸ்ராவதார தத்துவம் ௸ ௸ ... | 0 | 4 |

### தெலுங்குலிபிப் பிரசுரங்கள்.

| | | |
|---|---|---|
| ஸ்ரீவரதராஜஸ்தவம் ஸ்ரீஸ்தவம் இவற்றின் விஸ்தாரமான மணிப்ரவாள வியாக்கியானம் ... | 1 | 8 |
| அதிமாநுஷஸ்தவத்தின் ௸ ... | 0 | 12 |
| திருப்பல்லாண்டு விரிவுரை ... | 0 | 4 |
| ஆசார்ய ஹ்ருதய மூலம் ... | 0 | 3 |
| ரஹஸ்ய மூலம் ... | 0 | 6 |

இன்னும் பல புஸ்தகங்களும் உள்ளன.

http://acharya.org

ஸ்ரீ:

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.



ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

# பொதுத் தனியன்கள்.

(நம்பெருமாள் அருளிச்செய்தது.)

𑌶𑍍𑌰𑍀𑌶𑍈𑌲𑍇𑌶𑌦𑌯𑌾𑌪𑌾𑌤𑍍𑌰𑌂 𑌧𑍀𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌗𑍁𑌣𑌾𑌰𑍍𑌣𑌵𑌮𑍍।
𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌪𑍍𑌰𑌵𑌣𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌰𑌮𑍍𑌯𑌜𑌾𑌮𑌾𑌤𑌰𑌂 𑌮𑍁𑌨𑌿𑌮𑍍॥

[ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்.
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம்.]

(ஆழ்வான் அருளிச்செய்தவை.)

𑌲𑌕𑍍𑌷𑍀𑌨𑌾𑌥𑌸𑌮𑌾𑌰𑌮𑍍𑌭𑌾𑌂 + 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌗𑍁𑌰𑍁𑌪𑌰𑌮𑍍𑌪𑌰𑌾𑌮𑍍॥
𑌯𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌚𑍍𑌯𑍁𑌤 + 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌸𑍍𑌯 𑌚𑌰𑌣𑍌 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇॥

[லக்ஷ்மீநாதஸமாரம்பாம் + வந்தே குருபரம்பராம்.
யோ நித்யமச்யுத + ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே.]

(ஆளவந்தார் அருளிச்செய்தது.)

𑌮𑌾𑌤𑌾 𑌪𑌿𑌤𑌾 𑌯𑍁𑌵𑌤𑌯𑌃 + 𑌪𑍍𑌰𑌣𑌮𑌾𑌮𑌿 𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌨𑌾॥

[மாதா பிதா யுவதய: + ப்ரணமாமி மூர்த்நா.]

(ஸ்ரீபராசரபட்டர் அருளிச்செய்தது.)

𑌭𑍂𑌤𑌂 𑌸𑌰𑌶𑍍𑌚 + 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍍𑌪𑌰𑌾𑌙𑍍𑌕𑍁𑌶𑌮𑍁𑌨𑌿𑌂 𑌪𑍍𑌰𑌣𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑍍॥

[பூதம் ஸரச்ச + ஸ்ரீமத்பராங்குசமுநிம் ப்ரணதோஸ்மி நித்யம்.]

http://acharya.org

ஸ்ரீ:.
எம்பெருமானார் திருவடிகளே சரணம்.
திருவரங்கத்தமுதனார் திருவடிகளே சரணம்.

# இராமாநுச நூற்றந்தாதி.

இராமாநுசனது நூற்றந்தாதி என விரியும். இராமாநுசன் விஷயமாக அந்தாதித் தொடையாற் பாடப்பட்ட நூற்றுச்சொச்சம் பாசுரங்களை யுடையதொரு பிரபந்தம் என்பது பொருள். இத்தொடர்மொழியில் தொக்குநின்ற ஆறும் வேற்றுமையுருபின் பொருளாகிய ஸம்பந்தம்-விஷயமாகவுடைமை; விஷ்ணுபுராணம், சடகோபரந்தாதி என்பவற்றிற்போல. இராமாநுசனைப்பற்றிய நூற்றந்தாதி என விரித்தால், இரண்டாம் வேற்றுமை யுருபும் பொருளும் உடன்தொக்க தொகையாம். இராமாநுசன் + நூற்றந்தாதி; "சில விகாரமா முயர்திணை" (நன்னூல்) என்றதனால் நிலைமொழி யீற்றுமெய் கெட்டது; 'கம்பராமாயணம்' 'நளவெண்பா' என்பவற்றிற்போல. இராமாநுச னூற்றந்தாதி என்பாரு முளர்.

இராமாநுசன் என்பது, ராம அநுஜ என்ற இரண்டு மொழி சேர்ந்து தீர்க்கஸந்திபெற்றது. ராமனுடன் பிறந்தவன் என்று பொருள். ராமாவதார ஸமயத்திலே இத்திருநாமம் இளையபெருமாளுக்கு வழங்கிவந்தது; பின்பு திருமலைநம்பி நியமனமடியாக, ஸ்ரீவைஷ்ணவ தர்சந நிர்வாஹகராகத் திருவவதரித்தருளின உடையவர்க்கு இத்திருநாமமாயிற்று. இளையாழ்வார் என்று தமிழ்த் திருநாமம்; லக்ஷ்மண முநி, இத்யாதி திருநாமங்களும் பர்யாய நாமங்களாம். அவ்வாசிரியர் விஷயமான நூற்றந்தாதியாய்த்து இது

அந்தாதி = அந்தத்தை ஆதியாக வுடையது; அன்மொழித் தொகை; வடமொழித்தொடர், தீர்க்கஸந்தி. அந்த ஆதி எனப் பிரிக்க. அந்தாதியாவது—முன்னின்ற செய்யுளின் ஈற்றிலுள்ள எழுத்தாயினும் அசையாயினும் சீராயினும் அடியாயினும் அடுத்து

http://acharya.org

வரும் செய்யுளின் முதலாக அமையும்படி பாடுவது; இங்ஙனம் பாடும் நூலினது ஈற்றுச்செய்யுளின் அந்தமே முதற்செய்யுளின் ஆதியாக அமையவைத்தல் மண்டலித்த லெனப்படும். இது தொண்ணூற்றாறுவகைப் பிரபந்தங்களுள் ஒன்றாம். பதிற்றந்தாதி நூற்றந்தாதி என்ற வகைகளில் இந்நூல் நூற்றந்தாதியாம். அதாவது—நூறு வெண்பாவினாலேனும் நூறு கட்டளைக் கலித்துறையினாலேனும் அந்தாதித் தொடையாற் கூறுவது. இத்திவ்யப்பிரபந்தம் நூறு பாசுரங்களுக்குமேல் அதிகமாக எட்டுப் பாசுரங்கள் கொண்டதாயினும் நூற்றந்தாதி யென்னத் தட்டில்லை; நூறு ஆயிரம் முதலிய பெரிய எண்களுக்குப் பத்தெட்டு குறையினும் மேற்படினும் அவை நூறு ஆயிரம் என்னத் தகுந்தவையேயாம். ஆயிரத்து நூற்றிரண்டு பாசுரங்கள்கொண்ட திருவாய்மொழியைத் 'திருவாய்மொழி யாயிரம்' என்றும், ஆயிரத்தெண்பத்தினாலு பாசுரங்கள்கொண்ட பெரிய திருமொழியைத் 'திருமொழி யாயிரம்' என்றும் அருளிச்செய்திருப்பது காண்க. யதிராஜ ஸப்ததி, வரவரமுநி சதகம் என்ற வடமொழி நூல்களிலும் அதிகமாக நாலைந்து ச்லோகங்களும் ஏழெட்டு ச்லோகங்களும் உள்ளமை காண்க. இங்ஙன் அதிகமாக இருப்பதுபோல் குறைவாயிருத்தலுமுண்டு;—"வாணனாயிரந் தோள் துணித்த" என்று ஆழ்வார்கள் பலவிடங்களிலு மருளிச் செய்கிறார்கள்; பரமசிவனது பிரார்த்தனைக்கிணங்கி எம்பெருமான் வாணனை நாலு கைகளோடும் உயிரோடும் விட்டருளினனாகப் புராணங்கள் கூறுகின்றமை அறியத்தக்கது. 'நாலாயிர திவ்யப்ரபந்தம்' என்ற வ்யவஹாரத்தின் தத்துவமும் உய்த்துணரத்தக்கது.

இப்பிரபந்தத்தில் நூற்றெட்டுப் பாசுரங்கள் அமைந்ததற்கும், பாட்டுத்தோறும் இராமாநுசத் திருநாமம் தட்டாமல் அநுஸந்திக்கப்பட்டிருப்பதற்கும் பெரியோர் ஒரு காரணங் கூறுவர்,—எம்பெருமானார் திருவடிகளில் அன்பு பூண்டவர்கட்கு இப்பிரபந்தம் ஸாவித்ரிபோலே நித்யாநுஸந்தேயமாகவேணுமென்று பாட்டுத்தோறும் திருநாமத்தைவைத்து நூற்றெட்டுப் பாட்டாக அருளிச்செய்தார்—என்று. ப்ரபந்ந ஸாவித்ரீ என்றும் ப்ரபந்ந காயத்ரீ என்றும் இதனை நம்முதலிகள் வ்யபதேசித்துப் போருவர்கள்.

http://acharya.org

இப்பிரபந்தம் எம்பெருமானார் காலத்திலே அவதரித்ததாயினும், பெரியபெருமாளால் அமுதனார்க்கு அருளப்பாடிட்டு எம்பெருமானாரால் திருச்செவி சார்த்தப்பட்டதாதலால் இது ஆழ்வார்களருளிச் செயல்களோடு சேர்த்து அநுஸந்திக்கலாயிற்று. திருக்கார்த்திகைக்குப் பின் ஆழ்வார் திவ்ய ப்ரபந்தங்கட்கு ஏற்பட்டுள்ள அநத்யயநம் இதற்கும் ஒக்கும்.

முதலாயிரம், பெரிய திருமொழி, திருவாய்மொழி, இயற்பா என்ற நான்கு ஆயிரங்களுள் நான்காவதான இயற்பாவில் சரமப் பிரபந்தமாகச் சேர்க்கப்பட்டிருக்கும் இந்த நூற்றந்தாதி. ப்ரணவார்த்தமான முதலாயிரத்தோடு நம்மாழ்வார் விஷயமான பாகவத சேஷத்வத்தை ப்ரதிபாதிக்கும் கண்ணிநுண்சிறுத்தாம்பைச் சேர்த்தாற்போல, கைங்கரியத்தில் களையறுப்பதான இயற்பாவுடனே இதனைச் சேர்த்து அநுஸந்திக்கை பொருத்தமுடைத்தேயாம்.

(திருவரங்கத்தமுதனார் வரலாறு.)

இவ்வமுதனார், ஒரு பங்குனித்திங்களில் ஹஸ்த நக்ஷத்ரத்தில் மூங்கிற்குடியில் திருவவதரித்து, திருவரங்கம் பெரியகோயிலில் இருந்ததுவே காரணமாகப் பெரியகோயில் நம்பி என்று ப்ரஸித்தராய் வாழ்ந்துவந்தார்.

[அஷ்டப்பிரபந்தம் செய்தருளினவரும் பட்டர் திருவடிகளில் ஆச்ரயித்து உய்ந்தவருமான "பிள்ளைப்பெருமாளையங்கார்" என்பவர்க்கு இவர் திருத்தகப்பனார் என்று சிலரும், பாட்டனார் என்று சிலரும் சொல்லுவர்.]

இவர் ஸகல சாஸ்த்ரங்களையும் அதிகரித்து மஹா நிபுணராய், தமக்குக் குலக்ரமமாகக் கிடைத்த ஸந்நிதி புரோஹித வ்ருத்தியையும் புராணபடந கைங்கர்யத்தையும் பெற்று மிகவும் ராஜஸராய்ச் செருக்குடன் வாழ்ந்துவரும் நாளிலே, உலகங்களை வாழ்விக்கத் திருவனந்தாழ்வானது திருவவதாரமாய்த் திருவவதரித்த எம்பெருமானார் தமது இயற்கையின்னருளாலே இவரைத்திருத்திப் பணிகொள்ளத் திருவுள்ளம்பற்றிக் கூரத்தாழ்வானுக்கு நியமிக்க, ஆழ்வானும் அவரை அநுவர்த்தித்து ஞானச்சுடர் கொளுத்தி எம்பெருமானார் திருவடிக்கீழ்க் கொணர்ந்து சேர்க்க, எம்பெருமானாரும் அவரைக் குளிரக் கடாக்ஷித்தருளி ஆழ்வான் பக்கல்

http://acharya.org

ஆச்ரயிக்கும்படி நியமிக்க, அப்படியே அவரும் ஆழ்வானை ஆச்ர யித்துத் தத்வஹித புருஷார்த்தங்களை ஐயந்திரிபறத் தெளிந்து ஆத்ம ஆத்மீயங்களை அந்த ஆசார்யன் திருவடிகளிலே ஸமர்ப்பித் துப் பரம ப்ரவணராயிருந்தார். இப்படியிருக்கையில், ஸ்வாசார்ய ருடைய உகப்புக்கு உறுப்பாகத் தமக்கு ப்ராசார்யரான எம்பெரு மானார் விஷயமாக ஒன்றிரண்டு பிரபந்தங்களைச் செய்து அவற்றை எம்பெருமானார் ஸந்நிதியிற் கொணர்ந்துவைக்க, எம்பெருமானா ரும் அவற்றை அவிழ்த்துக் கடாக்ஷிக்க, அவை தமது திருவுள்ளத் துக்கு இசைந்திராமையாலே அவற்றைக் கிழித்தெறிந்துவிட்டு அவரை நோக்கி, 'ஏதாவது பிரபந்தம் பாடவேணுமென்கிற விருப் பம் உமக்கிருக்குமாகில், உமக்கு உத்தேச்யரான ஆழ்வானுடைய வும் நமக்கு உத்தேச்யரான ஆழ்வார்களுடையவும் உகந்தருளின நிலங்களினுடையவும் ஸம்பந்தம் தோற்றமாறு ஒரு பிரபந்தம்செய் யும்' என்று நியமித்தருள, இவரும் அப்படியே செய்கிறேனென்று அந்த நியமநத்தை சிரஸாவஹித்து எம்பெருமானார் திருவடி களிலே மெய்யன்பர்க்கு நித்யாநுஸந்தேயமாம்படி பாட்டுக்கள் தோறும் இராமாநுசனென்னுந் திருநாமத்தையிட்டு நூற்றெட்டுப் பாட்டாக அருளிச்செய்து எம்பெருமானார் ஸந்நிதியிலேவந்து வணங்கி 'இதைக் கேட்டருளவேணும்' என்று பிரார்த்தித்து அநு மதிபெற்றுக் கூரத்தாழ்வான் முதலானோர் பேரோலக்கமாக இருக் கிற அங்குத்தானே இந்தப் பிரபந்தத்தை விண்ணப்பம் செய்ய, எம்பெருமானார் மற்றை முதலிகளோடும் திருச்செவி சார்த்தித் தலைதுலுக்கிப் போரவுகந்தருளி, தம்திருவடிகளில் ஸம்பந்தமுடை யார்க்கெல்லாம் அந்தப் பிரபந்தத்தை அன்று தொடங்கி என்றும் நித்யாநுஸந்தேயமாம்படி கற்பித்தருளியதுந் தவிர, அவரது வாக்கு அமுதவாக்கா யிருந்தமையால் அவர்க்கு அமுதன் என்ற திருநாமத்தையும் பிரஸாதித்தருளி மிகவும் கடாக்ஷித்தருளினார். ஆகையால் அதுமுதல் 'பெரியகோயில் நம்பி' என்ற திருநாமம் மாறித் திருவரங்கத்தமுதனார் என்ற திருநாமம் வழங்கத்தொடங் கிற்று. இப்பிரபந்தத்திற்கு ப்ரபந்ந காயத்ரீ என்ற திருநாமமும் அன்றேதொடங்கி நிகழலாயிற்று.

இந்த விருத்தாந்தம் சிறிது மாறுபாடாகவும் சொல்லப்படுவ துண்டு; எங்ஙனே யெனின்;—அமுதனார் எம்பெருமானாருடைய

http://acharya.org

நியமனம் பெற்று இப்பிரபந்தம் இட்டருள்வதாக அடையவளைந் தான் திருமதிளுக்கு இவ்வருகேயிருந்த ஒரு தென்னஞ்சோலைத் திருமண்டபத்தில் வீற்றிருந்து பட்டோலை கொண்டிருக்கும் போது, அவ்வளவில் எம்பெருமானார் அழகியமணவாளனது நிய மநத்தினால் ஆழ்வான் ஆண்டான் எம்பார் முதலிய அந்தரங்கசிஷ் யர்களோடு அவ்விடத்தே யெழுந்தருள அப்போது "செழுந் திரைப்பாற்கடல்" என்ற நூற்றைந்தாம்பாசுரம் தலைக்கட்டி, இருப் பிடம் வைகுந்தமென்ற பாசுரம் எழுதவேண்டிய தருணமாயிருந்த தென்றும், அது முதலான மூன்று பாசுரங்களும் எம்பெருமானார் திருமுன்பே தொடுக்கப்பட்டனவென்றும், பிறகு அரங்கேற்றி யானபின் 'இந்த விசேஷத்துக்கு ஸ்மாரகமாக இப்பிரபந்தத்திற்கு மாத்திரம் சாற்றுப் பாசுரங்கள் மூன்றாயிருக்கவேணும்' என்று ஆழ்வான் நியமித்தருளினரென்றும், ஆனதுபற்றியே மற்றைப் பிரபந்தங்கட்கு இரண்டு பாசுரம் சாற்றாயிருப்பது போலல்லாமல் இதற்கு மூன்று பாசுரம் சாற்றுகை ஸம்ப்ரதாயம் நிகழ்கின்றதென் றும் கோயில் கஸ்தூரி ஜீயர் பணிக்கக் கேட்டிருக்கை.

ஸர்வ ப்ரகாரங்களாலும் இத்திவ்ய ப்ரபந்தத்தின் வைபவம் மொழியைக்கடக்கும்பெரும்புகழுடைத்து. இந்த நூற்றந்தாதியை அறியக்கற்று வல்லாராகாதார் அவைஷ்ணவர்களே யாவர். இஃ தொன்றைமாத்திரம் கற்றாரேனும் * மீட்சியின்றி வைகுந்தமாநகர் மற்றதுகையதுவே. இத்தகைய வைபவம்வாய்ந்த இத்திவ்ய ப்ரபந் தத்திற்கு ஸ்ரீ மணவாளமாமுனிகள் ஸங்க்ரஹமாக ஓர் உரையும்; பிள்ளைலோகம் ஜீயர் சிறிதுவிரிவாக ஒரு வியாக்கியானமும் இட் டருளினர். அவ்விரண்டையுந் தழுவி, இன்னும் ஆவச்யக விஷயங் களையும் ஊடேசேர்த்து அனைவர்க்கும் எளிதாம்படி அடியேனால் எழுதப்படுகிற திவ்யார்த்த தீபிகை என்னுமிவ்வுரையில் குற்றங் குறைகளைக்காணது குணலேசத்தையே பெரியோர் கண்டு களிப் பாராக.

இங்ஙனம்,

உரையாசிரியன்,

பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கரார்யதாஸன்.

http://acharya.org

ஸ்ரீ:.

திருவரங்கத்தமுதனார் அருளிச்செய்த

# இராமாநுச நூற்றந்தாதியின்

# தனியன்கள்.

## வேதப்பிரான் பட்டர் அருளிச்செய்தவை.

(ஒருவிகற்ப நேரிசை வெண்பா.)

முன்னை வினையகல மூங்கிற் குடி யமுதன்
பொன்னங் கழற்கமலப் போதிரண்டும்—என்னுடைய
சென்னிக் கணியாகச் சேர்த்தினேன் தென்புலத்தார்க்
கென்னுக் கடவுடையேன் யான்.

| | |
|---|---|
| முன்னை வினை | முன்னே செய்த பாபங்களெல்லாம் |
| அகல | ஒழிவதற்காக, |
| மூங்கில் குடி அமுதன் | 'மூங்கிற்குடி' என்னுங் குலத்திலே தோன்றிய திருவரங்கத்தமுதனாருடைய |
| பொன் அம் கழல் கமலப்போது இரண்டும் | பொன்போல் அழகிய பாதாரவிந்தங்களிரண்டையும் |
| என்னுடைய சென்னிக்கு | எனது தலைக்கு |
| அணி ஆக | ஆபரணமாக |
| சேர்த்தினேன் | பொருந்தவைத்துக் கொண்டேன்; |
| யான் | இப்படி அமுதனாருடைய திருவடிகளைச் சூடப்பெற்ற அடியேன் |
| தென் புலத்தார்க்கு | தெற்குத் திக்கிலுள்ளாரான யமகிங்கரர்கட்கு |
| என்னுக்கு | எதுக்காக |
| கடவு உடையேன் | ப்ராப்தியுடையேன்? |

* * *:—நெடுநாளாக நான் செய்து போந்த கருமங்கள் தொலைந்து அக்கரும பலங்களின் அநுபவம் எனக்கு நேராமலிருப்பதற்கு ஒரு மஹோபாயம் கண்டறிந்து அனுட்டித்தேன்; அதாவது, மூங்கிற்குடியென்ற மஹாகுலத்திலே தோன்றிய திருவரங்கத்தமுதனாருடைய திருவடித் தாமரைகளை நான் சிரோபூஷண



http://acharya.org

மாக அணிந்துகொண்டேன்; அதனால் எனது ஸகல கருமங்களும் தீயினில் தூசாயொழிந்தன. இனி யமனுக்காவது யமபடர்களுக் காவது என்னருகே வருவதற்கு யாதொரு ப்ரஸக்தியுமில்லை: என்றாராயிற்று.

"முன்னை வினையகலச் சேர்த்தினேன்" என இயையும். [மூங்கிற்குடி.] வேயர்குலம், ஆஸூரிகுலம், கூரகுலம் என்பன போல மூங்குற்குடி யென்று ஒரு குலமுண்டாம். அமுதன்= இவர்க்கு, பெரியகோயில்நம்பி என்பது பண்டு வழங்கிவந்த திரு நாமம். இவர் இயற்றிய நூற்றந்தாதியைத் திருச்செவி சார்த்தி யருளிய எம்பெருமானார் இவருடைய வாக்கு அமுதவாக்கா யிரா நின்றதென்று உகந்தருளி அமுதன் என்று திருநாமம் ப்ரஸாதித் தருளினராம். கமலப்போது = தாமரைப்பூ. அணி = ஆபரணம். சேர்த்தினேன்=சேர்த்தேன் என்றபடி: இன்—சாரியை.

என்னுக்கு + கடவுடையேன் = என்னுக்கடவுடையேன்; (கடைக்குறை) கெடுதல்விகாரப் புணர்ச்சி. என்னுக்கு=எதுக்காக என்கை; "என்னுக்கவளை விட்டிங்குவந்தாய்" என்றார் குல சேகரப் பெருமாளும். [கடவுடையேன்.] கடவு=ப்ராப்தி; அதா வது—உரிமை. .... .... ... ... *

## கட்டளைக் கலித்துறை.

நயந்தரு பேரின்பமெல்லாம் பழுதென்று நண்ணினர்பால்
சயந்தரு கீர்த்தி யிராமானுசமுனி தாளிணைமேல்
உயர்ந்த குணத்துத் திருவரங்கத்தமு தோங்குமன்பால்
இயம்பும் கலித்துறையந்தாதி யோதவிசை நெஞ்சமே.

நெஞ்சமே — மனமே!,

நயம் தரு — விஷயங்களால் தரப்படுகிற

பேர் இன்பம் எல்லாம் — சிற்றின்பங்கள் யாவும்

பழுது என்று — வ்யர்த்தங்களென்று (அவற்றை விட்டொழிந்து)

நண்ணினர் பால் — தம்மை ஆச்ரயித்தவர்கள் விஷயத்தில்

சயம் தரு கீர்த்தி — ஸம்ஸார ஜயத்தைப் பண்ணிக் கொடுக்கும் புகழுடையயான

இராமானுச முனி — எம்பெருமானாருடைய

http://acharya.org

| | | | |
|---|---|---|---|
| தாள் இணைமேல் | இரண்டு திருவடிகள் விஷயமாக, | இயம்பும் | அருளிச்செய்த |
| உயர்ந்த குணத்து திரு அரங்கத்து அமுது | சிறந்த குணசாலியான திருவரங்கத் தமுதனார் | கலித்துறை அந்தாதி | கட்டளைக் கலித்துறையினு லமைந்த நூற்றந்தாதியை |
| ஓங்கும் அன்பால் | கொழுந்து விட்டோங்கிய பக்தியினாலே | ஓத | அத்யயநம்செய்ய |
| | | இசை | ஸம்மதித்திருக்கக் கடவை. |

* * *ஃ—விஷயாந்தரங்களின் அநுபவத்தினுலுண்டாகும் சிற்றின்பங்கள் யாவும் அற்பங்களென்றும் ஹேயங்களென்றும் கருதி அருவருத்து அவற்றில் நசையற்றுத் தம்மைவந்து அடி பணிகின்ற மஹாநுபாவர்களுக்கு ஸம்ஸார ஸம்பந்தத்தை அறுத் தருளி மோக்ஷத்தைத் தந்தருள்பவராய் இப்பெரும்புகழ் பரவப் பெற்றவரான எம்பெருமானார் விஷயமாக, பகவத்பாகவத பக்தி முதலிய மஹாகுணங்கள் நிறைந்த திருவரங்கத்தமுதனார் பரம பக்தி தலையெடுத்துச் சொன்ன நூற்றந்தாதி யென்னும் திவ்ய ப்ர பந்தத்தை ஓதுவதற்கு நெஞ்சே! நீ இசைந்திடாய் என்கிறார். நல் வழி தீவழிகளிற் போதற்கு நெஞ்சே முதற்காரணமாதலால் அத னுடைய ஆநுகூல்யம் பெறுதற்குப் பாரிக்கின்றாரென்க.

நயம்=விஷயாந்தரங்கள். "நாணாமை நள்ளேன் நயம்" (முதல் திருவந்தாதி) என்றவிடத்து, நயம் என்பதற்கு விஷயாந்த ரங்களென்று பொருள் அருளிச்செய்யப்பட்டிருத்தல் காண்க. **பேரின்பம்**—சிற்றின்ப மென்னவேண்டுமிடத்துப் பேரின்பமென் றது விபரீதலக்ஷணையாம். 'நல்லபாம்பு' என்னுமாபோலே. அன்றி, பேரின்பமுண்டென்று ப்ரமித்திருப்பார் கருத்தாலே சொல்லிற் றாகவுமாம்.

"ஆயிழையார் கொங்கை தங்கும் அக்காதலளற்றழுந்தி மாயு மென்னுவியை வந்தெடுத்தானின்று" என்று இவ்வமுதனார் தாமும், "𑌮𑌦𑌨𑌕𑌤𑌨𑍈𑌰𑍍 𑌨 𑌕𑍍𑌲𑌿𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌯𑌤𑍀𑌶𑍍𑌵𑌰𑌸𑌂𑌶𑍍𑌰𑌯𑌾𑌃" [மதநகத நைர் நக்லிச்யந்தே யதீச்வரஸம்ச்ரயா:] என்று தூப்புல்பிள்ளையும், "𑌕𑌾𑌮𑌾𑌦𑌿𑌦𑍋𑌷𑌹𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌪𑌦𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌨𑌾𑌂" [காமாதிதோஷஹர மாத்மபதாச்ரிதாநாம்] என்று பெரிய ஜீயரும் பணித்தவை இப் பாட்டின் முன்னடிகட்குச் சந்தையாக அநுஸந்தேயம்.

http://acharya.org

"....பழுதின்றி நண்ணினம்பால்" என்றும், "பழுதின்றி நண்ணிநன்பால்" என்றும் பாடபேதங்களுண்டாம். சயம்=ஜயம்; "நாவலிட்டுழி தருகின்றோம் நமன்றமர் தலைகள் மீதே" என்று மீசை முறுக்கிச் சொல்லப் பண்ணுகை.

[கலித்துறையந்தாதி—.] "முதற்சீர்நான்கும் வெண்டளைபிழையாக், கடையொருசீரும் விளங்காயாகி, நேர்பதினாறே நிரைபதினேழென் றோதினர் கலித்துறை யோரடிக்கெழுத்தே" என்பது, கட்டளைக்கலித்துறை யிலக்கண முணர்த்தும் ஸூத்ரமாகும். கட்டளைக்கலித்துறையில் ஒவ்வோரடிக்கும் உரிய ஐந்துசீர்களுள் முதல் நான்கும் ஈரசைச்சீர்களும் ஐந்தாவது விளங்காய்ச்சீருமாக வெண்டளை பிறழாமல் வரும். வரவே, நேரசை முதலான அடி ஒற்றொழித்துப் பதினாறெழுத்தும், நிரையசை முதலான அடி ஒற்றொழித்துப் பதினேழெழுத்துமாகத் தானே அமையும். வெண்பாவுக்குப்போலக் கட்டளைக் கலித்துறைக்கு ஓரடியின் இறுதிச்சீரோடு அடுத்த அடியின் முதற்சீர் வெண்டளை தவறாது வரவேண்டுமென்ற நியதி இல்லை. அந்த நியதிகொள்ளின், நிரையசை முதற் கட்டளைக் கலித்துறையெல்லாம் காய்முன்நிரைவந்து கலித்தளையாய் வெண்டளைவழுவாமாறு காண்க. கலிநிலைத்துறை, கலிவிருத்தம், ஆசிரியவிருத்தம் என்பவை முதலிய சிலவற்றிற்குப் போலக் கட்டளைக் கலித்துறைக்கு நான்கு அடிகளும் அளவொத்து வர வேண்டுமென்னும் நியதியுமில்லை. வெண்பா ஆசிரியப்பா முதலிய சிலவற்றிற்போலவே அளவொவ்வாமலே வரலாம். கட்டளைக்கலித்துறை பெரும்பாலும் ஏகாரவீற்றதும், சிறுபான்மை ஓகாரவீற்றதுமாம். இந்நூலில் எல்லாப்பாசுரங்களும் ஏகாரவீற்றனவே. நம்மாழ்வார் அருளிச்செய்த திருவிருத்தத்தில், "கோலப்பகல்களிறொன்றுகற்புய்ய" என்ற நாற்பதாம் பாசுரமொன்றே ஓகாரவீற்றது. ஓகாரவீறாய் வருவதற்கு வேறு மேற்கோள் கிடைப்பரிது. ஏகார வுயிரீறாகவன்றி மெய்யீறாகவந்த கட்டளைக் கலித்துறைகளும் சான்றோர் செய்யுளிற் காணப்படுகின்றன.

இத்திவ்யப்பிரபந்தம் அந்தாதித்தொடையாற் பாடப்பட்ட பிரபந்தமாதலின் சொல் தொடர்நிலை பொருள் தொடர்நிலையென்னும் இருவகையுள் சொல் தொடர்நிலையாம். [அந்தாதித் தொடை

http://acharya.org

யாவது—முன்னின்ற பாட்டின் இறுதி எழுத்தாயினும் அசையாயினும் சீராயினும் அடியாயினும் பின்வரும் பாட்டின் முதலாகப் பாடுவது.] இந்நூல் இறுதிச்செய்யுளின் அந்தமே முதற்செய்யுளின் ஆதியாக அமையும்படி மண்டலித்துப் பாடப்பட்டுள்ளமையுங் காண்க. .... .... .... *

## இதுவுமது.

சொல்லின் தொகைகொண் டுனதடிப்போதுக்குத் தொண்டுசெய்யும்
நல்லன்பரேத்து முன்நாமமெல்லா மென்றன் நாவினுள்ளே
அல்லும் பகலு மமரும்படிநல் கறுசமயம்
வெல்லும்பரம விராமாநுச விதென் விண்ணப்பமே.

| | |
|---|---|
| அறு சமயம் | அப்ராமாணிகங்களான ஆறு மதங்களையும் |
| வெல்லும் | நிரஸித்தருளின |
| பரம | ஆரியரான |
| இராமானுச | எம்பெருமானாரே! |
| உனது அடி போதுக்கு | தேவரீருடைய பாதாரவிந்தங்களிலே |
| தொண்டு செய்யும் | வாசிக கைங்கரியம் பண்ணுகிற |
| நல் அன்பர் | பரமபக்தர்கள் |
| சொல்லின் தொகை கொண்டு | சப்த ராசிகளைக் கொண்டு |

| | |
|---|---|
| ஏத்தும் | துதிக்கிற |
| உன் நாமம் எல்லாம் | தேவரீருடைய திருநாமங்களெல்லாம் |
| என் தன் நாவின் உள்ளே | எனது நாவிலே |
| அல்லும் பகலும் | அஹோராத்ரமும் |
| அமரும்படி | பொருந்தியிருக்கும்படி |
| நல்கு | க்ருபை செய்தருளவேணும்; |
| இதுவே என் விண்ணப்பம் | இவ்வளவே அடியேன் செய்யும் விஜ்ஞாபனம். |

* * *:—கூறுஞ்சமயங்களாறுங் குலையக் குவலயத்தே வந்தருளின ஸ்வாமிந்! தேவரீருடைய திருவடிவாரத்திலே சீலமில்லாச் சிறியேன் செய்யும் விண்ணப்பம் ஈதொன்றே; அது யாதெனில்; தேவரீரிடத்துப் பரமபக்தி பூண்டவர்கள் "தங்களன்பாரத் தமது சொல்வலத்தால் தலைத்தலைச் சிறந்து பூசிப்ப" என்ற கணக்கிலே தத்தம் சக்திக்கியன்றவாறுக சப்தராசிகளை யடுக்கி தேவரீருடைய திருநாமங்களை ஸங்கீர்த்தநம் பண்ணுவர்களன்றோ; அத்திருநாமங்

http://acharya.org

கள் இடைவிடாது என்நாவிலே திகழும்படி அநுக்ரஹித்தருள வேணும்; இஃதொன்றேயாய்த்து அடியேனுடைய பிரார்த்தனை— என்கிறார் ஒரு பக்த சிகாமணி.

தோகை என்பதற்கு ஸங்கியை என்று பொருள் கொள்ளு தலுமாம். எம்பெருமானார் விஷயமாக நூற்றெட்டுப் பாசுரங்கள் பாடவேணுமென்று ஒரு தொகையை நெஞ்சிலேகொண்டு நல் லன்பரான அமுதனார் அருளிச்செய்த தேவரீருடைய நாமமாலை யாகிய நூற்றந்தாதிப் பிரபந்தமானது எப்போதும் என் நாவிலே பொருந்துமாறு அருளவேணும் என்றதாகவுங்கொள்க. "எங்கள் கதியே இராமாநுச முனியே!, சங்கைகெடுத்தாண்ட தவராசா— பொங்குபுகழ், மங்கையர்கோனீந்த மறையாயிர மனைத்தும், தங்கு மனம் நீயெனக்குத் தா" என்றதுபோலவாம். .... *

[இம்மூன்று தனியன்களே ஸகல திவ்ய தேசங்களிலும் வழங்கு மவை; மற்றொரு தனியன் மேனாட்டில் அநுஸந்திக்கப் படுகிறதாம்; அதா வது.]

இனியென் குறைநமக் கெம்பெருமானார் திருநாமத்தால்
முனிதந்த நூற்றெட்டுச் சாவித்திரியென்னு நுண்பொருளைக்
கலிதந்த செஞ்சொற் கலித்துறையந்தாதி பாடித்தந்தான்
புனிதன் திருவரங்கத் தமுதாகிய புண்ணியனே.

(இதன் கருத்து:-) ஸர்வேச்வரன் ஆதியிலே ஸங்கல்பபூர்வக மாக உலகத்தைப் படைத்து முதலிலே சதுர்முகப்ரஹ்மாவுக்கு ஸாவித்ரியை உபதேசித்தான். இவ்வமுதனார் அந்த ஸாவித்ரியின் ஸாரார்த்தத்தை யெடுத்து இராமானுசன் என்னுந் திருநாமத்தோ டிணக்கிக் கட்டளைக் கலித்துறையிலே வைத்துத் தாம் அநுப வித்த அநுபவத்தின் பரீவாஹரூபமாக இந்நூற்றந்தாதியைப் பாடிப் பின்புள்ளாரான நமக்கும் உபகரித்தருளினார். இனி நமக்கு ஐஹிகாமுஷ்மிகங்களில் ஒரு குறையுமில்லை என்பதாம். "திரு நாமத்தால்" என்ற விடத்து, திருப்பெயரால் என்று பாடமிருப் பின் வெண்டளைக்குச் சேரும்.

தனியன் உரை முற்றிற்று.

http://acharya.org

ஸ்ரீ:.

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

அமுதனார் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

பெருமாள்கோயில் பிரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசாரியர் இயற்றிய

# இராமாநுச நூற்றந்தாதி

## உரையின் அவதாரிகை.

ஸகல சாஸ்த்ரங்களுக்கும் ஸங்க்ரஹம் திருவஷ்டாக்ஷரம். அதனுடைய பரம தாத்பர்யமாயும், ஆழ்வார்களுடைய திவ்ய ப்ர பந்தங்களின் ஸாரார்த்தமாயும், ஸ்ரீமதுரகவிகளுடைய உக்தி யாலும் அநுஷ்டாநத்தாலும் ப்ரகாசிதமாயும், நம் பூருவாசார்யர் களின் உபதேச பரம்பரையாலே ப்ராப்தமாயும், சேதநர்களனை வர்க்கும் இன்றியமையாத ஸ்வரூப உபாய புருஷார்த்தங்களின் நிஷ்க்ருஷ்ட வேஷமாயும், பரம ரஹஸ்யார்த்தமாயு மிருப்பது சரமபர்வ நிஷ்டை. அஃதிருக்கும்படியைத் திருவரங்கத்தமுத னார்க்கு எம்பெருமானார் தமது நிர்ஹேதுக க்ருபையினாலே கூரத் தாழ்வான் திருவடிகளிலே தம்மை ஆச்ரயிப்பித்தருளி அவர் முக மாக உபதேசித்தருளினார். அங்ஙனம் உபதேச ப்ராப்தமான அந்தச் சீரிய பொருளை இவ்வமுதனார் தாம் அநவரத பாவனை பண்ணி எம்பெருமானார் திருவடிகளை இடைவிடாது ஸேவித்துக் கொண்டு போந்தாராய் அவருடைய திருக்கல்யாண குணங்களைத் தமது பத்திப் பெருங்காதலுக்குப் போக்குவீடாகப் பேசி அநுப வித்தே தீரவேண்டும்படியான நிலைமை தனக்கு உண்டானமையா லும், சரமபர்வநிஷ்டையே சீரியதென்கிற பரமார்த்தத்தைச் சேத நர்கட்கு எளிதில் உணர்த்தவேணுமென்கிற க்ருபாமூலகமான கருத்தினாலும் தாம் எம்பெருமானாருடைய திவ்யகுண சேஷ்டி தாதிகளை ப்ரேமத்துக்குத் தகுதியாகப் பேசுகிற பாசுரங்களாலே

http://acharya.org

அவருடைய வைபவங்களை அனைவர்க்கும் வெளியிடா நின்று கொண்டு முன்பு ஆழ்வார் திருவடிகளுக்கே அற்றுத்தீர்ந்த மதுர கவிகள் தமது நிஷ்டையைக்கூறும் முகத்தாலும் பிறர்க்கு உப தேசிக்கும் முகத்தாலும் உஜ்ஜீவநத்துக்கு உபயுக்தமான அர்த் தத்தை லோகத்திலே வெளியிட்டருளினதுபோல, இவர் தாமும் அவ்வகைகளாலே ஆசார்யாபிமாநநிஷ்டர்க்கு அறிந்துகொள்ளத் தக்க அர்த்தங்களையெல்லாம் மிக்க சுருக்கமும் மிக்க விரிவுமின்றி நூற்றெட்டுப் பாசுரங்கள் கொண்ட இத்திவ்ய ப்ரபந்த முகத்தால் அருளிச்செய்கிறார். .... .... .... *

பூமன்னுமாது பொருந்திய மார்பன் * புகழ்மலிந்த
பாமன்னுமாற னடிபணிந் துய்ந்தவன் * பல்கலையோர்
தாம்மன்ன வந்த விராமாநுசன் சரணாரவிந்தம்
நாம்மன்னிவாழ * நெஞ்சே சொல்லுவோமவன் நாமங்களே. (க)

| | |
|---|---|
| நெஞ்சே! | ஓ மனமே! |
| பூ மன்னு மாது | தாமரைப்பூவில் பொருந்த முடையளா யிருந்த பிராட்டி |
| பொருந்திய மார்பன் | (அப்பூவை விட்டு வந்து) பொருந்து கைக்குறுப்பான போக்யதையை யுடைய திருமார்பை யுடையனான பெருமானுடைய |
| புகழ் மலிந்த பா | திருக்கல்யாண குணங்கள் நிறைந்த தமிழ்ப் பாசுரங்களிலே |
| மன்னு மாறன் | ஊற்றமுடையவரான நம்மாழ்வாருடைய |
| அடி | திருவடிகளை |
| பணிந்து | ஆச்ரயித்து |
| உய்ந்தவன் | உஜ்ஜீவித்தவரும் |
| பல் கலையோர் தாம் மன்ன வந்த | பலபல சாஸ்த்ரங்களை ஓதின மஹான்கள் நிலைபெறும்படி (இவ்வுலகில்) வந்தவதரித்தவருமான |
| இராமாநுசன் | எம்பெருமானாருடைய |
| சரண அரவிந்தம் | திருவடித் தாமரைகளை |
| நாம் மன்னி வாழ | நாம் ஆச்ரயித்து வாழ்வதற் குறுப்பாக |
| அவன் நாமங்களே | அவ்வெம்பெருமானாரது திரு நாமங்களையே |
| சொல்லுவோம் | ஸங்கீர்த்தநம் பண்ணுவோம். |

http://acharya.org

* * *:—தாமரைமலரிற் பிறந்த பெரிய பிராட்டியார் அப்பூவைவிட்டு "அகலகில்லேன் இறையும்" என்று வந்து மிக்க விருப்பத்துடன் வஸிக்கப்பெற்ற திருமார்பை யுடையனான திருமாலினது திவ்ய குணசேஷ்டிதங்களை நிறைத்துக்கொண்டிருக்கிற திருவாய்மொழி முதலான திவ்ய ப்ரபந்தங்களை அருளிச்செய்த நம்மாழ்வாருடைய திருவடிகளைத்தொழுது ஸத்தைபெற்றவராயும், பலபல சாஸ்த்ரங்களைக்கற்றும் உஜ்ஜீவநோபாயத்தில் த்ருடாத்யவஸாயமின்றியே ஸம்சய விபர்யயங்கள்கொண்டு தடுமாறுகின்றவர்களை ஒரு நிச்சயஜ்ஞானத்திலே நிலைநிறுத்தி வாழ்விக்கவந் தவதரித்தவராயுமிருக்கிற எம்பெருமானாருடைய திருவடிகளை நாம் ஆச்ரயித்து உஜ்ஜீவிக்குமாறு அவருடைய திருநாமங்களை வாயாரப் பேசுவோமென்று தமது திருவுள்ளத்தை நோக்கிச் சொல்லுகிறாராயிற்று.

எல்லா நூல்களும் மங்கலமொழி முதல் வகுத்துக்கூறவேண்டுவது மரபாதலால், பூ என்று தொடங்கினார். இச்சொல், திருச்சந்த விருத்தத்தில் சப்த சக்தியால் மாத்திரம் மங்கலமொழியாய் நின்றது; இங்கு அர்த்தசக்தியாலும் நின்றது என்ற விசேஷம் அறியத்தக்கது. (அங்கே, பூ—பூமி.)

எம்பெருமானார்க்கு அதிசயாவஹமான வைபவங்கள் பல்லாயிரமிருந்தாலும், ஆழ்வார் திருவடிகளில் ப்ராவண்யத்தையே அவர் தமக்குப் பெரிய வைபவமாக அத்யவஸித்திருந்தாராதலால் அவருடைய அத்யவஸாயத்துக்குப் பொருந்த "மாறனடி பணிந்துய்ந்தவன்" என்ற விசேஷணம் முற்பட்டது. இதனை யடியொற்றியே மணவாளமாமுனிகளும் "𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌧𑌵𑌾𑌙𑍍𑌘𑍍𑌰𑌿 𑌜𑌲𑌜𑌦𑍍𑌵𑌯 𑌨𑌿𑌤𑍍𑌯 𑌸𑍇𑌵𑌾𑌪𑍍𑌰𑍇𑌮𑌾𑌵𑌿𑌲𑌾𑌶𑌯 𑌪𑌰𑌾𑌙𑍍𑌕𑍁𑌶 𑌪𑌾𑌦𑌭𑌕𑍍𑌤𑌮𑍍" [ஸ்ரீமாதவாங்க்ரி ஜலஜத்வய நித்ய ஸேவாப்ரேமா விலாசய பராங்குச பாத பக்தம்] என்று தொடங்கினார்.

பாமன்னுமாறன்=ஆழ்வார் தாமருளிச்செய்த பாசுரங்களின் இனிமையைக்கண்டு தாம் அவற்றில் மிக்க ஊற்றமுடையவராயிருந்தாரென்கிறது. "தன்சீர் யான்கற்று மொழிபட்டோடுங் கவியமுத நுகர்ச்சியுறுமோமுழுதுமே" என்றும், "தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்" என்றும், "கேட்டு



http://acharya.org

ஆரார்வானவர்கள் செவிக்கினிய செஞ்சொல்லே" என்றும் தாமே அருளிச் செய்தாரிறே. மாறன்—ஆழ்வார் பிறந்தபொழுதே தொடங்கி அழுதல் பால் குடித்தல் முதலிய லோகவியாபாரம் ஒன்றுமின்றி உலகநடைக்கு மாறாக இருந்ததனால், இவர்க்கு 'மாறன்' என்ற திருநாமமாயிற்று; வலிய வினைகட்கு மாறாக இருத்தலாலும், அந்ய மதஸ்தர்களை யடக்கி அவர்கட்கு சத்ருவாயிருத்தலாலும், பாண்டிய நாட்டில் தலைமையாகத் தோன்றியதனாலும் வந்தபெயரென்றலுமுண்டு.

பல்கலையோர் தாம்மன்ன=நாநா சாஸ்த்ரங்களைக்கற்று வல்லவர்களான ஆழ்வான் ஆண்டான் எம்பார் முதலிய மஹான்கள் ப்ரதிஷ்டிதராகைக்காக என்றுமாம். எம்பெருமானாருடைய சரணாரவிந்த ப்ராப்திக்கு ஸாதநம்= அவருடைய திருநாமஸங்கீர்த்தநமேயாம் என்பது இப்பாசுரத்தில் வெளியாயிற்று. ... (க)

கள்ளார்பொழில் தென்னரங்கன் * கமலப்பதங்கள் நெஞ்சில்
கொள்ளாமனிசரை நீங்கி குறையல் பிரானடிக்கீழ்
விள்ளாதவன்ப னிராமாநுசன் மிக்க சீலமல்லால்
உள்ளாதென்னெஞ்சு * ஒன்றறியே னெனக்குற்ற பேரியல்வே. (உ)

- கள் ஆர் பொழில் தென் அரங்கன் — தேன் நிறைந்த சோலைகளையுடைய தென் திருவரங்கத்திலே பள்ளிகொள்ளும் பெருமானுடைய
- கமலம் பதங்கள் — தாமரைபோன்ற திருவடிகளை
- நெஞ்சில் கொள்ளா — தமது நெஞ்சிலே வையாத
- மனிசரை நீங்கி — மனிதர்களை விட்டொழித்து,
- குறையல் பிரான் அடிக்கீழ் விள்ளாத அன்பன் — திருமங்கை மன்னனுடைய திருவடிகளிலே என்றும் விட்டுநீங்காத பக்தியையுடையரான
- இராமாநுசன் — எம்பெருமானாருடைய
- மிக்க சீலம் அல்லால் — சிறந்த சீல குணத்தைத் தவிர
- ஒன்று — வேறொன்றையும்
- என் நெஞ்சு உள்ளாது — எனது நெஞ்சானது நினைக்க மாட்டாது:

(இவ்வாறாக)

- எனக்கு உற்ற பேர் இயல்வு — எனக்கு விளைத்ததொரு சிறந்த ஸ்வபாவத்திற்கு
- ஒன்று அறியேன் — ஒரு காரணத்தையும் அறிகின்றிலேன்.

http://acharya.org

* * *:—"நெஞ்சே! சொல்லுவோ மவன் நாமங்களே" என்றவுடனே எனது ஹ்ருதயமானது அவ்விராமாநுசனுடைய சீலத்தில் ஊன்றப்பெற்ற ஆச்சரியத்தை என்ன சொல்லுவேன்! என்று விஸ்மயப்படுகிறார். ஸ்ரீரங்கநாதனுடைய திருவடித்தாமரைகளை நெஞ்சாலும் நினையாத பாவிகளோடு நெடுங்காலம் பழகிக்கிடந்த என் நெஞ்சானது இன்று அப்பாவிகளோடு உறவை ஒழித்துவிட்டு, திருமங்கையாழ்வாருடைய திருவடிகளையே அநவரதம் இறைஞ்சுமவரான எம்பெருமானாருடைய சிறந்த சீலகுணமொன்றையே சிந்தியாநின்றது; இப்படிப்பட்டதொரு பெருந்தன்மை எனக்கு நேர்ந்ததற்குக் காரணம் அவ்வெம்பெருமானாருடைய நிர்ஹேதுக க்ருபாகடாக்ஷமேயொழிய வேறொன்றுண்டாக நானறிகின்றிலேன்.

உடையவர்க்கு நம்மாழ்வார் திருவடிகளில் பக்தியுள்ளபடியை முதற்பாட்டில் பேசினார்; "மாறன்பணித்த தமிழ்மறைக்கு மங்கையர்கோன் ஆறங்கங்கூற அவதரித்த" என்றபடி அவ்வாழ்வாருடைய தமிழ் வேதத்திற்கு அங்கமாக ஆறு திவ்யப்ரபந்தங்களை அருளிச்செய்தவரான திருமங்கையாழ்வார் திருவடிகளில் ப்ராவண்யமுடைமையை இப்பாட்டில் பேசினாராய்த்து. திருமங்கையாழ்வாருடைய திருவவதாரஸ்தலம்—திருக்குறையலூர் எனப்படும். "மண்ணியில் நீர்தேங்குங் குறையலூர் சீர்க்கலியன் தோன்றியவூர்" என்பது உபதேசரத்தினமாலை. "குறையல் பிரானடிக்கீழ் விள்ளாதவன்பன்" என்ற விசேஷணம் வீறுபெறும்படி, திருவாலி திருநகரியி லெழுந்தருளியிருக்கிற திருமங்கை மன்னனுடைய பாதாரவிந்த பீடத்தின்கீழ் எம்பெருமானாருடைய திருக்கோலம் எறியருளப் பண்ணப்பட்டிருக்கின்றமை உணரத்தக்கது.

சீலம்=மஹானாயிருப்பவன் மந்தமதிகளோடு புரையறக் கலந்து பரிமாறுங்குணம் சீலகுணமெனப்படும். எம்பெருமானார் மஹாநுபாவரா யிருந்துவைத்தும், தம்மை வெகு நீசராக நினைத்திருக்கிற இவ்வமுதனார் தம்மோடே கலந்து பரிமாறப்பெற்ற மஹாகுணத்திற்குத் தோற்றுச் சொல்லுகிற சொல் இது. உள்ளுதல்—சிந்தித்தல். 'பேரியல்வு' என்பதை ஆறும் வேற்றுமைத் தொகையாகவும் கொள்ளலாம், முதல் வேற்றுமையாகவும் கொள்

http://acharya.org

ளலாம். "இது எனக்கு ஸித்தித்த பெரிய விரகு" என்னவுமாம். ஒன்று என்பது காகாக்ஷிந்யாயத்தாலே கீழும்மேலும் அந்வயிக்கும்: மிக்க சீலமல்லால் ஒன்று உள்ளாது; எனக்குற்ற பேரியல்வு ஒன்றறியேன்—என்று. ... ... ... .... (உ)

பேரியல்நெஞ்சே அடிபணிந்தே னுன்னை * பேய்ப்பிறவிப்
பூரியரோடுள்ள சுற்றம் புலர்த்தி * பொருவருஞ்சீர்
ஆரியன் செம்மை யிராமாநுசமுனிக் கன்புசெய்யும்
சீரியபேறுடையார் * அடிக்கீ ழென்னைச் சேர்த்ததற்கே. (ங)

| | |
|---|---|
| பேர் இயல் நெஞ்சே! | மிகவும் கம்பீரமான மனமே! |
| உன்னை அடி பணிந்தேன் | உன்னை வணங்குகின்றேன்; (என்னை வணங்குவது எதற்காக என்னில்;) |
| பேய் பிறவி | ஆஸுரப் பிறப்பையுடையவர்களான |
| பூரியரோடு உள்ள | நீசர்களோடு (எனக்கு) இருந்த |
| சுற்றம் | உறவை |
| புலர்த்தி | போக்கடித்து |
| பொருவு அரும் சீர் | ஒப்பற்ற குணங்களையுடையவரும் |
| ஆரியன் | சிறந்த அநுஷ்டாநமுடையவரும் |
| செம்மை | (ஆச்ரிதரோடு) ருஜுவாகப் பரிமாறுந்தன்மை வாய்ந்தவருமான |
| இராமாநுச முனிக்கு | எம்பெருமானார் திறத்தில் |
| அன்பு செய்யும் சீரிய பேறு உடையார் | பக்தி பண்ணுவதையே பரம புருஷார்த்தமாகவுடையவர்களான கூரத்தாழ்வான் போல்வாருடைய |
| அடிக்கீழ் | திருவடிகளின் கீழே |
| என்னை | (பரம நீசனாயிருந்த) என்னை |
| சேர்த்ததற்கே | கொண்டு சேர்த்த மஹோபகாரத்திற்காகவே (உன்னை அடி பணிந்தேன்.) |

* * *:—"மந ஏவ மநுஷ்யாணாம் காரணம் பந்தமோக்ஷயோ:" என்றபடி நன்மை தீமைகட்கு முதற்காரணம் நெஞ்சேயாதலால், "நெஞ்சே! சொல்லுவோ மவன்நாமங்களே" என்ற பாரிப்புக்கு அந்தநெஞ்சு உடன்பட்டுத் தமது கொள்கைக் கிணங்க ஒழுகப் பெற்ற ஸந்தோஷத்தினால் அந்தத் தமது நெஞ்சை நமஸ்கரிப்பதாகக் கூறுகின்றார் இதில். இங்ஙனே நெஞ்சைத் தம்மில் வேறுபடுத்திக் கூறுதல் கவிமரபில் வந்த ஒருவகைச் சமத்காரம். ஆஸுர

http://acharya.org

ப்ரக்ருதிகளான நீசர்களோடு எனக்கிருந்த ஸம்ஸர்க்கத்தைப் போக்கடித்து, ஒப்பற்ற குணசாலியான எம்பெருமானாருடைய திருவடிகளில் ப்ராவண்யமாகிற பரமபுருஷார்த்தத்தைப் பெற்றுள்ள ஆழ்வான்போல்வாருடைய திருவடிகளின் கீழே என்னைக் கொண்டு சேர்த்த நெஞ்சே! இப்பெருநன்றிபுரிந்த உனக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்? "தலையல்லால் கைம்மாறிலேனே" என்றாற்போல உன்னைத் தலையால் வணங்குவது தவிர வேறொரு கைம்மாறு நான் செய்யகில்லேன் என்றாராயிற்று. பூரியர்=இழிபிறப்பாளர். புலர்த்துதல்—உலரச்செய்தல்; அதாவது போக்கடித்தல். பொருவு-ஒப்பு. ஆரியன்—"கர்தவ்யமாசரந் காமம் அகர்தவ்யமநாசரந்। திஷ்டதி ப்ரக்ருதாசாரே ஸ து ஆர்ய இதி ஸ்ம்ருத:." [கர்த்தவ்யமாசரந் காமம் அகர்த்யவ்யமநாசரந்—திஷ்டதி ப்ரக்ருதாசாரே ஸது ஆர்ய இதி ஸ்ம்ருதஃ.] செம்மையிராமாநுசமுனி=செம்மைக்குணமுடைய இராமாநுசமுனி என்றபடி: செம்மைக் குணமாவது வடமொழியில் 'ஆர்ஜவம்' எனப்படும். அதாகிறது-ருஜுவாயிருக்குந்தன்மை; இதற்கு ப்ரதிகோடியான குணம்—கௌடில்யம் எனப்படும். ஒருவன் ஒருவனை நோக்கி 'அப்பா! நீ எவ்வூர்?' என்றால் 'நான் தற்காலமிருப்பது இவ்வூர்' என்று விடையளிப்பதும், 'உன்பெயர் என்ன?' என்றால், 'என்பெயர் உண்டுவளர்ந்தான்' என்று விடையளிப்பதும் இவ்வாறாகக் கேட்பதற்கெல்லாம் கோணலாகவே விடையளிப்பது கௌடில்ய குணத்தின் காரியமாகும். உள்ளதை உள்ளபடியே சொல்லுகையும் செய்கையும் செம்மைக் குணத்தின் காரியமாகும். சக்ரவர்த்தி திருமகனார் பஞ்சவடியில் எழுந்தருளி யிருந்தபோது சூர்ப்பணகைவந்து, "ஆகதஸ்த்வமிமம் தேசம் கதம் ராக்ஷஸஸேவிதம்। கிமாகமநக்ருத்யம் தே தத்த்வமாக்யாதுமர்ஹஸி॥" [ஆகதஸ்த்வமிமம் தேசம் கதம் ராக்ஷஸஸேவிதம்—கிமாகமநக்ருத்யம் தே தத்த்வமாக்யாதுமர்ஹஸி.] ராக்ஷஸர்கள் வந்தடைந்திருக்கிற இவ்விடத்திற்கு நீர் எவ்வாறு வந்தீர்? வந்த காரியமென்ன? என்றுகேட்க, அதற்குப் பெருமாள் கோணலான உத்தரம் கூறலாமாயினும் அங்ஙன்கூறாது "ஆஸீத் தசரதோ நாம ராஜா" என்றுதொடங்கி நேரான உத்தரம் கூறினர். அவ்விடத்திலே வால்மீகி முனிவன் "ஆஜாநுபாஹு தயா

http://acharya.org

ஸவ[illegible]” [ருஜூபுத்திதயா ஸர்வம் ஆக்யாது முபசக்ரமே] என்கிறான். இதுவாய்த்து ஆர்ஜவகுணம்.

“இராமாநுசனடிக் கன்புசெய்யுஞ் சீரிய பேறுடையார்” என்றவிடத்து ஸ்ரீராமாநுஜ பக்தர்களெல்லாரையும் விவக்ஷிக்கிறார் என்றலும், கூரத்தாழ்வானை விசேஷித்துக் கருதுகின்றாரென்றலும் ஒக்கும். ... ... ... (௩)

என்னைப்புவியி லொருபொரு ளாக்கி * மருள்சுரந்த
முன்னைப்பழைவினை வேரறுத்து * ஊழி முதல்வனையே
பன்னப்பணித்த விராமாநுசன் பரன் பாதமுமென்
சென்னித்தரிக்க வைத்தான் * எனக்கேதுஞ் சிதைவில்லையே. (௪)

| | |
|---|---|
| ஊழி முதல்வனையே | காலம் முதலிய ஸகல பதார்த்தங்களுக்கும் காரணபூதனான எம்பெருமானையே |
| பன்ன | (எல்லாரும் விவேகித்து) அநுஸந்திக்கும்படி |
| பணித்த | (ஸ்ரீபாஷ்ய முகத்தாலே) அருளிச்செய்த |
| பரன் இராமாநுசன் | ஸர்வோத்க்ருஷ்டரான எம்பெருமானார் |
| புவியில் | இந்தப்பூமியிலே |
| என்னை ஒரு பொருள் ஆக்கி | (அபதார்த்தமாய்க் கிடந்த) என்னை ஒரு பதார்த்தமாக்கி |
| மருள் சுரந்த முன்னை பழைவினை வேர் அறுத்து | அஜ்ஞான மூலகங்களாய் மிகவும் அநாதிகளான (எனது) பாவங்களை வேரறநீக்கி |
| பாதமும் | தமது திருவடிகளையும் |
| என் சென்னி | எனது தலையிலே |
| தரிக்க வைத்தான் | நான் உகந்து தரிக்கும்படியாக வைத்தருளினார்; (இவ்வளவு மஹாப்ரஸாதம் பெற்றேனான பின்பு) |
| எனக்கு | அடியேனுக்கு |
| ஏதும் சிதைவு இல்லை | எவ்விதமான ஹானியும் இனி உண்டாக வழியில்லை. |

* * *:—எம்பெருமானாருடைய நிர்ஹேதுக விஷயீகாரத்திற்கு ஆளான நான் இனி ஒருநாளும் எவ்விதமான ஹாநியையும் அடையமாட்டேன் என்கிறார்,—பதார்த்தகோடியில் சேராமல்

http://acharya.org

துச்ச (துஸ்ஸஹ) னாயிருந்த எனது கருமங்களையெல்லாம் வேரற நீக்கி, தமது பாதாரவிந்தங்களையும் என் தலைமேலே வைத்தருளினார் எம்பெருமானார்; இப்பேறுபெற்ற எனக்கு இனி ஒருகுறையுமில்லை என்றாராயிற்று.

மருள் சுரந்த—அஜ்ஞாநத்தாலே செய்யப்பட்ட என்கை; மருளாலே சுரக்கப்பட்ட என்றவாறு. [ஊழிமுதல்வனையே பன்னப்பணித்த] ஊழிமுதல்வனான எம்பெருமானையே பரவும்படி அமுதனாராகிய தம்மைச் செய்தருளின—என்று அர்த்தமல்ல; பகவத்விமுகரா யிருந்தவர்களையெல்லாம் உபதேசாதி முகத்தாலே பகவத் ப்ரவணராம்படி செய்தருளினவர் என்று பொதுப்படையாகச் சொன்னபடி. ஊழிமுதல்வன்—பிரளயகாலத்தில் முழு முதற் கடவுளாயிருந்தவன் என்றுமாம்.

பரன் என்றதை இராமாநுசனுக்கு விசேஷண மாக்காமல் நிர்வஹிப்பதும் ஒருபுடையுண்டு; அதாவது—பரன் என்று பரம புருஷனான எம்பெருமானைச் சொல்லிற்றாய், அவனுடைய திருவடிகளையும் என் சென்னித் தரிக்கவைத்தான் என்றதாகவுமாம். "பரன் பாதமேன சென்னித் தரிக்கவைத்தான்" என்றும் பாடமாம். (என=என்னுடைய.) .... ... (௪)

எனக்குற்ற செல்வ மிராமாநுசனேன்று * இசையகில்லா
மனக்குற்றமாந்தர் பழிக்கில்புகழ் * அவன் மன்னியசீர்
தனக்குற்றவன்ப ரவன் திருநாமங்கள் சாற்றுமேன்பா
வினக்குற்றங் காணகில்லார் * பத்தியேய்ந்த வியல்விதேன்றே. (௫)

| | | | |
|---|---|---|---|
| எனக்கு உற்ற செல்வம் இராமாநுசன் என்று | 'நமக்கு ப்ராப்தமான ஸம்பத்து எம்பெருமானாரே' என்று | புகழ் | (அன்னவர்களுடைய பழிப்பே இதற்குப்) புகழாய்விடும்; |
| இசைய கில்லா | அத்யவஸாயங் கொண்டிருக்க மாட்டாத | அவன் | அவ்வெம்பெருமானாருடைய |
| மனக் குற்றம் மாந்தர் | துஷ்ட ஹ்ருதயர்களான மனிசர் | மன்னிய சீர் தனக்கு | நித்யஸித்தமான கல்யாண குணங்களுக்கு |
| பழிக்கில் | (இந்நூலைப்) பழிப்பர்களாகில் | உற்ற | தகுதியான |

http://acharya.org

| | | | |
|---|---|---|---|
| அன்பர் | அன்பையுடையவர்களான மஹான்கள் | அவன் திருநாமங்கள் சாற்றும் என் பா இனம் குற்றம் காணகில்லார் | அவ் விராமாநுசனுடைய திருநாமங்களைச் சொல்லுகின்ற என்னுடைய (இந்தப்) பாசுரமாலைகளிலுள்ள குற்றங்களைக் காணமாட்டார்கள். |
| பத்தி எய்ந்த இயல்விது என்று | (இந்நூலானது) பக்தியோடு கூடின ப்ரவ்ருத்தியையுடையதென்று (திருவுள்ளம் பற்றி) | | |

* * *:—உலகத்தில் ஒரு பிரபந்தம் பிறந்தால் அதனைத் தூஷிப்பார் பலரும், பூஷிப்பார் சிலரும் ஏற்படுவது வழக்கம். உண்மையில் தோஷங்கள் இல்லாதிருந்தாலும் எதையாவது சொல்லித் தூஷித்தே தீருவர்கள். குற்றங் குறைகள் இருந்துவிட்டால் தூஷகர்களின் உத்ஸாஹம் கேட்கவே வேண்டியதில்லை. அறிவிலியான நான் இயற்றும் இந்நூலில் தோஷங்கள் தான் மிகையாக இருக்கக்கூடும்; அவற்றைக்கண்டு எல்லாரும் இகழார்களோ என்று தாமே சங்கித்துக் கொண்டு, ஸமாதாநமும் தாமே கூறுகிறார் இதில்;—எம்பெருமானாரையே ஸர்வஸ்வமாகக் கொண்ட மஹாநுபாவர்கள் இந்நூலைக் கடாக்ஷிப்பர்களாகில் சொற்களிலுள்ள குற்றங் குறைகளில் அவர்கள் கண்வையாமல் "ஹா ஹா! பக்திப் பெருங்காதல் உள்ளடங்காமல் வெளிப்புறப்பட்ட சொல்தொடையன்றோ இது!" என்று உகப்பர்கள். ஏனெனில், அவர்கள் எம்பெருமானாருடைய திருக்குணங்களில் மெய்யே ஈடுபட்டவர்களாதலால் அவருடைய திருநாமங்களைப் பேசப்பிறந்த நூல் எத்தன்மைத்தாயினும் க்ரந்தகர்த்தாவின் ஹ்ருதய பரிபாக மொன்றையே கணிசித்து, "பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும் பத்தர் சொன்னவும் பன்னப்பெறுபவோ" என்று கொண்டு பக்தியை நோக்கி உகந்திடுவர்கள். எம்பெருமானாரிடத்து அத்தகைய பக்தி [அதாவது—'இவரே நமக்கு ஸர்வஸ்வம்' என்கிற அத்யவஸாயம்] இல்லாத கல்மஷபுத்திகளான மனிசர்கள், குணங்களை யறியமாட்டாதே கேவலம் தோஷைகதர்சிகளாகையாலே ஏதேனும் தோஷங்களை ஏறிட்டோ உள்ள தோஷங்களை எடுத்துரைத்தோ நிந்திப்பர்களாகில், அன்னவருடைய தூஷணம் நமக்கு பூஷணமேயா மித்தனை என்கிறார். "அலகை முலைசுவைத்

http://acharya.org

தாற் கன்பரடிக்கன்பர், திலதமெனத் திரிவார்தம்மை—உலகர், பழிதூற்றில் துதியாகும்" என்றாரிறே அருளாளப் பெருமாளெம் பெருமானாரும்.

இங்கே ஒரு சங்கை;—'பிறருடைய பழிப்பு நமக்கு அப்ரயோஜகம்' என்று சொல்லவேண்டியிருக்க, அவர்களுடைய பழிப்புத்தானே நமக்குப் புகழாம் என்கைக்குக் கருத்தென்? அவர்களது பழிப்பு இவர்க்கு எப்படி புகழாய் விடும்? என்றுசிலர் சங்கிக்கக்கூடும். அவர்கள் தெளியச் சொல்லுகிறோம்;—பழிப்பவர்கள் என்னவென்று பழிக்கின்றார்களென்னில்;—அமுதனாரம் ஒருவர்; அவர் இராமாநுச நூற்றந்தாதி என்றொரு பிரபந்தம் பாடினாராம்; அதில் ஒவ்வொருபாட்டிலும் இராமாநுசன் இராமாநுசன் என்று சொன்னதையே சொல்லிக் கொண்டு கிடக்கிறார். தவிரவும், சாஸ்திரங்களில் புருஷார்த்தமாகச் சொல்லப்பட்டுள்ள ஐச்வர்யம் முதலானவற்றை இகழ்ந்துரைக்கிறார்; ஸகல புருஷார்த்தங்களும் தமக்கு 'உடையவர்' தானும்; எம்பெருமானைக்கூட அவர் கண்ணெடுத்துப் பார்க்கமாட்டாராம். என்றிவைபோல்வன சில வார்த்தைகளைச் சொல்லிப் பழிப்பர்கள். வாஸ்தவத்தில் இவையெல்லாம் குணமேயாதலால் குணகீர்த்தநத்தில் சேர்ந்து புகழ்ச்சியேயாய்முடியக் குறையில்லையென்க. எம்பெருமானைப் பழித்த சிசுபாலாதிகளும் பர்யாயேண குணகீர்த்தநம் பண்ணினார்களாகவன்றோ உய்ந்துபோனது. "கற்றினம் மேய்க்கலும் மேய்க்கப்பெற்றான் காடுவாழ் சாதியுமாகப் பெற்றான், பற்றி யுரலிடையாப்புமுண்டான்" என்று பாவிகள் ஏசுவதெல்லால் அன்புடையார்க்கு குணகீர்த்தநமாகாநின்றதன்றோ. பெரிய திருமொழியில் "மானமருமென்னோக்கி" என்னுந் திருமொழியில் தூஷண பரமாகச்செல்லுகிற முன்னடிகளையும் பூஷணபரமாகச் செல்லுகிற பின்னடிகளையும் விவேகித்தறிக. "ஊரவர்கவ்வை எருவிட்டு" என்ற திருவாய்மொழியின் உட்கருத்தும் உய்த்துணரத்தக்கது. உத்தமாதிகாரிகளுடைய அத்யவஸாயமெல்லாம் ஸாமாந்ய ஞானிகளுக்கு இகழ்ச்சிக்கு உறுப்பாகுமென்பது ஸாரார்த்தம்.

"பத்தியேய்ந்த இயலிதென்றே" என்றும் பாடமுண்டாம். இது பத்தி நிறைந்த சொல்—என்றபடி. இயல்—சொல். (௫)



http://acharya.org

## 6. இயலும்பொருளும்.

இயலும்பொருளு மிசையத் தொடுத்து * ஈன்கவிகளன்பால்
மயல்கொண்டு வாழ்த்து மிராமாநுசனை * மதியின்மையால்
பயிலும்கவிகளில் பத்தியில்லாத வென் பாவிநெஞ்சால்
முயல்கின்றனன் * அவன்றன் பெருங்கீர்த்தி மொழிந்திடவே. (௬)

| | |
|---|---|
| ஈன் கவிகள் | விலக்ஷணரான கவிகள் |
| அன்பால் | ப்ரீதியினாலே |
| இயலும் பொருளும் | சப்தமும் அர்த்தமும் |
| இசைய | நன்கு பொருந்தும் படியாக |
| தொடுத்து | கவனம்பண்ணி |
| மயல் கொண்டு | வ்யாமோஹம் தலையெடுத்து |
| வாழ்த்தும் | துதிக்கும்படி நின்ற |
| இராமானுசனை | எம்பெருமானாரை |
| பயிலும் | வருணிக்கின்ற |

| | |
|---|---|
| கவிகளில் | பாடல்களிலே |
| பத்தி இல்லாத | பக்தியற்றதான |
| என் பாவி நெஞ்சால் | என்னுடைய பாபிஷ்டமான நெஞ்சினாலே |
| அவன் தன் | அவ்வெம்பெருமானாருடைய |
| பெரு கீர்த்தி | அளவற்றகீர்த்திகளை |
| மொழிந்திட | பேசுவதாக |
| மதி இன்மையால் முயல் கின்றனன் | புத்தி இல்லாமையினாலே நான் ப்ரவர்த்திக் கின்றேன். |

* * *:—"பத்தியேய்ந்த தியல்விதென்றே" என்று கீழ்ப் பாட்டிற் சொன்னவிவர், அப்படிப்பட்ட பக்தி தமக்கு உண்டோவென்று பார்த்தார்; அவ்விஷயத்துக்குத்தக்க பக்தி தமக்கு இல்லையென்றறிந்தார்; 'அந்தோ! நாமோ அவ்வெம்பெருமானாரைத் துதிக்க இழிந்தது!' என்று தம்மைத்தாமே வெறுத்துக் கொள்ளுகிறார் இதில்.—இன்கவி பாடும் பரமகவிகளான சில மஹான்கள் சொல்லின்பமும் பொருளின்பமும் நன்கு பொருந்துமாறு கவி பண்ணி ஆந்தரமான அன்பினாலே வ்யாமோஹித்து இராமாநுசனை வாழ்த்தா நிற்பர்கள்; அன்னவர்களுடைய பக்திபரீவாஹ ரூபமான கவிகளில் ஆதரமற்ற எனது பாவி நெஞ்சால் அவ்விராமாநுசனுடைய பெருப்பெருத்த புகழ்களையெல்லாம் பேசுவதாக நான் முயற்சி செய்கின்றேனே! இஃது என்ன புத்திகெட்ட தன்மை! என்று வெறுத்துக்கொள்ளுகிறார்.

"கவிகள் ....வாழ்த்து மிராமாநுசனை"—கவிகளால் மங்களா சாஸனம் பண்ணப்படுகிற இராமாநுசனை என்றபடி. மயல் எனி

னும் மையல் எனினும் ஒக்கும்; வ்யாமோஹம்; அறிவு கேடு: மங்களாசாஸநம் பண்ணும்போது அறிவு கெட வேணுமிறே. அறிவு உள்ளபடியே கிடந்ததாகில் 'வாழி, பல்லாண்டு, ஜயவிஜயீபவ' இத்யாதி சப்தங்கள் வெளிவர வொண்ணாதிறே. "மதியின்மையால்" என்றவிது நான்காமடியில் அந்வயிக்கக்கடவது. மதி–வடசொல். இன்மை=இல்லாமை. .... .... (சு)

மொழியைக்கடக்கும் பெரும்புகழான் * வஞ்சமுக் குறும்பாம்
குழியைக்கடக்கும் நம் கூரத்தாழ்வான் சரண்கூடியபின் *
பழியைக்கடத்து மிராமாநுசன் புகழ்பாடி அல்லா
வழியைக்கடத்தல் * எனக்கினி யாதும் வருத்தமன்றே. (எ)

மொழியை கடக்கும் — வாய்கொண்டு வருணிக்க முடியாதபடி வாசாமகோசரமான
பெரு புகழான் — பெரிய புகழையுடையவரும்
முக்குறும்பு ஆம் வஞ்சக் குழியை கடக்கும் — கல்விச்செருக்கு, செல்வச்செருக்கு, குலச்செருக்கு என்னும் மூவகைக் குறும்புகளாகிற படுகுழியைக்கடந்திருப்பவரும்
நம் — நமக்கு நாதருமான
கூரத்து ஆழ்வான் — கூரத்தாழ்வானுடைய
சரண் — திருவடிகளை
கூடிய பின் — நான் ஆச்ரயித்த பின்பு
பழியை கடத்தும் — ஸர்வபாப நிவர்த்தகரான
இராமாநுசன் — எம்பெருமானுருடைய
புகழ் பாடி — நற்குணங்களைப்பாடி
அல்லா வழியை கடத்தல் — ஸ்வரூபத்திற்குச் சேராத தீய வழிகளைத் தப்பிப் பிழைக்கையானது
எனக்கு — அடியேனுக்கு
இனி — இனிமேலுள்ள காலமெல்லாம்
யாதும் வருத்தம் அன்று — ஈஷத்தும் ப்ரயாஸஸாத்யமன்று; [எளிதேயாம்.]

* * *:—எம்பெருமானாரைத் துதிப்பதற்குத் தாம் யோக்யதையற்றவர் என்று பின்வாங்கப்பார்த்த அமுதனார், தமக்குள்ள ஆழ்வான் திருவடி ஸம்பந்தத்தை நினைத்து இஃது இருக்கும்போது எனக்கு அஸாத்யமானது ஒன்றுமில்லையென்று துணிவு

http://acharya.org

கொள்ளுகிறார் இதில்—"𑌵𑌾𑌚𑌾𑌮𑌗𑍋𑌚𑌰 𑌮𑌹𑌾𑌗𑍁𑌣 𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌗𑍍𑌰𑍍𑌯 𑌕𑍂𑌰𑌾𑌧𑌿𑌨𑌾𑌥𑌾𑌯" [வாசாமகோசர மஹாகுண தேசிகாக்ர்ய கூராதிநாத] என்றபடி வாய்கொண்டு வருணிக்கமுடியாத பெரும் புகழ் படைத்தவரும், கல்வி, செல்வம், குலம் என்ற மூன்றுவகை ஸம்பத்தும் புஷ்கலமாயிருந்தும் அவற்ருல் இறையும் அஹங்கார மடையாதவருமான கூரத்தாழ்வானுடைய சரணாரவிந்தங்களை ஆச்ரயித்து க்ருதக்ருத்யனை வெனக்கு எம்பெருமானுருடைய திருக்குணங்களைப் பாடுதலும் அதுவே காரணமாக அர்ச்சிராதிகதி யொழிந்த மற்ற கதிகளிற் போகாதபடி அவ்வழியேபோதலும் மிகவுமெளிதேயாம் என்ருராயிற்று.

நம் பூருவாசாரியர்கள் எல்லாருமே சிறந்த புகழுடையராயினும் ஆழ்வானுடைய புகழ் அத்யந்த விலக்ஷணமென்பது ப்ரஸித்தமான விஷயம். நம் தர்சநத்துக்கு மஹாத்ரோஹியான நாலூராணுக்குக் கொடிய நரகங்களைக் கொடுக்க வேணுமென்று பகவத்ஸந்நிதியிலே ப்ரார்த்திக்கவேண்டியிருக்க, பேரருளாளன் திருமுன்பே வரதராஜஸ்தவத்தை விண்ணப்பம் செய்து கண்தெரியும்படி வரம் வேண்டிக்கொள்ளீர் என்ற ஸ்வாசார்ய நியமநத்தையும் அதிக்ரமித்து "நான் பெற்றபேறு நாலூரானும் பெறவேணும்" என்று வரம் வேண்டிக்கொள்ளும்படி விசாலமான திருவுள்ளம்பெற்ற ஆழ்வானுடைய புகழை நாம் என்சொல்வோம்! "மொழியைக் கடக்கும் பெரும்புகழான்" என்று சொல்வது தவிர வேறு வாசகமில்லைகாணும்.

[வஞ்சமுக்குறும்பாமித்யாதி.] "𑌕𑍁𑌲𑌂 𑌰𑍂𑌪𑌂 𑌵𑌯𑍋𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌧𑌨𑌞𑍍𑌚 𑌮𑌦𑌯𑌨𑍍𑌤𑍍𑌰𑌂" [குலம் ரூபம் வயோ வித்யா தநஞ்ச மதயந்த்யமும்] என்று செருக்கை விளைக்கக்கூடியவை ஐந்து கிடந்தாலும், கல்விச்செருக்கு, செல்வச்செருக்கு, குலச்செருக்கு என்ற இம்மூன்று அஹங்காரங்கள் மிகக்கொடியவை; இவற்றைக் கடத்தல் ஆர்க்கும் அரிது; இவற்றைக் கடந்தவர் என்னும் ஏற்றம் ஆழ்வானொருவர்க்கே அஸாதாரண மென்பதாக எம்பெருமானார் காலத்திலேயே ப்ரஸித்தமாயிற்று. திருவாய்மொழியில் "பலரடியார்முன்பருளிய பாம்பணையப்பன்" என்றவிடத்து ஈடு முப்பத்தாறுயிரத்தில் ஆழ்வான் விஷயமாக அருளிச் செய்யப்பட்டதொரு ஐதிஹ்

http://acharya.org

யம் குறிக்கொள்ளத்தகும். மற்றும் பல இதிஹாஸங்களும் பன்னியுரைக்குங்காற் பாரதமாம். ... ... .... (எ)

வருத்தும் புறவிருள்மாற்ற * எம்பொய்கைப்பிரான் மறையின்
குருத்தின் பொருளையும் செந்தமிழ்தன்னையுங்கூட்டி * ஒன்றத்
திரித்தன் றெரித்த திருவிளக்கைத் தன்திருவுள்ளத்தே
யிருத்தும் பரமன் * இராமாநுசனெம் மிறையவனே. (அ)

| | |
|---|---|
| வருத்தும் | வருத்தத்தையுண்டுபண்ணக் கூடிய |
| புறம் இருள் | பாஹ்ய விஷயங்களைப் பற்றின அஜ்ஞானமாகிற இருளை |
| மாற்ற | போக்குவதற்காக |
| எம் பொய்கைப் பிரான் | நமது குலத் தலைவரான பொய்கை யாழ்வார் |
| அன்று | முற்காலத்தில் |
| மறையின் குருத்தின் பொருளையும் செந்தமிழ் தன்னையும் கூட்டி ஒன்ற திரித்து | வேதாந்தங்களிற் பதிந்துகிடக்கும் பொருள்களையும் செந்தமிழ்ச் சொற்களையுங் கூட்டி இரண்டையும் ஒன்று சேர ஒரு திரியாக்கி |
| எரித்த திரு விளக்கை | ஜ்வலிக்கச்செய்த (முதல் திருவந்தாதியாகிற) திருவிளக்கை |
| தன் திரு உள்ளத்தே | தமது திருவுள்ளத்திலே |
| இருத்தும் | வைத்துக்கொண்டிராநின்ற |
| பரமன் இராமாநுசன் | மஹாவைபவசாலியான எம்பெருமானார் |
| எம் இறையவன் | நமக்கு ஸ்வாமி. |

* * *:—பகவத்பாகவத விஷயம் அந்தரங்க விஷயமென்றும், சப்தாதி விஷயங்கள் பாஹ்ய விஷயம் (அதாவது—புறவிஷயம்) என்றும் சொல்லப்படும். அந்த பாஹ்ய விஷயங்களைப்பற்றின அஜ்ஞாநாந்தகாரமானது புறவிருள் எனப்படும்; [புறம்பான விஷயங்களைப்பற்றின இருள் புறவிருள்] அவ்விருளானது முதலிலே ஸுகரூபம்போல் தோற்றினாலும் பிறகு மிக்க வருத்தத்தை

http://acharya.org

விளைக்கக்கூடியது; அப்படிப்பட்ட கொடிய இருளை அகற்றுவதற்காகப் பொய்கையாழ்வார் "வையம் தகளியா வார்கடலே நெய்யாக வெய்யகதிரோன் விளக்காக" என்று தொடங்கித் திருவந்தாதி திவ்ய ப்ரபந்தமென்னும் ஒரு விளக்கை ஏற்றியருளினார். அவ்விளக்குக்கு எதைத் திரியாக்கினார் என்றால், வேதாந்தங்களில் திரண்டு கிடக்கும் ஸாரப்பொருள்களையும் இனிய தமிழ்ச்சொற்களையும் ஒன்று சேர்த்துத் திரித்தார். அப்படிப்பட்ட திருவிளக்கை எம்பெருமானார் தமது திருவுள்ளத்தினுள்ளே எப்போதும் அணையாதபடி ஸ்தாபித்தருளினார்; அவரே அடியேனுக்கு ஸ்வாமி என்றாராயிற்று.

இருளை மாற்றுவதற்கு விளக்கு வேண்டியதாதலாலும் பொய்கையாழ்வாருடைய திவ்யப்ரபந்தம் இருளை மாற்றுவதாதலாலும் அஃது ஒரு திருவிளக்காக ரூபிக்கப்பட்டதென்க. மறையின் குருத்து=மறையின் முடிவாகிய வேதாந்தம். அன்று=திருக்கோவலிடைகழியில் "நீயுந் திருமகளும் நின்றாயால்" என்ற பாசுரத்தின்படி நெருக்குண்ட அக்காலத்திலே என்கை. பொய்கைப்பிரான் எரித்த திருவிளக்கைத் தம் திருவுள்ளத்தே இருத்துகையாவது—அவருடைய அருளிச்செயலை எப்போதும் சிந்தை செய்தல். (அ)

இறைவனைக்காணு மிதயத் திருள்கெட * ஞானமென்னும்
நிறைவிளக்கேற்றிய பூதத்திருவடி தாள்கள் * நெஞ்சத்
துறையவைத்தாளு மிராமாநுசன் புகழோதும் நல்லோர்
மறையினைக்காத்து * இந்தமண்ணகத்தே மன்ன வைப்பவரே. (கூ)

| | | | |
|---|---|---|---|
| இறைவனை | ஸர்வ ஸ்வாமியான எம்பெருமானை | ஞானம் என்னும் நிறை விளக்கு ஏற்றிய | ஞானமாகிற பூர்ண தீபத்தை ப்ரகாசிப்பித்தருளின இரண்டாந் திருவந்தாதியை அருளிச்செய்த |
| காணும் | ஸாக்ஷாத் கரிப்பதற்கு உபகரணமான | பூதத் திருவடி தாள்கள் | பூதத்தாழ்வாருடைய திருவடிகளை |
| இதயத்து | ஹ்ருதயத்திலுள்ள | நெஞ்சத்து | தமது திருவுள்ளத்திலே |
| இருள் | அஜ்ஞாநமாகிற அந்தகாரமானது | | |
| கெட | நசிக்கும்படியாக | | |

http://acharya.org

| | |
|---|---|
| உறைய வைத்து | சாச்வதமாக ஸ்தாபித்து |
| ஆளும் | (அவற்றையே) அநுபவிக்கின்ற |
| இராமாநுசன் | எம்பெருமானாருடைய |
| புகழ் | திவ்ய குணங்களை |
| ஓதும் | இடைவிடாது அநுஸந்திக்கின்ற |
| நல்லோர் | விலக்ஷண புருஷர்கள்தாம் |
| இந்த மண் அகத்தே | இப் பூமண்டலத் திலே |
| மறையினை | வேதங்களை |
| காத்து | ரக்ஷித்து |
| மன்ன வைப்பவர் | என்றைக்கும் அழிவில்லாதபடி ப்ரதிஷ்டாபனம் பண்ண வல்லவர்கள். |

* * *:—'ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்யர்' என்னும் விருது இராமாநுசனுடையார்க்கே ஏற்குமென்கிறார்.—ஸர்வ ஸ்வாமியான எம்பெருமானை ஸாக்ஷாத்கரிப்பதற்கு எல்லார்க்கும் உபகரணமாயிராநின்ற ஹ்ருதயமானது அஜ்ஞாநாந்தகாரத்தாலே இருண்டு கெட்டுப்போகாதபடி பரஜ்ஞாநமாகிற பூர்ணதீபத்தை ஏற்றினவரான பூதத்தாழ்வாருடைய திருவடிகளைத் தமது திருவுள்ளத்திலே இடைவிடாது வைத்துக்கொண்டு அவற்றையே அனுபவிக்கும் எம்பெருமானாருடைய குணகீர்த்தநமே போது போக்காக இருக்கும் விலக்ஷணர்யாரோ அவர்கள்தான் வேதத்தை நன்றாக ரக்ஷித்து இந்நிலவுலகத்தில் நிலைநிறுத்தவல்ல மஹான்கள் என்றாராயிற்று.—"ஞானமென்னும் நிறைவிளக்கேற்றிய" என்றவிடத்து, "ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு" என்ற பூதத்தாழ்வார்தம்முடைய அருளிச்செயல் நினைக்கத்தக்கது. இதயம்=ஹ்ருதயம் என்ற வடசொல் விகாரம். பூதத்தாழ்வார் ஏற்றிய ஞானமென்னும் நிறைவிளக்காவது—இரண்டாந் திருவந்தாதியாகிற அவருடைய அருளிச்செயல். பூதத்திருவடி=திருவடியென்று இங்கே ஸ்வாமிக்கு வாசகம்; பூதத்தாரென்னும் ஸ்வாமி என்றபடி. "திருவடி தன் நாமம் மறந்தும்" "நமரும் பெறலடிகள்" "என்பிழைத்தாள் திருவடியின் தகவினுக்கு" இத்யாதியான அருளிச்செயல் பிரயோகங்களைக் காண்க. [**இந்த மண்ணகத்தே மறையினைக்காத்து மன்னவைப்பவர்**] எம்பெருமானார் ஸம்பந்தம் பெறாத மற்றையோர்கள் "வேதம் ப்ரமாணமேயல்ல"

http://acharya.org

என்று சொல்லுவாரும், அதனைப் பிரமாணமாக ஒப்புக்கொண்டும் அபார்த்தங்கள் பண்ணுவாருமாய் இருப்பதால் அவர்கள் யாவரும் வேதமார்க்க வித்வம்ஸிகள் ; இராமாநுசனுடையார் தாம் ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்யர்கள் என்றபடி. ... (கூ)

மன்னியபேரிருள் மாண்டபின் * கோவலுள் மாமலராள்
தன்னொடுமாயனைக் கண்டமை காட்டும் * தமிழ்த்தலைவன்
பொன்னடிபோற்று மிராமாநுசற் கன்பு பூண்டவர்தாள்
சென்னியிற்சூடும் * திருவுடையா ரென்றுஞ் சீரியரே. (கo)

| | |
|---|---|
| மன்னிய | ஒருவராலும் பேர்க்க முடியாதபடி நிலைத்துநின்ற |
| பேர் இருள் | (அஜ்ஞாநமாகிற) பெருத்த இருளானது |
| மாண்டபின் | (முற்பட்ட ஆழ்வார்களிருவரும் ஏற்றின திருவிளக்காலே) நன்றாக நீங்கின பின்பு, |
| கோவலுள் ஆயனை | திருக்கோவலூரில் ஆயனாரை |
| மா மலராள் தன்னொடும் | பிராட்டியோடு கூட |
| கண்டமை | தாம் ஸேவித்த படியை |
| காட்டும் | ("திருக் கண்டேன்" இத்யாதி ப்ரபந்த முகத்தாலே) வெளியிட்டருளின |

| | |
|---|---|
| தமிழ் தலைவன் | தமிழ்க்குத் தலைவரான பேயாழ்வாருடைய |
| பொன் அடி | அழகிய திருவடிகளை |
| போற்றும் | புகழுமவரான |
| இராமாநுசற்கு | எம்பெருமானார் திறத்தில் |
| அன்பு பூண்டவர் | பக்தியையுடையவர்களினது |
| தாள் | திருவடிகளை |
| சென்னியில் சூடும் திரு உடையார் | சிரோ பூஷணமாகக் கொள்ளுஞ் செல்வமுடையோர்தாம் |
| என்றும் சீரியர் | என்றைக்கும் ஸ்ரீமான்கள். |

* * *:—பொய்கையாழ்வாரும் பூதத்தாழ்வாரும் ஏற்றின இரண்டு திருவிளக்குகளாலும் இருள் நீங்கவே, " திருக்கண்டேன்

http://acharya.org

பொன்மேனி கண்டேன்" என்று திருக்கோவலூராயனாரைப் பிராட்டியோடுகூட ஸேவிக்கப் பெற்றார் பேயாழ்வார். தாம் அப்படி ஸேவித்ததாக மூன்றாந்திருவந்தாதி முகத்தால் வெளியிட்டருளின அவ்வாழ்வாருடைய திருவடிகளைத் துதிக்குமவரான எம்பெருமானார் திறத்தில் பக்தியையுடையவர்கள் யாரோ, அவர்களுடைய திருவடிகளைச் சிரோபூஷணமாகக் கொள்வதையே அழியாச் செல்வமாக நினைத்து ஸ்ரீராமாநுஜ பக்தர்களுடைய திருவடிகளைச் சிரமேற்கொள்ளுமவர்கள் தாம் நித்திய ஸ்ரீமான்கள் என்றாராயிற்று. "அரசமர்ந்தானடிசூடுமரசையல்லால் அரசாகவெண்ணேன் மற்றரசுதானே" என்று குலசேகரப் பெருமாளுக்கு ப்ரதமபர்வத்திலே உண்டான நிஷ்டை அமுதனார்க்கு சரமபர்வத்திலே உண்டானபடி. [ப்ரதமபர்வமாவது பகவத்விஷயம். சரமபர்வமாவது பாகவத விஷயம்.]

[கோவலுள் ஆயனை.] திருக்கோவலூரெம்பெருமான் க்ருஷ்ணாவதாரத்திலிருந்த ஆச்ரித பாரதந்திரிய மடங்கலும் தோற்ற ஸேவை ஸாதிக்கும்படியைப் பற்ற ஆயன் என்று திருநாமம் பெற்றான்; "திருக்கோவலூராயனார்" என்று ப்ரஸித்தி. இப்பாட்டில் பேயாழ்வார் "தமிழ்த்தலைவன்" என்று சிறப்பித்துக்கூறப்பட்டார். சீரியர்=சீர்மையுடையோர்; சீர்மையாவது ஸ்ரீமானாயிருக்கை. ... ... .... .... .... ... (௧௦)

சீரியநான்மறைச் செம்பொருள் * செந்தமிழா லளித்த
பாரியலும்புகழ்ப் பாண்பெருமாள் * சரணாம் பதுமத்
தாரியல்சென்னி யிராமாநுசன் தன்னைச் சார்ந்தவர்தம்
காரியவண்மை * என்னால் சொல்லொணாதிக் கடலிடத்தே. (௧௧)

| | |
|---|---|
| சீரிய நால் மறை செம் பொருள் | சிறந்த நால்வேதங்களிலுள்ள செவ்விய பொருள்களை |
| செம் தமிழால் | அழகிய தமிழ்ப் பாசுரங்களினால் |
| அளித்த | அருளிச்செய்தவரும் |
| பார் இயலும் புகழ் | பூமியெங்கும் பொருந்தின புகழையுடையவருமான |
| பாண் பெருமாள் | திருப்பாணாழ்வாருடைய |



http://acharya.org

| | |
|---|---|
| சரண் ஆம் பதுமம் தார் இயல் சென்னி | திருவடிகளாகிற தாமரைப் பூவாலே அலங்கரிக்கப் பட்ட திரு முடியை யுடையரான |
| இராமாநுசன் தன்னை | எம்பெருமானாரை |
| சார்ந்தவர் தம் | ஆச்ரயமாகப்பற்றி னவர்களுடைய |
| காரியம் வண்மை | அநுஷ்டாந வைலக்ஷண்ய மானது |
| இக்கடல் இடத்து | கடல் சூழ்ந்த இப் பூமியில் |
| என்னால் சொல்ல ஒண்ணாது | (இப்படிப்பட்ட வைபவமுடைய தென்று) என்னால் சொல்லித் தலைக்கட்ட முடியாதது. |

* * *:—எம்பெருமானுடைய ஸ்வரூப ரூபகுண விபூதிகளை யெல்லாம் விசதமாகப் பேசுகையாலே சிறந்தவையான நால்வேதங்களில் பொதிந்து கிடக்கும் நற்பொருள்களை "அமலனாதிபிரான்" என்னும் திவ்ய ப்ரபந்தத்தில் சுருக்கி அருளிச் செய்தவராய் நாடெங்கும் பரவின புகழையுடையரான திருப்பாணாழ்வாருடைய சரணாரவிந்தங்களாலே அலங்கரிக்கப்பட்ட திருமுடியை யுடையவரான எம்பெருமானாரை அடிபணிந்தவருடைய ஆசார வைலக்ஷண்யமானது என் வாய்கொண்டு வர்ணிக்க முடியாதபடி மிகவும் சிறந்தது என்றாராயிற்று.

சரண்=சரணமென்ற வடசொற் சிதைவு. பதுமம்=பத்மமென்ற வடசொல் விகாரம். தார்=மாலைக்கும் பூவுக்கும் பெயர்; இங்கே பூவைச்சொல்லும். நான்காமடியில், "காரியல் வண்மை" என்ற பாடமும் உண்டு; கார் என்று மேகமாய், மேகங்கள் ஜலஸ்தல விபாகம் பாராமல் நாடெங்கும் பரந்து தண்ணீரை வர்ஷித்து உபகரிக்குமாபோலே உலகமெல்லாந் திரிந்து ரஹஸ்யமான அர்த்தங்களைப்பொழிந்து நல்ல உபதேசங்களைச் செய்யுமவர்கள் இராமாநுசனடியார் என்றதாகிறது. ... ... (கக)

இடங்கொண்ட கீர்த்தி மழிசைக்கிறைவன் * இணையடிப்போ
தடங்குமிதயத் திராமாநுசன் * அம்பொற்பாத மென்றுங்
கடங்கொண் டிறைஞ்சும் திருமுனிவர்க்கன்றிக் காதல்செய்யாத்
திடங்கொண்ட ஞானியர்க்கே * அடியேனன்பு செய்வதுவே. (கஉ)

http://acharya.org

| | |
|---|---|
| இடம் கொண்ட கீர்த்தி | பூமியெங்கும் வியாபித்த கீர்த்தியை யுடையரான |
| மழிசைக்கு இறைவன் | திருமழிசைப் பிரானுடைய |
| இணை அடி போது | உபயபாதார விந்தங்கள் |
| அடங்கும் | குடிகொண்டிருக்கப் பெற்ற |
| இதயத்து | திருவுள்ளத்தை யுடையரான |
| இராமாநுசன் | எம்பெருமானாருடைய |
| அம் பொன் பாதம் | மிகவும் அழகிய திருவடிகளை |
| என்றும் | எக்காலத்திலும் |
| கடம் கொண்டு இறைஞ்சும் திரு | ‘இதுவே நமக்கு ஸ்வரூப’மென்கிற புத்தியோடே ஆச்ரயிக்கையாகிற செல்வத்தை யுடையரான |
| முனிவர்க்கு அன்றி | மஹான்களுக்குத் தவிர மற்றவர்களுக்கு |
| காதல் செய்யா | அன்பு பூண்டிராத |
| திடம் கொண்ட ஞானியர்க்கே | மிக்க உறுதியை யுடையரான ஞானிகளுக்குத்தான் |
| அடியேன் அன்பு செய்வது | அடியேன் பக்தனாயிருப்பேன். |

* * *ஃ—உலகமெங்கும் பரவின புகழையுடையரான திருமழிசைப்பிரானுடைய பாதாரவிந்தங்கள் அடங்கியிருக்கப்பெற்ற திருவுள்ளத்தை யுடையரான எம்பெருமானாருடைய திருவடித் தாமரைகளை ஸ்வரூப ப்ராப்தத்வ புத்தியோடே அநவரதம் ஆச்ரயிக்கின்ற மஹா பாகவதர்கட்குத் தவிர வேறொருவர்க்கும் விதேயப்படாத மாஞானிகளுக்கே அடியேன் அன்பனாயிருப்பன் என்கிறார். இப்பாட்டால், ‘ஸ்ரீராமாநுஜ பக்த பக்த பக்தன் அடியேன்’ என்றாராயிற்று

கடங்கொண்டு=கடமையாகக்கொண்டு. .... (கஉ)

செய்யும் பசுந்துளவத் தொழின்மாலையும் * செந்தமிழிற்
பெய்யும் மறைத்தமிழ்மாலையும் * பேராத சீரரங்கத்
தையன் கழற்கணியும் பரன்தாளன்றி ஆதரியா
மெய்யன் * இராமாநுசன் சரணேகதி வேறெனக்கே. (கங)

| | |
|---|---|
| செய்யும் | (தொண்டரடிப் பொடியாழ்வாராகிற தம்மாலே) செய்யப்பட்டதாய் |
| பசும் துளவம் | பசுமை தங்கிய திருத்துழாய் மயமாய் |
| தொழில் | வேலைப்பாடுகளை யுடைத்தான |

http://acharya.org

| | |
|---|---|
| மாலையும் | பூமாலைகளையும் |
| செம் தமிழில் | அழகிய தமிழ்ப் பாஷையிலே |
| பெய்யும் | உண்டாக்கப் பட்டதாய் |
| மறை | வேதஸத்ருசமான |
| தமிழ் மாலையும் | திருமாலை திருப்பள்ளி யெழுச்சி யென்கிற திவ்ய ப்ரபந்தங்களாகிற சொல் மாலைகளையும் |
| போதசீர் அரங்கத்து ஐயன்கழற்கு அணியும் | நித்யஸித்தமான கல்யாண குணங்களை யுடையரான ஸ்ரீரங்க நாதனுடைய திருவடிகளிலே சாத்தினவரான |
| பரன் | தொண்டரடிப் பொடியாழ்வாராகிற பெரியவருடைய |
| தாள் அன்றி ஆதரியா | திருவடிகளைத் தவிர மற்றொன்றையும் விரும்பாத |
| மெய்யன் | ஸத்யசீலரான |
| இராமாநுசன் | எம்பெருமானாருடைய |
| சரணே | திருவடிகளே |
| எனக்கு | அடியேனுக்கு |
| வேறு கதி | விலக்ஷணமான ப்ராப்யவஸ்துவாம். |

* * *:—தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளை யன்றி மற்றொன்றில் ஆதரம் அற்றிருக்கிற எம்பெருமானார் திருவடிகளே நமக்கு சரணமென்கிறார் இதில்.

தொண்டரடிப்பொடியாழ்வார் ஸ்ரீரங்கநாதன் திருவடிகளில் இரண்டு மாலைகளைச்செய்து ஸமர்ப்பித்தனரென்று சாக்ஷியாகச் சொல்லுகிறார் அமுதனார். "துளபத்தொண்டாய தொல்சீர்த் தொண்டரடிப்பொடி" என்றும், "தொடையொத்த துளபமும் கூடையும் பொலிந்து தோன்றிய தோள் தொண்டரடிப்பொடி" என்றும் தாமே அருளிச்செய்தபடிக்குப் பொருந்தத் திருத் துழாய் மாலைகளையும், திருமாலை திருப்பள்ளியெழுச்சி யென்கிற திவ்ய ப்ரபந்தங்களாகிற சொல்மாலைகளையும் அரங்கத்தையன் கழல்களிலே ஸமர்ப்பித்தவரிறே தொண்டரடிப்பொடியாழ்வார்.

"துளபத்தெழில் மாலையும்" என்றும் சிலர் பாடங்கூறுவர்; **துளபத்து**—துளஸியினாலாகிய, **எழில் மாலை**—அழகிய மாலை என்றபடி. இப்பாடம் அழகியதேயாயினும் வியாக்கியானத்தில் ஆதரிக்கப்பட்ட பாடமன்றாதலால் உபேக்ஷிக்கத் தக்கதென்க. (௧௫)

http://acharya.org

கதிக்குப்பதறி * வெங்கானமுங் கல்லுங் கடலுமெல்லாங்
கொதிக்கத் தவஞ்செய்யுங் கொள்கையற்றேன் * கொல்லி [காவலன்சொல்
பதிக்குங்கலைக் கவிபாடும்பெரியவர் பாதங்களே
துதிக்கும்பரமன் * இராமாநுச னென்னைச் சோர்விலனே. (கச)

| | |
|---|---|
| கொல்லி காவலன் | குலசேகரப் பெருமாளாலே அருளிச்செய்யப் பட்டதாய் |
| கலை சொல் பதிக்கும் | சாஸ்திரச் சொற்கள் அமையப் பெற்றதான |
| கவி | பெருமாள் திருமொழிப் பாசுரங்களை |
| பாடும் பெரியவர் | பாடுகின்ற பெரியோர்களது |
| பாதங்களே | திருவடிகளையே |
| துதிக்கும் | ஸ்தோத்ரம் செய்பவராய் |
| பரமன் | உத்க்ருஷ்டரான |
| இராமாநுசன் | எம்பெருமானார் |

| | |
|---|---|
| என்னை சோர்விலன் | என்னைவிட்டு நீங்குகிறாரில்லை; (ஆதலால்) |
| கதிக்கு பதறி | ப்ராப்ய லாபத்துக்காக விரைந்து |
| வெம் கானமும் கல்லும் | அத்யுஷ்ணமான காடுகளிலும் மலைகளிலும் |
| கடலும் | கடல்களிலும் (நின்றுகொண்டு) |
| எல்லாம் கொதிக்க | எல்லா அவயவங்களும் கொதிக்கும்படியாக |
| தவம் செய்யும் கொள்கை | தபஸ்ஸு பண்ணும் ஸ்வபாவத்தை |
| அற்றேன் | விட்டொழித்தேன். |

* * *:—ஸகல சாஸ்த்ரங்களின் ஸாரப்பொருள்களையும் திரட்டி ஸ்ரீ குலசேகரப்பெருமாள் அருளிச்செய்த பெருமாள் திருமொழி யென்னுந் திவ்யப்ரபந்தத்தை அநுஸந்திக்கின்ற பெரியவர்களது திருவடிகளையே போற்று மியல்வினரான எம்பெருமானார் வந்து தாமே என்னை ஸ்வீகரித்தாராதலால் இனி ஒருநாளும் அவர் அடியேனைக் கைவிடமாட்டார்; ஆனபின்பு நமக்கு ப்ராப்யம் வேறு ஒன்று மில்லாமையாலே, வநபர்வத ஸமுத்ர தீரங்களில் நின்று க்ரூரமாகச் செய்யும் தவங்களில் இனி எனக்கு அந்வய மில்லை யென்றாராயிற்று.

"எல்லாங் கொதிக்கத் தவஞ்செய்யுங் கொள்கை" என்றதற்கு—இவனுடைய தவத்தின் கொடுமையைக் கண்டு கானமும்

http://acharya.org

கல்லும் கடலும் பரிதபிக்கும்படியாக அந்தந்த ஸ்தலங்களிலே நின்று தபஸ்ஸு பண்ணும் ஸ்வபாவம் என்று பொருள் கூறுவாருமுளர்.

சோர்வு இலன்=பிரிவிலன் என்றபடி. .... ... (கச)

சோராதகாதல் பெருஞ்சுழிப்பால் * தொல்லைமாலை யொன்றும்
பாராதவனைப் பல்லாண்டென்று காப்பிடும் * பான்மையன்றாள்
பேராத வுள்ளத் திராமாநுசன்றன் பிறங்கியசீர்
சாராமனிசரைச் சேரேன் * எனக்கென்ன தாழ்வினியே?. (கரு)

| | | | |
|---|---|---|---|
| சோராத காதல் பெரு சுழிப்பால் | ஒருநாளும் குறைவுபடாத ப்ரேமத்தில் பெருஞ்சுழிப் படுகையாலே | தாள் பேராத உள்ளத்து | திருவடிகள் விட்டகலாத திருவுள்ளத்தை யுடையரான |
| | | இராமாநுசன் தன் | எம்பெருமானாருடைய |
| தொல்லை மாலை ஒன்றும் பாராது | நித்யனான எம்பெருமான் படியைச் சிறிதும் நிரூபியாமல் | பிறங்கிய சீர் | மிக்க திருக் குணங்களை |
| அவனை | அவ்வெம்பெரு மானை நோக்கி | சாரா | தங்களுக்கு அநுபாவ்யமாகக் கொள்ளாத |
| பல்லாண்டு என்று காப்பிடும் பான்மையன் | பல்லாண்டு பல்லாண் டென்று மங்களாசாஸநம் பண்ணுகை யையே நித்யஸ்வபாவமாக வுடையரான பெரியாழ்வா ருடைய | மனிசரை | மநுஷ்யர்களை |
| | | சேரேன் | பற்றமாட்டேன்; |
| | | இனி | இப்படிப்பட்ட உறுதி பிறந்தபின்பு |
| | | எனக்கு என்ன தாழ்வு | அடியேனுக்கு என்னகுறை?. |

* * *:—பாண்டியராஜனுடைய பண்டித ஸபையில் எழுந்தருளி "எம்பெருமானே பரதத்துவம்" என்று ஸ்தாபநம் செய்து கிழியறுத்துவிட்ட காலத்து, அப்பாண்டியன் தம்மை யானைமே லேற்றி ஊர்வலம் வருவிக்கையில் தம் வைபவத்தைக் காணவந்து ஆகாசத்திலே கருடாரூடனாய் நின்ற திருமாலைச் சேவித்து அப் பெருமானிடத்துள்ள பெருங்காதலாலே ரக்ஷ்யபூதரான தம்மையும் ரக்ஷகனான அவனையும் மறந்து, தம்மை ரக்ஷகராகவும் அவனை

http://acharya.org

ரக்ஷ்யனாகவு மெண்ணி அவனுக்குப் "பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்" டென்று தொடங்கி மங்களாசாஸநம் செய்தருளின பெரியாழ்வாருடைய திருவடிகளையே அநவரதம் தியானித்தருளும் எம்பெருமானார் குணங்களைச் சிந்திக்ககில்லாத மனிசரோடு நான் ஸஹவாஸம் செய்யமாட்டேன்; இந்நினைவு பிறந்த பின் இனி எனக்கு ஒருகுறையுமில்லை—என்றாராயிற்று.

முன்னிரண்டடிகளிற் குறிக்கப்பட்டுள்ள சரிதையின் விரிவு பெரியாழ்வார் வைபவத்திற் காணத்தக்கது.

பிறங்கியசீர்—அளவற்ற குணங்கள் என்னவுமாம்; ப்ரகாசமான குணங்கள் என்னவுமாம். .... .... (கரு)

தாழ்வொன்றில்லா மறைதாழ்ந்து * தலமுழுதுங் கலியே
ஆள்கின்றநாள் வந்தளித்தவன் காண்மின் * அரங்கர்மௌலி
சூழ்கின்ற மாலையைச் சூடிக்கொடுத்தவள் தொல்லருளால்
வாழ்கின்றவள்ளல் * இராமாநுச னென்னும் மாமுனியே. (கசா)

| | |
|---|---|
| தாழ்வு ஒன்று இல்லா மறை | ஒருகுறையுமில்லாதிருந்த வேதமானது |
| தாழ்ந்து | (குத்ருஷ்டிகளாலே) இழிவுபெற |
| தலம் முழுதும் | பூமியெங்கும் |
| கலியே ஆள்கின்ற நாள் | கலியே ஸாம்ராஜ்யம் பண்ணுகிற காலத்திலே |
| வந்து | இங்கே வந்தவதரித்து |
| அளித்தவன் காண்மின் | (அந்தவேதத்தை உத்தரிப்பித்து உலகத்தை) ரக்ஷித்தருளினவர். |
| அரங்கர் | ஸ்ரீரங்கநாதனுடைய |
| மௌலி சூழ்கின்ற மாலையை | திருமுடியிலே சாத்தக்கடவதான பூமாலையை |
| சூடி கொடுத்தவள் | தனது திருக்குழலிலே அணிந்து வாஸிதமாக்கிக் கொடுத்தவளான ஆண்டாளுடைய |
| தொல் அருளால் | அவ்யாஜமான அருளாலே |
| வாழ்கின்ற | வாழ்பவரும் |
| வள்ளல் | உதாருமான |
| இராமாநுசன் என்னும் மா முனி | ஸ்ரீராமாநுஜ முனியானவர் (எப்படிப்பட்டவ ரென்றால்) |

* * *:—ப்ரமாணங்களிற் சிறந்து உத்துங்கமாயிருந்த வேதமானது பாஹ்யகுத்ருஷ்டிகளால் தாழ்வுபெற்றுக் கலிபுருஷனே

http://acharya.org

செங்கோல் செலுத்திக் கிடந்த காலத்திலே வந்து திருவவதரித்தருளி அக்கலியைக்கெடுத்து வேதத்தை நிலைநிறுத்தின மஹாநுபாவர் காண்மின் எம்பெருமானார்.

அரங்கர்மௌலி சூழ்கின்ற மாலையைச் சூடிக்கொடுத்த வரலாறு ஆண்டாள் வைபவத்திற் காணத்தக்கது. சூடிக்கொடுத்த நாச்சியாருடைய பரமக்ருபைக்குப் பாத்ரபூதர் எம்பெருமானார் என்றதாயிற்றுப் பின்னடிகளால். ... .... (கசு)

முனியார்துயரங்கள் முந்திலும் * இன்பங்கள் மொய்த்திடினுங்
கனியார்மனம் கண்ணமங்கை நின்றானை * கலைபரவும்
தனியானையைத் தண்டமிழ்செய்த நீலன்றனக் குலகி
லினியானை * எங்க ளிராமாநுசனை வந்தெய்தினரே. (கஎ)

| | |
|---|---|
| கலை பரவும் தனி ஆனையை | ஸகல சாஸ்த்ரங்களாலும் துதிக்கப்படுகிற அத்விதீயமான மத்தகஜம் போன்ற |
| கண்ணமங்கை நின்றானை | திருக்கண்ணமங்கையிலே நிற்கும் பக்தராவிப் பெருமாளைக் குறித்து |
| உலகில் | இவ்வுலகில் |
| தண் தமிழ் செய்த | ஸம்ஸார தாபஹாரமான திவ்ய ப்ரபந்தத்தைச் செய்தருளின |
| நீலன் தனக்கு | திருமங்கையாழ்வார் பக்கல் |
| இனியானை | ப்ரேமமுடையவராய் |
| எங்கள் | எங்களுக்குத் தலைவரான |
| இராமாநுசனை | எம்பெருமானாரை |
| வந்து எய்தினர் | வந்துபணிந்த மஹான்கள் |
| துயரங்கள் முந்திலும் முனியார் | தாபத்ரயம் செறிந்தாலும் வருத்தப்பட மாட்டார்கள்; |
| இன்பங்கள் மொய்த்திடினும் மனம் கனியார் | ஸுகங்கள் செறிந்தாலும் களிப்படைய மாட்டார்கள். |

* * *:—ஸகல சாஸ்த்ரப்ரதிபாத்யனான எம்பெருமானைத் தம்முடைய திவ்யப்ரபந்தங்களிலே அமைத்துப் பாடின திருமங்கையாழ்வார்க்கு அந்தரங்க பக்தரான எம்பெருமானாரை ஆச்ரயித்த மஹான்கள் ஸுகதுக்கங்கள் மேலிடுங்காலத்தில் மற்ற ஸம்ஸாரி

http://acharya.org

களைப்போல் ஹர்ஷ சோகங்களை யடையாமல் எவ்வித விகாரமும் அற்றிருப்பர்கள்; நீங்களும் ஹர்ஷ சோகங்களில் கலங்கவேண்டா என்றபடி.

“துயரங்கள் முந்திலும் முனியார், இன்பங்கள் மொய்த்திடினும் மனங்கனியார்”=“களிப்புங் கவர்வுமற்று” என்று ஆழ்வாரருளிச்செய்தபடியே நிர்விகாரராயிருப்பவர்கள் என்கை. ஒரு காலணா கையில் கிடைத்துவிட்டால் தலை நாறிப்போவதும், ஒற்றைக்காசை இழந்துவிட்டால் நிலைகலங்கிப் போவதுமாயிறே ஸம்ஸாரிகளின்படி யிருப்பது; ஸ்ரீராமாநுஜ பக்தர்கள் அப்படி இருக்கமாட்டார்கள்; ஸுகம் வந்தகாலத்தும் துக்கம் வந்தகாலத்தும் ஒருபடிப்பட்ட மனநிலையை யுடையராகவே யிருப்பர்கள் என்றவாறு.

கண்ணமங்கை நின்றனை = திருக்கண்ணமங்கையைச் சொன்னது மற்றுள்ள எல்லாத் திருப்பதிகட்கும் உபலக்ஷணம்; பல திருப்பதிகளிலும் புக்குக் கவிபாடின கலியன் என்றபடி. நீலன் = திருமங்கையாழ்வாருடைய திருநாமங்களில் ஒன்று. ... (௧௭)

எய்தற்கரிய மறைகளை * ஆயிர மின்தமிழால்
செய்தற்குலகில் வருஞ் சடகோபனை * சிந்தையுள்ளே
பெய்தற்கிசையும் பெரியவர் சீரை யுயிர்களெல்லாம்
உய்தற் குதவும் * இராமாநுசனெம் முறுதுணையே. (௧௮)

| | |
|---|---|
| எய்தற்கு அரிய மறைகளை | அதிகரிக்க முடியாத (அளவற்ற) வேதங்களை |
| இன் தமிழ் ஆயிரத்தால் | இனியதமிழாலாகிய ஆயிரம் பாசுரங்களினால் |
| செய்தற்கு | அருளிச் செய்வதற்காக |
| உலகில் வரும் | இவ்வுலகில் வந்தவதரித்த |
| சடகோபனை | நம்மாழ்வாரை |
| சிந்தை உள்ளே | தமது ஹ்ருதயத்தினுள்ளே |
| பெய்தற்கு இசையும் | த்யானிப்பதற்கு இணங்கின |
| பெரியவர் | ஸ்ரீமதுரகவிகளுடைய |
| சீரை | ஜ்ஞாநாதி குணங்களை |
| உயிர்கள் எல்லாம் உய்தற்கு உதவும் | ஸகலாத்மாக்களும் உஜ்ஜீவிக்குமாறு உபகரித்தருளாநிற்கிற |
| இராமாநுசன் | எம்பெருமானார் |
| எம் உறு துணை | எமக்கு உற்றதுணை. |



http://acharya.org

* * *:—எம்பெருமானார் தாம் நமக்கு உற்றதுணை. அவர் எப்படிப்பட்டவரென்னில், ஸ்ரீ மதுரகவிகளுடைய திருக்கல்யாண குணங்களைப் பரக்க உபந்யஸித்தருளி ஸகலாத்மாக்களையும் உஜ்ஜீவிக்கச் செய்பவர்; அந்த மதுரகவிகள் எப்படிப்பட்டவர்;—நம்மாழ்வாரையே ஸர்வகாலமும் ஹ்ருதயத்திலே வைத்துச் சிந்திப்பவர். அவ்வாழ்வார் எப்படிப்பட்டவர்?—அநந்தங்களாகையாலே அத்யயநம் செய்வதற்கு அரியவையான வேதங்களிற் பொதிந்து கிடக்கும் ஸாரப்பொருள்களை இனிய தமிழ்ப் பாசுரங்களாலே வெளியிட்டருள்வதற்காக இந்நிலத்தே திருவவதரித்தவர்.

வேதந் தமிழ்செய்த மாறன்சடகோபனையே வாழ்த்தும் ஸ்ரீ மதுரகவிகளின் பக்தரான எம்பெருமானார் நமக்கு உற்றதுணையென்றாராயிற்று. இப்பாட்டில் ஸ்ரீமதுரகவிகள் பெரியவர் என்று சிறப்பித்துக் கூறப்பட்டமை நோக்கத்தக்கது. "புவியு மிருவிசும்பும் நின்னகத்த, நீ யென் செவியின் வழிபுகுந்து என்னுள்ளாய் அவிவின்றி, யான் பெரியன் நீ பெரியை யென்பதனை யாரறிவார், ஊன்பருகு நேமியாயுள்ளு" [பெரிய திருவந்தாதி] என்று பெரிதான பரப்ரஹ்மத்தை உள்ளடக்கின பெரியவரையும் [—நம்மாழ்வாரையும்] உள்ளடக்கின பெரியவரிறே மதுரகவிகள். (கஅ)

உறுபெருஞ் செல்வமுந் தந்தையுந் தாயும் * உயர்குருவும்
வெறிதருபூமகள் நாதனும் * மாறன் விளங்கியசீர்
நெறிதருஞ் செந்தமிழாரணமே யென்றிந் நீணிலத்தோர்
அறிதரநின்ற * இராமாநுச னெனக் காரமுதே. (கக)

உறு பெரு செல்வமும் } சிறந்த பெரிய ஸம்பத்தும்
தந்தையும் தாயும் } மாதா பிதாக்களும்
உயர் குருவும் ஸதாசார்யனும்
வெறி தரு பூ மகள் நாதனும் } மணம் மிக்க பூவைப் பிறப்பிடமாக வுடைய பெரிய பிராட்டியாருக்குக் கொழுநனான ஸர்வேச்வரனும் (ஆகிய எல்லாம்)

மாறன் விளங்கிய சீர் நெறி தரும் செம் தமிழ் ஆரணமே என்று } நம்மாழ்வார் (தமக்கு) ப்ரகாசித்த பகவத் குணங்களின் அடைவே அருளிச்செய்த செந்தமிழ் வேதமேயென்று

http://acharya.org

| | | | |
|---|---|---|---|
| இ நீள் நிலத்தோர் அறிதர நின்ற | இப்பெரிய வுலகிலுள்ளார் யாவரும் அறியும்படி நின்ற | இராமாநுசன் | எம்பெருமானார் |
| | | எனக்கு | அடியேனுக்கு |
| | | ஆர் அமுது | பரமபோக்யர். |

* * *:—எம்பெருமானார் தாம் நமக்குப் பரமபோக்யர்; அவர் எப்படிப்பட்டவரென்னில்;—‘நம்மாழ்வாரருளிச்செய்த திருவாய்மொழிதான் நமக்கு ஸர்வஸ்வம்’ என்கிற அத்யவஸாய முடையவர். அன்னவர் திறத்து அடியேன் அநந்ய போக்யத்வ புத்தியை யுடையேன் என்றாராயிற்று.

“மாதா பிதா யுவதயः” என்ற ச்லோகத்தினால் ஆளவந்தார் நம்மாழ்வாருடைய திருவடிகளையே ஸர்வஸ்வமாகக் கொண்டபடி சொல்லிற்று; இப்பாட்டால், எம்பெருமானார் நம்மாழ்வாருடைய ஸ்ரீஸூக்திகளை ஸர்வஸ்வமாகக் கொண்டபடி சொல்லுகிறது.

மாறன் விளங்கிய சீர்நெறிதரும் செந்தமிழாரணம்=திருவாய்மொழியில் ஒவ்வொரு திருவாய்மொழியிலும் எம்பெருமானுடைய ஒவ்வொரு திவ்யகுணத்தை வெளியிட்டிருக்கிறார்; அது வெளியிட்டவாறு என்னென்னில், எம்பெருமான் ஆழ்வார்க்கு எந்த க்ரமமாகக் குணங்களை அநுபவிப்பித்தானோ அந்த க்ரமமாகவே இவர் வெளியிட்டாரென்க. ... ... .... (௧௯)

ஆரப்பொழில் தென்குருகைப்பிரான் * அமுதத் திருவாய்
ஈரத்தமிழி னிசையுணர்ந்தோர்கட்கு * இனியவர்தஞ்
சீரைப்பயின்றுய்யுஞ் சீலங்கொள் நாதமுனியை நெஞ்சால்
வாரிப்பருகும் * இராமாநுசனென்றன் மாநிதியே. (௨௦)

| | | | |
|---|---|---|---|
| ஆரம் பொழில் | சந்தனச் சோலைகளை யுடைய | ஈரம் தமிழின் இசை | ஈரச்சொல்லாகிய திருவாய்மொழியின் இசையை |
| தென் குருகை | அழகிய திருக்குருகூரிலே (அவதரித்த) | உணர்ந்தோர்கட்கு | அறிந்தவர்களுக்கு |
| பிரான் | மஹோபகாரகரான ஆழ்வாருடைய | இனியவர் தம் | இஷ்டராயிருப்பவர்களுடைய |
| அமுதம் திருவாய் | பரமபோக்யமான திருப்பவளத்தில் பிறந்த | சீரை | குணங்களை |
| | | பயின்று | அப்யஸித்து |

http://acharya.org

| | |
|---|---|
| உய்யும் சீலம் கொள் | ஸத்தை பெறும் சீலத்தை யுடையரான |
| நாதமுனியை | நாதமுனிகளை |
| நெஞ்சால் | தம் திருவுள்ளத்தாலே |
| வாரி பருகும் | அபிநிவேசத்தோடு அனுபவிக்கின்ற |
| இராமாநுசன் | எம்பெருமானார் |
| என் தன் மா நிதியே | எனக்கு அக்ஷயமான நிதி. |

* * *:—எம்பெருமானார் தாம் நமக்கு அக்ஷயமான தனம்; அவர் எப்படிப்பட்டவர்?—ஸ்ரீமந் நாதமுனிகளை ஹ்ருதயத்திலே வைத்துப் பரம ப்ரேமத்துடனே சிந்திப்பவர். அந்த நாதமுனிகள் எப்படிப்பட்டவர்?—நம்மாழ்வாருடைய அதிமதுரமான திருவாய்மொழியை (மாநம்) காநம் முதலிய ஸகல லக்ஷணங்களோடும் அறிந்தவர்கள் விஷயத்தில் ப்ரீதியையுடையார் யாரோ, அவர்களுடைய குணங்களை யநுஸந்தித்து உஜ்ஜீவிப்பவர். ... (உ௦)

நிதியைப்பொழியும் முகிலென்று * நீசர்தம் வாசல்பற்றித்
துதிகற்றுலகிற் றுவள்கின்றிலே னினி * தூய்நெறிசேர்
எதிகட்கிறைவன் யமுனைத் துறைவ னிணையடியாம்
கதிபெற்றுடைய * இராமாநுச னென்னைக் காத்தனனே. (உக)

| | |
|---|---|
| தூய் நெறி சேர் எதிகட்கு | பரிசுத்தமான அனுஷ்டானமுடைய யதிகளுக்கு |
| இறைவன் | தலைவரான |
| யமுனைத் துறைவன் | ஆளவந்தாருடைய |
| இணை அடி ஆம் கதி | உபய பாதங்களாகிற ப்ராப்யத்தை |
| பெற்று | பெற்று (அதனாலே) |
| உடைய | உலகத்தார்க்கெல்லாம் ஸ்வாமியாயிருக்கிற |
| இராமாநுசன் | எம்பெருமானார் |
| என்னை காத்தனன் | என்னை ரக்ஷித்தருளினார்; (ஆனபின்பு) |
| இனி | இனிமேல்,— |
| நிதியை பொழியும் முகில் என்று | "நிதிகளை வர்ஷிக்கிற மேகமே!" என்று |
| துதி கற்று | ஸ்தோத்ரங்களைப் பண்ணிக்கொண்டு |
| உலகில் | இவ்வுலகத்தில் |
| நீசர் தம் | நீசராயிருப்பவருடைய |
| வாசல் பற்றி | வாசலைப்பற்றிநின்று |
| துவள்கின்றிலேன் | வருந்தமாட்டேன். |

* * *:—நேற்றுவரையிலும் நான் கண்டபேர்களுடைய வாசற்கடைகளிலும் போய் நின்று வாயைக்காட்டி வயிற்றைக்காட்டி.

http://acharya.org

"மஹாநிதிகளைப் பொழிகின்ற மேகமே!" என்று பொய்யான நரஸ்துதிகளைச் செய்து துவண்டேன்; இன்று முதல் எந்நாளும் இனி நான் அவ்வாறு துவளமாட்டேன்; ஒரு நீசனுடைய வாசலையும் பற்றமாட்டேன்.

அமுதனாரே! இன்று உமக்கு வந்த அதிசயம் என்ன?; இன்று உமக்குச் செல்வம் விஞ்சியதோ?. எத்தாலே நீர் இங்ஙனே மார்பு தட்டிச் சொல்லுகிறீர்?

இன்று நான் எம்பெருமானாருடைய ஸம்ரக்ஷணைக்கு ஆளாய் விட்டேன்; அவரோ, எதிகளுக்குத் தலைவரான ஆளவந்தாருடைய ஸம்ரக்ஷணையைப் பெற்று உய்ந்தவர். அன்னவராலே ஸம்ரக்ஷிக்கப் பெற்றேனானபின்பு இனிநான் எதுக்காக ஒருநீசன் வாசலைப் பற்றித் துவளவேண்டும்!; துவள்கின்றிலேனினி. .... (உக)

கார்த்திகையானுங் கரிமுகத்தானும் * கனலும் முக்கண்
மூர்த்தியும் மோடியும் வெப்பும் முதுகிட்டு * மூவுலகும்
பூத்தவனேயென்று போற்றிட வாணன் பிழைபொறுத்த
தீர்த்தனையேத்தும் * இராமாநுச னென்றன் சேமவைப்பே. (உஉ)

| | |
|---|---|
| கார்த்திகையானும் | ஸுப்ரஹ்மண்யனும் |
| கரிமுகத்தானும் | கணபதியும் |
| கனலும் | (அவர்களுக்குத் துணையாய் வந்த) அக்நியும் |
| முக்கண் மூர்த்தியும் | சிவனும் |
| மோடியும் | துர்க்கையும் |
| வெப்பும் | ஜ்வரதேவதையும் |
| முதுகு இட்டு | முதுகுகாட்டி ஓடிப் போனபின்பு (அநந்யகதியான பாணாஸுரனானவன்) |
| மூ உலகும் பூத்தவனே என்று போற்றிட | "மூன்று உலகங்களையும் திருநாபிக் கமலத்திலே உண்டாக்கின பெருமானே!" (என்னைக் காத்தருள்) என்று போற்ற |
| வாணன் பிழை பொறுத்த | (அந்த) பாணாஸுரனுடைய அபராதத்தை க்ஷமித்தருளின |
| தீர்த்தனை | பாவநனான ஸர்வேச்வரனை |
| ஏத்தும் | நித்யம் துதிக்கின்ற |
| இராமாநுசன் | எம்பெருமானார் |
| என் தன் சேமவைப்பு | எனக்கு ஆபத்தநம். |

http://acharya.org

* * *:—"𑌐𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌂 𑌶𑌙𑍍𑌕𑌰𑌾𑌦𑌿𑌚𑍍𑌛𑍇𑌦𑌾𑌰𑍋𑌗𑍍𑌯𑌂 𑌭𑌾𑌸𑍍𑌕𑌰𑌾𑌤𑍍𑌤𑌥𑌾." [ஐச்வர்யம் சங்காரதிச்சேத் ஆரோக்யம் பாஸ்கராத் ததா- சிவன் பக்கல் செல்வம்பெற விரும்பவேண்டும்; ஸூர்யன் பக்கல் ஆரோக்யம் பெற விரும்பவேண்டும்] என்று ஸாமாந்யமாகச் சிலர் சொல்லுவதுண்டே; அதனைக்கொண்டு ஒருவன் அமுதனாரை நோக்கி 'ஓய்! நீர் எம்பெருமானாரைப் பற்றினால் உம்முடைய தாரித்ரியம் நீங்குமோ? சிவனைப் பற்றினாலன்றோ செல்வம் மிகும்' என்றுகூற; அந்தச் சிவன்பட்ட பரிபவங்களை விளக்கும் ஒரு இதிஹாஸத்தைப் பரக்கப்பேசிக் கொண்டு, 'எம்பெருமானார்தாம் எனக்கு ஆபத்தனம்' என்கிற திண்ணிய அத்யவஸாயத்தை உறுத்திக் கூறுகின்றார் இதில்.

பலிசக்ரவர்த்தியின் ஸந்ததியிற் பிறந்தவனான பாணாஸுரன் ஒரு காலத்தில் சிவபிரானது நடனத்தைக்கண்டு அதற்குத் தனது இரண்டுகைகளால் மத்தளந்தட்ட, சிவபெருமான் அருள்கூர்ந்து அவனுக்கு ஆயிரங் கைகளையும் நெருப்புமதிளையும் அளவிறந்த வலிமையையும் மிக்க செல்வத்தையும் தான் தனது பரிவாரங்களோடு அவன் மாளிகை வாசலிற் காவல்செய்திருத்தல் முதலிய வரங்களையுந் தந்தருளினன்; அந்த பாணாஸுரனுடைய பெண்ணாகிய உஷையென்பவள், ஒரு நாள் ஒரு புருஷனோடு தான் கூடியதாகக் கனாக்கண்டு, முன் பார்வதி அருளியிருந்தபடி அவனிடத்தில் மிக்க ஆசைபற்றியவளாய்த் தன் உயிர்த்தோழியான சித்ரலேகைக்கு அச்செய்தியைத் தெரிவித்து, அவள் மூலமாய் அந்தப் புருஷன் க்ருஷ்ணனுடைய பௌத்திரனும் ப்ரத்யும்நனது புத்திரனுமாகிய அநிருத்தனென்று அறிந்துகொண்டு, 'அவனைப் பெறுதற்கு உபாயம் செய்யவேண்டும்' என்று அத்தோழியை வேண்ட, அவள் தன் யோகவித்தை மஹிமையினால் த்வாரகைக்குச் சென்று அநிருத்தனைத் தூக்கிக்கொண்டுவந்து அந்தஃபுரத்திலே விட, உஷை அவனோடு போகங்களை அநுபவித்துவர, இச்செய்தியைக் காவலாளராலறிந்த அந்த பாணாஸுரன் தன் சேனையுடன் அநிருத்தனை எதிர்த்து மாயையினாற் பொருது நாகாஸ்த்ரத்தினாற் கட்டிப் போட்டிருக்க, த்வாரகையிலே அநிருத்தனைக் காணாமல் யாதவர்களெல்லாருங் கலங்கியிருந்தபோது, நாரதமாமுனிவனால்

http://acharya.org

இவ்வரலாறு சொல்லப்பெற்ற ஸ்ரீக்ருஷ்ணபகவான், பெரியதிருவடியை நினைத்தருளி, உடனேவந்துநின்ற அக்கருடாழ்வானது தோளின்மேல் ஏறிக்கொண்டு பலராமன் முதலானாரோடுகூட பாணபுரமாகிய சோணிதபுரத்துக்கு எழுந்தருளும்போதே, அப்பட்டணத்தின் ஸமீபத்திற் காவல் செய்துகொண்டிருந்த சிவபிரானது ப்ரமதகணங்கள் எதிர்த்துவர, அவர்களையெல்லாம் அழித்து பின்பு சிவபெருமானால் ஏவப்பட்டதொரு ஜ்வரதேவதை மூன்று கால்களும் மூன்று தலைகளுமுள்ளதாய் வந்து பாணனைக் காப்பாற்றும் பொருட்டுத் தன்னோடு யுத்தஞ் செய்ய, தானும் ஒரு ஜ்வரத்தையுண்டாக்கி இதன் சக்தியினாலே அதனைத்துரத்திவிட்ட பின்பு, சிவபிரானது அநுசரராகையாற் பாணாஸுரனது கோட்டையைச் சூழ்ந்துகொண்டு காத்திருந்த அக்நிதேவர் ஐவரும் தன்னோடு எதிர்த்துவர, அவர்களையும் த்வம்ஸம்பண்ணி, பாணாஸுரனோடு போர்செய்யத் தொடங்க அவனுக்குப் பக்கபலமாகச் சிவபெருமானும் ஸுப்ரஹ்மண்யன் முதலிய பரிவாரங்களுடன் வந்து எதிர்த்துப் போரிட, கண்ணன் தான் ஜ்ரும்பணாஸ்த்ரத்தைப் பிரயோகித்துச் சிவனை ஒன்றுஞ் செய்யாமற் கொட்டாவி விட்டுக்கொண்டு சோர்வடைந்துபோம்படி செய்து, ஸுப்ரஹ்மண்யனையும் கணபதியையும் ஹுங்காரங்களால் ஓறுத்து ஓட்டி, பின்னர், அனேகமாயிரஞ் சூரியர்க்குச் சமனான ஸுதர்சநாழ்வானை யெடுத்துப் பிரயோகித்து அப்பாணனது ஆயிரந்தோள்களையும் தாரை தாரையாய் உதிரமொழுக அறுத்து அவனுயிரையுஞ் சிதைப்பதாக விருக்கையில் பரமசிவன் அருகில்வந்து வணங்கிப் பலவாறு பிரார்த்தித்ததனால் அவ்வாணனை நான்கு கைகளோடும் உயிரோடும் விட்டருளி, பின்பு அவன் தன்னைத் தொழுது அநிருத்தாழ்வானுக்கு உஷையைச் சிறப்பாக மணம்புரிவிக்க, கண்ணபிரான் திருவுள்ளமுகந்து த்வாரகைக்கு மீண்டெழுந்தருளினன் என்ற வரலாறு அறியத்தக்கது. ... ... ... ... .... (உஉ)

வைப்பாய வான்பொருளென்று * நல்லன்பர் மனத்தகத்தே
எப்போதும் வைக்கு மிராமாநுசனை * இருநிலத்தில்
ஒப்பாரிலாத வுறுவினையேன் வஞ்ச நெஞ்சில்வைத்து
முப்போதும் வாழ்த்துவன் * என்னாமிதுவவன் மொய்புகழ்க்கே?

http://acharya.org

| | |
|---|---|
| நல் அன்பர் | விலக்ஷண பக்தியுடையவர்கள் |
| வைப்பு ஆய வான் பொருள் என்று | "எம்பெருமானார் தாம் நமக்கு ஆபத்ரக்ஷகமான அக்ஷய தநம்" என்று கொண்டு |
| மனத்தகத்தே | தங்கள் ஹ்ருதயத்திலே |
| எப்போதும் வைக்கும் | எப்போதும் த்யாநிப்பதற்கு விஷயமான |
| இராமாநுசனை | எம்பெருமானாரை |
| இரு நிலத்தில் | இந்தப் பெரிய வுலகத்திலே |
| ஒப்பார் இலாத உறுவினையேன் | ஒப்பற்ற மஹாபாபியான அடியேன் |
| வஞ்சம் நெஞ்சில் வைத்து | (என்னுடைய) க்ருத்ரிமமான நெஞ்சிலே வைத்து |
| முப்போதும் வாழ்த்துவன் | ஸர்வகாலமும் ஏத்தா நின்றேன்; |
| இது | மிகப்பெரிய அவரை நீசனாகிய நான் வாழ்த்துகையாகிற இது |
| அவன் | அவ்வெம்பெருமானாருடைய |
| மொய் புகழ்க்கு | சிறந்த கீர்த்திக்கு |
| என் ஆம் | என்னாகுமோ? [அவத்யமாமே?.] |

* * *:—"வளவேழுலகின் முதலாய" என்ற திருவாய்மொழியில் ஆழ்வார் நைச்யாநுஸந்தாநம் பண்ணினது போல, இப்பாட்டில் இவ்வமுதனாரும் நைச்யாநுஸந்தாநம் பண்ணுகிறார்.

எம்பெருமானார் எப்படிப்பட்டவர்?—அவர் தம்மையே நிதியாகப்பற்றின விலக்ஷணபக்தியுக்தரான ஆழ்வான் ஆண்டான் முதலான மஹாபுருஷர்களாலே சிந்தைசெய்யப்படுபவர். அப்படிப்பட்ட விலக்ஷண பக்தி எனக்குண்டோ? இல்லை; கள்ளங்கவடு பொருந்திய நெஞ்சையுடையேன் நான்; என்னைப்போன்ற மஹாபாபி எவ்வுலகிலுமில்லை; நானோ அவ்வெம்பெருமானாரைத் துதிப்பதற்கு அர்ஹன்!, ஸர்வாத்மநா அடியேன் அநர்ஹன். அப்படியிருந்தும் என்னை நான்மறந்து அவரை வாழ்த்தத் தலைப்பட்டேனே; அவருடைய சிறந்த கீர்த்திக்கு என்னுடைய வாழ்த்து அவத்யகரமாகுமே! ஐயோ! அநியாயம் பண்ணிவிட்டேனே!! என்று அலமருகின்றார். இங்ஙனே பேசுவதும் ஒருவகை ஸ்தோத்ர ப்ரணாளி என்றுகொள்க. .... .... .... (உங)

http://acharya.org

மொய்த்தவெந் தீவினையால் பல்லுடல்தோறும் மூத்து * அதனால்
எய்த்தொழிந்தேன் முனநாள்களெல்லாம் * இன்று கண்டுயர்ந்தேன்
பொய்த்தவம் போற்றும் புலைச்சமயங்கள் நிலத்தவியக்
கைத்தமெய்ஞ்ஞானத்து * இராமாநுசனென்னும் கார்தன்னையே.

| | |
|---|---|
| முன நாள்கள் எல்லாம் | கீழ்க்கழிந்த அநாதி காலமெல்லாம் |
| பல் உடல் தொறும் | பலபல சரீரங்கள் தோறும் |
| மொய்த்த வெம் தீ வினையால் மூத்து | ஆத்மாவை மொய்த்துக் கொண்டிருக்கிற அதிக்ரூரமான கர்மத்தாலே கிழத்தனம் வருமளவும் வாஸஞ்செய்து |
| அதனால் | அத்தாலே |
| எய்த்து ஒழிந்தேன் | மிக்க பரிதாப மடைந்தேன் ; |
| பொய் தவம் போற்றும் புலைச் சமயங்கள் | கபடமான அநுஷ்டாநங்களை நடத்திப் போருகிற நீச மதஸ்தர்கள் |
| நிலத்து அவிய | இந்நில வுலகத்திலே வேரற்றொழியும்படி |
| கைத்த | நிரஸித்தருளின |
| மெய் ஞானத்து | உண்மைஞான முடையரான |
| இராமாநுசன் என்னும் கார் தன்னை | எம்பெருமானாகிற காளமேகத்தை |
| இன்று கண்டு | இன்று அடியேன் ஸேவிக்கப்பெற்று |
| உயர்ந்தேன் | சிறந்தவனானேன். |

* * *:—நெடுநாளாக ஸம்ஸாரத்திலிருந்து பலபல கருமங்களைப்பண்ணி, அக்கருமங்களின் பலனைப் பலபல பிறவிகளிற் பிறந்து படாதனபட்டு இப்படியாகவே அநேக பர்யாயம் அவஸந்நனாய்க் கிடந்தேன் நான் ; இப்பொழுது, பரம உதாரரான எம்பெருமானார் இப்பூமியிலவதரித்துப் பல துர்மதங்களை வேரறுத்தொழித்ததுபோல எனது கருமங்களையும் வேரறுத்தொழித்துத் தம்முடைய நிர்ஹேதுக க்ருபையாலே தம்மைக்காட்டியருளக், கண்டு க்ருதார்த்தனானேனென்கிறார்.

பொய்த்தவம் போற்றும் புலைச்சமயங்கள்=ராவண ஸந்யாஸம், காலநேமிஜபம் முதலியவைபோலே மதாந்தரஸ்தர்கள் க்ருத்ரிமமான ஆசாரங்களை அநுஷ்டிப்பார்களென்க. மெய்ஞ்ஞானத்திராமாநுசன்—"யதார்த்தம் ஸர்வவிஜ்ஞாநம்" என்று ஸ்தாபித்தருளினவரிறே எம்பெருமானார். .... .... .... (உச)



http://acharya.org

காரேய் கருணை யிராமாநுச * இக்கடலிடத்தில்
ஆரே யறிபவர் நின்னருளின்தன்மை * அல்லலுக்கு
நேரேயுறைவிடம் நான்வந்து நீயென்னை யுற்றபின்னுன்
சீரே யுயிர்க்குயிராய் * அடியேற்கின்று தித்திக்குமே (உரு)

| | |
|---|---|
| கார் ஏய் கருணை இராமாநுச ! | மேகத்தையொத்த கருணையை யுடைய எம் பெருமானுரே ! |
| நான் | அடியேன் |
| அல்லலுக்கு நேரே உறைவு இடம் | துக்கங்களுக்கு நேரே வாஸஸ்தானமா யிருப்பவன் ; |
| என்னை | இப்படிப்பட்ட அடியேனை |
| நீ வந்து உற்றபின் | தேவரீர் தாமாகவே ஸ்வீகரித் தருளினபின்பு |
| உன் சீரே | தேவரீருடைய கல்யாண குணங்களே |
| உயிர்க்கு உயிர் ஆய் | ஆத்மாவுக்கு தாரகமாய் |
| அடியேற்கு | அடியேனுக்கு |
| இன்று தித்திக்கும் | இன்று ரஸியா நின்றது ; |
| நின் அருளின் தன்மை | தேவரீருடைய க்ருபையின் ஸ்வபாவத்தை |
| இ கடல் இடத்தில் | கடல்சூழ்ந்த இப் பூ மண்டலத்தில் |
| ஆரே அறிபவர் | அறியக்கூடியவர்கள் ஆருமில்லை. |

* * *:—ஜலஸ்தலவிபாகம் பாராமல் ஸர்வத்ர ஸமமாக வர்ஷிக்கின்ற மேகம்போலே, தாழ்ந்தோர் உயர்ந்தோர் என்னும் வாசி பாராமல் எல்லார்திறத்தும் அருள் புரிகின்ற எம்பெருமானுரே! மிகக்கொடிய துக்கங்களுக்கெல்லாம் இருப்பிடமான என்னை தேவரீர் தாமே வந்து விஷயீகரித்தபின்பு தேவரீருடைய திருக்கல்யாண குணங்களே எனக்குப் பரமபோக்யமாய் ஆத்மதாரகமுமாய் விட்டது. தேவரீர் க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்யர் என்னுமிடத்தை இவ்வுலகில் உள்ளபடியே ஒருவருமறியார்கள். .... (உரு)

திக்குற்றகீர்த்தி யிராமாநுசனை * என் செய்வினையாம்
மெய்க்குற்றம்நீக்கி விளங்கிய மேகத்தை * மேவும்நல்லோர்
எக்குற்றவாள ரெதுபிறப் பேதியல்வாக நின்றோர்
அக்குற்ற மப்பிறப்பு * அவ்வியல்வே நம்மையாட்கொள்ளுமே.

| | |
|---|---|
| என் செய் வினை ஆம் | என்னாலே செய்யப்பட்ட வினையாகிற |
| மெய் குற்றம் நீக்கி | நிலைநின்ற தோஷங்களைப் போக்கி |

http://acharya.org

| | |
|---|---|
| விளங்கிய | (இவனுடைய தோஷங்களைப் போக்கப் பெற்றோ மென்னும் மகிழ்ச்சியாலே) உஜ்வலரான |
| மேகத்தை | பரம உதாரராய் |
| திக்கு உற்ற கீர்த்தி | திசைகள்தோறும் விரிந்த புகழை யுடையரான |
| இராமாநுசனை | எம்பெருமானாரை |
| மேவும் | பொருந்தி யிருக்கின்ற |
| நல்லோர் | விலக்ஷணர்கள் |
| எக் குற்றவாளர் | யாதொரு குற்றத்தை யுடையராகவும் |
| எது பிறப்பு | யாதொரு ஜன்மத்தை யுடையராகவும் |
| எது இயல்வு ஆக | யாதொரு சரிதையை யுடையராகவும் |
| நின்றோர் | முன்பு நின்றார்களோ, |
| அக் குற்றம் | அந்தக் குற்றமும் |
| அப் பிறப்பு | அந்த ஜன்மமும் |
| அ இயல்வே | அந்த சரிதையுமே |
| நம்மை | நம்மை |
| ஆள் கொள்ளும் | அடிமைப்படுத்திக் கொள்ளவற்று. |

* * *:—என் பாவங்களைப் போக்கிப் பெரும்புகழ்படைத்த பரமோதாரரான எம்பெருமானாரை அடிபணிந்தவர்கள், அடிபணிவதற்கு முன்பு யாதொரு குற்றத்தை யுடையராகவும் யாதொரு ஜன்மத்தை யுடையராகவும் யாதொரு நடத்தையை யுடையராகவும் இருந்தார்களோ, அந்தக் குற்றமே அந்த ஜன்மமே அந்த நடத்தையே நம்மை ஆட்படுத்திக்கொள்ளா நின்றது—என்கிறவிதற்குக் கருத்து என்னென்னில்; ‘இவ்விதமான இழிதொழிலும் இழிகுலமும் அறிவின்மையுமான இவற்றையுடைய நாமும் இவர்களைப்போல் எம்பெருமானாரை அடிபணிந்து உஜ்ஜீவிக்கலாம்’ என்று நம்போலியர்க்கு ஒரு தைரியத்தை உண்டாக்குவதற்காகவே அந்த மஹான்கள் அப்படி ஜ்ஞாநவ்ருத்த வம்சங்களால் நிஹீநராயிருந்து காட்டினார்கள் என்கிற அத்யவஸாய விசேஷத்தைக் காட்டுவதே இப்பாட்டின் கருத்து. அவர்களுடைய ஜாதி முதலியவை ஏதாயினும் அவர்களெல்லாரும் அப்படியே நமக்கு உத்தேச்யர்கள் என்று காட்டியவாறுமாம். .... (உசு)

http://acharya.org

கொள்ளக் குறைவற்றிலங்கி * கொழுந்துவிட் டோங்கியவுன்
வள்ளற்றனத்தினால் வல்வினையேன் மனம் நீபுகுந்தாய் *
வெள்ளைச் சுடர்விடுமுன்பெருமேன்மைக் கிழுக்கிதென்று
தள்ளுற்றிரங்கும் * இராமாநுசவென் தனி நெஞ்சமே. (உஎ)

| | |
|---|---|
| இராமாநுச | எம்பெருமானாரே!, |
| கொள்ள குறைவு அற்று இலங்கி | கொள்ளக்கொள்ளக் குறையாமல் தானே விளங்கி |
| கொழுந்து விட்டு ஓங்கிய | மேன்மேலும் இளகிப் பதித்து வளர்ந் திருப்பதான |
| உன் வள்ளல் தனத்தினால் | தேவரீருடைய ஔதார்ய குணத்தாலே |
| வல் வினையேன் மனம் | மஹாபாபியான எனது நெஞ்சிலே |
| நீ புகுந்தாய் | (தேவரீருடைய பெருமை பாராதே) வந்து புகுந்தருளிற்று; |
| இது | (வஸிஷ்டன் சண்டாள க்ருஹத்தில் புகுந் தாற்போலே) புகுந்தவிது, |
| வெள்ளை | பரிசுத்தமாய் |
| சுடர் விடும் | விளங்காநின்றுள்ள |
| உன் பெரு மேன்மைக்கு | தேவரீருடைய ப்ரபாவத்திற்கு |
| இழுக்கு என்று | அவத்யாவஹம் என்று |
| என் தனி நெஞ்சம் | எனது துணையற்ற நெஞ்சானது |
| தள்ளுற்று இரங்கும் | தளர்ந்து ஈடுபடா நின்றது. |

* * *:—ஸ்வாமிந்! தேவரீருடைய பெருமையையும் அடியேனுடைய சிறுமையையும் சிறிதும் பாராமல் "இவன் நம் அடியார் விஷயத்திலே சபலனாயிருப்பானொருவன்" என்கிற இவ்வளவையேகொண்டு பாபிஷ்டமான என் ஹ்ருதயத்திலே தேவரீர் புகுந்தருளிற்று; வஸிஷ்டன் சண்டாளர் மனையிற் புகுந்தாற் போல் தேவரீர் என் நெஞ்சில் புகுந்த விது, தேவரீருடைய பரிசுத்தமாய் விளங்கும் மஹிமைக்கு என்ன அவத்யத்தை விளைத்திடுமோவென்று அஞ்சாநின்றேன். ... .... (உஎ)

நெஞ்சில்கறைகொண்ட கஞ்சனைக் காய்ந்தநிமலன் * நங்கள்
பஞ்சித்திருவடிப் பின்னைதன் காதலன் * பாதம்நண்ணா
வஞ்சர்க்கரிய விராமாநுசன் புகழன்றி யென்வாய்
கொஞ்சிப் பரவகில்லாது * என்னவாழ்வின்று கூடியதே (உஅ)

http://acharya.org

| | | | |
|---|---|---|---|
| நெஞ்சில் கறை கொண்ட கஞ்சனை | நெஞ்சிலே கல்மஷத்தை யுடையனாயிருந்த கம்ஸனை | பாதம் நண்ணா | திருவடிகளை ஆச்ரயியாத |
| காய்ந்த | முடித்த | வஞ்சர்க்கு | ஆத்மாபஹாரக் கள்வர்களுக்கு |
| நிமலன் | ஹேயப்ரத்ய நீகனாய், | அரிய | துர்லபரான |
| நங்கள் பஞ்சி திருவடி | ஆச்ரிதர்பக்கல் அபிமான முடையளாய் பஞ்சுபோல் மெல்லிய திருவடிகளை யுடையளான | இராமாநுசன் | எம்பெருமானா ருடைய |
| | | புகழ் அன்றி | குணங்களையொழிய (மற்றொன்றை) |
| | | என் வாய் | என் வாக்கானது |
| | | கொஞ்சி பரவகில்லாது | குலாவி எத்தமாட்டாது; |
| பின்னை தன் காதலன் | நப்பின்னைப் பிராட்டிக்கு வல்லபனான கண்ண பிரானுடைய | இன்று கூடியது வாழ்வு | இன்று (எனக்கு) நேர்ந்த வாழ்ச்சியானது |
| | | என்ன | ஆச்சரியமானது. |

* * *:—நேற்றுவரை அபதார்த்தமாய்க் கிடந்த அடியேன் இன்று ஸத்தை பெற்று வாழ்ந்த அதிசயம் சொல்லி முடியுமோ?. இன்று உமக்குவந்த அதிசயம் என்னவென்று கேட்கிறீர்களோ? எம்பெருமானாருடைய குண கீர்த்தநத்தில் நேற்றுவரை உதாஸீநமாய்க் கிடந்த என் வாயானது இன்று அவருடைய திவ்ய கீர்த்திகளையன்றி வேறொன்றையும் அநுஸந்திக்கமாட்டேனென்று அது தன்னிலே ஊன்றிக் கிடக்கிறதே, இதைவிட அதிசயமுண்டோ? என்கிறார்.

எம்பெருமானார் எப்படிப் பட்டவரென்றால், எம்பெருமானிடத்தில் பக்தியுடையவர்களுக் கன்றி மற்றையோர்க்கு அடைய முடியாதவர்; பகவத் பக்தர்களுக்குப் பரமஸுலபர் என்றபடி.

நெஞ்சில் கறைகொண்ட கஞ்சன்=தன்னைக் கொல்லப்பிறந்த தேவகீபுத்திரன் யசோதையினிடம் ஒளித்து வளர்தல் முதலிய வரலாறுகளை நாரதன் சொல்லக்கேட்டது முதற்கொண்டு கம்ஸன் கண்ணபிரானிடத்துப் பூர்ணமான மாத்ஸர்யம் பாராட்டிப் பல வகைகளினால் அப்பெருமானை வதைக்க வழிதேடிக்கிடந்தானென்பதும், கடைசியாக வில்விழாவென்கிற வியாஜம் வைத்துக் கண்

http://acharya.org

ணனை மதுரைக்கு வரவழைத்துக் கொல்லப் பார்க்கையில் கம்ஸ ஸபையிலே கண்ணபிரான் வேகமாக எழும்பிக் கஞ்சனது மஞ்சத்தின் மேலேறி அவனது கிரீடம் சுழன்று கீழேவிழும்படி அவனைத் தலைமயிர் பிடித்துத் தரையில் தள்ளி அவன்மேல் தான் விழுந்து அவனைக் கொன்றிட்டனன் என்பதும் இங்கு அறியத் தக்கன.

நங்கள் பஞ்சித்திருவடிப் பின்னைதன் காதலன் = நமக்குப் புருஷகாரம் செய்வதையே தொழிலாகக் கொண்டவளும் பரம ஸுகுமாரமான திருவடிகளை யுடையவளுமான நப்பின்னைப்பிராட்டிக்கு நாதன் என்றபடி.

ஆக, கஞ்சனைக்கொன்ற பின்னை மணாளனை திருமால் பக்கல் பத்தியற்ற பாவிகளுக்கு துர்லபரான எம்பெருமானாருடைய புகழையே இன்று வாய்வெருவப்பெற்ற அடியேன் ஒப்பற்ற வாழ்ச்சி பெற்றேனென்றாராயிற்று. .... ... .... (உஅ)

கூட்டும் விதியென்று கூடுங்கொலோ? * தென்குருகைப்பிரான்
பாட்டென்னும் வேதப்பசுந்தமிழ் தன்னைத் * தன்பத்தியென்னும்
வீட்டின்கண்வைத்த விராமாநுசன்புகழ் மெய்யுணர்ந்தோ
ரீட்டங்கள் தன்னை * என்நாட்டங்கள் கண்டின்ப மெய்திடவே.

| | |
|---|---|
| தென் குருகை பிரான் | நம்மாழ்வாருடைய |
| பாட்டு என்னும் | பாசுரங்கள் என்று ப்ரஸித்தமாய் |
| வேதம் | வேதரூபமாய் |
| பசும் தமிழ் தன்னை | செந்தமிழாயிருக்கிற திருவாய் மொழியை |
| தன் பத்தி என்னும் வீட்டின் கண் வைத்த | தம்முடைய பக்தியாகிற மாளிகையிலே ஸ்தாபித்தருளிய |
| இராமாநுசன் | எம்பெருமானாருடைய |
| புகழ் | கல்யாண குணங்களை |

| | |
|---|---|
| மெய் உணர்ந்தோர் | உள்ளபடி அறிந்திருக்குமவர்களுடைய |
| ஈட்டங்கள் தன்னை | கோஷ்டிகளை |
| என் நாட்டங்கள் கண்டு | என் கண்களானவை ஸேவித்து |
| இன்பம் எய்திட | ஸுகிக்கும்படியாக |
| கூட்டும் விதி | அமைக்கவல்ல (அவருடைய) க்ருபையானது |
| என்று கூடும் கொல் | என்றைக்கு வாய்க்குமோ? |

http://acharya.org

* * *:—நம்மாழ்வா ரருளிச்செய்த தமிழ் வேதத்தைப் பத்தியுடன் பரவும் எம்பெருமானாருடைய திருக்கல்யாண குணங்களை உள்ளபடி உணர்ந்து ஈடுபட்டிருக்கும் மஹான்களுடைய கோஷ்டிகளை அடியேன் ஸேவித்து ஆநந்திக்கும்படியான பாக்கியம் என்றைக்கு வாய்க்குமோ என்கிறார்.

கூட்டும் விதி என்று கூடுங்கொல்=விதியாவது அத்ருஷ்டம்; எம்பெருமானாருடைய திருவருள்தான் இங்கு விதியெனப்படுகின்றதென்க. கூட்டும் விதி=என்று கூடியும் இப்பேற்றை நமக்குச் சேர்விப்பதான அவருடைய க்ருபை என்றபடி.

தன்பத்தி யென்னும் வீட்டின்கண் வைத்த = விலையுயர்ந்த மாணிக்கத்தைச் செப்பிலே வைத்துக்கொண் டிருப்பாரைப்போலே அநர்க்கமான அருளிச்செயலைத் தம்முடைய பக்தியாகிற உயர்ந்த மாளிகையிலே வைத்துப் பேணிக்கொண்டிராநின்ற உடையவர் என்றபடி. நாட்டம்—கண். ... ... ... (உகூ)

இன்பந்தரு பெருவீடுவந் தெய்திலென் ? * எண்ணிறந்த
துன்பந்தரு நிரயம்பல சூழிலென் ? * தொல்லுலகில்
மன்பல்லுயிர்கட் கிறையவன் மாயனென மொழிந்த
அன்பனனகன் * இராமாநுசனென்னை யாண்டனனே. (௩௦)

| | |
|---|---|
| தொல் உலகில் | 'அநாதியான இவ்வுலகத்தில் |
| மன் பல் உயிர்கட்கு இறையவன் மாயன் | நித்யரான எல்லா ஆத்மாக்களுக்கும் சேஷியாவான் விஷ்ணுவே' |
| என மொழிந்த | என்று (ஸ்ரீபாஷ்ய முகத்தாலே) அருளிச்செய்த |
| அன்பன் | பரமகாருணிகராய் |
| அனகன் | நிர்த்தோஷரான |
| இராமாநுசன் | எம்பெருமானார் |
| என்னை ஆண்டனன் | என்னை அடிமைகொண்டருளினார்; |
| | (ஆனபின்பு) |
| இன்பம் தரு பெரு வீடு வந்து எய்தில் என் | ஆநந்தாவஹமான மோக்ஷம்வந்து ஸித்தித்தாலென்ன? |
| எண் இறந்த துன்பம் தரு பல நிரயம் சூழில் என் | அளவற்ற துக்கங்களைத் தருகிற பல நரகங்கள் வந்து சூழ்ந்து கொண்டால்தான் என்ன?, |

http://acharya.org

* * *:—" இராமாநுசன் புகழ் மெய்யுணர்ந்தோ ரீட்டங்கள் தன்னை என் நாட்டங்கள்கண்டு இன்பமெய்திட—கூட்டும் விதி என்று கூடுங்கொலோ " என்று ஆசம்ஸித்த அமுதனாரை நோக்கிச் சிலர்—' வாரீர் ! இவ்வளவுதானோ உமக்கு வேண்டுவது ? இனி பரமபத ப்ராப்தி முதலானவையொன்றும் உமக்கு அபேக்ஷித மல்லவோ ?' என்று கேட்க; எம்பெருமானார் என்னை அடிமை கொண்டருளப்பெற்றபின்பு எனக்கு மோக்ஷம் கிடைத்தாலென்ன? பலபல நரகங்கள்தான் நேர்ந்தாலென்ன ? எனக்கு எது பரம ப்ராப்யமோ அது கிடைத்துவிட்டது ! என்று சரக்கறப் பேசுகிறார்.

நிரயம்—வடசொல். அனகன்—அநவ: என்ற வடசொல் விகாரம் : ஹேய ப்ரதிபடர் என்றபடி. ... ... (௯௦)

ஆண்டுகள்நாள் திங்களாய் * நிகழ்காலமெல்லாம்மனமே !
ஈண்டுபல்யோனிகள் தோறுழல்வோம் * இன்றோ ரெண்ணின்றியே
காண்டகு தோளண்ணல் தென்னத்தியூரர் கழலிணைக்கீழ்ப்
பூண்ட வன்பாளன் * இராமாநுசனைப் பொருந்தினமே. (௯௧)

| | |
|---|---|
| மனமே | நெஞ்சே !, |
| நாள் ஆய் | நாள்களாகவும் |
| திங்கள் ஆய் | மாதங்களாகவும் |
| ஆண்டுகள் ஆய் | வருஷங்களாகவும் (இப்படி) |
| நிகழ் காலம் எல்லாம் | நடந்துசெல்லுகிற ஸர்வ காலங்களிலும் |
| ஈண்டு பல் யோனிகள் தோறு | திரண்டு பலவகைப் பட்ட யோனிகள் தோறும் |
| உழல்வோம் | தட்டித்திரிந்த நாம், |
| இன்று ஓர் எண் இன்றியே | இன்று ஒரு நினைவு மில்லாதிருக்கச் செய்தே (அகஸ்மாத்தாக) |
| காண் தகு தோள் அண்ணல் தென் அத்தியூரர் கழல் இணை கீழ் பூண்ட அன்பு ஆளன் இராமாநுசனை பொருந்தினம் | கண்ணாரக் காணத் தக்க தோள்களை யுடைய ஸ்வாமியான பேரருளாளனுடைய திருவடிகளில் அன்பு பூண்ட எம்பெருமானாரைச் சேரப் பெற்றோம். (என்ன பாக்கியம் !.) |

* * *:—நெஞ்சே ! இன்றளவும் நமக்குக் கழிந்த காலங்கள் கணக்கிட முடியா; வருஷக் கணக்காகவும் மாதக்கணக்காகவும் நாட் கணக்காகவும் கழிந்து செல்லுகின்ற காலமெல்லாம் மாறிமாறிப் பலபிறப்பும் பிறந்து தடுமாறித் திரிந்த நாம் இன்று ஒரு நினை

http://acharya.org

வின்றியே அகஸ்மாத்தாக எம்பெருமானாரை அடிபணியப் பெற்றோமே! நம்முடைய அத்ருஷ்டம் எப்படிப்பட்டது! கண்டாயே! என்று தம் திருவுள்ளத்தோடே உசாவுகின்றார்.

ஈண்டு பல் யோனிகள்தோறு = ஈண்டுதல்—திரளுதல்; திரண்டு பலவகைப்பட்ட யோனிகளென்றால்—தனித்தனியே எண்ணி இத்தனையென்று சொல்லமுடியாத வளவன்றிக்கே திரள்திரளாகவும் எண்ணிச் சொல்லமுடியாதபடி பலவகைப்பட்ட யோனிகள் என்றதாகிறது. உழல்வோம் = இறந்தகாலப்பொருள் இங்கு விவக்ஷிதம். இன்றளவும் தட்டித்திரிந்த நாம் என்றபடி. ... (௩௧)

பொருந்தியதேசும் பொறையுந்திறலும் புகழும் * நல்ல
திருந்தியஞானமுஞ் செல்வமுஞ் சேரும் * செறுகலியால்
வருந்திய ஞாலத்தை வண்மையினால் வந்தெடுத்தளித்த
அருந்தவன் * எங்க ளிராமாநுசனை யடைபவர்க்கே. (௩௨.)

| | | | |
|---|---|---|---|
| செறு கலியால் | (தரும நெறியைத்) திரஸ்கரிக்கின்ற கலியினாலே | அடைபவர்க்கு | ஆச்ரயிக்குமவர்களுக்கு |
| வருந்திய | துக்கப்பட்ட | பொருந்திய தேசும் | ஸ்வரூபாநுரூபமான தேஜஸ்ஸும் |
| ஞாலத்தை | பூமியை | பொறையும் | க்ஷமாகுணமும் |
| வண்மையினால் வந்து எடுத்து அளித்த | தமது நிர்ஹேதுக க்ருபையாலே வந்து உத்தரித்து ரக்ஷித்தவரும் | திறலும் | ஜிதேந்த்ரியத்வமாகிற பலமும் |
| | | புகழும் | கீர்த்தியும் |
| அரும் தவன் | சரணாகதி யென்கிற அரிய தபஸ்ஸை அநுஷ்டித்தவரும் | நல்ல திருந்திய ஞானமும் | பரம விலக்ஷணமான அறிவும் |
| எங்கள் | எமக்கு ஸ்வாமியுமான | செல்வமும் | பக்தியாகிற ஸம்பத்தும் |
| இராமாநுசனை | எம்பெருமானாரை | சேரும் | தானே வந்துசேரும். |

* * *:—“இராமாநுசனைப் பொருந்தினமே” என்று அகங்களித்துக் கூறின அமுதனாரை நோக்கிச் சிலர், ‘உம்மைப்போலே நாங்களும் இராமாநுசனைப் பொருந்துவோமென்று பார்த்தால் உமக்குப்போலே எமக்கு ஆத்மகுணலேசமும் இல்லையே! எங்க



http://acharya.org

ளுக்கு அவரைப்பொருந்த அதிகாரமில்லையே!' என்று சொல்லி வருந்த; அவர்களைநோக்கி அருளிச் செய்கின்றூர்—கலிகலுஷ நிவர்த்தகரான நம்மிராமாநுசரை ஆச்ரயிப்பவர்களுக்கு ஸ்வரூபாநுரூபமான மதிப்பும், * களிப்புங்கவர்வு மற்றிருக்கையாகிற க்ஷமாகுணமும், ஜிதேந்த்ரியத்வமாகிற மிடுக்கும், குணசாலிகளென்கிற கீர்த்தியும், தத்வஹித புருஷார்த்தங்களில் தெளிந்த ஞானமும், பக்தியாகிற மஹாஸம்பத்தும் ஆகிய இவை யெல்லாம் தன்னடையே வந்து சேரும் என்றூராயிற்று. ஆகையால் நீங்களும் மயங்காது வந்து ஆச்ரயிக்கலா மென்றவாறு. .... (௬௨.)

அடையார்கமலத் தலர்மகள் கேள்வன் * கையாழியென்னும்
படையோடு நாந்தகமும் படர்தண்டும் * ஒண்சார்ங்கவில்லும்
புடையார் புரிசங்கமு மிந்தப்பூதலம் காப்பதற்கென்று *
இடையே யிராமாநுச முனியாயின விந்நிலத்தே. (௬௩)

| | |
|---|---|
| அடை ஆர் கமலத்து அலர் மகள் கேள்வன் | தளங்கள் நெருங்கிய தாமரைப்பூவிற் பிறந்த பெரிய பிராட்டியார்க்கு வல்லபனை எம்பெருமானுடைய |
| கை | திருக்கையிலே (விளங்காநின்ற) |
| ஆழி என்னும் படையோடு | திருவாழியென்கிற திவ்யாயுதத்தோடே |
| நாந்தகமும் | நந்தகவாளும் |
| படர் தண்டும் | ரக்ஷணத்தொழிலிலே பரந்திராநின்ற கதையும் |
| ஒண் சார்ங்கம் வில்லும் | அழகிய ஸ்ரீ சார்ங்கமென்கிற வில்லும் |

| | |
|---|---|
| புடை ஆர் புரி சங்கமும் | ஒரு பக்கத்துக்குத் தானே ஆபரணமாகப் போரும்படியான அழகிய ஸ்ரீபாஞ்சஜந்யமும் (ஆக இப் பஞ்சாயுதாழ்வார்கள்) |
| இந்த பூதலம் காப்பதற்கு என்று | இந்தப் பூமியை ரக்ஷிக்கைக்காக |
| இந்நிலத்து | இப்பூமண்டலத்திலே |
| இராமாநுச முனி இடையே ஆயின | எம்பெருமானார் பக்கலிலே ஆயினர். |

* * *:—கீழ்ப்பாட்டில், எம்பெருமானாரை ஆச்ரயிக்கவே நற்குணங்களெல்லாம் தன்னடையே வந்து சேரும் என்றூர்; அத

http://acharya.org

லீனச் செவியேற்ற சிலர்—"ஜிதேந்த்ரியத்வம் முதலான அரிய பெரிய பேறுகள் திருவாழி முதலான திவ்யாயுதங்களின் அநுக்ர ஹத்தாலன்றோ உண்டாகவேண்டும்; மநுஷ்யர்களில் ஒருவரான எம்பெருமானாரை ஆச்ரயித்தமாத்திரத்தால் அவை உண்டாய் விடுமோ?" என்று சங்கிக்க, அந்த ஸ்ரீ பஞ்சாயுதாழ்வார்களும் லோகரக்ஷணார்த்தமாக எம்பெருமானார் பக்கலிலேவந்து குடி கொண்டனர் காண்மின்—என்கிறார் இப்பாட்டில்.

"அடையார்கமலத் தலர்மகள்கேள்வன் கையாழி யென்னும் படையோடு நாந்தகமும் படர்தண்டும் ஒண்சார்ங்கவில்லும் புடை யார் புரிசங்கமும் இந்தப் பூதலங் காப்பதற்கென்று இங்ஙிலத்தே இராமாநுச முனியிடையே ஆயின" என்று அந்வயித்தவாறு. ஸ்ரீ பஞ்சாயுதாழ்வார்கள் இவர்பக்கலிலே ஆகையாவது—இவரு டைய நினைவைக் கடாக்ஷித்துநின்று இவர் அதிகரித்த காரியத்திற் குத் துணைசெய்கையாம். அம்பரீஷனுக்குத் திருவாழியாழ்வான் ஸஹகரித்ததுபோல.

இப்பாட்டை மற்றொருவகையாகவும் அந்வயிக்க இடமுண்டு:- "அடையார்+புடையார் புரிசங்கமும் இந்தப்பூதலங் காப்பதற் கென்று இங்ஙிலத்திடையே இராமாநுசமுனியாயின" என்று. இப்பக்ஷத்தில் ஸ்ரீ பஞ்சாயுதாழ்வார்களே இங்ஙிலவுலகைக் காக்க எம்பெருமானாராக வந்து திருவவதரித்தார்களென்றதாகிறது.

## இங்கே சில பூர்வபக்ஷ ஸமாதாநங்கள்.

இப்பாட்டினால், எம்பெருமானார் பஞ்சாயுதாழ்வார்களுடைய திருவவதாரமென்று விளங்காநின்றமையால் திருவனந்தாழ்வா னுடைய அவதாரமென்று சொல்வது ப்ராமாணிகமன்றென்று சிலர் ஆக்ரஹங்கொண்டு பேசுவர்கள்.

இப் பாட்டினால் ஏற்பட்ட அர்த்தமென்னவென்று ஆராய் வோம். மணவாளமாமுனிகளும் பிள்ளைலோகஞ்சீயரு மருளிச் செய்த வியாக்கியானங்களில் அடையார்கமல மென்று தொடங்கி, புடையார் புரிசங்கமும் இந்தப்பூதலங் காப்பதற்கென்று இங்ஙிலத்தே இராமாநுச முனியிடையே ஆயின என்று அந்வயித்து, பஞ்சாயுதாழ்

http://acharya.org

வார்கள் லோகரக்ஷணார்த்தமாக எம்பெருமானார்க்கு ஸஹகாரிகளாக வந்து அமைந்தார்கள்—என்கிற அர்த்தமே முற்பட அருளிச் செய்யப்பட்டுள்ளது. 'பஞ்சாயுதங்கள் எம்பெருமானாராக வந்து அவதரித்தன' என்று ஸ்ரீவேதாந்ததேசிகன் அர்த்தம் செய்து கொண்டதாக யதிராஜ ஸப்ததியினால் விளங்கினபடியால் அதுவும் ஒரு அர்த்தமாக இருக்கலாம் என்று திருவுள்ளம்பற்றி அதனைப் பக்ஷாந்தரமாக உரைத்தருளினர். "மற்றைப் பக்ஷத்தில்" என்ற ஜீயருரைவாக்கியம் நோக்கத்தக்கது. "இத்தால் இவருடைய விரோதி நிரஸந ஸாமர்த்தியத்தைப்பற்ற ஸ்ரீபஞ்சாயுதாவதார மென்று ப்ரபாவகதநம் பண்ணினாராய்த்து" என்ற அவ்விடத்து ஸ்ரீஸூக்தியும் குறிக்கொள்ளத்தக்கது.

'எம்பெருமானார் சேஷாவதாரமென்று பலபடிகளாலும் பல ஸூக்திகளாலும் ப்ரஸித்தமாயிருக்க, பஞ்சாயுதாவதாரமென்று அமுதனார் அருளிச்செய்கிறாரே! இதுவென் என்று சிலர் திகைக்கக்கூடுமென்று திருவுள்ளம்பற்றிய மணவாளமாமுனிகள் மேற்குறித்த ஸ்ரீஸூக்திகளை அருளிச்செய்யலாயினர் என்னுமிடம் உய்த்துணரத்தக்கது.

மாமுனிகள் கூறியபடியேதான் கொள்ளவேணுமென்று எமக்கு நிர்ப்பந்தமில்லாமையால், பக்ஷாந்தரமாக அவர் கூறிய பொருளே எமக்கு முக்கிய கல்பமாமென்று கூறத் தலைப்படுவாருமுண்டு. அதிலும் எமக்கொரு வைமத்யம் இல்லை. 'எம்பெருமானார் பஞ்சாயுதாவதாரம்' என்று சொல்வதே இப்பாட்டின் முக்கியமான கருத்தாக இருக்கட்டும்; அதனால் என்ன ஹாநி விளைந்திடும்?

இங்கே ஒன்று கேட்கவேண்டிற்றுண்டு;—எம்பெருமானார் பஞ்சாயுதாவதாரர் என்கிற ஒரு வார்த்தையை மாத்திரமே சொல்லலாம்; சேஷாவதாரர் இத்யாதி வார்த்தைகளைச்சொல்லவே கூடாது என்று கருத்தா? அல்லது பஞ்சாயுதாவதாரத்வத்தை முக்கியமாகச்சொல்லி மற்றவற்றை அமுக்கியமாகச் சொல்லவேணுமென்று கருத்தா? என்று. ப்ரதிபக்ஷிகளின் வசநவ்யக்திகளை ஆராயுமிடத்து, பஞ்சாயுதாவதாரர் என்பதற்குமேல் வேறொன்றும் சொல்லக்கூடாதென்பதே அபிநிவேச விஜ்ரும்பிதமாக விளங்கு

http://acharya.org

கின்றது. இங்ஙனேயாகில், ஸ்ரீதேசிகன் ஸ்ரீஸூக்தியே இவர்களுக்கு முந்துறமுன்னம் தூஷணீயமாகத்தேறும். ஏனெனில் ;—“ வவ்ருதே பஞ்சபிராயுதைர் முராரேः” என்றருளிச்செய்த தேசிகன் தாமே அந்த யதிராஜ ஸப்ததியில் தானே “நாநாபூதைः” இத்யாதி [முப்பத்திரண்டாம்] ச்லோகத்தில் “ விஷ்வக்ஸேநோ யதிபதிரபூத் வேத்ரஸாரஸ் த்ரிதண்டः” [விஷ்வக்ஸேநோ யதிபதிரபூத் வேத்ரஸாரஸ் த்ரிதண்டः=ஸேனை முதலியார் எம்பெருமானாராக அவதரித்தார்; (அவருடைய) திருப்பிரம்பு த்ரிதண்டமாக அவதரித்தது] என்றும் அருளிச்செய்து வைத்தாரிறே. சேஷாவதாரத்வத்தை அமுதனார் அருளிச்செய்யவில்லையே யென்னில், ஸேனேசாவதாரத்வத்தை அமுதனார் அருளிச்செய்யவில்லையே என்போம்.

இனி, பஞ்சாயுதாவதாரத்வத்தை முக்கியமாகச் சொல்லி மற்றவற்றை அமுக்கியமாகச் சொல்லலாம் என்பதும் ஸமஞ்ஜஸமன்று ; உடையவர் திருவடிகளில் ஸாக்ஷாத்தாக ஆச்ரயித்திருந்த ஆசிரியர்களும் பின்புள்ளாரான பல பெரியோர்களும் ஒருமிடறாக அருளிச்செய்ததே முக்கிய கல்பமாகக் கொள்ளவடுக்கும். சேஷாவதாரத்வத்தையே பல ஆசிரியர்கள் ஆதரித்து அருளிச்செய்திருக்கின்றன ரென்பதை ஸப்ரமாணமாக உபபாதிக்க வல்லோம்.

திருமலை அனந்தாழ்வானருளிச்செய்த ஸ்ரீவேங்கடாசலேதிஹாஸமாலா என்கிற நூலில்—

“[illegible]
‘[illegible]’
[illegible]......
[illegible].

ஶ்லோ॥ [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]॥”

http://acharya.org

என்றருளிச்செய்துள்ள கத்ய பத்யங்களைக் காண்க. [எம்பெரு மான் தனது அத்தாணிச் சேவகனும் படுக்கையுமான திருவனந் தாழ்வானை நோக்கி 'நீ நிலவுலகத்திற் சென்று பிறந்து எவ்வுயி ரையும் ஸம்ரக்ஷிக்கக்கடவை' என்று நியமித்தருள, அந்த நியமநத் தைச் சிரமேற்கொண்ட ஆதிசேஷன் அப்படியே திருவாதிரையில் கேசவ ஸோமயாஜிகளுக்குப் புத்திரனாகப் பிறந்தமை மேற் குறித்த ஸ்ரீஸூக்தியில் கூறப்பட்டுள்ளது.]

வடுகநம்பி அருளிச்செய்த ச்லோக ரூபமான யதிராஜவைபவ க்ரந்தத்தில்

"வெ஦ாந்தஸித்தாந்தஸமர்த்நாய பாஹ்யாந்குத்ருஷ்டீந்ஶமநாய சா ஶெஷாம்ஶகஃ கெஶவயஜ்வநொ தெஜொநிதிஃ கஶ்சிதிஹாவிராஸீத் ॥

என்றுளது. [வேதாந்த ஸித்தாந்தங்களை ஸமர்த்தநம் செய்வதற் காகவும் துர்மதங்களைத் தொலைப்பதற்காகவும் திருவனந்தாழ்வா னுடைய அம்சபூதராய் தேஜோநிதியான ஒருமஹான் கேசவ ஸோமயாஜிகளின் தேவியாரிடத்தில் அவதரித்தார் என்கிறது இதில்.] இந்த க்ரந்தம் ஸ்ரீதேசிகன் வைபவத்தோடு சேர்த்து ஸ்ரீபர கால மடாதிபதி ஸ்வாமியால் அச்சிடப்பட்டதும் பூர்வாசார்ய க்ரந்தங்களில் ஸம்வாதப்ரமாணமாக உதாஹரிக்கப் பட்டதுமாம்.

எம்பெருமானுருடைய பூர்ணகடாக்ஷ பாத்ரராய் அவர்திறத் துத் தேவுமற்றறியாதே ஈடுபட்டிருந்த மஹா ப்ராஜ்ஞரான கருட வாஹந பண்டிதர் பணித்த திவ்யஸூரிசரித மென்னும் மஹாகாவ் யத்தில் பதினேழாவது ஸர்க்கத்தில் ஸ்ரீராமாநுஜவைபவம் சொல் லப் புகுந்தவிடத்து,

"ஸஞ்ஜஜ்ஞெ ஸமவஹாய ஶெஷெஸொபி
யஸ்ய தெஹம் த்ரிதஶவநவந்திதம் ஜஹௌ."

[திருவனந்தாழ்வான் தனது உரகவுடலை விட்டொழிந்து இராமா நுச முனியாந் திருவுருவத்தை யடைந்தான்] என்றும்,

"த்ரெதாஹம் தவ ஸவிதொஷிதாநுகூலாஸ
ஶெஷாம்ஶாஜ்ஞநவிநம்ஶ்ரூதாவதாராஸ."

http://acharya.org

[உமது பக்கத்திலிருப்பவரும் லோகஸம்ரக்ஷணார்த்தமாகத் திருவனந்தாழ்வானுடைய அம்சமாக வந்து திருவவதரித்தவருமான இந்த மஹானிடத்தில் நான் அஞ்சுகின்றேன் (—யாதவப்ரகாசனை நோக்கி ப்ரஹ்மரக்ஷஸ்ஸின் வார்த்தையாமிது) என்றும் உள்ள ச்லோகங்கள் நோக்கத்தக்கன.

இந்த திவ்யஸூரிசரிதகாரர், அமுதனார் நூற்றந்தாதி அருளிச்செய்திருப்பது தெரியாமல் தானே ஏதோ ஸ்வதந்த்ரமாகச் சொல்லிவிட்டார் என்பதும் ஏலாது. அந்தக் காவ்யத்திலேயே பதினெட்டாம் ஸர்க்கத்தில்—

" ஶ்ரீரங்காம்ருதகவிராஹ ரஸஜ்ஞஹ்ருத்யை:
தத்ஸேவ்யா யதிபதிதிவ்யவைபவானுபந்தி।
ஶடாரிஸூக்திஸமிரா ஸஹாப்ரபந்தம்
ராமானுஜார்யஶதகம் யமகம் ஸசேதந." 51.

[திருவரங்கத்தமுதனார் அமுதப் பெருக்கான தமிழ்மொழியாலே எம்பெருமானாருடைய வைபவங்களைப் பேசுகிற நூற்றந்தாதிப் பிரபந்தத்தை அருளிச் செய்தார்] என்று அவர்தாமே சொல்லி வைத்திருக்கும்படியைக் காண்மின். இராமாநுச நூற்றந்தாதியில் அவர்க்கு அளவற்ற ப்ராவண்யமுள்ளமை அடுத்த ச்லோகத்தில் நன்கு புலப்படும்.

இப்படியே எம்பெருமானாருடைய சேஷாவதாரத்வத்தை வெளியிட்டருளின மற்றும் பலபல ஆசிரியர்களின் ஸ்ரீஸூக்திகளை எடுத்துக் காட்டப்புகின் விரிவு பெரிதுடைத்தாம். வடவாசார்ய ஸம்ப்ரதாயத்தில் முந்நூறு நானூறு வருஷங்களுக்கு முன்பு ப்ரஸித்த பண்டிதர்களாயிருந்து பலநூல்களை இட்டவர்களான ஸூரபுரம் வெங்கடாசாரியர், அரசாணிபாலை வெங்கடாசாரியர் முதலானாரும் இவ்வழியையே ஆதரித்துப் பேசியுள்ளார். எங்ஙனேயெனில்;—ஸூரபுரம் வெங்கடாசாரியர் இயற்றின யதிராஜ தண்டகத்தில் "நரவேஷாய சேஷாயகுரவே பரவேதிநே" என்று மங்கள ச்லோகத்திலும், "தோஷாதிதூராய சேஷாவதாராய" என்று முடிவிலும் சேஷாவதாரத்வமே சொல்லப்பட்டது.

http://acharya.org

அரசாணிபாலை வெங்கடாத்வரி இயற்றிய விச்வகுணதர்சத்தில் ஸ்ரீபெரும்பூதூர் வர்ணநப்ரகரணத்தில்—

"ராமாநுஜாய முநயே நரவேஷமஹீப்ருதே
ஶேஷாய யதிதக்ஷகலயே கலயே ப்ரணுமஹே."

[மநுஷ்யாவதாரமெடுத்த ஆதிசேஷனையும் கலியைக் கெடுத்தவராயுமுள்ள எம்பெருமானாரைத் தொழுகின்றேன்] என்று சொல்லப்பட்டது. முன்னோர்கள் ஸம்ப்ரதாய பரம்பரையாகச் சொல்லிக்கொண்டு வந்ததை அடியொற்றி இவர்களெல்லாரும் இப்படி சேஷாவதாரமென்று தம் தம் நூல்களிற் கூறினார்களேயன்றித் தாங்தோன்றியாக ஆரும் நவீந கல்பனை செய்தாரல்லர்.

த்ருதீய ப்ரஹ்மதந்த்ர பரகால ஸ்வாமி இயற்றியதாகப் பரகாலமடத்து ஸ்வாமிகளாலும் மற்றும் பல முநித்ரய ஸம்ப்ரதாயஸ்தர்களாலும் அச்சிடுவிக்கப்பட்டுள்ள மூவாயிரப்படி குருபரம்பரா ப்ரபாவ நூலிலும் சேஷாவதாரத்வ ஸ்தாபகங்களான வசனங்களும் ச்லோகங்களும் மிகுதியாக உள்ளனவேயன்றி வேறில்லை.

ஸ்ரீதேசிகனை யடிபணிந்து உய்ந்து போந்த ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஸ்வாமி பணித்ததாக ப்ரஸித்தமாயுள்ள திவ்யஸூரிஸ்தோத்ரத்தில்—

"சைத்ரார்த்ராஸம்பவம் விஷ்ணோ: தர்சநஸ்தாபநோத்ஸுகம்।
துண்டீரமண்டலே ஶேஷமூர்த்திம் ராமாநுஜம் பஜே." 16.

[எம்பெருமானுடைய தர்சநத்தை ஸ்தாபித்தருள சித்திரைத் திருவாதிரையில் தொண்டை நாட்டில் அவதரித்த ஆதிசேஷ மூர்த்தியாகிய ஸ்ரீராமாநுஜனைத் தொழுகின்றேன்] என்று சொல்லப்பட்டுளது.

தேசிகப்ரபந்தங்களில் ஒன்றான பிரபந்தசாரத்தின் வியாக்கியானத்திலும், ராமாநுஜ தயாபாத்ரத் தனியன் வியாக்கியானங்கள் பலவற்றிலும் ப்ராஸங்கிகமாக உடையவருடைய சேஷாவதாரத்வத்தை நன்கு நிலைநாட்டி யெழுதியுள்ளார்கள். இனி, "மற்றிவை தான் என்னாலே கேட்டீரே ஏழைகாள் என்னுரைக்கேன்?—பன்னியுரைக்குங்கால் பாரதமாம்" என்று கைமொழிய வேண்டிற்றாயிரா

http://acharya.org

நின்றது. இங்ஙனே தென்னாசார்ய வடவாசார்ய உபய ஸம்ப்ரதாய நூல்களும் சேஷாவதாரத்வத்தை ஒருமிடறாக உரைக்கின்றன வென்பதை உற்றுநோக்கில் * முன்னோர் மொழிந்த முறைதப்பாமற் கேட்டுப் பின்னோர்ந்து தாமதனைப் பேசுவதே பாங்கு.

"𑌅𑌨𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌥𑌮𑌂 𑌰𑍂𑌪𑌂......𑌕𑌲𑍌 𑌕𑌶𑍍𑌚𑌿𑌦𑍍𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿.

[அநந்தஃ ப்ரதமம் ரூபம் .......கலௌ கச்சித் பவிஷ்யதி]

என்கிற வசநத்தை எடுத்துக்காட்டுகிறார்களென்று சொல்லி அதற்கு அந்யதாஸித்தி உண்டென்கிறார்கள். அநந்யதாஸித்தமாய் ஸுவ்யக்தமாயுள்ள பல ப்ரமாணங்களைக் கீழேயெடுத்துக் காட்டினேமுக்கு "கலௌ கச்சித் பவிஷ்யதி" என்கிற வசநத்திற் போராடவிரும்புதல் வீண். பெருக்காற்றின் கரையிலேயிருந்து வைத்துக் கிணறுவெட்ட முயலவேண்டாவிறே. ஆயினும், "நம்முடைய ஸ்ரீ பாஷ்யகாரரை 'கச்சித்' ஆக்குவதற்கு நமக்கு ஸம்மதமில்லை" என்றவர்கட்குச் சிறிது சொல்லவேண்டியிரா நின்றது. 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍—𑌕𑌶𑍍𑌚𑌨—𑌕𑍋𑌽𑌪𑌿. [கச்சித்—கச்சந—கோபி] என்பவை நிஹீநரைக் குறிக்குஞ் சொற்கள் என்று கருத்துப்போலும். உருவை மறைத்துவைத்துச் சொல்லுமிடங்களிலும் ஒரு வைலக்ஷண்யந் தோற்றச்சொல்ல நினைக்குமிடங்களிலும் கச்சித் இத்யாதி பதங்களையே பெரியோர் பிரயோகிக்கக்கண்டோம்;

"𑌕𑌾𑌮𑌾𑌦𑌧𑌿𑌵𑌸𑌨𑍍𑌜𑍀𑌯𑌾𑌤𑍍𑌕𑌶𑍍𑌚𑌿𑌦𑌦𑍍𑌭𑍁𑌤𑌕𑍇𑌸𑌰𑍀."

[காமாத் அதிவஸந் ஜீயாத் கச்சித் அத்புதகேஸரீ]

"𑌕𑌾𑌮𑌪𑍍𑌯𑌾𑌤𑍍𑌯𑌂 𑌕𑍁𑌰𑍁𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌕𑌮𑌲𑌾𑌗𑍃𑌹𑌮𑍇𑌧𑌿𑌨𑌮𑍍."

[காமப்யாத்யம் குரும் வந்தே கமலாக்ருஹமேதிநம்]

"𑌕𑌾𑌮𑍀 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌕𑌰𑌕𑌮𑌲𑌯𑍋𑌰𑌞𑍍𑌜𑌲𑌿𑌂 𑌯𑌾𑌚𑌮𑌾𑌨𑌃."

[காமீ கச்சித் கரகமலயோரஞ்ஜலிம் யாசமாநஃ]

"𑌜𑌯𑌤𑌿 𑌕𑌿𑌤𑌵𑌃 𑌕𑍋𑌽𑌪𑌿 𑌕𑍌𑌮𑌾𑌰𑌹𑌾𑌰𑍀."

[ஜயதி கிதவஃ கோபி கௌமாரஹாரீ]

என்றிப்புடைகளிலே ஸ்ரீதேசிகன் அருளிச்செய்யக் காண்கிறோம். தேசிகன் எம்பெருமானை கச்சித்தாகச் சொல்லி இழித்துவிட்டாரென்று எண்ணக்கூடுமோ? அந்த கச்சித் ப்ரயோகத்திற்கும்



http://acharya.org

இந்த கச்சித் ப்ரயோகத்திற்கும் வாசியுண்டென்று சிலர் சொல்ல வுங்கூடும்; இந்த நூற்றந்தாதியிலே "நல்லார்பரவு மிராமாநுசன்" என்ற எண்பதாம்பாட்டின் வியாக்கியானத்தில்—

"𑌅𑌨𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌥𑌮𑌂 𑌰𑍂𑌪𑌂 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌸𑍍𑌤𑍁 𑌤𑌤𑌃𑌪𑌰𑌮𑍍।
𑌬𑌲𑌭𑌦𑍍𑌰𑌸𑍍𑌤𑍃𑌤𑍀𑌯𑌸𑍍𑌤𑍁 𑌕𑌲𑍌 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌃𑌸𑍍𑌮𑍃𑌤𑌃."

[அநந்தః ப்ரதமம் ரூபம் லக்ஷ்மணஸ்து ததஃபரம்—பலபத்ரஸ் த்ருதீ யஸ்து கலௌராமாநுஜஃ ஸ்ம்ருதஃ] என்றே பாடமாக உதாஹரித் திருக்கக் காண்கையாலே இந்த கச்சித் வாக்யார்த்த ப்ரயாஸம் வ்யர்த்தமேயாம். எவ்விதமாகப் பாடமிருந்தாலும் இந்த ச்லோ கமே கல்பிதமென்றாலும் இதில் எமக்கொரு அபிநிவேசமும் ஆக் ரஹமுமில்லை. ஸம்ப்ரதிபந்நங்களான ப்ரமாணங்கள் இல்லையாகி லன்றோ வருந்தவேண்டுவது—நிற்க.

"திருவேங்கட முடையான் ஸந்நிதியில் நடந்த சரித்திரம்" என்று ஒரு வரலாற்றை உதாஹரித்துக்காட்டி அதுவிஷயமாகச் சில தூஷணங்களும் ஸ்வச்சந்தமாக எழுதியுள்ள பூர்வபக்ஷிகளுக் கும், உண்மையான இதிஹாஸமின்னதென்றறியகில்லாத உலகத் தார்க்கும் உண்மையுணர்த்தப்புகுவோம். திருமலை அனந்தாழ்வா னருளிச்செய்த (ஸம்ஸ்க்ருத) இதிஹாஸமாலையில் அவ்வரலாறு விரித்துரைக்கப்பட்டுள்ளது; எங்ஙனேயெனில்;—(சுருங்கச்சொல் லுவோம்.)

பண்டு திருவேங்கடமுடையான் தன் பக்கல் பரமபக்த சிகா மணியாயிருந்த தொண்டைமான் சக்ரவர்த்திக்கு ஒரு காரணார்த் தமாகத் தனது திருவாழி திருச்சங்குகளைத் தந்தருளி, இப்படி ஆச்ரித பக்ஷபாதத்தாலே தனது திவ்யாயுதங்களையும் தந்து உப கரிக்கும் ஔதார்யகுணம் உலகில் பரவுதற்காகச் சிறிதுகாலம் ஸுதர்சநபாஞ்சஜந்ய சூந்யனாகவே இருந்திட்டான். அக்காலம் கலியின் கொடுமையால் வர்ணாச்ரம தர்மங்கள் குலைந்து தேவால யங்களும் சீர்கெட்டுப் பாஷண்டிகள் தலையெடுக்கும் காலமாயிருந் தது. திருமலையில் அர்ச்சகர்களாயிருந்த வைகாநஸர்கள் எம் பெருமானுக்கு முறைப்படி உபசாரங்கள் பண்ணாமல் அச்ரத்தை காட்டியிருந்த காரணத்தினால் தேசாதிபதியான யாதவராஜனால்

http://acharya.org

அடிக்கடி தண்டிக்கப்பட்டு அங்கு வாழகில்லாமல் வெளிநாடு சென்றனர்; வ்ருத்தர்களாயிருந்த அர்ச்சகர்கள் இங்ஙனம் ஒருவ ரொருவராக வெளியேற, ப்ரபலர்களான ஸ்ரீவைஷ்ணவர்களும் அங்கு இலராக, விரல் நுழைக்க இடம் தேடிக்கொண்டிருந்த சைவர்கள் சிலர் இதுவே நல்ல ஸமயமென்று கொண்டு அந்த யாதவமன்னன் பக்கல்சென்று அவனுடைய ப்ரீதியைச் சிறிது சிறிதாக ஸம்பாதித்து ஒருநாள் அவனிடம் சொன்னார்கள்—திரு மலையில் ஸ்வாமி புஷ்கரணியின் தென்கரையில் திகழும் தேவன் முருகக்கடவுள்தான்; அவர்க்குக் குமாரஸ்வாமியென்றும் பெயர் வழங்குவதுண்டாகையால் அந்த நாமைகதேசத்தையிட்டு ஸ்வாமி புஷ்கரிணியென்று அத்தடாகம் வழங்கப்பெற்றது. ஸ்ரீ வேங்க டாசல மாஹாத்மியம் கூறவந்த வாமந புராணப் பகுதியில் இரண் டாவது அத்யாயத்தில்—ஸுப்ராஹ்மண்யன் வேங்கடமலையில் ஒரு குளத்தின் கரையில் தவம் புரிந்து கொண்டிருந்தானென்று சொல்லப்பட்டிருத்தலாலும் அப்பெருமான் முருகக்கடவுளே. அவர்க்கு அஸாதாரண ஆயுதங்களான பாசமும் அங்குசமும் தவநிலைக்கு உரியவை யல்லாமையால் தரிக்கப்படவில்லை. இன்னும் பல ஹேதுக்களாலும் அம்மலை சைவ க்ஷேத்ரமேயாம். இப்போது தான் சிறிது காலமாகச் சில வைணவர்கள் கூடிப் புராணார்த்தங் களை மனம்போனபடி சொல்லி அப்பெருமான் விஷ்ணுவேயென் றுரைத்து ராஜாவை வசப்படுத்திக்கொண்டு சில வைஷ்ணவ விக்ர ஹங்களையும் கோவிலில் ஸ்தாபித்து உத்ஸவங்களை நடத்தத் தொடங்கினார்கள். உண்மையில் இது சைவக்ஷேத்ரமாகையால் சைவ விதிப்படி இனி இக்கோவிற் காரியங்கள் நடைபெறுமாறு மஹாப்ரபு செங்கோல் செலுத்தவேணும்—என்றார்கள்.

இதைக்கேட்ட அவ்வரசன் இந்த சைவர்கள் சொல்லுவ தெல்லாம் அநுபவ விருத்தமா யிருக்கின்றதே!; ஆராயாமல் நாம் எதையும் ஸாஹஸமாகச் செய்துவிடக்கூடாது; தக்கபடி ஆராய்ச்சி செய்யவேணும் என்றெண்ணி யிருந்தான். அக்காலத்தில் அங்கு நிபுணர்களான ஸ்ரீ வைஷ்ணவர்கள் யாருமில்லாமையால் ஸாமாந் யராயிருந்த சிலர் திருவரங்கம் பெரியகோயிலில் மிக்க சிஷ்யஸம் பத்துடனே எழுந்தருளியிருந்த எம்பெருமானார்க்கு இச்செய்

http://acharya.org

தியை அறிவித்தனர். இச்செய்தியையறிந்த உடையவர் கடுநடையாகத் திருப்பதிக்கெழுந்தருளி ஸம்சயாக்ராந்தனுயிருந்த அரசனை நோக்கி, "சைவர்களால் உனது நெஞ்சில் உண்டாக்கப்பட்ட சங்காகளங்கத்தை நீக்கி உன்னைத் தெளிவிப்பதற்காகவே நெடுந் தூரத்தில் நின்றும் இங்கே வந்தோம்; உனக்குப் பரிபூர்ணத்ருப்தி உண்டாகும்படி யாம் தெளிவாகச் சொல்லவல்லோம்; கேளாய் கொற்றவனே!" என்று தொடங்கினவாறே அவ்வரசன், முன்பு கொக்கரித்த சைவர்களையும் வரவழைத்துப் பெரிய ஸபையாக்கி சைவ வைஷ்ணவர்களுக்கு வாதயுத்தம் நடக்குமாறு நியமித்துத் தான் தடஸ்தனுயிருக்க, வெகுகாலம்வரை வாதப்போர் நடந்ததில் சைவர்களுடைய துர்வாதங்களை யெல்லாம் எம்பெருமானார் ப்ராமாணிகமாகக் கண்டித்து வெற்றிபெற்று விளங்கினார். [இந்த வாதப்ரதிவாதங்களின் விவரணம் ஷை ஸ்ரீ வேங்கடாசல இதிஹாஸ மாலையில் அறுபத்தைந்து பக்கம் நிறையப் பெரிய வாக்யார்த்த ஸரணியில் குறிப்பிடப்பட்டுள்ளன; அங்கே கண்டு கொள்வது.]

எம்பெருமானாருடைய அற்புதமான உபபாதநங்களைக்கேட்ட மன்னவன் கலக்கம்நீங்கி மிக்க தெளிவுபெற்று, திருவேங்கடமலை விஷ்ணுக்ஷேத்ரமே யென்றும் அங்குள்ள பெருமான் திருமாலே யென்றும் ஐயந்திரிபற அறுதியிட்டு "இந்த ஸ்ரீராமாநுஜர் ஸாமாந்ய புருஷரல்லர்; அவதார புருஷரேயாவர்; இவர் மனம் வைத்தால் அதிமாநுஷமான காரியங்களையும் செய்து ஸர்வஜனங்களுக்கும் திண்ணிய நம்பிக்கை உண்டாகும்படி செய்யவும் வல்லர்; அங்ஙன் செய்ய இவரை வேண்டிக்கொள்வோம்" என்றெண்ணி, "ஸ்வாமிந்! யோகீச்வரரே!! தேவரீர் நிரூபித்துக்காட்டிய சாஸ்த்ரார்த்தங்களைக் கேட்டுப் பரமாநந்தமடைந்தேன்; திருமாலே திருமலைக்கு இறைவர் என்று நன்கு துணிந்தேன்; ஸம்சய லேசமுமில்லாமல் சிக்கனத் தெளிவுபெற்றேன்; ஆயினும், மஹாபுருஷராயும் அதிமாநுஷ சேஷ்டிதராயுமிராநின்ற தேவரீர், பண்டிதரோடு பாமரரோடு வாசியற எல்லாரும் தெளியுமாறு ஸமாதாநோபாயம் ஏதாவது செய்தருளக்கூடுமேல் நன்று" என்று கைகூப்பி விண்ணப்பஞ் செய்ய, அதனைக்கேட்ட எம்பெருமானார் 'புராணப் பொருள்களைப் பலவாறாக எடுத்து உபந்யஸித்துக்காட்

http://acharya.org

டினவளவிலும் இவ்வரசனுடைய மனம் பரிபூர்ண த்ருப்தியை அடையவில்லை போலும்; அதிமாநுஷமானதொரு கார்யம்செய்து காட்டவேணு மென்கிறான்; ஆயிடுக; இங்ஙனேசெய்வோம்;— ப்ரஹ்மாண்ட புராணத்தில் பதினோராவது அத்யாயத்தில் எம்பெருமான் தானே சோதிவாய் திறந்து ப்ரதிஜ்ஞை செய்தருளியிருக்கிறபடியே கலியுகத்தில் விமாந மண்டபாதிகளைப்போல் சங்கு சக்கரங்களையும் பக்தர்கள் செய்து ஸமர்ப்பித்தால் ஸ்வீகரித்தே தீருவனாதலால், நாம் செய்து ஸமர்ப்பிக்கும் திவ்யாயுதங்களையும் எம்பெருமான் ஸ்வீகரிக்கக்கூடுமே; ப்ரார்த்தித்தாகிலும் ஸ்வீகரிக்கச் செய்திடுவோம்; இல்லையேல் மஹத்தான அநர்த்தம் நேரிடும் போலிருக்கிறதே! இவ்வரிய செயலினால்தான் அனைவரும் விச்வஸிக்கவேணும் என்று திருவுள்ளத்திற் சிந்தித்து, அப்படியேசெய்திடுவதென்று அறுதியிட்டு, மன்னவனை நோக்கி, "நான் எம்பெருமானுக்கு அஸாதாரண சிஹ்நங்களான திருவாழி திருச்சங்குகளைச் செய்வித்துக் கொணர்ந்து பகவத்ஸந்நிதியிலே வைத்திடுகிறேன்; இந்த சைவர்கள் தாமும் தங்கள் தெய்வத்துக்குரிய பாசம் அங்குசம்முதலிய ஆயுதங்களைச் செய்வித்துக் கொணர்ந்து வைத்திடுக; எந்த ஆயுதங்களை எம்பெருமான் எடுத்து அணிந்து கொள்கிறானே பார்ப்போம்" என்றருளிச் செய்தார்.

இதைக்கேட்ட அரசன் மகிழ்ச்சிகொண்டு 'இப்படியாகில் இது சிறந்த உபாயமே; பிறகு ஒருவர்க்கும் ஆக்ஷேபம் இருக்க ப்ரஸக்தியில்லையன்றோ; நல்லது; அப்படியே இருவகுப்பினரும் செய்யக்கடவது' என்று சொல்ல; உபயவாதிகளும் தங்கள் தங்கள் தெய்வத்தின் அஸாதாரண ஆயுதங்களைச் செய்வித்துக் கொணர்ந்து ஒருநாள் அவ்வரசனுடனே திருமலைக்குவந்து இரவில் திருவேங்கட முடையானுடைய ஸந்நிதி கர்ப்பக்ருஹத்தினுள்ளே அவற்றை வைத்துவிட்டுக் கதவுகளைப்பூட்டி மன்னவன் கையால் அரக்கிலச்சினை செய்வித்துக் காலையளவும் கோவிலைச் சுற்றிக் காவலிருந்துகொண்டு தங்களுக்கே வெற்றியுண்டாம்படி தங்கள் தங்கள் தெய்வத்தைச் சிந்தைசெய்து கொண்டிருந்தனர்.

எம்பெருமானார் தமது யோகமஹிமையினால் உள்ளேபுக்கு எம்பெருமானை ஸாக்ஷாத்கரித்து "பரமபுருஷ! முன்பு நீ

http://acharya.org

வாயோலைசெய்து கொடுத்த ப்ரதிஜ்ஞையின்படியே உனது அஸா தாரணசிஹ்நங்களைப் பேணி அணிந்துகொண்டு அடியோங்களைக் காத்தருளவேணும்" என்று பிரார்த்தித்து அப்படியே திருவாழி திருச்சங்குகளை அணிந்துகொள்வித்து க்ருதக்ருத்யராயினர்.

பிறகு பொழுது விடிந்தவாறே யாதவ மன்னவன் நித்யா நுஷ்டாநங்களை முடித்துக்கொண்டு உபயவாதிகளுடனும் ஸந்நிதிக் குச்சென்று திருக்காப்பு நீக்குவித்துப் பெருமாளை ஸேவிக்குமள வில் பாச அங்குசாதி ஆயுதங்களை அப்பால் தள்ளிவிட்டுத் திரு வாழி திருச்சங்குகளை யணிந்துகொண்டு பரமபோக்யமாக ஸேவை ஸாதிக்கக்கண்டு மிகவும் ஆச்சர்யப்பட்டு எம்பெருமானார் பக்கல் அளவுகடந்த ப்ரதிபத்தியை வஹித்து அவரையே சரணமடைந்து க்ருதார்த்தனாகி, குக்ஷிதவாதம்பண்ணிக் கொக்கரித்துக்கிடந்த சைவர்களையும் தண்டித்து ராஜ்யத்தில் நின்றும் துரத்திவிட்டு இனிது வாழ்ந்தான்—என்கிறவிதுவே அவ்விடத்து இதிஹாஸம். இந்த வ்ருத்தாந்தங்களை நேரில் ஸாக்ஷாத்கரித்தவரான அனந் தாழ்வான் மிக விரித்து கத்ய ரூபமாகவும் பத்ய ரூபமாகவும் ப்ர பந்தீகரித்து அருளிச்செய்து வைத்திருக்கும்போது தடுமாறுவ தென்னோ?.

திருமலையில் சைவவைஷ்ணவ விவாதமும் அதற்கு அடியான ஸந்தேஹமும் உண்டாவதற்கு ப்ரஸக்தியே யில்லாமலிருக்க இவ் வளவு கதையும் கட்டுக்கதையாகவே எழுதிவைக்கப்பட்டதென்று கருதிப் பூர்வபக்ஷிகள் எழுதியுள்ளவை, ப்ரமாண சரணராயிருப் பார்க்குப் பரிதாப ஜநகமேயாம்.

ஸ்ரீ வடுகநம்பியும் தாம் அருளிச்செய்த யதிராஜ வைபவத் தில் (90, 91, 92 ஆகிய) மூன்றுச்லோகங்களில் இந்த இதிஹா ஸத்தை ஸங்க்ஷேபமாக உரைத்தருளினர். "ஹஸ்தத்வயலக்ஷணம் வஹந் ஸ்ரீஸ்ரீநிவாஸ:" என்று—பரமபக்தனாயிருந்த தொண் டைமான் சக்ரவர்த்திக்குத் திருவாழி திருச்சங்குகளைத் திருவேங் கடமுடையான் தந்தருளிவிட்டான், அதனால்தான் ஒரு கால விசேஷத்தில் ஸந்தேஹமும் விவாதமும் நேர்ந்தது என்று ஸ்பஷ் டமாகக் கூறியிருக்கிறார். இக்கதை ஸ்ரீ வேங்கடாசல மாஹாத் மியத்தில் பரக்கக் காணத்தக்கது ;—தொண்டைமான் சக்ரவர்த்தி

http://acharya.org

க்ஷத்ரிய ஜாதியானுயினும் தவவொழுக்கத்திற் சிறந்து முனிவரை யொக்கும் பெருமைவாய்ந்து திருவேங்கடமுடையான் பக்கல் பக்தி மேலிட்டு அப்பெருமானை எப்பொழுதும் ஸேவித்துக்கொண்டு திருமலையிலேயே வஸித்து வருவதையுணர்ந்த பகையரசர்கள் அவனது நாட்டைக் கைக்கொள்ள, தொண்டைமான் அதனைத் திருவேங்கட முடையான் ஸந்நிதியில் விண்ணப்பஞ்செய்து வணங்கி நிற்க, பெருமான் தனது சங்கு சக்கரங்களைக் கொடுத்து 'இவற்றைக்கொண்டு நீ பகையரசரைத் தவறாது வென்றிடுக' என்று சொல்லியருள, தொண்டைமான் அங்ஙனமே பகை வென்று அரசு பெற்றனன் என்பதும், பின்பு அவனது வேண்டு கோளால் அத்திருவாயுதங்களை அங்கு விக்ரஹ ரூபத்தில் வெளிப் படையாகக் கைக்கொள்ளாதிருந்தனன் என்பதும், ஆனது பற்றியே சைவர்களுடைய துர்வாதங்களுக்கு அவகாசமுண்டா யிற்று என்பதும் இனியாகிலும் உள்ளத்திற் பதியவேணும்.

திருவரங்கத் தமுதனுருடைய $ திருக்குமாரரான திவ்யகவி பிள்ளைப்பெருமாளையங்கார் பாடிய திருவேங்கடத் தந்தாதியில் 48, 53-ஆம் பாட்டுக்களிலும் இக்கதை குறிப்பிடப்பட்டுள்ளது. "சங்கோடு அணியாழி நீங்கி நின்றருள் வேங்கடேசனை யாதரித்தே" என்றும், "முனித் தொண்டைமான் கையிற் சங்காழி நல்கி" என் றும் ஸ்பஷ்டமாகக் கூறப்பட்டுள்ளமை காண்க.

இந்த வரலாற்றைத் தெரிந்துகொள்ளாதே பிறர் எழுதியுள்ள தூஷணங்கள் அநுவாதத்திற்கும் அநர்ஹமானவையென்று விட் டிட்டோம்.

இந்த சரித்திரத்தைக்கொண்டே சேஷாவதாரத்வத்தை ஸ்தா பிப்பார் ஆருமில்லை. திருமலையில் சேஷரூபத்துடன் கோமுகை வழியாய் நுழைந்தாரென்று பலரும் பகரக் கேட்டிருப்போமாகி லும், இதிஹாஸமாலை,, யதிராஜ வைபவம், ஆறாயிரப்படி குரு பரம்பரா ப்ரபாவம், ராமாநுஜார்ய திவ்ய சரிதை முதலிய நூல் களில் அங்ஙனம் எழுதப்பட்டிருக்கவில்லை. "ஸமவாப ராமாநு ஜமுநி: ஷ்யொமஹீந்த்ர ஸ்ரீநிவாஸ ஸந்நிதௌ" என்று— எம்பெருமானர் தமது யோகசக்தி ப்ரபாவத்தால் திருவேங்கட

$ திருப்போனர் என்பர் சிலர்.

http://acharya.org

முடையானை அணுகினதாகத்தான் இதிஹாஸமாலையிற் சொல்லப்பட்டுள்ளது. மற்ற நூல்களில் அதுவுமில்லை. ஆகையால் இந்த இதிஹாஸத்தை ஆதாரமாகக்கொண்டு உடையவருடைய சேஷாவதாரத்வத்தை யாரோ ஸாதிப்பதாகத் தாமாகவே நினைத்துக்கொண்டார்கள் போலும். அந்தக் கதையே அஸம்பாவிதமென்று பூர்வ பக்ஷிகள் எழுதியுள்ளமையால் அது முற்றிலும் யதார்த்தமே யென்பதை மாத்திரம் இங்கு ஸூதலிக்க முன்வந்தோமேயன்றி இந்த வரலாற்றை சேஷாவதாரத்வ ஸ்தாபக ப்ரமாணமாக நிரூபித்தோமல்லோம். நித்ய ஸூரிகளிலே ஆரேனுமொருவருடைய அம்சமாகத் திருவவதரித்தவர் எந்த வடிவையுங் கொண்டு வியாபரிக்க வல்லர் என்பது கற்றுணர்ந்த பெரியோர்களின் கொள்கை.

இதற்குமேல், "மைஸூரில் நடந்த சரித்திரத்தையும் விசாரிப்போம்" என்று தொடங்கி, "அநேகமாயிரங் கணக்கான ராக்ஷஸர்களையும் அஸுரர்களையும் ஒவ்வொன்றே நாசம் செய்தவைகளான ஐந்து ஆயுதங்களும் சேர்ந்த ஒரு அவதாரத்துக்கு ஆயிரம் வாதிகளுக்கு ஏககாலத்தில் பதில் சொல்லுவது அஸாத்யமான காரியமாகுமோ? இதற்கு ஆதிசேஷராகவே வரவேண்டுமோ? ஸ்ரீசக்ரத்துக்கு ஸஹஸ்ராரம் என்று திருநாமம் இல்லையோ? ஆயிரம் நுனிகளையுடையதாதலால் ஒவ்வொரு நுனியும் ஒவ்வொரு முகமாயிருந்து பதில் சொல்லி யிருக்கலாம்" என்று எழுதியிருப்பவர்க்கு என்ன சொல்லவல்லோம். இனி ஒருகால் எம்பெருமானாரை நேரில் ஸேவித்தே இதனைக் கேட்கவேணும். "தேவரீர் திருவாழி யாழ்வானுடைய ரூபத்தைக்கொண்டு தூர்வாதிகளுக்கு உத்தரம் அருளிச்செய்திருக்கலாமே, எதுக்காக சேஷரூபமெடுத்தது?" என்று கேட்போம். நடந்த சரித்திரத்தை முன்னோர்கள் எழுதிவைத்திருக்க யார்மேல் ஆபத்தி கொடுப்பது? 'பெருமாள் தசரதற்குப் பிள்ளையாகப்பிறந்து இராவணனைக் கொன்றார்' என்று ஒருவர் சொன்னால், 'அவர் தசரதற்குப் பிள்ளையாகப் பிறக்கவேவேண்டா; ஸர்வ சக்தரான அவர் தம்முடைய திருவாழியை அனுப்பியே காரியம் நடத்தவல்லர்; அப்படியேதான் நடத்தியிருக்கவேணும்' என்று மற்றொருவர் சொல்

http://acharya.org

வதைப்போலிருக்கிறது இக்கூற்று. விரலுக்குத்தக்க மோதிரம் பண்ணுவதோ, மோதிரத்துக்குத் தகுதியாக விரலைச்சீவுவதோ.

பஞ்சாயுதாழ்வாருக்கு அபாரமான சக்தியுண்டென்பதைப் பற்றி ப்ரமாணங்கள் காட்டிப் பரிச்ரமப்படுவதும் வீண். சக்தி இல்லையென்று யாரும் சொல்லவரவில்லை, பெரிய திருவடிக்கும் அளவற்ற சக்தியுண்டு. அவற்றை யெல்லாம் எடுத்துரைப்பது காடுபாய்ந்த உபந்யாஸமெனப்படும். ஆயிரம் அரங்களினால் ஆயிரம் வாதிகளுக்கு உடையவர் உத்தரம் அருளிச்செய்தா ரென்று இதுவரையில் யாரேனுமொருவர் எழுதிவைத்திருப்பின் இவர்கள் சொல்வது சிறிதாகிலும் ஏற்கும். அரம் என்பதற்கு நுனியென்று பொருள்கூறத் தலைப்பட்டது அற்புதங்களினும் அரிய அற்புதம். "லவணமென்றால் எனக்குத் தெரியாதோ? எருமைச்சாணியன்றோ" என்றவட்கு இவர்கள் உபாத்தியாயர் போலும். അഗ്രം [அக்ரம்] என்பது அரமெனத்திரிந்ததென்று கூறவும் துணிவார்கள் போலும்.

வடுகநம்பிகள் அருளிச்செய்த ஸ்ரீராமாநுஜ—அஷ்டோத்தர சதநாம ஸ்தோத்ரத்தில்—

"ശ്രീഭക്തഗ്രാമപൂർണ്ണേശഃ വിഷ്ണുവർദ്ധനരക്ഷകഃ।
ബൗദ്ധധ്വാന്തസഹസ്രാംശുഃ ശേഷരൂപപ്രദർശകഃ."

[ஸ்ரீபக்தக்ராமபூர்ணேச: விஷ்ணுவர்த்தநரக்ஷகः—
பௌத்தத்வாந்த ஸஹஸ்ராம்சுः சேஷரூப ப்ரதர்சகः.]

என்ற இருபத்துமூன்றாம் ச்லோகத்தை ஸேவித்தாகிலும் தெளிவு பெறலாமே. இற்றைக்கும் தொண்டனூரில் எம்பெருமானார் திருக்கோலம் ஸேவை ஸாதிக்கிறபடியைக் கேட்டுணர்ந்தாகிலும் தெளிவுபெற விரகுண்டு.

இந்த சரித்திரத்தைப்பற்றி யாம் இங்கு இவ்வளவு எழுதிற்றும் 'சரித்திரத்தின் உண்மை இது' என்று காட்டுதற்காகவேயன்றி, இதைக்கொண்டு எம்பெருமானாருடைய சேஷாவதாரத்வத்தை ஸ்தாபிக்கவல்ல கிடீர்.

10

http://acharya.org

"பிற்பட்டவர்களுடைய வார்த்தை * அடையார்கமலத்தென் கிற அமுதனர் பாசுரத்துக்கு விருத்தமாக இருந்தால் பூர்வர்கள் செய்திருக்கும் ஸித்தாந்தத்துக்கு விருத்தமாதலால் அபஸித் தாந்தமென்னும் தோஷத்துக்கு உள்ளாகும்" என்றதும் ஆசார் யாபசாரத்திலே பர்யவஸித்ததாகும். "விஷ்வக்ஸேநோ யதிபதிர பூத் வேத்ரஸாரஸ் த்ரிதண்ட:" என்ற ஸ்ரீதேசிகனுடைய யதிராஜ ஸப்ததி ச்லோகார்த்தம் அபஸித்தாந்தமென்று ஸ்தாபிதமாயிற். "தேசிகன் எம்பெருமானாரை விஷ்வக்ஸேநராக உத்ப்ரேக்ஷித்திருக் கலாம்" என்றதும் முகமஸ்தீதி பாஷணமேயாம். அந்த ச்லோகத் தில் உத்ப்ரேக்ஷாலிங்கம் ஒன்றுமில்லாமையை விவேகிகள் கண்டறி வார்கள். * அடையார் கமலமென்கிற இப்பாசுரந்தான் உத்ப்ரே க்ஷையா யிருக்கலாகாதோ? என்று கேட்போமாகில் வாய்திறக்க வுண்டோ வழி.

இனி, உத்ப்ரேக்ஷையென்றால் என்னவென்று விமர்சித்தல் நன்று. வாஸ்தவார்த்தமல்லாமல் கவியின் புத்திசமத்காரத்தாலே ஏறிட்டுச் சொல்வதுதான் உத்ப்ரேக்ஷையென்று பூர்வபக்ஷிகளின் கருத்தாகக் காண்கிறது. அப்படியாகில், ஸங்கல்ப ஸூர்யோதயத் தில் ஸ்ரீதேசிகன் தமது வரலாறு அருளிச்செய்யு மிடத்தில் "வணாஹரெஸஜநிஷ யஜாதநெதி—உதெக்ஷ்யெத வாய ஜநெநாவவதிஹ ஙிஜா." என்று தம்மைப் பண்டிதர்கள் திரு மலைமால் திருமணியின் திருவவதாரமாக உத்ப்ரேக்ஷிப்பர்க ளென்று அருளிச் செய்துள்ளமையால் அதனை அயதார்த்தமென் றிசைய வேண்டிற்றாகும். ஆகையாலே உத்ப்ரேக்ஷா சப்தார்த்தத் தைப் பூர்வபக்ஷிகள் நிஷ்கர்ஷிக்கவல்லரல்லர். ஆனபின்பு "தேசி கன் உடையவரை விஷ்வக்ஸேநராக உத்ப்ரேக்ஷித்திருக்கலாம்" என்றது அவிம்ருஷ்ட ரமணீயம்.

"ஃவ்யக்ஷதிவஹுயநயசெவலெவ்யெ வஹுஹிநாய செயஜெநாரெ:" [அப்ருதக் ப்ரதிபந்நயந்மயத்வை: வவ்ருதே பஞ்சபிராயுதைர் முராரே:] என்ற யதிராஜ ஸப்ததி ச்லோகத்தை உதாஹரித்து "இதன் அர்த்தமாவது" என்று தொடங்கிப் பூர்வபக்ஷிகள் எழுதியிருக்கும் பொருள் பண்டிதர்களால் ஆரா

http://acharya.org

யத்தக்கது. வவ்ருதே [வவ்ருதே] என்றது பாவேப்ரயோக [பாவேப்ரயோக]மேயன்றி கர்த்தரிப்ரயோகமன்று. கோரமாதவஞ் செய்தாலும் கர்த்தரிப்ரயோகமாக நிர்வஹிக்க வழியில்லை. "முராரேః பஞ்சபிராயுதைః அப்ருதக்ப்ரதிபந்நயந்மயத்வைః வவ்ருதே" என்று அந்வயித்து பாவேப்ரயோகரீதியில் பொருளுரைக்க வேண்டியிருக்க அங்ஙன முரையாது "ஒன்றுப்ச் சேர்ந்து எந்த பாஷ்யகாரர் ரூபத்தையடைந்த பகவானுடைய ஐந்து ஆயுதங்களுடைய அம்சங்களாலும் வ்ருத்தியை யடைந்தாரோ" என்று பொருளுரைத்திருப்பது ஒருபடியாலும் பொருத்த முடைத்தன்று. ஸாஹிதீவ்யுத்பத்தியின் ஸௌஷ்ட்டவத்தை விளக்கின வீறு வியக்கத்தக்கது. வவ்ருதே என்பதற்கு 'வ்ருத்தியடைந்தாரோ' என்று பொருள்கூறு மிவர்கள் ச்லோகத்தின் கருத்தை எங்ஙனே உபபாதிக்க வல்லர்களோ, அறியோம். (வ்ருத்தி) வ்ருத்திக்ரியை பஞ்சாயுதநிஷ்டமேயன்றி யதீந்த்ரநிஷ்டமன்று. ஒரு ஸம்ஸ்க்ருத வ்யாக்யாதா இப்படி கர்த்தரிப்ரயோகமாக உரைத்திருப்பதை வழிகாட்டியாகக் கூறமுற்படுபவர்கள் "அந்தஸ்ய ஜாத்யந்தேந யஷ்டிர்நீயதே." என்கிற நியாயத்தை நினைப்பூட்டினார்களாமத்தனை. மற்றொரு மணிப்ரவாள வ்யாக்யாதா கர்மணிப்ரயோகரீதியில் பொருளுரைத்துவிட்டு "இது பாவேப்ரயோகம்" என்று உபஸம்ஹரித்தார். ஹந்த! ஸம்ஸாரஸ்ய வைசித்ர்யம். இது கிடக்க.

ஆக இவ்வளவும் சர்ச்சிக்கப்பட்டுவந்த இவ்விஷயத்தில் ஸாரமாகச் சொல்லவேண்டிற்றொன்றுண்டு. எம்பெருமானார் சேஷாவதாரராயினும் விஷ்வக்ஸேநாவதாரராயினும் மற்றும் யாரேனுமொரு நித்யஸூரியின் அவதாரமாயினும் அதில் நமக்கு விப்ரதிபத்திலேசமுமில்லை: ஸ்ரீதேசிகனைப்பற்றி ஸ்ரீநயனாராசார்யர் "வேங்கடேசாவதாரோயம் தத்கண்டாம்சோதவா பவேத்-யதீந்த்ராம்சோத வேத்யேவம் விதர்க்யாயாஸ்து மங்களம்." என்ற ச்லோகத்தால் "இவர் திருவேங்கட முடையானுடைய அவதாரமோ! திருமலைமால் திருமணியின் அவதாரமோ! எம்பெருமானாருடைய அவதாரமோ! என்றிப்படி பலவாறுக உத்ப்ரேக்ஷிக்கப்படுவர் தேசிகன்" என்று ஒரு நிஷ்கர்ஷ மில்லாததுபோல் அருளிச் செய்திருக்கச்

http://acharya.org

செய்தேயும் சரித்திர நூல் மூலமாகத் திருமணியவதார மென்னு மிடமே நிர்த்தாரிக்கப்பட்டிரா நின்றது. ஸுஸ்பஷ்டமாய் சங்கால வலேசத்துக்கும் இடமில்லாமலே திருமணியவதாரராக அறுதி யிடப்பட்டுள்ள தேசிகனை "ஸ்ரீவேங்கடாத்ரீசகண்டாம்சாய மஹாத்மநே। வேதாந்தாசார்யவர்யாய வேங்கடேசாய மங்களம்॥" என்று சொல்லி ஏத்தலாமாயிருக்க அப்படி ஏத்தாது விதர்க்கமேயுள்ளதாக விளம்புகின்றார் நயனாராசார்யர். "விதர்க்யாயாஸ்து மங்களம்" என்ற அந்த ச்லோகத்தைப் பூர்வபக்ஷிகள் எங்ஙனே நிர்வஹிக்க நினைப்பார்களோ அறியோம். அதனை நன்குபொருத்தி நிர்வஹிக்கும் வகை நமக்கோ எளிது. எங்ஙனே யென்னில்;—

சரித்திர நூல் என்பது வேறு, ஸ்தோத்ர நூல் என்பது வேறு. அவதாரரஹஸ்யம் உள்ளது உள்ளபடி ப்ரதிபாதிக்கப்படுவது சரித்திர நூல்களில். ஸ்தோத்ர நூல்களிலோ வென்னில், கவிகளின் புத்தி சமத்காரத்துக்குத் தக்கபடி ப்ரசம்ஸாபரங்களான பலவகை வர்ணனைகள் இருக்கக்கூடும். அவற்றைக்கொண்டு சரித்திர நூல்களால் அறுதியிடப்படுகிற அவதாரரஹஸ்ய தத்துவங்களை உபமர்த்திக்க வொண்ணாது. தேசிகன் திருமணியவதார ரென்னுமிடம் சரித்திர நூல்களால் நன்கு ஸ்தாபிக்கப்பட்ட விஷயமாதலால் அதற்கு மாறுபாடாக ஸ்தோத்ர நூல்களில் உள்ளவை ப்ரசம்ஸோக்திகளாகக் கருதப்பட வேண்டுமேயன்றி, அவற்றையே முக்கியமாகக் கொள்வதானால் ஒருவகை நிஷ்கர்ஷமுமில்லாமே எல்லாம் வ்யாகுலங்களா யொழியும்.

அப்படியே எம்பெருமானாருடைய சரித்திர நூல்களில் அவருடைய அவதார ரஹஸ்யம் எவ்வாறு கூறப்பட்டிருக்கின்றதோ அவ்வாறே கொள்ளப்படவேண்டும். இதிஹாஸமாலா, திவ்ய ஸூரிசரிதம், யதிராஜ வைபவம், உபயகலா ஸம்ப்ரதாயஸ்த குருபரம்பராப்ரபாவங்கள், ப்ரபந்நாம்ருதம்—இவைபோன்ற பல க்ரந்தங்கள் சரித்திர நூல்களாயுள்ளன. இவற்றில் சேஷாவதாரத்வமே ஒருமிடறாகக் கூறப்பட்டிருத்தலால் அதுவே யதார்த்தமாகக் கொள்ளற்பாலது. இராமாநுச நூற்றந்தாதி, யதிராஜஸப்ததி—இத்யாதிகள் ஸ்தோத்ர நூல்களேயன்றி சரித்திர நூல்க

http://acharya.org

ளல்ல. அவற்றில் கவி புத்திசமத்காரத்துக்கேற்பவும் ப்ரதிபாத்யர்களுடைய ப்ரபாவ விசேஷங்களுக்கேற்பவும் வெவ்வேறு வகையாகவும் உல்லேகித்துச் சொல்லக்கூடும். “விஷ்வக்ஸேநோ யதிபதிரபூத் வேத்ரஸாரஸ்த்ரி தண்ட:” என்று தேசிகன் உத்ப்ரேக்ஷித்தாரென்று இவர்கள் கூறியபடியே நூற்றந்தாதியில் * அடையார் கமலப் பாசுரமிதனில் அருளிச்செய்ததும் ஒரு உத்ப்ரேக்ஷா ப்ரகாரமேயென்று கொள்ளுதல் பொருத்தமுடைத்து.

திருவனந்தாழ்வானே எம்பெருமானாராகத் திருவவதரித்தானென்று வாய்விட்டு அருளிச்செய்தவர்களும்

“கிம் ஶேஷோ'ஹிராஜோ'வததார ஜகதஃ ஸேநாயிநா
யஷூபோதாரக்ஷிம். பஞ்சாயுதாஃ கிம்நு பகவாநேவ,
ஜஜ்ஞே ஶ்ரியஃபதிரேவேதி விதர்க்யஃ ஸுதீபிஃ.”

[திருவனந்தாழ்வானே மீண்டு மிங்ஙனே திருவவதரித்தாரோ? பஞ்சாயுதாழ்வார்கள் தாம் திருவவதரித்தார்களோ? அன்றி எம்பெருமான்றானே திருவவதரித்தானோ? என்று விகல்பிக்கும்படியாக விளங்கினார் எம்பெருமானார்] என்றும் ஒரு புடை சொல்லி வைத்தனர். “சேஷாவாஸைந்யநாதோவா ஸ்ரீபதிர்வேதி ஸாத்விகை:—விதர்க்யாய மஹாப்ராஜ்ஞைர்யதிராஜாய மங்களம்.” என்று வடுகநம்பியும் அருளிச்செய்து வைத்தார்.

ஒருபடி நிர்த்தாரணமிருக்கச்செய்தே பலபடியாக விதர்க்கிப்பர்களென்று சொல்வது என்கொண்டென்னில்; வைபவவிசேஷங்களைப் பார்த்தால் பலபடியும் சொல்லலாயிருக்கையாலே. இஃது எம்பெருமானார் விஷயமொன்றிலுமேயன்று. ஆழ்வார்கள் விஷயத்திலும் மற்றுமுள்ள பல ஆசாரியர்கள் விஷயத்திலும் இப்படியே விதர்க்கங்கள் காண்கின்றன; இன்ன ஆசிரியர் இன்ன அவதாரந்தான் என்று இன்று நாம் நிர்த்தாரணம்செய்து ஆகவேண்டியதொன்றுமில்லை. ‘எம்பெருமானார் பஞ்சாயுதாவதாரர்’ என்று ஒருவர்க்குக் கொள்கையாயின் அதனை மறுத்துரைக்க வருவாராருமில்லை. பெரிய திருவடியின் அம்சமென்று மற்றொருவர்க்குத் தோன்றினால் அதுவும் மறுத்துத் தீரவேண்டிய விஷயமன்று. நித்யஸூரிகளில் யாரேனுமொருவருடைய அம்சமாக ஆசார்யரைச் சொல்வது பூஷணமேயல்லது தூஷணமல்லவிறே.

http://acharya.org

பஞ்சாயுதாழ்வார்களுள் ஒருவரான திருவாழியாழ்வாரொருவரே எம்பெருமானாராய்த் திருவவதரித்ததாகக் கூறுவதில் குறையொன்று மில்லாதிருக்கச் செய்தேயும் பஞ்சாயுதாழ்வார்களும் ஒன்று சேர்ந்து வந்து திருவவதரித்ததாக அருளிச்செய்த கணக்கிலே, அநந்தகருட விஷ்வக்ஸேநாதிகளான பல நித்யஸூரிகளும் ஒன்று சேர்ந்து எம்பெருமானாராகத் திருவவதரித்தனர் என்று ஒரு பக்தசிரோமணி திருவுள்ளம்பற்றினால் அதுதானும் மறுத்துரைக்க வேண்டிய விஷயமோ? அன்று.

"அவருடைய அவதாரமன்று, இவருடைய அவதாரந்தான்" என்று ஒரு ஆக்ரஹந்தோற்ற நிர்ப்பந்திக்கப் புகுவது விவேகிகளின் பணியாகமாட்டாது. அப்படி நிர்ப்பந்தித்தே யாகவேண்டிய ஆவச்யகத்வமுளதாகில், எம்பெருமானாரைப் பற்றினவரையில் சேஷாவதாரரென்று ஸித்தாந்தப்படுத்துவதே பொருத்தமுடையதாம். இவ்வகைக்கே ப்ரமாணோபபத்திகள் மலிந்து கிடக்கின்றமையை ப்ராமணிக ஹ்ருதயங்கமமாகப் பன்னியுரைத்தோம்.

"അഭിനിവേശവശീകൃതചേതസാം ബ്രഹ്മവിദാമപി സംഭവതി മോഹഃ"—"വിവേകപ്രലയഹേതുര്‍ ഹ്യഭിനിവേശോ മഹാരോഷഃ." [ஒரு விஷயத்தில் 'இது இப்படிதான்' என்று ஆக்ரஹம் வைத்துவிட்டால் விவேகவுணர்ச்சி குலைந்தொழியும்] என்று பூருவர்கள் அருளிச்செய்த கட்டளையிலே, எம்பெருமானாருடைய சேஷாவதாரத்வத்துக்கு எவ்வகையினும் இசையலாகாதென்கிற அபிநிவேசமுடையோர், இதில் நாம் எடுத்துக்காட்டிய ப்ரமாணோபபத்திகளைப் பழிக்கவேண்டி அவ்வோ க்ரந்தங்களுக்கும் க்ரந்த கர்த்தாக்களுக்கும் குற்றங்குறைகளை ஏறிட்டுக் கூறத் தலைப்படுவரேல், "സഹസ്രശോ നാസ്തികവൈതണ്ഡ്യവാദ നിരസ്ത ദൃഷ്ടാ ബഹ്വഃ സദ്ഗുണിജംബാലനിരങ്കുശാ ജയന്തി ജനാഃ." என்கிற தேசிக திவ்யஸூக்தியை அநுஸந்தித்து மகிழ்ந்திடுவோமத்தனை. .... .... .... (௩௩)

நிலத்தைச் செறுத்துண்ணும் நீசக்கலியை * நினைப்பரிய
பலத்தைச் செறுத்தும் பிறங்கியதில்லை * என்பெய்வினைதென்
புலத்தில் பொறித்த வப்புத்தகச்சும்மை பொறுக்கியபின்
நலத்தைப் பொறுத்தது * இராமாநுசன்தன் நயப்புகழே. (௩௪)

http://acharya.org

| | |
|---|---|
| இராமாநுசன் தன் | எம்பெருமானாருடைய |
| நயம் புகழ் | கல்யாண குணங்களானவை |
| நிலத்தை செறுத்து உண்ணும் நீசம் கலியை | பூலோகத்தை ஹிம்ஸித்துத் தின்கிற நீசனான கலி புருஷனுடைய |
| நினைப்பு அரிய பெலத்தை செறுத்தும் | இவ்வளவென்று நினைக்க முடியாதபடி அளவற்றதான பராக்ரமத்தைத் தொலைத்த வளவிலும் |
| பிறங்கியது இல்லை | பிரகாசிக்கவில்லை; |

(பின்னை எப்போது பிரகாசித்தன? என்னில்;)

| | |
|---|---|
| என் பெய் வினை | என்னாலே செய்யப்பட்ட பாவங்களை |
| தென் புலத்தில் | யமலோகத்தில் |
| பொறித்த | எழுதிவைத்த |
| அப் புத்தகம் சும்மை | அந்த புஸ்தகக் கட்டுகளை |
| பொறுக்கிய பின் | கொளுத்திவிட்ட பின்பு |
| நலத்தை பொறுத்தது | விளக்கம் பெற்றன. |

* * *—எம்பெருமானாருடைய ஞானம், சக்தி முதலிய திருக்கல்யாண குணங்கள் எப்போது பிரகாசித்தனவென்றால், இந்நிலவுலகத்தில் கலிபுருஷன் செங்கோல் செலுத்த முடியாதபடி அவனுடைய வலிமையைத் தொலைத்துக் கிருதயுக தர்மமே எங்கும் நடைபெறும்படி செய்தருளினவாறே "இவர் மஹா புருஷர்; அரிய பெரிய ஞான சக்திகளை யுடையவர்" என்று உலகத்தா ரனைவரும் போற்ற நேர்ந்ததனால் கலியின் கொடுமையைக் கெடுத்தது காரணமாகவே இவருடைய திருக்கல்யாண குணங்கள் நன்றாக விளங்கின—என்பர் சிலர்; அது தகுதியல்ல; கலிதோஷத்தைப் போக்கின வளவிலும் எம்பெருமானாருடைய திருக்குணங்கள் பொலிவு பெறவில்லை. பின்னை எப்போது பொலிவு பெற்றனவென்றால், எனது அளவற்ற பாவங்களையெல்லாம் சித்திரகுப்தன் எழுதிவைத்திருந்த பெரிய புத்தகச் சுமையைக் கொளுத்திவிட்டு என்னை நிஷ்கல்மஷனாக்கி அடிமைகொண்டாரென்கிற விஷயம் வெளிவந்த பிறகுதான் அவருடைய திருக்குணங்கள் ஆச்சரியமாக விளங்கின என்கிறார்.

இதனால், தம்முடைய பாவங்கள் ஸர்வசக்தனாலும் போக்க முடியாதவை என்பதும், கலியின் கொடுமையிற் காட்டிலும் தமது

http://acharya.org

கொடுமை வலிதாயிருந்ததென்பதும், இப்படி மஹா பாபிஷ்டரா யிருந்த தம்மை க்ஷமித்தருளி உஜ்ஜீவிக்கச் செய்தமையைக்கண்டு உலகத்தாரனைவரும் ஆச்சரியப்பட்டார்களென்பதும் தெரிவிக்கப் பட்டன.

நிலத்தைச் செறுத்துண்ணும்—பூமியிலுள்ள ஸகல ஜனங் களும் மனம்போனபடி கோணலாக நடக்குமாறு துர்ப்புத்தியை விளைத்து இந்த ஜகத்தைக் குட்டிச்சுவரடிக்கிற கலிபுருஷன் என்றபடி. இரண்டாமடியில், பலத்தைச் செறுத்தும் என்றே பாடம் வழங்கிவந்தாலும் பேலத்தை என்கிற பாடமே ஸத்ஸம்ப்ரதாய ஸித்தம். பொருள் ஒன்றே. மோனையின்பத்திற்குச்சேர, பேலத்தை என்றேயிருக்கவேண்டும்; ஜயம் என்பது ஜெயம் எனவும், கருடன் என்பது கெருடன் எனவும், சண்பகம் என்பது செண்பகம் எனவும் வருதல் காண்க: திருப்பள்ளியெழுச்சியில் ஒன்பதாம் பாட்டில் "கீதங்கள் பாடினர்" என்றதற்கு ஏற்ப, கேந்தருவரும் எனப் பிரயோகிக்கப்பட்டுள்ளதுங் காண்க.

புத்தகம் = புஸ்தகம்; சும்மை—சுமை. பொறுக்குதல்—கொளுத்திவிடுதல். "திரணரகெண்ணிய சித்திரகுத்தன் தெரித்து வைத்த, சுருணையிலேறிய சூழ்வினை முற்றும் துறந்தனமே" என்ற தேசிகப் பிரபந்தப் பாசுரம் இங்கு நினைக்கத் தகும். ... (௯௪)

நயவே னொருதெய்வம் நானிலத்தே * சிலமானிடத்தைப்
புயலே யெனக்கவி போற்றிசெய்யேன் * பொன்னரங்கமென்னில்
மயலேபெருகு மிராமாநுசன் மன்னு மாமலர்த்தா
ளயரேன் * அருவினையென்னை யெவ்வாறின் றடர்ப்பதுவே? (௯௫)

| | |
|---|---|
| ஒரு தெய்வம் | வேறொரு தெய்வத்தை |
| நயவேன் | விரும்பமாட்டேன்; |
| நானிலத்தே | இவ்வுலகில் |
| சில மானிடத்தை | சில நீசமனிசர்களைக் குறித்து |
| புயலே என | 'மேகம்போலே வர்ஷிக்கிற உதாரனே!' என்று அதிவாதமாகச்) சொல்லி |
| கவி போற்றி செய்யேன் | கவிகள்கட்டி ஸ்தோத்ரம் செய்யமாட்டேன்; |
| பொன் அரங்கம் என்னில் | 'தி[illegible]வரங்கம்' என்று சொன்னவாறே |
| மயல் பெருகும் | அளவற்ற வ்யாமோஹத்தை யடைகின்ற |
| இராமாநுசன் | எம்பெருமானுருடைய |

http://acharya.org

| | | | |
|---|---|---|---|
| மன்னு மா தாள் மலர் | பொருந்திய சிறந்த திருவடித் தாமரைகளை | அரு வினை | கொடிய பாவங்கள் |
| | | என்னை | என்னை |
| | | இன்று | இன்றுமுதலாக |
| அயரேன் | மறக்கமாட்டேன்; | எவ்வாறு அடர்ப்பது | எப்படி ஆக்ரமிக்கக் கூடும். |
| (ஆனபின்பு) | | | |

* * *:—உம்முடைய பாவங்களெல்லாம் எம்பெருமானார் திருவருளால் தீயிலிட்ட தூசுபோலத் தொலைந்தனவென்றாற்போலே சொல்லிக் களிக்கின்றீரே; பிரகிருதி மண்டலத்தில்தானே உம்மை வைத்திருக்கிறது; மறுபடியும் பாவங்கள் வந்து சேரக்கூடாதோ? என்று அமுதனாரைச் சிலர் கேட்க; இனி அவை ஒருகாலும் என்னை அடர வழியில்லை யென்கிறார் இதில். எம்பெருமானார் தவிர வேறொரு தெய்வமிருப்பதாக நான் நினைக்கவில்லை; இனி ஒருநாளும் நினைக்கப்போகிறதுமில்லை; உபயோகமற்ற மநுஷ்யர்களிடங்களிற்சென்று நரஸ்துதிசெய்து ஸ்வரூபத்தைக் கெடுத்துக் கொள்ளவும் போகிறதில்லை, திருவரங்கமென்கிற சொல் திருச்செவியில் விழுந்தவாறே மயங்கி யீடுபடுகின்ற எம்பெருமானாருடைய திருவடித்தாமரைகளை இனியொருநாளும் மறக்கப்போகிறதுமில்லை. இப்படிப்பட்ட திண்ணிய அத்யவஸாயம் எனக்கு உறைத்தபின்பு எவ்வழியாலே பாவங்கள்வந்து என்னை அடர்க்கக் கூடும்?

மானிடரை என்னவேண்டுமிடத்து மானிடத்தை யென்றது அலக்ஷ்யதாபுத்தியால். புயலேயெனக் கவிபோற்றி செய்யேன் = * மாரியனையகை மால்வரையொக்குந் திண்டோளென்று பாரிலோர் பற்றையைப்பச்சைப்பசும் பொய்கள் பேசமாட்டேன் என்கை.

அடல்கொண்டநேமிய னாருயிர்நாதன் * அன்றாரணச்சொற்
கடல்கொண்ட வொண்பொருள் கண்டளிப்பப் * பின்னுங் காசினியோர்
இடரின்கண் வீழ்ந்திடத்தானு மவ்வொண்பொருள் கொண்டவர் பின்
படருங்குணன் * எம்மிராமாநுசன்தன் படியிதுவே. (௩௬)

| | |
|---|---|
| அடல் கொண்ட நேமியன் | (ஆச்ரித விரோதிகளை அழிக்கவல்ல) மிடுக்கையுடைய திருவாழியை ஏந்தினவனாய் |
| ஆர் உயிர் நாதன் | ஸகல ஆத்மாக்களுக்கும் சேஷியான எம்பெருமான் |
| அன்று | அர்ஜுநனுக்கு ஸாரதியாயிருந்த வக்காலத்தில் |
| ஆரணச் சொல் கடல் கொண்ட ஒண் பொருள் கண்டு அளிப்ப | வேதங்களாகிற கடலில் மறைந்து கிடந்த நல்ல அர்த்தங்களை ஆராய்ந்து (கீதாமூலமாக,) உபதேசிக்க |
| பின்னும் | அதற்குப்பின்பும் |
| காசினியோர் | பூமியிலுள்ளவர்கள் |
| இடரின் கண் வீழ்ந்திட | ஸம்ஸார துக்கத்தில் அழுந்திக் கிடக்க, |
| தானும் | (எம்பெருமானாராகிற) தாமும் |
| அ ஒண் பொருள் கொண்டு | (முன்பு ஸர்வேச்வரனருளிச்செய்த) அந்தச்சிறந்த அர்த்தங்களைக் கொண்டு |
| அவர் பின் படரும் குணன் | அந்த ஸம்ஸாரிகளைப் பின்தொடரும் சீலமுடையர்; |
| எம் இராமாநுசன் தன் | அஸ்மத் ஸ்வாமியான எம்பெருமானாருடைய |
| படி இது | ஸ்வபாவம் இது. |

* * *:—"இராமாநுசன் மன்னுமாமலர்த்தாள் அயரேன்" என்று சொல்லுகிறீரே; நாங்களும் அப்படி அவரை ஆச்ரயிக்கும்படி அவ்வெம்பெருமானாருடைய ஸ்வபாவமிருக்கும்படியைச் சொல்லவேணுமென்று சிலர் அமுதனாரைப் பிரார்த்திக்க, எம்பெருமானாருடைய திவ்யகுணம் இப்படிப்பட்டது காண்மின் என்கிறார் இதில்.

எதிரிகளுக்குப் பயங்கரனான திருவாழியாழ்வானை ஆயுதமாகவுடையனாய் ஸகலாத்மாக்களுக்கும் சேஷியான எம்பெருமான் அன்று பாரதப் போர்க்களத்தில் அர்ஜுநனென்றவொருவனை வியாஜமாகக் கொண்டு வேத வேதாந்தக் கடலில் அழுந்திக்கிடந்த பல சிறந்த அர்த்தங்களை ஸ்ரீபகவத் கீதாமுகத்தாலே வெளிப்படுத்தினவளவிலும் பாழும் ஸம்ஸாரிகள் அவ்வர்த்தங்களைத் தெரிந்துகொண்டு உஜ்ஜீவிக்க மாட்டாமல் மேன்மேலும் ஸம்ஸாரத்தையே பெருக்கிக்கொண்டு அதோகதியை யடைந்துவிடவே, "ஐயோ! இப்படி நித்ய ஸம்ஸாரிகளாய்க் கெட்டுப்போகிறார்களே!" என்று அநுதாபங்கொண்ட எம்பெருமானார் அந்த கீதாசாஸ்த்ரத்தி

http://acharya.org

லுள்ள பொருள்களையே விளங்க உரைத்துக்கொண்டு, இதுகேட்டுத் திருந்துவார் ஆரேனுமுண்டோ? என்று ஸம்ஸாரிகளைப் பின் தொடர்ந்து செல்லுகிறார்; நம்மைப் பெறுதற்கு அவர் தாமே முயற்சி செய்துகொண்டு * ஆள்பார்த்து உழிதருகின்றார்; இந்தத் திருக்குணம் உங்களுக்குத் தெரியவில்லையா? என்கிறார்.

தானும் அவ்வோண் போருள் கோண்டு = கீதாபாஷ்யம் அருளிச்செய்து என்று கருத்து. திருக்கோட்டியூர் நம்பிபக்கலிலே சரமச்லோகார்த்தத்தை ஏகாந்தமாகக் கேட்டு அதனை யெல்லாருமறிந்து உஜ்ஜீவிக்குமாறு கோபுரத்தின் மேலேறி விளம்பரப்படுத்தின திருக்குணத்தை இப்பாட்டில் பேசுகின்றாரென்னவுமாம்.(௩௬)

படிகோண்ட கீர்த்தி யிராமாயணமென்னும் பத்திவெள்ளம் *
குடிகோண்டகோயி லிராமாநுசன் குணங்கூறும் * அன்பர்
கடிகோண்ட மாமலர்த்தாள் கலந்துள்ளங் கனியுநல்லோ
ரடிகண்டு கோண்டுகந்து * என்னையு மாளவர்க்காக்கினரே. (௩௭)

| | |
|---|---|
| படி கொண்ட கீர்த்தி | உலகமெங்கும் பரந்த புகழை யுடைத்தான |
| இராமாயணம் என்னும் | ஸ்ரீ ராமாயண மென்கிற |
| பத்தி வெள்ளம் | பக்தி ஸமுத்ரம் |
| குடிகொண்ட கோயில் | நித்யவாஸம் பண்ணுகிற திவ்ய ஸ்தாநமா யிருக்கிற |
| இராமாநுசன் | எம்பெருமானாருடைய |
| குணம் கூறும் அன்பர் | திருக்குணங்களைப் பேசுகின்ற பக்திமான்களுடைய |
| கடி கொண்ட மா தாள் மலர் | மணம்மிக்குச் சிறந்த பாதாரவிந்தங்களில் |

| | |
|---|---|
| உள்ளம் கலந்து | நெஞ்சு பொருந்தி |
| கனியும் | ஸ்நேஹித்திருக்கிற |
| நல்லோர் | மஹாநுபாவர்கள் |
| அடி கண்டு கொண்டு | (இவ்வாத்ம வஸ்துவானது உடையவர்க்கு சேஷப்பட்டதென்கிற) மூலப்பொருளைத் தெரிந்து கொண்டு |
| உகந்து | ஆதரித்து |
| என்னையும் | அடியேனையும் |
| அவர்க்கு | அவ்வெம்பெருமானார்க்கு |
| ஆள் ஆக்கினர் | ஆட்படுத்தினார்கள். |

* * *:—இப்படிப்பட்ட எம்பெருமானாரை நீரேசென்று பற்றினீரோ? அன்றி அவர்தாமே ஸ்வீகரித்தருளினாரோ? என்று

http://acharya.org

அமுதனாரைச் சிலர் கேட்க, நானும் பற்றவில்லை, அவரும் ஸ்வீகரிக்கவில்லை; அவருடைய ஸம்பந்த ஸம்பந்திகள் என்னைக் கொண்டுசேர்த்தார்கள் என்கிறார்.

லோகப்ரஸித்தமான ஸ்ரீராமாயணமென்கிற பக்திஸாகரத்தைத் திருவுள்ளத்திலே தேக்கிக் கொண்டிருப்பவரான எம்பெருமானாருடைய திருக்குணங்களையே நித்யாநுஸந்தாநமாகக் கொண்டிருக்கிற மஹான்கள் யாவரோ அவர்களுடைய பாதாரவிந்தத்தையே சிந்தித்து உகப்பவர்களான ஸ்ரீராமாநுஜபக்த பக்தர்கள் என்னை நோக்கினார்கள்; அப்போது நான் ஒன்றுக்குமுதவாத அபதார்த்தமாய்க் கிடந்தேன்; ஐயோ! ஸ்ரீராமாநுஜ சேஷபூதமான ஒரு வ்யக்தி இப்படி அநியாயமாய்க் கெட்டுப்போகிறதே யென்று அநுதபித்து அவர்கள் என்னைத் திருத்தி அவ்வெம்பெருமானாருடைய திருவடிகளிலே கொண்டு சேர்த்து உய்வித்தனர் என்றாராயிற்று.

அடி கண்டு கொண்டு = அடியாவது மூலம்; எம்பெருமானார்க்கு உரித்தாயிருக்கையாகிற மூலத்தைத் தெரிந்துகொண்டு சேர்த்தார்களென்கை. மருமமறிந்து காரியஞ் செய்தார்களென்றவாறு. .... .... .... .... (௯௭)

ஆக்கியடிமை நிலைப்பித்தனை யென்னையின்று * அவமே
போக்கிப் புறத்திட்ட தென்பொருளாமுன்பு? * புண்ணியர்தம்
வாக்கிற்பிரியா விராமாநுச நின்னருளின் வண்ணம்
நோக்கிற் றெரிவரிதால் * உரையாயிந்த நுண்பொருளே. (௯௮)

| | |
|---|---|
| | (ஸ்வாமிந்!) |
| என்னை | (நெடுநாளாக அஹங்காரியாய்க் கிடந்த) என்னை |
| இன்று | இன்றைத்தினத்தில் |
| ஆக்கி | ஒரு பொருளாக்கி |
| அடிமை | சேஷத்வத்தில் |
| நிலைப் பித்தனை | நிலை நிறுத்தினீர்; (இன்று இப்படி செய்தருளின தேவரீர்) |
| முன்பு | முற்காலமெல்லாம் |

| | |
|---|---|
| அவமே போக்கி | வீணாகப் போக்கி |
| புறத்து இட்டது | வெளி விஷயங்களிலே தள்ளிவிட்டு வைத்தது |
| என் பொருளா | என்ன நி[illegible]தமாக?; |
| புண்ணியர் தம் | (தேவரீரை இடைவிடாது அநுபவிக்கும்) பாக்கியசாலிகளுடைய |

http://acharya.org

| | | | |
|---|---|---|---|
| வாக்கில் பிரியா | வாக்கைவிட்டுப் பிரியாத | நோக்கில் | நோக்குமளவில் |
| இராமாநுச | எம்பெருமானாரே! | தெரிவு அரிது | அறிய முடியாததாயிரா நின்றது; |
| நின் அருளின் வண்ணம் | தேவரீருடைய திருவருளிருக்கும் பரிசு | இந்த நுண்பொருள் | இந்த ஸூக்ஷ்மமான விஷயத்தை |
| | | உரையாய் | தேவரீரே அருளிச் செய்யவேணும். |

* * *:—"என்னையும் அவர்க்கு ஆளாக்கினர்" என்று சொன்னவாறே ராமாநுஜசேஷத்வம் நமக்கு நித்யமாயிருக்க வெகு காலம் அவருடைய திருவடிகட்கு ஆளாகாமல் வீணாகக்காலம் கழிந்ததற்கும் இன்று அவருடைய திருவடிகளில் சேரப் பெற்றதற்கும் என்ன காரணமென்று ஆராய்ந்தார்; தமக்கேற்க ஒரு காரணமும் புலப்படவில்லை. அவருடைய நிர்ஹேதுகவிஷயீகாரமே இதற்குக் காரணமாயிருக்க வேண்டுமென்று நிச்சயித்து அவ்வெம்பெருமானாரையே நோக்கிக் கேள்வி கேட்கிறார் இதில்.

கூரத்தாழ்வானைக் கொண்டு அடியேனை இன்று திருத்திப் பணிகொண்ட தேவரீர் இதற்கு முற்காலமெல்லாம் இந்த சேஷத்வ ரஸத்தை அடியேனுக்கு ஊட்டாமல் வீணாக விஷயாந்தரங்களிலே அகலவைத்திருந்ததற்கு என்ன காரணம்? இன்று இங்ஙனே திருவுள்ளம் பற்றும்படியாக என்னிடத்தில் என்ன ஸுக்ருதமுண்டாயிற்று? ஒன்றுமில்லை; அப்படியிருக்கச் செய்தேயும் தேவரீர் தம்முடைய நிர்ஹேதுக க்ருபையைக் கொண்டேயன்றோ இன்று ஆட்படுத்திக் கொண்டது. ஹா ஹா! இப்படியும் ஒரு க்ருபையுண்டோ? இவ்வருளின் திறத்தை அறிவாரார்! அறிந்த தேவரீரே அருளிச் செய்யவேணும் என்றாராயிற்று.

நிலைப்பித்தனை = முன்னிலை யொருமை வினைமுற்று. அவம்—வீண். "இன்று என்னை ஆக்கி அடிமை நிலைப்பித்தனை; முன்பு அவமே போக்கிப் புறத்திட்டது என் பொருளா!"=இன்று ஸ்வீகரித்ததற்கும் இத்தனை நாள் ஒதுக்கிவைத்ததற்கும் என்ன காரணம்?. ... .... .... .... .... .... (௩அ)

பொருளும் புதல்வரும் பூமியும் * பூங்குழலாருமென்றே
மருள்கொண் டிளைக்கும் நமக்கு நெஞ்சே! * மற்றுளார்தரமோ?
இருள்கொண்ட வெந்துயர்மாற்றித் தன்னீறில் பெரும்புகழே
தெருளுந் தெருள்தந்து * இராமாநுசன்செய்யும் சேமங்களே. (௩௯)

http://acharya.org

பொருள் என்றும் — த்ரவ்யம் என்று சொல்லிக் கொண்டும்

புதல்வர் என்றும் — புத்திரர்கள் என்று சொல்லிக் கொண்டும்

பூமி என்றும் — க்ஷேத்ரமென்று சொல்லிக் கொண்டும்

பூ குழலார் என்றுமே — அழகிய குழலையுடைய ஸ்த்ரீகள் என்று சொல்லிக் கொண்டும் (அர்த்தபுத்திராதிகளையே விரும்பி)

மருள் கொண்டு — அறிவுகெட்டு

இளைக்கும் நமக்கு — வருந்திக்கொண்டு கிடக்கிற நமக்கு

இருள் கொண்ட — அஜ்ஞாநத்தோடு கூடிய

வெம் துயர் — க்ரூரமான துக்கங்களை

மாற்றி — போக்கடித்து

தன் ஈறு இல் பெரு புகழே தெருளும் தெருள் — தம்முடைய முடிவில்லாத சிறந்த கல்யாண குணங்களையே சிந்திக்கக் கடவதான ஞானத்தை

தந்து — அளித்தருளி

இராமாநுசன் — எம்பெருமானார்

செய்யும் சேமங்கள் — செய்கிற க்ஷேமங்களானவை

நெஞ்சே — ஓ மனமே!

மற்று உளார் தரமோ — மற்ற பேர்களுக்குச் செய்கிற மாதிரியோ? [அல்ல; விலக்ஷணம் என்றபடி.]

* * *:—எம்பெருமானாருடைய திருவருளாலே தாம்பெற்ற நன்மைகளை நினைத்து நினைத்து ஆநந்தமுள்ளடங்காமல் அவ்வாநந்தத்தை நெஞ்சோடே கூடி உசாவுகிறார். நெஞ்சே! * அன்னை அத்தன் என்புத்திரர் பூமி வாசவார்குழலாள் என்று மயங்கிப் புத்ரதாரக்ருஹ க்ஷேத்ரங்களுக்கு மேற்பட வொன்றுமறியாமல் உடலுக்கே கரைந்து நைந்துகிடந்த நமக்கு அஜ்ஞாநங்களையும் அது காரணமாகவரும் பாவங்களையும் தொலைத்தருளித் தமது திவ்ய கீர்த்திகளையே அநவாதம் பேசும்படியான நிலைமையிலே நம்மைக்கொண்டு நிறுத்தினார் எம்பெருமானார்; இப்படியாக அவர் நமக்குச் செய்தருளும் க்ஷேமங்கள் இவ்வுலகில் வேறு யார்க்காவது கிடைக்கக்கூடியதோ? நம்முடைய பாக்கியமே பாக்கியமன்றோ என்றாராயிற்று.

மற்றுளார் தரமோ? என்பதற்கு இரண்டுவகையாகப் பொருள் கொள்ளலாம்; இப்படிப்பட்ட க்ஷேமங்களை நமக்கு எம்பெரு

http://acharya.org

மானுர் தவிர வேறு யாரேனும் அளிக்கக்கூடுமோ? என்றும், இப்படிப்பட்ட க்ஷேமங்கள் நமக்குத்தவிர வேறு ஆர்க்கேனும் கிடைக்கத்தகுமோ? என்றும். சேமம்—க்ஷேமமென்கிற வடசொற் சிதைவு.

சேமநல்வீடும் பொருளுந் தருமமும் * சீரியநற்
காமமுமென்றிவை நான்கென்பர் * நான்கினுங் கண்ணனுக்கே
ஆமதுகாம மறம்பொருள் வீடிதற் கென்றுரைத்தான்
வாமனன் சீலன் * இராமாநுச னிந்தமண்மிசையே. (௪௦)

| | |
|---|---|
| சேமம் நல் வீடும் | (அனைவர்க்கும்) க்ஷேமரூபமான சிறந்தமோக்ஷமும் |
| பொருளும் | அர்த்தமும் |
| தருமமும் | தர்மமும் |
| சீரிய நல் காமமும் என்று இவை | மிகவுஞ் சிறந்த காமமும்—ஆக இப்படிசொல்லப் பட்டுள்ள இவை |
| நான்கு என்பர் | நான்கு புருஷார்த்தங்கள் என்று (வைதிகர்) கூறுவர்கள்; |
| நான்கினும் | இந்த நான்கு புருஷார்த்தங்களுள் |
| காமம் | காமமாவது |
| கண்ணனுக்கே ஆமது | எம்பெருமான் விஷயத்திலேயே உண்டாமது; |
| அறம் பொருள் வீடு | தர்ம அர்த்த மோக்ஷங்கள் மூன்றும் |
| இதற்கு என்று | இந்தக் காமபுருஷார்த்தத்திற்கு சேஷபூதங்கள் என்று |
| வாமநன் சீலன் இராமாநுசன் | வாமநாவதாரம் செய்த பெருமானோடு ஒத்த சீலத்தை யுடையரான எம்பெருமானுர் |
| இந்த மண் மிசை உரைத்தான் | இவ்வுலகத்தில் அருளிச் செய்தார். |

* * *:—எம்பெருமானுர் இவ்வுலகத்தார்க்கு உபதேசித்தருளின அர்த்தங்களில் ஒரு அர்த்த விசேஷத்தை இப்பாட்டில் எடுத்துரைக்கின்றுர்.—“அம்மறைதான் மன்னு மறம் பொருளின்பம் வீடென்றுலகில் நன்னெறி மேம்பட்டன நான்கன்றே” (பெரிய திருமடல்) என்றபடி—ஸகல சாஸ்த்ரங்களாலும் பிரதிபாதிக்கப்படுமவை தர்மம் அர்த்தம் காமம் மோக்ஷம் எனநான்கு புருஷார்த்தங்களாம்; அந்த நான்கினுள் காமமென்பது பகவத்விஷய காமம்; விஷயாந்தரங்களைப்பற்றின காமம் சிற்றின்பமாதலால் அது புருஷார்த்தமன்று; பேரின்பமாகிய பகவத் காமமே காமம். அதுவே

http://acharya.org

புருஷார்த்தம். மற்ற மூன்று புருஷார்த்தங்கள் மேற்சொன்ன காமபுருஷார்த்தத்திற்கு சேஷப்பட்டவைகள்; காமமே ப்ரதாந சேஷியான புருஷார்த்தம் என்று உலகத்தாரெல்லார்க்கும் உபதேசித்தருளினர் எம்பெருமானார் என்றாராயிற்று. "காமத்தின் மன்னும் வழிமுறையே நிற்றும் நாம்" என்ற திருமங்கையாழ்வாரருளிச்செயல் இங்கு நோக்கத்தக்கது. தருமமும் அர்த்தமும் ஒரு ஸுகத்தைப் பெறுவதற்கு உபாய பூதங்களாகையால் அவை ஸ்வதஃபுருஷார்த்தமன்று; பரதஃபுருஷார்த்த மெனப்படும். மோக்ஷமென்பது ஸ்வதஃபுருஷார்த்தமாயினும் காமமென்கிற பேரின்பத்தின் அபிவ்ருத்திக்கு ஹேதுவாய்க்கொண்டு காம புருஷார்த்தத்திற்கே பிராதாந்யத்தைக் கொடுக்குமென்க.

சேமநல்வீடு மென்று தொடங்கி அறம் பொருள் வீடிதற்கு என்னுமளவும் எம்பெருமானாருடைய உபதேச வடிவம்.

கண்ணனுக்கேயாமது காமம்=காமக்ரோதங்களைக் கெட்ட குணமாகக் கூறியிருப்பது தகாத விஷயங்களில் காமம் கூடாதென்பதுபற்றி. பகவத் விஷயத்தில் காமம் சாஸ்த்ர விஹிதம். ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளில் இக்காமமே பொலியும்.

வாமநன் சீலன்=வாமநாவதாரம்செய்த எம்பெருமானுடைய சீலம்போன்ற சீலத்தையுடையவர் என்கை. ஒருவரும் அபேக்ஷியாதிருக்கத் தன்பேறாக எல்லார் தலையிலும் திருவடிகளை வைத்துத் திரிவிக்கிரமனானதுபோல, ரஸ்யமாயும் ரஹஸ்யமாயுமுள்ள அர்த்த விசேஷங்களைத் தமது நிர்ஹேதுகக்ருபையாலே வெளியிடுபவர் எம்பெருமானார் என்கிறது. ... .... .... (௬௦)

மண்மிசை யோனிகள்தோறும் பிறந்து * எங்கள்மாதவனே
கண்ணுறநிற்கிலும் காணகில்லா * உலகோர்க ளெல்லாம்
அண்ண லிராமாநுசன் வந்துதோன்றிய வப்பொழுதே
நண்ணரு ஞானந் தலைக்கொண்டு * நாரணற்காயினரே. (௬௧)

எங்கள் மாதவனே { நமக்கு நாதனான திருமால்தானே

மண்மிசை யோனிகள் தோறும் பிறந்து { இப்பூமியிலுள்ள (மநுஷ்யாதி) யோனிகள் தோறும் அவதரித்து

http://acharya.org

| | |
|---|---|
| கண் உற நிற்கிலும் காணகில்லா உலகோர்கள் எல்லாம் | எல்லாருடைய கண்ணுக்கும் தன்னை இலக்காக்கிக்கொண்டுநின்ற விடத்திலும் (அவனை நம்முடைய நாதனென்று) காணமாட்டாதிருந்த இவ்வுலகத்தாரெல்லாரும் |
| அண்ணல் இராமாநுசன் வந்து தோன்றிய அப்பொழுதே | ஸர்வஸ்வாமியான எம்பெருமானார் இங்கே வந்தவதரித்தவுடனே |
| நண்ண அரு ஞானம் தலைக்கொண்டு | பெறுதற்கரிதான ஞானம் அதிகரிக்கப்பெற்று |
| நாரணற்கு ஆயினர் | ஸ்ரீமந்நாராயணனுக்கு சேஷப்பட்டனர். |

* * *:—எம்பெருமானுடைய அவதாரத்திற்காட்டிலும் எம்பெருமானாருடைய அவதாரமே சிறப்புற்றதென்கிறார். "அஜாயமானோ பஹுதா விஜாயதே" என்றும் "உயிரளிப்பான் எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தா யிமையோர் தலைவா" என்றும் சொல்லுகிறபடியே எம்பெருமான் பலபலயோனிகளிற் பலவகைப்பிறவி பிறந்து கண்காண வந்துநின்று உபதேசங்களாலே ஸ்வஸ்வரூபத்தைக் காட்டிக்கொடுத்த விடத்திலும் யாரும் அவனை லக்ஷியம் பண்ணவில்லை; "அவஜாநந்தி மாம் மூடா:" [என்னை எல்லாரும் அவமானப்படுத்துகிறார்கள்] என்று அவன்றானே சொல்லிக்கொண்டு வருத்தப்பட வேண்டிற்றாயிற்று. ஆகையாலே பகவானுடைய அவதாரம் ஸம்ஸாரிகளுடைய தெள்ளறிவுக்கு உறுப்பாகவில்லை. எம்பெருமானாருடைய அவதாரமோ வென்னில்; பயன் பெற்றது. இவர்தாம் திருவவதரித்தவுடனே எல்லாவுலகத்தாரும் ஆச்சரியமான ஞானத்தைப்பெற்று உஜ்ஜீவித்தார்கள்—என்றாயிற்று. ... .... .... ... (சுக)

ஆயிழையார் கொங்கை தங்கும் * அக்காதலளற்றழுந்தி
மாயுமென்னாவியை வந்தெடுத்தா னின்று * மாமலராள்
நாயக னெல்லாவுயிர்கட்கும் நாத னரங்கனென்னுந்
தூயவன் * தீதிலிராமாநுசன் தொல்லருள் சுரந்தே. (சுஉ)

| | |
|---|---|
| மா மலராள் நாயகன் | லக்ஷ்மீபதியான |
| அரங்கன் | பெரியபெருமாள் |
| எல்லா உயிர்கட்கும் நாதன் என்னும் | ஸகல ஆத்துமாக்களுக்கும் சேஷி என்று உபதேசிப்பவரும் |



http://acharya.org

| | |
|---|---|
| தூயவன் | பாமபரிசுத்தரும் |
| தீது இல் | எவ்வகைக் குற்றமுமில்லாதவருமான |
| இராமாநுசன் | எம்பெருமானார்,—(என்னசெய்தாரென்றால்) |
| ஆய் இழையார் கொங்கை தங்கும் அக் காதல் அளறு அழுந்தி மாயும் என் ஆவியை | அழகிய ஆபரணங்களணிந்த ஸ்த்ரீகளுடைய கொங்கைத்தடத்தில் தங்கும் ஆசையாகிறசேற்றிலே அழுந்தி நசித்துப்போகிற என் ஆத்மாவை |
| தொல் அருள் சுரந்து வந்து இன்று எடுத்தான் | இன்று நிர்ஹேதுக க்ருபை பண்ணி வந்து உத்தரித்தருளினார். |

* * *—பகவானுடைய அவதாரகாலங்களில் திருந்தாத ஸம்ஸாரிகளும் எம்பெருமானார் காலத்தில் திருந்திவிட்டார்களென்று கீழ்ப்பாட்டில் கூறியதற்கு வேறு த்ருஷ்டாந்தம் காட்ட வேணுமோ? என்னைத் திருத்திப் பணிகொண்ட விஷயமொன்றே போராதோ வென்பார்போலத் தம்மைத் திருத்தினதைச் சொல்லி ஆநந்தப்படுகிறார்.

மாதர்களுடைய ஆபரணங்களிலும் கொங்கைகளிலும் காதல் கிளர்ந்து அவற்றிலே அவகாஹித்து அநாதிகாலமாய் நசித்துக் கிடந்த என் ஆத்மாவை நிர்ஹேதுக க்ருபையாலே எம்பெருமானார் சீர்திருத்தினார்; 'ஸ்ரீரங்கநாதனே ஸர்வசேஷி' என்று உபதேசிப்பதே அவருடைய காலக்ஷேபம். அப்படிப்பட்ட இராமாநுசனால் நான் திருந்தப்பெற்றது ஒன்றே போதும்—என்றாராயிற்று. .... .... .... .... (சஉ)

சுரக்குந் திருவுமுணர்வும் * சோலப்புகில் வாயமுதம்
பரக்கு மிருவினை பற்றறவோடும் * படியிலுள்ளீர்!
உரைக்கின்றனனுமக்கியானறஞ்சீறு முறுகலியைத்
துரக்கும் பெருமை * இராமாநுசனென்று சொல்லுமினே. (சங)

| | |
|---|---|
| படியில் உள்ளீர் | இப்பூமியிலுள்ளவர்களே!, |
| யான் உமக்கு உரைக்கின்றனன் | நான் உங்களுக்கு (ஒருஹிதம்) சொல்லுகிறேன்; (என்னவென்றால்) |

http://acharya.org

| | |
|---|---|
| அறம் சீறும் உறுகலியை துரக்கும் பெருமை இராமாநுசன் என்று சொல்லுமின் | தர்மமார்க்கத்தில் சீற்றமுடைத்தாய் ப்ரபலமான கலியை ஓட்டிவிடும் எம்பெருமானாருடைய திருநாமத்தைச் சொல்லுங்கள்; (அப்படி சொன்னால்) |
| திருவும் | பக்திப் பெருஞ்செல்வமும் |
| உணர்வும் | ஞானமும் |

| | |
|---|---|
| சுரக்கும் | மேன்மேலும் பெருகும்; |
| சொல புகில் | அந்தத் திருநாமத்தைச் சொல்லத் தொடங்கும்போதே |
| வாய் அமுதம் பரக்கும் | வாக்கிலே அம்ருதரஸம் வியாபிக்கும்; |
| இரு வினை | மஹாபாபங்கள் |
| பற்று அற ஓடும் | அடியோடே போய்விடும். |

* * *—உலகத்தாரை நோக்கி நீங்களெல்லாரும் ஸ்ரீராமாநுஜ திவ்யநாமத்தை வாயாரச் சொல்லுங்கள் ; உங்களுக்கு எல்லா விதமான நன்மைகளும் உண்டாகுமென்கிறார். ஓ ஜனங்களே ! உங்களுக்கு ஓர் அருமையான அர்த்தத்தை உபதேசிக்கிறேன், கேளுங்கள் ; எம்பெருமானாருடைய ஸம்பந்தமுள்ள தேசத்தில் தருமத்திற்கு மாறான கலிபுருஷன் நிற்கப்பெறமாட்டான் ; அன்னவரது திருநாமங்களை நீங்கள் அநுஸந்தாநம் பண்ணுங்கள் ; உங்களுக்கும் ஜ்ஞாநபக்திகள் தலையெடுக்கும். பாவங்களும் தொலையும். அத்திரு நாமங்கள் நாவுக்கும் இனிதாயிருக்கும். சொல்லிப்பாருங்கள்.

உமக்கு + யான், உமக்கியான். “யவ்வரின் இய்யாம்” என்பது நன்னூல்.

“நேர்பதினாறே நிரைபதினேழென் றோதினர் கலித்துறை யோரடிக் கெழுத்தே” என்ற இலக்கணத்திற்கு மாறாக இப்பாட்டின் மூன்றாமடியில் (ஒற்றொழித்துப்) பதினெட்டெழுத்து வந்தது என்னெனில் ; உமக்கியான் என்றவிடத்தில் ககரத்தின் மேலேறின இகரம் குற்றியலிகாரமாகையாலே வண்ணங்கெடாமைக்குக் கழித்து உடலெழுத்தான ககரத்தைக் கீழோடே ஒன்றுவித்துப் பதினேழெழுத்தாகவே எண்ணத்தக்கது. கம்பர் இயற்றிய சடகோபரந்தாதியில் “என்முடியா தேனக்கியாதே யரிய திராவணன்றன்” என்ற இருபத்தொன்பதாம்பாட்டிலும் இப்படியே பிரயோகம் வந்தமை காண்க. இந்த நூற்றந்தாதியிலும் மேல்

http://acharya.org

ஐம்பத்து மூன்றும் பாட்டில் "பற்பல்லுயிர்களும் பல்லுலகியாவும் பரனதென்னும்" என்றவிடத்திலும் இங்ஙனமே கொள்க. (சங)

சொல்லார் தமிழொருமூன்றும் * சுருதிகள் நான்குமெல்லை
யில்லா வறநெறியாவுந் தெரிந்தவன் * எண்ணருஞ்சீர்
நல்லார்பரவு மிராமாநுசன் றிருநாமம் நம்பிக்
கல்லாரகலிடத்தோர் * எதுபேறென்று காமிப்பரே. (சச)

| | |
|---|---|
| அகல் இடத்தோர் | விசாலமான இப்பூமியிலுள்ளவர்கள், |
| சொல் ஆர் தமிழ் ஒரு மூன்றும் | சொல்நிரம்பிய இயல் இசை நாடகம் என்கிற ஒப்பற்ற முத்தமிழையும் |
| சுருதிகள் நான்கும் | நான்கு வேதங்களையும் |
| எல்லை இல்லா அறம் நெறி யாவும் | கணக்கில்லாத தரும சாஸ்த்ரங்களையும் மற்றும் எல்லாக் கலைகளையும் |
| தெரிந்தவன் | அறிந்தவராயும், |
| எண் அரு சீர் | எண்ண முடியாத குணங்களையுடையவராயும் |
| நல்லார் பரவும் | ஸத்துக்களால் துதிக்கப்படுபவராயு மிருக்கிற |
| இராமாநுசன் | எம்பெருமானாருடைய |
| திரு நாமம் | திருநாமத்தை |
| நம்பி கல்லார் | (என் வார்த்தையை) நம்பிக் கற்கின்றார்களில்லை ; |
| | (ஸ்ரீராமாநுஜ நாமஸங்கீர்தநமே புருஷார்த்த மென்று அறியாதவர்களாய்) |
| எது பேறு என்று காமிப்பரே ! | நமக்குப் புருஷார்த்தம் எது ? என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் ஐயோ !. |

* * *:—"இராமாநுசனென்று சொல்லுமினே" என்று ஸ்ரீராமாநுஜ நாமஸங்கீர்த்தனம் பண்ணும்படி உலகத்தாரை வேண்டினார் கீழ்ப்பாட்டில். ஒருவரும் இவர்சொல்லை ஆதரியாமையாலே 'ஐயோ! இவ்வுலகத்தார் பாழாய்ப்போகிறார்களே! உய்யும் வழியை நாம் உரைத்தும் இவர்கள் உணரமாட்டாமல் தடுமாறுகின்றனரே! என்று இரங்கிப் பேசுகிறார் இதில்.

வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்யோபய வேதாந்த ப்ராவர்த்தகராகையாலே ஸர்வஜ்ஞராயும் ஸத்துக்களாலே ஸேவ்யராயு மிருக்கிற எம்பெருமானாருடைய திருநாமத்தை விரும்பி ஓதுங்களென்று சொன்னால் இப்பெரிய பூமண்டலத்தில் ஒருபாவியும் ஓதமாட்டே

http://acharya.org

னென்கிறான் ; உஜ்ஜீவிக்க என்ன வழி? என்று விசாரித்துக் கொண்டு அலைந்துழல்கின்றார்களே யொழிய உய்யும்வழியை யுரைத்தால் உகந்து கைப்பற்றுவாரில்லையே, இஃதென்னவுல கியற்கை! என்று வருந்துகிறார்.

சொல் ஆர் தமிழொருமூன்றும்=இயல் இசை நாடகம் என மூவகைப்படும் தமிழ்.—"எழுத்துப் பதின்மூன்று இரண்டசை சீர்முப்பதேழ்தளை ஐந்து, இழுக்கிலடிதொடை நாற்பதின் மூன்று ஐந்துபா இனம் மூன்று, ஒழுக்கிய வண்ணங்கள் நூறு ஒன்பது ஒண்பொருள்கோள் இருமூ, வழுக்கில்விகாரம் வனப்பெட்டு யாப்புள் வகுத்தனவே" என்று தொகுத்து உணர்த்தப்படும் இயற் றமிழின் இலக்கணங்கள். குறிஞ்சி, செருந்தி, இந்தளம், கொல்லி, காமரம், தக்கேசி, பஞ்சமம், கைசிகம் காந்தாரம் பாலையாழ் முதலிய பண்களைக் கொண்டுள்ள தமிழ் இசைத்தமிழாம். இயலுக்கும் இசைக்கும் பொதுவானது நாடகத் தமிழாம். திராவிட சாஸ்த் ரங்களெல்லாவற்றையும் அறிந்தவர் எம்பெருமானார் என்கிறது.

சுருதிகள் நான்கும்=ருக்கு, யஜுஸ், ஸாமம், அதர்வணம் என வேதங்கள் நான்காம். எல்லையில்லா அறநெறி=தர்மசாஸ்த் ரங்கட்கு அளவே யில்லை. யாவும்=கீழ்ச்சொன்னவற்றையும் மற்றுமுள்ள கலைகளையும். ... ... ... .... (௪௪)

பேறொன்றுமற்றில்லை நின்சரணன்றி* அப்பேறளித்தற்
காறொன்றுமில்லை மற்றச்சரணன்றி * என்றிப்பொருளைத்
தேறுமவர்க்குமெனக்கு முனைத்தந்த செம்மை சொல்லால்
கூறும்பரமன்று * இராமாநுச! மெய்ம்மை கூறிடிலே. (௪௫)

| | | | |
|---|---|---|---|
| இராமாநுச | எம்பெருமானாரே!, | அச் சரண் அன்றி | அத்திருவடிகள் தவிர |
| நின் சரண் அன்றி | தேவரீருடைய திருவடிகளைத்தவிர | மற்று ஆறு ஒன்றும் இல்லை | வேறு உபாயம் ஒன்றுமில்லை; |
| மற்று பேறு ஒன்றும் இல்லை | உபேயம் வேறொன்றுமில்லை; | என்று இப் பொருளை | என்கிற இவ்வுண்மைப் பொருளை |
| அப் பேறு அளித்தற்கு | தேவரீர் திருவடிகளாகிற அந்த உபேயத்தைத் தருவதற்கு | | |

http://acharya.org

| | |
|---|---|
| தேறு மவர்க்கும் | தெளிவாகத் தெரிந்து கொண்டிருக்கிற மஹான்களுக்கும் |
| எனக்கும் | (இந்தத் தெளிவு சிறிது மில்லாத) எனக்கும் |
| உனை தந்த செம்மை | (வாசி பாராமல் ஸமமாகவே) தேவரீரைக் காட்டிக் கொடுத்த செம்மைக் குணமானது |
| மெய்ம்மை கூறிடில் | உண்மை சொல்லில் |
| சொல்லால் கூறும் பரம் அன்று | வாய்கொண்டு சொல்லத் தாமன்று [அநுபவித்து உருகு மித்தனை]. |

* * *—"இராமாநுசன் திருநாமம் நம்பிக் கல்லாரகலிடத்தோர்" என்று கீழ்ப்பாட்டில் சொல்லப்பட்டவர்களுள் தாமும் ஒருவராயிருந்தும் தம்மைமாத்திரம் எம்பெருமானார் நிர்ஹேதுகமாக அங்கீகரித்துத் தம் திருவடிகளையே உபாயோபேயமாக நம்பியிருக்கும்படி அத்யவஸாயத்தை உண்டுபண்ணின மஹோபகாரத்தை நினைத்து ஈடுபடுகிறார்.

ஸ்வாமிந்! தேவரீருடைய திருவடிகள் தவிர வேறொன்றும் ப்ராப்யமல்ல; இதனைப் பெறுதற்கு இத்திருவடிகளே உபாயமாவதன்றி வேறொருபாயமில்லை—என்று 'உபாயமும் உபேயமும் எம்பெருமானார் திருவடிகளே' என்றிருக்கும் மஹான்களுக்கு தேவரீர் எவ்வாறு அருள் புரிகின்றதோ அவ்வாறாகவே சிறிதும் வாசி வையாமல் பாவியேனுக்கும் அருள் புரிகின்றதே! இஃது என்ன பெருங்குணம்!! த்ருடவிச்வாஸ முடைய ஆழ்வான் ஆண்டான் போல்வாரை அடிமை கொள்வது போலவே அவிச்வாஸியான என்னையும் அடிமை கொள்வதே! இச்செம்மைக் குணத்தின் பெருமையைப் பாசுரமிட்டுச் சொல்ல எனக்கு சக்தியில்லையே யென்று தடுமாறுகின்றார்.

பேறு=பெறப்படுவது பேறு, உபேயம். அதாவது பலன். சரண் என்ற சொல் சரணம் என்ற வடசொல்லின் விகாரம்; திருவடி யென்று பொருள். ஆறு—வழி, அதாவது உபாயம். செம்மை—பெரியார் சிறியார் என்னும் வாசிபாராமல் எல்லோரிடத்திலும் ஒருங்கே திருவுள்ள முவந்திருத்தல். ஆர்ஜவகுண மெனப்படும்; இதற்கு எதிரான குணம் கௌடில்யம். ... ... .... (சுரு)

http://acharya.org

கூறுஞ்சமயங்க ளாறுங்குலைய * குவலயத்தே
மாறன்பணித்த மறையுணர்ந்தோனை * மதியிலியேன்
தேறும்படியென் மனம்புகுந்தானைத் திசையனைத்தும்
ஏறுங்குணனை * இராமாநுசனை யிறைஞ்சினமே. (சசு)

| | |
|---|---|
| கூறும் சமயங்கள் ஆறும் குலைய | மனம்போனபடி சொல்லிக்கொண்டிருக்கிற ஆறு பாஹ்யமதங்களும் தலைமடங்கும்படி |
| குவலயத்தே | இப் பூமண்டலத்திலே |
| மாறன் பணித்த மறை | நம்மாழ்வார் அருளிச்செய்த தமிழ் வேதத்தை |
| உணர்ந்தோனை | கற்று அறிந்தவராயும் |
| மதியிலியேன் தேறும்படி | ஜ்ஞாநஹீநனான நானும் தெளியும்படியாக |
| என் மனம் புகுந்தானை | என் ஹ்ருதயத்திலே வந்து புகுந்தவராயும் |
| திசை அனைத்தும் ஏறும் குணனை | எல்லா திக்குக்களிலும் பரவிய திருக்குணங்களை யுடையவராயு மிருக்கிற |
| இராமாநுசனை | எம்பெருமானாரை |
| இறைஞ்சினம் | வணங்கினோம். |

* * *—எம்பெருமானார் செய்தருளின அரிய பெரிய உபகாரங்கள் நெஞ்சில் ஊற ஊற, பரவசராய்த் திருவடிகளிலே வணங்குகிறார்.—உலகத்தில் பிரமாணமில்லாமலும் யுக்தியில்லாமலும் மனம் போனபடி சொல்லிக்கொண்டு திரிகிற மதாந்தரஸ்தர்களையெல்லாம் பங்கப்படுத்துவதற்காக நம்மாழ்வார் அருளிச்செய்த தமிழ்வேதமான திருவாய்மொழியை ஓதியுணர்ந்தவரும், அவிவேகியான நான்கூடத் தேறுதலடையும்படி என் நெஞ்சினுள்ளே புகுந்து என் ஸத்தையை நோக்குபவரும், திசைகளெங்கும் பரவிய புகழையுடையருமான எம்பெருமானாரை வணங்கினோமென்றாராயிற்று.

சமயங்கள்ஆறும்=தேஹாத்மவாதி, தேஹபரிணாமாத்மவாதி, விஜ்ஞாநாத்மவாதி, சூந்யவாதி, அத்வைதவாதி, சிவபரத்வவாதி— என்றிப்படி ஆறு மதஸ்தர்களுண்டு. வேறு வகைகளும் உண்டு. எல்லா மதங்களும் திருவாய்மொழியில் நெற்செய்யப் புல்தேயுங் கணக்கிலே தொலைக்கப்பட்டனவென்க. குவலயம்—வடசொல். தேறும்படி—'ஒரு வழியாலும் நாம் உஜ்ஜீவிக்க வகையில்லையே! என்

http://acharya.org

செய்வோம்' என்று தடுமாறிக்கிடந்த நானும் 'இனி நமக்கொரு குறையுமில்லை' என்று தேறி மார்விலே கைவைத்துறங்கும்படியாக என்கை. .... ... ... ... ... .... (சசு)

இறைஞ்சப்படும் பரனீசனரங்கனென்று * இவ்வுலகத்
தறம்செப்புமண்ண லிராமாநுசன் * என்னருவினையின்
திறஞ்செற்றிரவும் பகலும்விடா தென்றன்சிந்தையுள்ளே
நிறைந்தொப்பறவிருந்தான் * எனக்காரும் நிகரில்லையே. (சஎ)

| | |
|---|---|
| இறைஞ்சப் படும் பரன் ஈசன் அரங்கன் என்று | 'எல்லாராலும் வணங்கத்தக்க பரதெய்வம் (எதுவென்றால்) ஈசனாகிய ஸ்ரீரங்கநாதனே யாம்' என்று |
| இ உலகத்து | இப் பூமண்டலத்திலே |
| அறம்செப்பும் | ஸாக்ஷாத் தர்மத்தை அருளிச் செய்யுமவராய் |
| அண்ணல் | ஸர்வஸ்வாமியான |
| இராமாநுசன் | எம்பெருமானார் |
| என் அரு வினையின் திறம் செற்று | என்னுடைய போக்கமுடியாத கர்மஸமூஹத்தைப்போக்கி |
| பகலும் இரவும் விடாது | ஸர்வ காலத்திலும் |
| என் தன் சிந்தை உள்ளே | என் ஹ்ருதயத்தினுள்ளே |
| நிறைந்து | பரிபூர்ணராகி |
| ஒப்பு அற இருந்தான் | (இவ்விருப்புக்கு) ஒப்பில்லாதபடி எழுந்தருளியிருக்கிறார்; |
| எனக்கு | இப்படிப்பட்ட அருளைப்பெற்ற எனக்கு |
| ஆரும் நிகர் இல்லை | ஒப்பாவார் ஆருமில்லை. |

* * *—"என்மனம் புகுந்தானை" என்று கீழ்ப்பாட்டில் சுருங்கச் சொன்னதை விரித்துரையா நின்றுகொண்டு பெரும் பாக்கியம்பெற்ற எனக்கு ஒப்பார் ஆருமில்லை யென்கிறார்.

ஸ்ரீரங்கநாதனே எல்லாரும் வணங்கத்தக்க பரதெய்வமென்னும் உண்மையை உலகத்தார்க்கு உபதேசித்து எல்லாரையும் பகவத் ஸமாச்ரயணத்தில் ருசியுடையவர்களாக்கிப் போருகின்ற எம்பெருமானார் என்னுடைய தீவினைகளை வேரோடே களைந்தொழித்து அநவரதமும் எனது ஹ்ருதயத்தினுள்ளே பரிபூர்ணராயெழுந்தருளியிராநின்றார்; இப்படிப்பட்ட பரமபாக்கியம் பெற்றவன்

http://acharya.org

இவ்வுலகில் நானொருவனேயாகையால் * இல்லை யெனக் கெதிரில்லை யெனக் கெதிரில்லை யெனக்கெதிரே. .... (சஎ)

நிகரின்றிநின்றவென் நீசதைக்கு * நின்னருளின்கணன்றிப்
புகலொன்றுமில்லை யருட்குமஃதேபுகல் * புன்மையிலோர்
பகரும்பெருமை யிராமாநுசவினி நாம்பழுதே
அகலும் பொருளென் * பயனிருவோமுக்கு மானபின்னே.

| | |
|---|---|
| புன்மையிலோர் பகரும் பெருமை இராமாநுச | மஹான்கள் பேசவேண்டும் படியான பெருமையையுடைய எம்பெருமானாரே! |
| நிகர் இன்றி நின்ற என் நீசதைக்கு | என்னுடைய ஒப்பற்ற தாழ்மைக்கு |
| நின் அருளின் கண் அன்றி | தேவரீருடைய க்ருபையினிடத்தில் தவிர |
| புகல் ஒன்றும் இல்லை | வேறு எவ்விடத்திலும் ஒதுங்க இடமில்லை; |
| அருட்கும் | தேவரீருடைய அந்த க்ருபைக்கும் |
| அஃதே புகல் | (என்போல்வாருடைய) அந்தத் தாழ்மையே சரணம்; (ஆக இவ்வகையாலே) |
| இருவோமுக்கும் பயன் ஆனபின் | அடியேனால் தேவரீருக்குப் பயன், தேவரீரால் அடியேனுக்குப் பயன் என்று ஸித்தமானபின்பு |
| இனி | இனிமேலும் |
| பழுதே | வியர்த்தமாக |
| அகலும் பொருள் என் | பிரிந்திருக்கைக்குக் காரணம் என்ன?. |

* * *:—"எனக்காரும் நிகரில்லையே" என்று களித்துக் கூறின அமுதனாரை நோக்கி எம்பெருமானார் "இக்களிப்பு உமக்கு எத்தனை நாளைக்கு நிற்கும்? நான் உம்மை விட்டுவிடவுங்கூடும்; நீர் என்னை விட்டுவிடவுங்கூடும். இரண்டத் தொன்று நேர்ந்தால் இக்களிப்பு மாறக்கூடியதுதானே" என்ன—; இனி நாம் வீணாக விட்டுப் பிரிவதற்குக் காரணமேயில்லை யென்கிறார்.

ஸ்வாமிந்! நீசர்களில் என்போல்வாரில்லை; இப்படிப்பட்ட என்னுடைய நீசத்தனம் நீங்குவதற்கு தேவரீருடைய திருவருளேயன்றி வேறொரு ஸாதனமும் இல்லை. தேவரீருடைய திருவருளுக்கும் நான் தவிர வேறொரு பாத்திரமில்லை. ஆகவே, என்னை விட்டால் உமக்குக் கதியில்லை, உம்மைவிட்டால் எனக்குக் கதியில்லை



http://acharya.org

யென்னும்படியான ஸம்பந்தவுறைப்பு இருக்கும்போது, தேவரீரும் என்னைவிட்டு நீங்கக் காரணமில்லை, அடியேனும் தேவரீரைவிட்டு நீங்கக் காரணமில்லை என்றாராயிற்று.

["தததஹம் த்வத்ருதே ந்நாதவாந் மத்ருதே த்வம் தயநீயவாந் நச—விதி நிர்மித மேததந்வயம் பகவந் பாலய மாஸ்மஜீஹப:"] என்ற ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்ந ச்லோகமும் இப்பொருள் கொண்டதே.

நீசனை—'நீசதா' என்ற வடசொல் ஐயீறாயிற்று. நீசஸ்ய பாவ: நீசதா=நீசனாயிருக்குந்தன்மை. அருட்குமஃதேபுகல்=நீசர்கள் விஷயத்தில் க்ருபை பண்ணினாலன்றோ அருள் விளங்குவதும் பயன் பெறுவதும். ... .... ... (சஅ)

ஆனதுசெம்மையறநெறி * பொய்ம்மையறுசமயம்
போனதுபொன்றி இறந்ததுவெங்கலி * பூங்கமலத்
தேனதிபாய்வயல் தென்னரங்கன்கழல் சென்னிவைத்துத்
தானதில்மன்னும் * இராமாநுச னித்தலத்துதித்தே. (சகூ)

| | |
|---|---|
| பூ கமலம் தேன் | தாமரைப் பூக்களிலுண்டான மகரந்தமானது |
| நதி பாய் | ஆறாகப் பெருகப் பெற்ற |
| வயல் | கழனிகளையுடைய |
| தென் அரங்கன் | ஸ்ரீரங்கத்திலே எழுந்தருளியிருக்கிற பெரிய பெருமாளுடைய |
| கழல் | திருவடிகளை |
| சென்னி வைத்து | சிரஸாவஹித்துக் கொண்டு |
| தான் அதில் மன்னும் | தாம் அத்திருவடிகளிலேயே ப்ரவணராயிருக்கிற |

| | |
|---|---|
| இராமாநுசன் | எம்பெருமானார் |
| இ தலத்து உதித்து | இப்பூமியிலே திருவவதரித்ததனால் |
| செம்மை அறம் நெறி | ருஜுவான தர்ம மார்க்கமானது |
| ஆனது | ஸத்தை பெற்றது; |
| பொய்ம்மை அறு சமயம் | பொய்யே நிறைந்து கிடக்கிற அறுசமயங்களும் |
| பொன்றி போனது | நாசமடைந்தன; |
| வெம் கலி இறந்தது | கொடிய கலியுகமும் மாண்டது. |

* * *:—எம்பெருமானார் திருவவதரித்ததனாலே இவ்வுலகத்துக்கு உண்டான நன்மைகளை அருளிச் செய்கிறார் இதில். தடா

http://acharya.org

கங்களிலுள்ள தாமரைப் பூக்களினின்றும் தேன் ஆறாகப் பெருகி வயல்களில் பாயும்படியான ஸம்ருத்தி பொருந்திய அழகிய திருவரங்கந் திருப்பதிக்குத் தலைவரான பெரிய பெருமாளுடைய திருவடிகளிலே பேரன்பு பூண்ட எம்பெருமானார் இந்நிலவுலகத்தில் திருவவதரித்த பின்பு என்னாயிற்றென்றால், முன்பு குத்ருஷ்டிகளினால் அழிந்துகிடந்த தர்மமார்க்கம் மீண்டு நிலைபெற்றது ; சாஸ்த்ர விருத்தமான புறமதங்களெல்லாம் தலைசாய்ந்தன ; கலிதோஷமும் கெட்டுப்போயிற்று. ... ... ... (சகூ)

உதிப்பனவுத்தமர் சிந்தையுள் * ஒன்னலர் நெஞ்சமஞ்சிக்
கோதித்திட மாறிநடப்பன * கொள்ளைவன் குற்றமெல்லாம்
பதித்தவென் புன்கவிப் பாவினம்பூண்டன பாவுதொல்சீர்
எதித்தலைநாதன் * இராமானுசன்றன் னிணையடியே. (ரு௦)

பாவு தொல் சீர் — உலகமெங்கும் பரவின நித்யகல்யாண குணங்களையுடையவரும்
எதி தலை நாதன் — யதிகளுக்குத் தலையான நாயகருமான
இராமானுசன் தன் — எம்பெருமானாருடைய
இணை அடி — திருவடியிணைகள்

(எப்படிப்பட்டவை யென்றால்)

உத்தமர் சிந்தையுள் உதிப்பன — உத்தமாதிகாரிகளுடைய திருவுள்ளங்களிலே ப்ரகாசிப்பவை ;
ஒன்னலர் நெஞ்சம் — ப்ரதிபக்ஷிகளுடைய நெஞ்சானது
அஞ்சி கொதித்திட — பயப்பட்டுப் பரிதபிக்கும்படி
மாறி நடப்பன — மாறிமாறியிட்டு நடக்குந்தன்மையுடையன ;
கொள்ளை வன் குற்றம் எல்லாம் பதித்த — அபாரமான வலிய தோஷங்கள் யாவும் அழுந்திக் கிடக்கிற
என் புன் கவி — என்னுடைய க்ஷுத்ரமான கவனமாகிய
பா இனம் பூண்டன — பாசுரங்களை (ஸ்தோத்ரமாகப்,) பெற்றுக் கொண்டவை.

* * *:—தமக்குப் பரமப்ராப்யமான எம்பெருமானார் திருவடிகளை வருணிக்கிறார் இதில். உலகம் நிறைந்த புகழுடையராய் யதிஸார்வபௌமரான எம்பெருமானாருடைய திருவடிகள் எப்படிப்பட்டவை யென்றால், வடுகநம்பிபோல்வாரான உத்தமாதி

http://acharya.org

காரிகளாலே இடைவிடாது சிந்திக்கப்படுவன ; பிரதிபக்ஷிக ளுடைய நெஞ்சிலே பரிதாபத்தை உண்டுபண்ணுவன ; பல்வகைக் குற்றங்கள் நிறைந்த எனது கவிகளையும் ஏற்றுக் கொள்வன— என்றதாயிற்று.

ஒன்னலர் நெஞ்ச மஞ்சிக் கொதித்திட மாறி நடப்பன= பாஹ்யகுத்ருஷ்டிகளை நிரஸிப்பதற்காகப் பலவிடங்களிலும் ஸஞ் சரித்தருளினமை அறிக. மாறிநடத்தல்—ஒரு அழகான நடை. நம்பெருமாள் நடைபோலே. ... .... (௩௰)

அடியைத்தொடர்ந்தெழு மைவர்கட்காய் * அன்றுபாரதப்போர்
முடியப்பரிநெடுந் தேர்விடுங்கோனை * முழுதுணர்ந்த
அடியர்க்கமுத மிராமாநுசனென்னை யாளவந்திப்
படியிற்பிறந்தது * மற்றில்லைகாரணம் பார்த்திடிலே. (௩க

| | |
|---|---|
| அன்று | முற்காலத்தில் |
| அடியை தொடர்ந்து | திருவடிகளை அவலம்பித்து |
| எழும் | செருக்கிக்கிளர்ந்த |
| ஐவர்கட்கு ஆய் | பஞ்சபாண்டவர் களுக்காக [பக்ஷபாதம் பூண்டு] |
| பாரதப் போர் | பாரதயுத்தத்திலே |
| முடிய | (துரியோதநாதிகள்) மாளும்படியாக |
| பரி நெடு தேர் | குதிரைபூண்ட பெரியதேரை |
| விடும் | நடத்தின |
| கோனை | ஸர்வேச்வரனை |
| முழுது உணர்ந்த | (ஸ்வரூப ஸ்வபாவங்களில் ஒன்றுங் குறையாதபடி) பூர்த்தியாகத் தெரிந்து கொண்ட |
| அடியர்க்கு | பாகவதர்களுக்கு |
| அமுதம் | பரமபோக்யரான |
| இராமாநுசன் | எம்பெருமானார் |
| இப் படியில் | இப் பூமண்டலத்தில் |
| வந்து பிறந்தது | வந்து அவதரித்தது (எதற்காக வெனில்) |
| என்னை ஆள | அடியேனை ஆட்கொள்ளுகைக் காகவேயாம் ; |
| பார்த்திடில் | ஆராய்ந்து பார்க்கு மளவில் |
| மற்று காரணம் இல்லை | இது தவிர வேறொரு காரணமில்லை. |

http://acharya.org

* * *:—எம்பெருமானார் இவ்வுலகத்தில் அவதரித்தருளினது என்னையடிமை கொள்ளுதற்காகவேயன்றி வேறொரு காரியத்துக்காகவுமல்ல என்கிறார் —தன்னையே சரணமாகப்பற்றின பஞ்ச பாண்டவர்களுக்காகப் பாரத யுத்தத்திலே அர்ஜுநனுக்குத் தேர்ப்பாகனாயிருந்த பரமஸுலபனான கண்ணபிரானுடைய ஸ்வரூபஸ்வபாவங்களை நன்கறிந்து ஈடுபடுகின்ற பாகவதர்களுக்குப் பரம போக்யரான எம்பெருமானார் அடியேனை அடிமை கொள்வதற்காகவே இந்தப் பூமியில் திருவவதரித்தார்; இதைத்தவிர்த்து வேறொரு காரணமும் இல்லை. "எதிர்சூழல்புக்கு எனைத்தோர் பிறப்பும் எனக்கேயருள்கள் செய்ய, விதிசூழ்ந்ததா லெனக் கேலம்மான் திரிவிக்கிரமனையே" என்று நம்மாழ்வார் அநுஸந்தித்தவாறு நினைக்கத்தக்கது. ... .... .... (ருக)

பார்த்தானறுசமயங்கள்பதைப்ப * இப்பார்முழுதும்
போர்த்தான்புகழ்கொண்டு புன்மையினே னிடைத் தான்புகுந்து *
தீர்த்தானிருவினை தீர்த்தரங்கன்செய்ய தாளிணையோ
டார்த்தான் * இவையெம்மிராமாநுசன்செய்யு மற்புதமே. (ருஉ)

(எம்பெருமானாரானவர்)

| | |
|---|---|
| அறு சமயங்கள் பதைப்ப | (வேதபாஹ்யங்களான) ஆறு தர்சநங்களும் துடிக்கும்படியாக |
| பார்த்தான் | திருக்கண் செலுத்தினார்; |
| இப் பார் முழுதும் | இப்பூமண்டலம் முழுவதையும் |
| புகழ் கொண்டு | (தமது) கீர்த்தியினாலே |
| போர்த்தான் | மூடிவிட்டார்; |
| புன்மையினேனிடை | நீசனான அடியேன் பக்கலிலே |
| தான் புகுந்து | தாமாகவே (நிர்ஹேதுக க்ருபையினால்) வந்து புகுந்து |
| இரு வினை | பெரிய பாவங்களை |
| தீர்த்தான் | போக்கியருளினார்; |
| தீர்த்து | பாவங்களைப் போக்கினது மன்றியில் |
| அரங்கன் | ஸ்ரீரங்கநாதனுடைய |
| செய்ய தாள் இணையோடு ஆர்த்தான் | அழகிய திருவடிகளோடே (என்னை) அந்வயிப்பித்தார்; |
| இவை | ஆகிய இக்காரியங்களெல்லாம் |
| எம் இராமாநுசன் செய்யும் அற்புதம் | எமக்கு ஸ்வாமியான எம்பெருமானார் செய்தருளின ஆச்சரியச் செயல்களாம். |

http://acharya.org

* * *:—எம்பெருமானாருடைய ஆச்சரியமான சில செயல்களை எடுத்துக் கூறுகின்றார்.—சாக்யர் உலூக்யர் பௌத்தர் சார்வாகர் பாசுபதர் காணாதர் என்றிப்படி சொல்லப்படுகிற புறமதத்தவர்களை யெல்லாம் நடுங்கச்செய்தார்; இப்பூமண்டலமெங்கும் தமது திருப்புகழே பரவும்படி செய்தார்; ஆத்மகுண மொன்றில்லாத என்னுடைய ஹ்ருதயத்திலே புகுந்து என் பாவங்களைப் போக்கி அழகிய மணவாளனுடைய ஸ்ரீபாதங்களிலே என்னை ஆச்ரயிக்கச் செய்தார்; இப்படியாக எம்பெருமானார் செய்தருளுமவை யெல்லாம் மிக அற்புதமானவை. ... ... (ருஉ)

அற்புதன்செம்மை யிராமாநுசன் * என்னையாளவந்த
கற்பகங்கற்றவர் காமுறுசீலன் * கருதரிய
பற்பல்லுயிர்களும் பல்லுலகியாவும் பரனதென்னும்
நற்பொருள்தன்னை * இந்நானிலத்தேவந்து நாட்டினனே.

| | |
|---|---|
| என்னை ஆள வந்த | என்னை ஆட்கொள்வதற்காக அவதரித்த |
| கற்பகம் | உதாரரும் |
| கற்றவர் காமுறு சீலன் | ஞானிகள் ஆசைப்படும்படியான சீலகுணத்தையுடையவரும் |
| அற்புதன் | ஆச்சரிய சேஷ்டிதங்களையுடையவரும் |
| செம்மை | ருஜுவாயிருக்குந் தன்மை பொருந்தியவருமான |
| இராமாநுசன் | எம்பெருமானார்,— |
| கருத அரிய பல் பல் உயிர்களும் | நினைக்கவும் முடியாதபடி எண்ணிறந்திருக்கிற ஆத்மவர்க்கங்களும் |
| பல் உலகு யாவும் | (அவ்வாத்மாக்களுக்கு இருப்பிடமான) அளவிறந்த எல்லாவுலகங்களும் |
| பரனது என்னும் நல் பொருள் தன்னை | எம்பெருமானுடைய ஸொத்துக்களாம்—என்கிற ஸாரார்த்தத்தை |
| இ நானிலத்தே | இவ்வுலகத்திலே |
| வந்து | வந்தவதரித்து |
| நாட்டினன் | ஸ்தாபித்தருளினார். |

* * *—எம்பெருமானார் மதாந்தரங்களைக் கண்டித்து நிலைநாட்டிய ஸித்தாந்தம் இன்னதென்கிறார்.—சிறந்த ஞானிகளை

http://acharya.org

வரும் கொண்டாடுதற்குரிய திருக்குணங்களையும் அதிமாநுஷ வ்யாபாரங்களையும் உடையரான எம்பெருமானார் இவ்வுலகில் திருவவதரித்து "ஸகல ப்ராணிகளும் அந்தப்பிராணிகளுக்கு இருப்பிடமாயுள்ள ஸகல லோகங்களும் ஸ்ரீமந்நாராயணனுக்கே உரிமைப்பட்டவை" என்கிற பரமார்த்தத்தை நிலைநாட்டியருளினர்.

உலகு+யாவும், உலகியாவும்; "யவ்வரினிய்யாம்" என்பது நன்னூல்விதி. "பல்லுலகில் யாவும்" என்றபாடம் கட்டளைக் கலித்துறையிலக்கணத்திற்குச் சேராதென்று ஜீயருரையில் மறுக்கப்பட்டது. உலகியாவும் என்றபாடத்திலும் ஒரெழுத்து ஏறுகிற தில்லையோ வென்னில், கீழ் நாற்பத்துமூன்றும் பாட்டின் உரையில் "உரைக்கின்றன னுமக்கியான்" என்றவிடத்தில் உரைத்தோம், கண்டுகொள்க. ... ... .... (ருரு)

நாட்டிய நீசச் சமயங்கள் மாண்டன * நாரணனைக்
காட்டியவேதம் களிப்புற்றது * தென்குருகைவள்ளல்
வாட்டமிலா வண்டமிழ்மறைவாழ்ந்தது மண்ணுலகில்
ஈட்டியசீலத்து * இராமாநுசன் தன்னியல்வுகண்டே. (ருசு)

| | | | |
|---|---|---|---|
| மண் உலகில் ஈட்டிய சீலத்து இராமாநுசன் தன் | இப்பூலோகத்தில் மேன்மேலும் திரட்டிக் கொண்ட சீல குணத்தை யுடையரான எம்பெருமானாருடைய | வேதம் | வேதங்களானவை |
| இயல்வு | ஸ்வபாவத்தை | களிப்பு உற்றது | (நமக்கு இனி ஒரு குறையுமில்லை யென்று,) செருக்கடைந்தன; |
| கண்டு | பார்த்து, | தென் குருகை வள்ளல் | அழகிய திருக்குருகூரில் அவதரித்த உதாரரான ஆழ்வார் (அருளிச்செய்த) |
| நாட்டிய நீச சமயங்கள் மாண்டன | (துஷ்ட யுக்திகளாலே) நிலை நிறுத்தப்பட்டிருந்த க்ஷுத்ர மதங்களெல்லாம் ஒழிந்தன; | வாட்டம் இலா | ஒரு குறையுமற்ற |
| நாரணனை காட்டிய | ஸ்ரீமந்நாராயணனைப் பிரதிபாதித்த | வண் தமிழ் மறை | சிறந்த தமிழ் வேதமான திருவாய்மொழி |
| | | வாழ்ந்தது | வாழ்வு பெற்றது. |

http://acharya.org

* * *—சிங்கத்தைக் கனவில் கண்டாலும் ஸாமான்யமிருகங்கள் நசித்தொழியும்; அவற்றைக் கொல்லுவதற்காகச் சிங்கம் ஒரு முயற்சியும் செய்யவேண்டா. அதுபோல, இவ்வுலகில் கிளர்ந்து கிடந்த பாஹ்யகுத்ருஷ்டிமதங்களைத் தொலைப்பதற்காக எம்பெருமானார் ஒரு பிரயத்நமும் எடுத்துக்கொள்ளவில்லை; அவருடைய இயல்வைக் கண்டகாட்சியில்தானே மதாந்தரங்கள்யாவும் மாண்டு போயின; அவை மாளவே ஸ்ரீமந்நாராயணபரங்களான வேதங்களும் அந்த வேதங்களின் ஸாரமாகிய அருளிச்செயல்களும் பொலிவுபெற்று ஓங்கின—என்றாராயிற்று.

ஈட்டியசீலத்து = ஒவ்வொருக்ஷணந்தோறும் ஆச்சரியமான அதிமாநுஷ சேஷ்டிதங்களாலே எம்பெருமானாருடைய சீலகுணங்கள் மேன்மேலும் வளர்ந்து கொண்டே வந்தனவென்க. (௫௪)

கண்டவர் சிந்தைகவரும் கடிபொழில் தென்னரங்கன் *
தொண்டர்குலாவு மிராமாநுசனை * தொகையிறந்த
பண்டருவேதங்கள் பார்மேல்நிலவிடப் பார்த்தருளும்
கொண்டலை மேவித்தொழும் * குடியாமெங்கள் கோக்குலமே. (௫௫)

| | |
|---|---|
| தொகை இறந்த | கணக்கில்லாத |
| பண் தரு வேதங்கள் | ஸ்வரப்ரதாநங்களான வேதங்கள் |
| பார் மேல் | இப்பூமியிலே |
| நிலவிட | ஓங்கிவளரும்படி |
| பார்த்தருளும் | செய்தருளினவரும் |
| கொண்டலை | பரம உதாரரும், |
| கண்டவர் சிந்தை கவரும் | கண்டவர்களின் நெஞ்சைக் கவர்கின்ற |
| கடி பொழில் | மணமிக்க சோலைகள் சூழ்ந்த |
| தென் அரங்கன் | தென்னரங்கத்திற்குத் தலைவரான பெரிய பெருமாளுக்கு |
| தொண்டர் | அடிமைப்பட்ட ஸ்ரீ வைஷ்ணவர்களால் |
| குலாவும் | கொண்டாடப் படுபவருமான |
| இராமாநுசனை | எம்பெருமானாரை |
| மேவி தொழும் குடி | பொருந்தி ஆச்ரயிக்கிறகுலம் |
| எங்கள் கோக்குலம் ஆம் | எங்களுக்கு ஸ்வாமியாகக் கூடியகுலமாம். |

* * *—மனோஹரமான சோலைகளாலே சூழப்பட்ட திருவரங்கத்தில்வாழும் நம்பெருமாளுடைய பக்தர்களாலே கொண்டா

http://acharya.org

டப்படுபவராயும், அளவிறந்த வேதங்கள் மதாந்தரஸ்தர்களால் கெடுக்கப்படாவண்ணம் அவற்றை உல்லாஸப்படுத்தி வளர்த்தருளினவராயும், கேட்டார் கேட்ட அர்த்தங்களையெல்லாம் உபதேசிப்பவராயுமுள்ள எம்பெருமானாரை அடிபணிந்து உஜ்ஜீவிக்கும் மஹான்கள் தாம் அடியேனை ஆள்வதற்கு உரியவர்கள் என்றாராயிற்று. ஸ்ரீராமாநுஜபக்தர்களுக்கே அடியேன் தாஸனாயிருப்பேன் என்றவாறு.

இராமாநுசனை மேவித் தொழுங்குடி எங்கள் கோக்குலமாம்=எம்பெருமானாரன்று எமக்கு ஸ்வாமி; அவரை ஆச்ரயிப்பவர்களே எமக்கு ஸ்வாமிகள். என்கோக்குல மென்னுமல் எங்கள் என்று பன்மையாகக் கூறியது—தம்முடைய ஸம்பந்திகளையுங் குறிக்கொண்டாம்.

கோ என்பதற்கு மேன்மையென்றும் பொருள் உண்டாதலால், எங்கள் கோக்குலம்—எங்களுடைய மேன்மையான குலம் (எப்படிப்பட்டதென்றால்), இராமாநுசனை மேவித் தொழுங்குடியாம்—, என்பதாகவும் உரைக்கலாம். "எங்கள்கோக் குடியே" என்றும் பாடமுண்டு; பொருள் ஒன்றே. ... ... (௫௫)

கோக்குலமன்னரை மூவெழுகால் * ஒரு கூர்மழுவால்
போக்கியதேவனைப் போற்றும்புனிதன் * புவனமெங்கு
மாக்கியகீர்த்தி யிராமாநுசனை யடைந்தபின், என்
வாக்குரையாது * என்மனம் நினையாதினி மற்றொன்றையே. (௫௬)

| | | | |
|---|---|---|---|
| கோக்குலம் மன்னரை | க்ஷத்ரியகுலத்து அரசர்களை | புனிதன் | பரமபரிசுத்தரும், |
| மூ எழு கால் | இருபத்தொரு தலைமுறையளவும் | புவனம் எங்கும் ஆக்கிய கீர்த்தி | உலகமெங்கும் பரவின புகழை யுடையவருமான |
| ஒரு கூர் மழுவால் | கூர்மை பொருந்திய ஒரு மழுவாலே | இராமாநுசனை | எம்பெருமானாரை |
| போக்கிய | (பரசுராமாவதாரத்தில்) தொலைத்தருளின | அடைந்த பின் | ஆச்ரயித்த பின்பு |
| தேவனை | எம்பெருமானை | இனி | மேலுள்ள காலமெல்லாம் |
| போற்றும் | துதிக்கின்ற | மற்று ஒன்றை | வேறு எந்த விஷயத்தையும் |



http://acharya.org

| | | | |
|---|---|---|---|
| என் வாக்கு உரையாது | எனது வாக்கானது சொல்லமாட்டாது; | என் மனம் நினையாது | எனது மனமும் நினைக்கமாட்டாது. |

* * *—"கொண்டலைமேவித் தொழுங்குடியாமெங்கள் கோக்குலமே" என்றுகூறின அமுதனாரைநோக்கிச் சிலர்—நீர் ஒவ்வொரு விஷயத்தில் அவகாஹிக்கும் போதும் இப்படியே சொல்லுவீர்; நேற்றுவரை ஒருவிதமாக இருந்தீர்; இன்று இப்படியிருக்கிறீர்; நாளைக்கு வேறொருவிதமாக இருக்கப்போகிறீர்; அப்போது அந்த நிலைமைக்குத் தக்கபடி பேசப்போகிறீர்; உம்முடைய வார்த்தைக்கு ஒரு கௌரவமுண்டோ? என்று சொல்ல; இனி அப்படியோ? எம்பெருமானாரை ஆச்ரயித்தபின்பு என்னுடைய வாக்கும் மனமும் இனி வேறொரு விஷயத்தை அறியமாட்டா என்கின்றார்:

**கோக்குலமன்னரைப்+போக்கிய தேவன்**=உலகத்திலே எவரும் அழிப்பவரில்லாமையால் கொழுத்துத்திரிந்து கொடுமையியற்றிவந்த க்ஷத்ரியவம்சங்கள் பலவற்றை நாசஞ் செய்தற்பொருட்டு நாராயணமூர்த்தி ஜமதக்நிமுனிவரது மனைவியான ரேணுகையினிடம் இராமனாய்த் திருவவதரித்து, பரசு என்னுங் கோடாலிப்படையை ஆயுதமாகக்கொண்டு அதனாற் பரசுராமனென வழங்கப்பெற்று, தனது தந்தையின் ஹோமதேநுவைக் கார்த்தவீர்யார்ஜுநன் கவர்ந்து அவரைக் கொன்றிட்டது காரணமாக அவனையும் அவனது குமாரர்களையுங்கொன்று அதனாலேயே க்ஷத்ரியவம்சம் முழுவதன்மேலும் கோபாவேசங்கொண்டு உலகத்திலுள்ள அரசர்கள்பலரையும் இருபத்தொரு தலைமுறை பொருது ஒழித்திட்டான்; இப்பரசுராமன் ஏழு சிரஞ்ஜீவிகளில் ஒருவன். இவனது வலிமையும் வெற்றியும் அற்புதமானது. சிவபிரானது கைலாஸகிரியைப் பெயர்த்தெடுத்த இராவணன் மிகவலியவனென்றும், அவனினும் கார்த்தவீரியன் வலியவனென்றும், அவனினும் பரசுராமன் வலியவனென்றும் இதிஹாஸங்களால் விளங்கும். விஷத்தையுண்டு கங்கையைத்தரித்து மேரு வில்வளைத்துத் திரிபுரமெரித்து மன்மதனை நீறுபடுத்தி யமனையுதைத்து ஸம்ஹாரத் தொழில் நிகழ்த்தும் பேராற்றலையுடைய உக்ரமூர்த்தியாவான் ருத்ரன்; அக்கடவுள் வீற்றிருக்கின்ற கைலாஸகிரியை ஒருகால் இரா

http://acharya.org

வணன் வேரோடு பெயர்த்தனன்; அங்ஙனம் மிக வலியனாய் திக்விஜயஞ்செய்து திக்கஜங்களையும் வென்ற இராவணனைக் கார்த்தவீர்யார்ஜுநன் கட்டிச் சிறையிலிட்டனன். அவனைப் பரசுராமபிரான் தோள் துணித்துத் தொலைத்திட்டனன் என்க.

எம்பெருமானுடைய தசாவதாரங்களுள் ஆறும் அவதாரமான இப்பரசுராமன் ஏழாம் அவதாரமான தசரத ராமன்மீது கோபித்தலும், இவ்விருவரும் ஒருவரோடொருவர் பொருதலும், அவர்களில் ஒருவர் மற்றொருவரை வெல்லுதலும் பொருந்துமோ வெனின்?—துஷ்டர்களாய்க் கொழுத்துத் திரிந்த அரசர்களைக் கொல்லும்பொருட்டுப் பரசுராமனிடத்தில் ஆவேசித்திருந்த விஷ்ணுசக்திவிசேஷம் அக்காரியம் முடிந்தபின்பு அவ்விஷ்ணுவின் அம்சாவதாரமான தசரதராமனாற் கவர்ந்து கொள்ளப்பட்டதாகையாற் பொருந்து மென்க. இதனால், ஆவேசாவதாரத்திற் காட்டிலும் அம்சாவதாரத்திற்கு உள்ள ஏற்றம் விளங்கும்.

ஸ்ரீமந்நாராயணனது விபவாவதாரங்கள் அளவற்றவை. அவை முக்கியம் அமுக்கியம் என இருவகைப்படும். இவற்றில் முந்தியது சிறந்தது. பிந்தியது அதனிலும் தாழ்ந்தது. முக்கியமாவது ஸாக்ஷாதவதாரம். அமுக்கியமாவது ஆவேசாவதாரம். ஆவேசந்தான் ஸ்வரூபாவேச மென்றும் சக்தியாவேச மென்றும் இருவகையதாம். ஸ்வரூபாவேசமாவது—சேதநருடைய சரீரங்களில் எம்பெருமான் தன்னுடைய ரூபத்துடன் ஆவேசித்து நிற்பது. பரசுராமன் பலராமன் போல்வார் இத்திறத்தார்கள். சக்தியாவேசமாவது—சேதநர்பக்கல் காரியகாலத்திலே எம்பெருமான் சக்திமாத்திரத்தால் தோன்றி விளங்குதல்; கார்த்த வீர்யார்ஜுநன், அர்ஜுநன், வ்யாஸர் போல்வார் இத்திறத்தார். இவற்றில் சக்தியாவேசத்தை விட ஸ்வரூபாவேசம் பிரபலம். இவற்றின் உண்மைநிலையை விஷ்வக்ஸேநஸம்ஹிதை முதலிய ஸ்ரீபாஞ்சராத்ர ஸம்ஹிதைகளிலும், தத்வத்ரயத்திலும் அதன் வியாக்கியானத்திலும் பரக்கக் காணலாம். பரசுராமாவதாரம் ஸ்வரூபாவேசாவதாரம்.

இப்பாசுரத்தின் உரையில் மணவாள மாமுனிகளருளிச்செய்த ஸ்ரீஸூக்திகள்:—"பரசுராமாவதாரம் அஹங்காரயுக்த ஜீவனை அதிஷ்டித்து நிற்கையாலே முமுக்ஷுக்களுக்கு அநுபாஸ்ய

http://acharya.org

மன்றோ? போக்கியதேவனைப் போற்றும் புனிதனென்பானென்னென்னில்; அதுக்குக் குறையில்லை; விரோதி நிரஸநம்பண்ணின உபகாரத்துக்குத் தோற்று ஸ்துதிக்கிற மாத்ரமொழிய ததுபாஸந மல்லாமையாலே. ‘மன்னடங்க மழுவலங் கைக்கொண்ட இராம நம்பி’ என்றும் ‘வென்றிமாமழுவேந்தி முன்மண்மிசை மன்னரை மூவெழுகால் கொன்றதேவா’ என்றும் ஆழ்வார்களருளிச் செய்ததும் விரோதிநிரஸந ஸ்வபாவத்துக்குத் தோற்றுத் துதித்ததித் தனையிறே.” என்று.

“அடைந்ததற்பின் வாக்குரையாது என்மனம் நினையாது” என்றும் பாடமுண்டாம். ... .... ... .... (௫௬)

மற்றொருபேறு மதியாது * அரங்கன்மலரடிக்கா
ளுற்றவரேதனக் குற்றவராக் கொள்ளுமுத்தமனை *
நற்றவர்போற்று மிராமாநுசனை இந்நானிலத்தே
பெற்றனன் * பெற்றபின் மற்றறியேனொரு பேதைமையே. (௫௭)

| | |
|---|---|
| மற்று ஒரு பேறு | ப்ரயோஜநாந்தரங்களை |
| மதியாது | கணிசியாமல் |
| அரங்கன் மலர் அடிக்கு | அழகிய மணவாளனுடைய திருவடித்தாமரைகளுக்கு |
| ஆள் உற்றவரே | அடிமைப்பட்டவர்களையே |
| தனக்கு உற்றவர் ஆ | தமக்கு ஆத்மபந்துக்களாக |
| கொள்ளும் | திருவுள்ளம்பற்றுகிற |
| உத்தமனை | உத்தமபுருஷராயும் |
| நல் தவர் போற்றும் | ப்ரபந்நர்களாலே புகழப்பட்டவராயுமிருக்கிற |
| இராமாநுசனை | எம்பெருமானாரை |
| இ நானிலத்தே பெற்றனன் | இந்த லோகத்திலே அடியேன் ஆச்ரயிக்கப் பெற்றேன்; |
| பெற்ற பின் | ஆச்ரயித்த பின்பு |
| மற்று ஒரு பேதைமை அறியேன் | (வேறு விஷயங்களை விரும்புகை முதலிய) எவ்வித அஜ்ஞாந கார்யமும் அறிய மாட்டேன். |

* * *—“இனி என்வாக்குரையாது, என்மனம் நினையாது மற்றொன்றை” என்று எப்படி நீர் சொல்லக்கூடும்? இருள்தருமாஞாலத்தில் இருக்கிறீராகையாலே அவிவேகம்வந்து மூடிக்கொள்ள எத்தனை நாழிகை செல்லும்? என்று சிலர் கூற, எம்பெருமானாரை

http://acharya.org

இந்த லோகத்திலே நான் ஆச்ரயித்தேனானபின்பு இனி யொரு நாளும் அவிவேகியாக ஆகமாட்டேனென்கிறார்.

எம்பெருமானார் எப்படிப்பட்டவர்?—ஸ்ரீரங்கநாதனுடைய திருவடிகளிலே தொண்டு பூண்டிருப்பவர்களையே தமது ஆத்ம பந்துவாகக் கொள்வது தவிர வேறொரு பேற்றையும் மதியாதவர்.

நல்தவர் போற்றும்=ப்ரபத்தியாகிற நல்ல தபஸ்ஸைக் கைப் பற்றினவர்களாலே போற்றப்படுபவர். ... ... (௫௭)

பேதையர்வேதப் பொருளிதென்றுன்னி * பிரமநன்றென்
றோதிமற்றெல்லா வுயிருமஃதென்று * உயிர்கள்மெய்விட்
டாதிப்பரனோ டொன்றாமென்று சொல்லுமவ் வல்லலெல்லாம்
வாதில்வென்றான் * எம்மிராமாநுசன் மெய்ம்மதிக்கடலே. (௫௮)

| | |
|---|---|
| பேதையர் | (வேதத்தைப் பிரமாணமாகக் கொள்ளாத) அவிவேகிகள் |
| இது வேதப் பொருள் என்று உன்னி | ‘நாங்கள் சொல்லுகிற இதுதான் வேதத்தின் அர்த்தம்’ என்று நிரூபித்துக் கொண்டு |
| பிரமம் நன்று என்று ஓதி | ‘பரப்ரஹ்மமானது எல்லாவற்றினும் விலக்ஷணம்’ என்று சொல்லி |
| மற்று எல்லா உயிரும் அஃது என்று | ‘அந்த ப்ரஹ்மந்தவிர மற்ற எல்லா ஜீவராசிகளும் அந்த ப்ரஹ்மமே’ என்று சொல்லி |
| உயிர்கள் மெய்விட்டு | ‘ஜீவாத்மாக்கள் தேஹத்தை விட்ட பின்பு |
| ஆதி பரனோடு ஒன்று ஆம் என்று சொல்லும் அவ் அல்லல் எல்லாம் | ஸர்வகாரண பூதனான பரம புருஷனோடே ஐக்கியத்தை யடைகின்றன’ என்று சொல்லுகிற அந்த கோலாஹலங்களை யெல்லாம் |
| மெய் மதி கடல் | தத்வஜ்ஞாநக் கடலாகிய |
| எம் இராமாநுசன் | ஸ்வாமி எம்பெருமானார் |
| வாதில் வென்றான் | வாதத்தில் நிரஸித்து வெற்றி பெற்றார். |

* * *—எம்பெருமானார் குத்ருஷ்டிகளின் குத்ஸிதமான வாதங்களைக் கண்டித்த படிகளில் ஒருபடியைச் சொல்லி ஈடுபடுகிறார். சில மூர்க்கர்கள் தாங்கள் சொல்லுவதே வேதங்களின் உண்மையான பொருள் என்று கொக்கரித்துக் கொண்டு அபார்த்தங்க

http://acharya.org

ளைப் பிதற்றுவர்கள். பரப்ரஹ்மம் ஸர்வவிலக்ஷணம்; ஜீவாத்மாக்க ளெல்லாம் பரப்ரஹ்மத்தில் ஓர் பகுதி; இப்போது உபாதியினால் வெவ்வேறாகத் தோன்றுகின்றன; அவ்வுபாதி கழிந்தபின் ஜீவர்க ளெல்லாம் பரப்ரஹ்மத்தோடு ஒற்றுமையை அடைந்துவிடுகின் றன—என்று மூர்க்கர் பிதற்றும் பிதற்றல்களை யெல்லாம் தத்வஜ் ஞான நிதியான எம்பெருமானார் வாதத்தில் கண்டித்து உண்மைப் பொருளை ஸ்தாபித்து வெற்றி பெற்றாரென்கிறது.

சித்து அசித்து ஈச்வரன் என மூலப்பொருள்கள் மூன்று; இம்மூன்றும் ஸத்தியமும் நித்தியமுமாம். சித்து அசித்து என்கிற வகுப்பினுள் அடங்கிய எல்லாப்பொருள்களும் ஈச்வரனுக்குச் சரீ ரங்களாம். அநாதியான அவித்யையினால் செய்யப்பட்டுத் திரண்டு கிடக்கும் கருமங்கள் காரணமாகவுண்டான ப்ரக்ருதி ஸம்பந்தத்தி னால் ஜீவாத்மாக்களின் இயற்கையான ஞானாநந்தஸ்வரூபம் மறைக் கப்பட்டுக் கிடக்கின்றது. அக்கருமங்கள் ஒழிந்தபின் ஸ்வஸ்வரூ பம் ஆவிர்ப்பவிக்கும். எம்பெருமானுடைய திருவருளால் கரும மொழிந்து ஸ்வஸ்வரூபம் விளங்கப்பெற்றுப் பரமபதஞ் சென்று கைங்கரியாநுபவமும் குணாநுபவமும் பண்ணிப் பரமாநந்தமடை வது மோக்ஷமாம்—என்றிவ்வகையான தத்துவப் பொருள்களை எம் பெருமானார் ஸ்தாபித்தருளினரென்க.

பிரமம்—ப்ரஹ்மம் என்ற வடசொல்விகாரம். உயிர்கள் மெய் விட்டு ஆதிப்பரனோடு ஒன்றாம்=ஜீவாத்மாக்கள் பரப்ரஹ்மத்தோடு ஐக்கியப்படுவதுதான் மோக்ஷம் என்று குத்ருஷ்டிகள் உபபாதிப் பர்கள்; "தத் த்வமஸி" என்றும் "ப்ரஹ்ம வேத ப்ரஹ்மைவ பவதி" என்றுமுள்ள வேதவாக்கியங்களுக்கு இப்படி அபார்த்தம் பண்ணுவர்கள்.

வென்றான் என்பதை வினைமுற்றாகக் கொள்ளாமல் வினையா லணையும் பெயராகக்கொண்டு வாதில் வென்றவராகிய எம்பெருமா னார், மெய்ம்மதிக்கடல்—ஸத்யஜ்ஞாந ஸமுத்ரமாயிருப்பவர் என்று முடிப்பதாக வுரைத்தலுமாம். ... ... ... (நிஅ)

கடலளவாய திசையெட்டினுள்ளும் * கலியிருளே
மிடைதரு காலத்திராமாநுசன் * மிக்கநான்மறையின்
சுடரொளியால் அவ்விருளைத்துரந்திலனேல் * உயிரை
யுடையவன் நாரணனென்றறிவாரில்லை யுற்றுணர்ந்தே. (நிகூ)

| | |
|---|---|
| கடல் அளவு ஆய | நான்கு ஸமுத்ரங்களை எல்லையாகவுடைய |
| திசை எட்டினுள்ளும் | எல்லாவிடங்களிலும் |
| கலி இருளே மிடைதரு காலத்து | கலிபுருஷனுகிற அந்தகாரமே நெருங்கிக் கிடந்தகாலத்தில் |
| இராமாநுசன் | எம்பெருமானார் (திருவவதரித்து) |
| நால் மறையின் | நான்குவேதங்களின் |
| மிக்க சுடர் ஒளியால் | அளவற்ற தேஜஸ்ஸைக்கொண்டு |
| அவ்விருளைத் துரந்திலனேல் | அந்த கலிதோஷத்தைப் போக்கியிராமற் போனால் |
| உயிரை உடையவன் நாரணன் என்று | 'எல்லா ஆத்மாக்களுக்கும் சேஷி ஸ்ரீமந் நாராயணனே' என்று |
| உற்று உணர்ந்து அறிவார் இல்லை | யாரும் தெரிந்து கொண்டிருக்க மாட்டார்கள். |

* * *—என்னப்பனிராமாநுசன் திருவவதரித்து வேதார்த்தங்களை விளங்கக் காட்டியருளாவிடில் இவ்வுலகமனைத்தும் அஜ்ஞாநமயமாகவே கிடக்கும்; தைவாதீநமாக என்னப்பன் திருவவதரித்து எங்கும் வியாபித்துக்கிடந்த கலிபுருஷனுடைய தோஷங்களைத் தொலைத்து வேதச்சுடர்விளக்கேற்றி அஜ்ஞாநாந்தகாரங்களைப் போக்கடிக்கவே எல்லாரும் ஸ்ரீமந்நாராயணனே ஸர்வசேஷியென்கிற பரமார்த்தத்தைத் தெரிந்து உய்வுபெறலாயிற்று என்கிறார்.

மிடைதருதல்—நெருங்கியிருத்தல்; இடைவிடாது எங்கும் பரவியிருத்தல். ... .... .... ... ... (நிக)

உணர்ந்தமெய்ஞ்ஞானியர் யோகந்தோறும் * திருவாய்மொழியின்
மணந்தருமின்னிசை மன்னுமிடந்தோறும் * மாமலராள்
புணர்ந்தபொன்மார்பன் பொருந்தும்பதிதோறும் புக்குநிற்கும்
குணந்திகழ்கொண்டல் * இராமாநுசனெங் குலக்கொழுந்தே.

| | |
|---|---|
| குணம் திகழ் | ஆத்மகுணங்களால் விளங்குபவரும் |
| கொண்டல் | (ஔதார்யத்தில்) காளமேகத்தை ஒத்தவரும் |
| எம் குலம் கொழுந்து | எங்கள் குலத்துக்குத் தலைவருமான |
| இராமாநுசன் | எம்பெருமானார் (எங்கே எழுந்தருளியிருப்பரென்றால்) |
| உணர்ந்த மெய் ஞானியர் யோகம் தொறும் | கற்றுணர்ந்த தத்வஜ்ஞானிகளுடைய கோஷ்டிகளெங்கும், |

http://acharya.org

| | |
|---|---|
| திருவாய் மொழியின் மணம் தரும் இன் இசை மன்னும் இடம் தொறும் | திருவாய் மொழியினுடைய பரிமளம் மிக்க இனிய இசையுள்ள இடங்களெங்கும் |
| மா மலராள் புணர்ந்த பொன் மார்பன் பொருந்தும் பதிதொறும் | பிராட்டி நித்யவாஸம் பண்ணுகிற அழகிய மார்பையுடைய திருமால் எழுந்தருளியிருக்கிற திவ்ய தேசங்களெங்கும் |
| புக்கு நிற்கும் | எழுந்தருளியிருப்பர். |

* * *—ஞானம் தலையெடுத்த மஹான்களுடைய திரள் எங்கெங்கு இருக்கின்றதோ அங்கெல்லாம் எழுந்தருளியிருப்பவரும், திருவாய்மொழியின் பரமபோக்யமான இசை எங்கெங்கு நிகழ்கின்றதோ அங்கெல்லாம் ஸேவைஸாதிப்பவரும், ச்ரிய:பதியான ஸர்வேச்வரன் எங்கெங்கு ஸந்நிதாநம் பண்ணுகிறானோ அந்தத் திருப்பதிகளெங்கும் புகுந்து நிற்பவருமான எம்பெருமானார் அஸ்மத்குலகூடஸ்தர் என்றதாயிற்று.

“அணியரங்கன் திருமுற்றத்தடியார் தங்களின்பமிகுபெருங்குழுவுகண்டு யானுமிசைந்துடனே யென்றுகொலோ இருக்கு நாளே” (பெருமாள் திருமொழி) என்றபடி மஹாபக்தர்களுடைய கோஷ்டிகளில் அந்வயித்திருப்பது பரம புருஷார்த்தமாதலால் அதனைப் பெற்றிருப்பவர் எம்பெருமானார். “குருகூர்நம்பி பாவின்னிசை பாடித்திரிவனே” என்கிற புருஷார்த்த நிஷ்டர்களுடைய கோஷ்டியிலும் அந்வயித்திருப்பர். பதியே பரவித்தொழுந் தொண்டருடைய திரளிலும் கலந்து பரிமாறுவர்.

எம்குலக்கொழுந்து=ஒரு மரத்தின் அபிவிருத்திக்கு அதன் கொழுந்து காரணமாதல்போல எமது குலத்தின் பெருக்குக்குக் காரணமானவர் எம்பெருமானார் என்றபடி. ஆகவே, கொழுந்து என்றது உவமவாகு பெயர். புக்கு நிற்குங் குணந்திகழ் கொண்டலாகிய இராமாநுசன் எங்குலக்கொழுந்து என்றே அந்வயித்து உரைக்கவுமாம். ... .... ... ... (கூ௦)

கொழுந்துவிட்டோடிப் படரும்வெங்கோள்வினையால் * நிரயத்
தழுந்தியிட்டேனை வந்தாட்கொண்டபின்னும் * அருமுனிவர்
தொழுந்தவத்தோ னெம்மிராமாநுசன் தொல்புகழ் சுடர்மிக்
கெழுந்தது * அத்தால்நல் லதிசயங்கண்ட திருநிலமே. (கூக)

http://acharya.org

| | |
|---|---|
| அரு முனிவர் தொழும் | அருமையான நிஷ்டையையுடைய மஹான்களாலே ஸேவிக்கப் பெற்றவராயும் |
| தவத்தோன் | ப்ரபத்தியாகிற தபஸ்ஸையுடையவராயு மிருக்கிற |
| எம் இராமாநுசன் | ஸ்வாமி எம்பெருமானாருடைய |
| தொல் புகழ் | நித்யமான கல்யாண குணங்கள்—, |
| கொழுந்து விட்டு ஓடி படரும் வெம் கோள் வினையால் | மேன்மேலும் அதிகமாகப் பெருகுகின்ற க்ரூரமாய் ப்ரபலமான துஷ்கர்மத்தாலே |
| நிரயத்து அழுந்தி யிட்டேனை | ஸம்ஸாரமாகிற நரகத்திலே அழுந்திக்கிடந்த என்னை |
| வந்து ஆள் கொண்ட பின்னும் சுடர் மிக்கு எழுந்தது | வந்து ஆட்படுத்திக் கொண்ட பின்பும் ஒளி குன்றாதே முன்னிலும் விசேஷமாக விளங்காநின்றன; |
| அத்தால் | அதைக்கண்டு |
| இரு நிலம் | விசாலமான இப் பூமண்டலம் |
| நல் அதிசயம் கண்டது | மிக்க ஆச்சரியங் கொண்டது. |

* * *—உலகில் சிறந்த மஹான்களா யிருப்பவர்கள் ஏறக்குறையத் தமக்கு ஸமாநஸ்கந்தராயிருப்பவர்களோடே பழகுவர்களேயன்றி, மிகவும் நீசராயிருப்பவர்களைக் கண்ணெடுத்தும் பாரார்கள்; எவ்வகையான குணமுமில்லாத கொடிய துஷ்டனைத் தங்களருகில் சேர்த்துக்கொண்டார்களாகில் அவர்கள் மஹான்களா யிருந்தபோதிலும் உலகத்தாரால் பழிக்கப் படுவர்கள்; உபயோகமற்ற நீசர்களையெல்லாம் அருகிற் சேர்த்துக்கொண்டு தாங்களும் நீசராய்விடுகிறார்களென்று உலகத்தாரால் பழிக்கப்பட்டு மேன்மை குன்றித் தாழ்மை பெறுவார்கள்; இது உலகிற்கண்ட விஷயம். எம்பெருமானாரோ வென்னில், பெரிய பெரிய ஸத்துக்களாலே புடைசூழப்பட்டு மஹநீயராயிருந்தும் பாவங்கள் கூடு பூரித்துக் கிடக்கின்ற பாவியேனைத் தாமாகவே விஷயீகரித்து அத்தாணிச் சேவகத்துக்கு ஆளாக்கிக்கொண்டார்; இதைக்கண்டு ஒருவரும் தூஷிக்கவில்லை; பாழாய்ப்போகிற ஒரு நித்யஸம்ஸாரியை நல்ல பொருளாக ஆக்கினாரென்று எல்லாராலும் கொண்டாடப்பட்டு அவருடைய ஸௌசீல்யம் ஸௌலப்யம் முதலிய குணங்கள் முன்னிற்காட்டிலும் விசேஷமாக விளங்கினவேயன்றிக் குறைவில்லை. உலகத்தில் மற்ற பேர்களுடைய குணங்களை



http://acharya.org

மழுங்கச் செய்யவல்ல காரியமே எம்பெருமானார் திறத்தில் குணங்களின் ப்ரகாசத்திற்குக் காரணமாயிற்றென்கிற இதனை ஆராய்ந்தவர்களனைவரும் இது ஒரு அற்புதமான விஷயமென்று ஆச்சரியப்பட்டார்கள் என்றதாயிற்று.

இப்பாசுரத்திற்கு வேறொரு வகையாகவும் பொருள் கொள்ளலாம்; எம்பெருமானாருடைய குணங்கள் மஹாபாபியான என்னை ஆட்படுத்திக்கொண்டவளவோடு த்ருப்திபெற்று விடாமல் ‘இப்படிப்பட்ட பாபிகள் இன்னும் யாரேனும் கிடைப்பாருண்டோ? கிடைப்பாருண்டோ?’ என்று இன்னமும் நாக்கு நீட்டிக் கிளர்ந்து செல்லுகின்றன—என்னவுமாம். .... (௯௧)

இருந்தேனிருவினைப் பாசங்கழற்றி * இன்றுயானிறையும்
வருந்தேனினியெம் மிராமாநுசன் * மன்னுமாமலர்த்தாள்
பொருந்தாநிலையுடைப் புன்மையினோர்க்கொன்றும்நன்மைசெய்யாப்
பெருந்தேவரைப்பரவும் * பெரியோர்தம் கழல்பிடித்தே. (௯௨)

| | | | |
|---|---|---|---|
| எம் இராமாநுசன் | ஸ்வாமி எம்பெருமானாருடைய | கழல் இன்று பிடித்து | திருவடிகளை இன்று ஆச்ரயித்தேனான பின்பு |
| மன்னு மா தாள் மலர் பொருந்தா நிலை உடை புன்மையினோர்க்கு | சிறந்த திருவடித் தாமரைகளில் சேராத ஸ்வபாவத்தை யுடையவர்களான நீசர்களுக்கு | இரு வினை பாசம் கழற்றி இருந்தேன் | புண்ணியம் பாவமென்று இரண்டு வகையான கருமபாசங்களினின்று விடுபட்டவனானேன்; |
| ஒன்றும் நன்மை செய்யா | ஒருவிதமான உபகாரமும் செய்யாத | யான் | இப்படி நிர்மலனாகப்பெற்ற அடியேன் |
| பெரு தேவரை | பெரிய பெருமாளை | இனி இறையும் வருந்தேன் | இனிமேல் கொஞ்சங்கூட வருத்தப்பட மாட்டேன். |
| பரவும் | போற்றுகின்ற | | |
| பெரியோர் தம் | ஆழ்வானாகிற மஹானுடைய | | |

* * *—இன்று முதலாக இனிமேலுள்ள காலத்தில் ஒருபோதும் நான் ஈஷத்தும் வருந்தமாட்டேன்; என்றும் பரமாநந்த பூர்ணனாகவேயிருப்பேன்; என்ன காரணமென்கிறீர்களோ?—ஸகல கருமங்களினின்றும் விடுபட்டேன். அதற்குத்தானென்ன

http://acharya.org

காரணம்? கூரத்தாழ்வான் திருவடியை இன்று ஆச்ரயிக்கப் பெற்றேனன்றோ; அது காரணமாகவேயாம். அவர்தாம் எப்படிப் பட்டவர்?—பெரிய பெருமாளைப் போற்றுமவர். பெரிய பெருமாள் எப்படிப்பட்டவர்?—; கேட்டார் கேட்டவற்றையெல்லாம் கொடுக்கும் பரம உதாராராயினும் எம்பெருமானுரை அடிபணியாத பாவிகளுக்கு எவ்விதமான நன்மையும் செய்யமாட்டாதவர்.

ஸ்ரீ ராமாநுஜ பக்தர்களான ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கே ஸர்வ ஸ்வதாநம் பண்ணவல்ல பெரிய பெருமாளைப் போற்றுநின்ற கூரத்தாழ்வானை அடைந்து உஜ்ஜீவித்த அடியேனுக்கு இனி ஒரு வருத்தமும் விளையக் காரணமில்லையென்று தம்முடைய க்ருதக்ருத்யத்வத்தைக் கூறினாராயிற்று.

இருவினைப் பாசங்கழற்றி=பாவம்போலே புண்ணியமும் பரகதிக்குப் பிரதிபந்தகம் என்பதை உணர்க. பாவம் இரும்பு விலங்கென்றும், புண்ணியம் பொன் விலங்கென்றும் சாஸ்த்ரங்கள் கூறும்.

பெருந்தேவர் என்று பெரிய பெருமாளைச் சொல்லுகையன்றியே பெரிய ஞானிகளைச் சொல்லிற்றாகவுமாம். பேரியோர் என்று ஆழ்வானை மாத்திரம் சொல்லுகையன்றியே பல மஹான்களைச் சொல்லிற்றாகவுமாம். .... .... ... ... (௬௨)

பிடியைத்தொடருங் களிறென்ன * யானுன்பிறங்கியசீர்
அடியைத் தொடரும்படி நல்கவேண்டும் * அறுசமயச்
செடியைத்தொடரும் மருள்செறிந்தோர் சிதைந்தோடவந்திப்
படியைத்தொடரும் * இராமாநுச மிக்கபண்டிதனே. (௬௩)

| | |
|---|---|
| அறு சமயம் செடியை தொடரும் மருள் செறிந்தோர் | பாஹ்யமான ஆறு மதங்களாகிற தூறுகளிலே படிவதற்குக் காரணமான அவிவேகம் நிறைந்த மூடர்கள் |
| சிதைந்து ஓட | பங்கமடைந்து வெருவி ஓடும்படியாக |
| வந்து இப்படியை தொடரும் | இப்பூமியிலே வந்து அவதரித்து (நம்போல்வரை விஷயீகரிப்பதற்குப்) பின் தொடர்கின்ற |
| மிக்க பண்டிதன் | மஹாபண்டிதரான |
| இராமாநுச | எம்பெருமானரே!, |

http://acharya.org

| | | | |
|---|---|---|---|
| பிடியை தொடரும் களிறு என்ன | யானைப் பேடையைப் பின்பற்றித் திரிகின்ற ஆண் யானைபோல | சீர் பிறங்கிய உன் அடியை தொடரும் படி நல்க வேண்டும் | ஸௌந்தரியம் முதலிய குணங்கள் விளங்குகின்ற தேவரீரது திருவடிகளைப் பின்பற்றும்படி கிருபை செய் தருளவேணும். |
| யான் | அடியேன் | | |

* * *:—ஸ்வாமிந் !, யானையானது தன் பேடையினிடத்துப் பெருங்காதல்கொண்டு அதனையே பின்பற்றித் திரிவதுபோல் அடியேன் தேவரீருடைய அழகிய திருவடிகளையே அளவற்ற அபிநிவேசத்தோடு அநுவர்த்தித்துச் செல்லும்படியாக அருள் புரியவேணுமென்று வேண்டினாராயிற்று.

எம்பெருமானாருடைய படிகளைப் பின்னடிகளிற் பேசுகின்றார் ;—சிறந்த சோலையிலே ஆநந்தமாக வாழ்வாரைப்போலே உத்தமமான ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்தத்தை அவலம்பித்து வாழலாமாயிருக்க, அப்படி வாழப்பெறாமல், தூறுபோன்ற அபஸித்தாந்தங்களிற் படிந்து கெட்டுப் போவதற்குக் காரணமான அவிவேகத்தையுடைய மூடர்கள் வாதத்திற் பராஜயப்பட்டு ஓடும்படியாக இந்நிலத்தில் திருவவதரித்து நம்போல்வாரை ஆட்கொள்வதற்குத் தேடித்திரிபவரும் மஹாபண்டிதருமாவர் எம்பெருமானார் எனப்பட்டது. ... ... .... .... (கூங)

பண்டருமாறன் பசுந்தமிழ் * ஆனந்தம் பாய்மதமாய்
விண்டிடவெங்க ளிராமாநுசமுனிவேழம் * மெய்ம்மை
கொண்டநல்வேதக் கொழுந்தண்டமேந்திக் குவலயத்தே
மண்டிவந்தேன்றது * வாதியர்காளுங்கள் வாழ்வற்றதே. (கூச)

| | | | |
|---|---|---|---|
| எங்கள் இராமாநுச முனி! வேழம் | எங்களுக்கு விதேயமான ஸ்ரீராமாநுஜ முனியாகிற மத்தகஜமானது, | தரு | அருளிச்செய்த |
| மாறன் | நம்மாழ்வார் | பசுந்தமிழ் ஆநந்தம் | செந்தமிழான திருவாய்மொழியில் விளைந்த ஸந்தோஷம் |
| பண் | இசைகளாலே | | |

http://acharya.org

| | |
|---|---|
| பாய் மதம் ஆய் விண்டிட | பெருகுமதநீராக ஒழுகப்பெற்று |
| மெய்ம்மை கொண்ட நல் வேதம் கொழு தண்டம் ஏந்தி | ஸத்யவாதியான நல்ல வேதமாகிற பெரிய தடியைத் தூக்கிக் கொண்டு |
| குவலயத்தே | இப் பூமண்டலத்திலே |
| மண்டி வந்து ஏன்றது | உங்களை நெருக்கிக் கொண்டுவந்து மேலிடாநின்றது; |
| வாதியர்காள் | துர்வாதிகளே ! |
| உங்கள் வாழ்வு அற்றது | உங்களுடைய பிழைப்பு போயிற்று. |

* * *:—குத்ஸிதவாதங்கள் பண்ணுகிற துர்வாதிகளே ! இனி நீங்கள் பிழைக்க வழியில்லையென்று நிச்சயித்துக் கொள்ளுங்கள் ; ஏன் ? என்கிறீர்களோ ; எம்பெருமானுரென்னும் ஒரு மதயானையானது உங்களைப் புடைப்பதாகப் பெரிய தடியையெடுத்துக்கொண்டு எதிரிட்டு வாராநின்றது ; இதற்குத் தப்பிப்பிழைக்க உங்களாலாகாது—என்கிறார்.

யானைக்கு மதநீர் பெருகுமே ; இந்த ஸ்ரீராமாநுஜ கஜராஜனுக்கு எது மதநீர் என்ன ; முதலடியிற் கூறுகின்றார். திருவாய்மொழின் அநுபவத்தாலுண்டான ஆநந்தரஸமே இந்த கஜராஜனுக்கு மதநீர்ப் பெருக்காம். இதனால், எம்பெருமானார் எப்போதும் திருவாய்மொழியை அநுபவித்துக் களிப்புறுவர் என்றதாகிறது.

இந்த கஜராஜன் எந்தத் தடியை எடுத்துக்கொண்டு வருகிறதென்ன ; மூன்றாமடியிற் கூறுகின்றார் ;—யதார்த்த வாதியான வேதத்தைக்கொண்டே துர்வாதிகளைப் புடைக்குமவராதலால் வேதமே தடியாகச் சொல்லப்பட்டது.

உங்கள் வாழ்வு அற்றதே என்றது—இனி நீங்கள் நாலுபேர்களைச் சேர்த்துக்கொண்டு மதப்ரவசனம் பண்ணமுடியாதென்றபடி.

வாழ்வற்றது தொல்லைவாதியர்க்கு * என்றும்மறையவர்தம்
தாழ்வற்றது தவம் தாரணிபெற்றது * தத்துவநூல்
கூழற்றது குற்றமெல்லாம்பதித்த குணத்தினர்க்கந்
நாழற்றது * நம்மிராமாநுசன் தந்தஞானத்திலே. (௬௫)

http://acharya.org

| | |
|---|---|
| நம் இராமா நுசன் | ஸ்வாமி எம்பெருமானார் |
| தந்த ஞானத்தில் | அருளின ஞானத்தினால், |
| தொல்லை வாதியர்க்கு | நெடுநாளாக இருந்த துர்வாதிகளுக்கு |
| வாழ்வு அற்றது | வாழ்ச்சி அற்றுப் போயிற்று ; |
| மறையவர் தம் தாழ்வு | வைதிகர்களுடைய குறை |
| என்றும் அற்றது | இனி ஒருநாளும் இல்லாதபடி யாயிற்று. |
| தாரணி | பூமண்டலமானது |
| தவம் பெற்றது | பாக்கியம் பெற்றது; |
| தத்துவம் நூல் | தத்வபரமான சாஸ்திரங்கள் |
| கூழ் அற்றது | ஸந்தேஹமற நிச்சயமான பொருளைத் தெரிவிப்பவை யாயின. |
| குற்றம் எல்லாம் பதித்த குணத்தினர்க்கு | பல்வகைக் குற்றங்களும் நிறைந்த ஸ்வபாவத்தையுடைய ஜனங்களுக்கு |
| அ நாழ் அற்றது | அந்தக் குற்றங்கள் தீர்ந்தன. |

* * *:—எம்பெருமானார் இவ்வுலகில் அவதரித்து உபதேசாதி முகத்தாலே உண்டாக்கின தத்துவஞானத்தால் பலித்த அம்சங்கள் எவை யென்றால்; துர்வாதிகளுடைய வாழ்வு மாண்டது; வைதிகர்களுக்கு இருந்த ஸங்கடங்கள் அற்றுப்போயின; பூமண்டலம் மஹாபாக்யம் பெற்றது; தத்வ சாஸ்த்ரங்களில் எவ்விதமான ஸந்தேஹமும் உண்டாகாதபடி நிச்சயஞானமே உண்டாயிற்று; பாவிகளின்பாவங்களெல்லாம் தொலைந்துபோயின; ஆகிய இவை எம்பெருமானாரளித்த தத்துவஞானத்தின் பயனாகத் தேறினவை—என்றாராயிற்று.

தொல்லைவாதியர்—வைதிகர்கள் தாம் அநாதியாகவுள்ளவர்; துர்வாதிகளும் அநாதியாகவுண்டோவெனில்; பயிருள்ளபோதே தொடங்கிக் களையுமுண்டாவதுபோல, பாஹ்யர் குத்ருஷ்டிகள் என்கிற வாதிகளும் பழையராகவே யுண்டென்க.

**தரணி** என்ற வடசொல் தாரணியென நீட்டல் விகாரம்பெற்றது. கூழ்—ஸந்தேஹம். நாழ்—குற்றம். ... ... (கூ௫)

ஞானம்கனிந்த நலங்கொண்டு * நாடோறும் நைபவர்க்கு
வானங்கொடுப்பது மாதவன் * வல்வினையேன்மனத்தில்
ஈனங்கடிந்த விராமாநுசன் தன்னையெய்தினர்க்கு அத்
தானங்கொடுப்பது * தன்தகவென்னும் சரண்கொடுத்தே. (கூ௬)

http://acharya.org

| | |
|---|---|
| மாதவன் | திருமால் |
| வானம் கொடுப்பது | மோக்ஷம் அளிப்பது |
| (எப்படிப்பட்டவர்களுக் கென்றால்) | |
| ஞானம் கனிந்த நலம் கொண்டு நாள் தொறும் நைபவர்க்கு | ஞானம் பக்திரூபமாகப் பரிபக்வமாகி அந்த பக்தியினால் நித்தியம் உருகுகிறவர்களுக்கேயாம்; |
| வல் வினையேன் மனத்தில் ஈனம் கடிந்த இராமானுசன் | மஹாபாபியான எனது ஹ்ருதயத்திலிருந்த கல்மஷங்களைப் போக்கடித்த எம்பெருமானார் |
| தன்னை எய்தினர்க்கு | தம்மைப் பற்றினவர்களுக்கு |
| அத் தானம் கொடுப்பது | அந்த மோக்ஷ ஸ்தானத்தை அளிப்பது |
| (எவ்விதமாக வென்றால்) | |
| தன் தகவு என்னும் சரண் கொடுத்து | தம்முடைய க்ருபையாகிற ஸாதனத்தை (அவர்களுக்குக் கைம்முதலாகக்) கொடுத்து. [தமது திவ்ய க்ருபையாலே.] |

* * *:—அடியார்களுக்கு மோக்ஷமளிக்கிற அதிகாரம் எம்பெருமானுக்குமுண்டு, எம்பெருமானார்க்குமுண்டு. எம்பெருமான் அளிப்பது மிகவும் ச்ரமப்படுத்தியே; எம்பெருமானார் அளிப்பது கேவலம் தம்முடைய திருவருளாலே என்கிறார் இதில்.

ஞானமானது நன்றாகக் கனிந்து அது பக்தி, பரபக்தி, பரமபக்தி என்னும்படியான அவஸ்தைகளையடைந்து, அதனால் இந்த ஸம்ஸாரத்தில் க்ஷணகால மிருப்பதும் அஸஹ்யமாய் ஆழ்வார்களைப்போல "ஒரு பகலாயிரமூழியாலோ" என்று துடிப்பவர்களுக்குத்தான் எம்பெருமான் முக்தியளிப்பது; எம்பெருமானாரோ வென்னில் * க்ருபாமாத்ரப்ரஸந்நாசார்யராகையாலே அடியார்களிடத்தில் எவ்விதமான க்லேசத்தையும் எதிர்பாராமல் தமது திருவருளைக்கொண்டே அவர்களைக்கரையேற்றுவர் என்றதாயிற்று.

இப்பாட்டை விநோதமாக உபந்யஸிக்கலாம்; அதாவது,—மோக்ஷமென்கிற ஒரு சரக்கு எம்பெருமானென்கிற கடையிலும் எம்பெருமானாராகிற கடையிலும் கிடைக்கக்கூடியது. உலகில் கடைகளுக்கு மூன்றுவிதமான அஸௌகரியங்கள் இருக்கக்கூடும். அவையாவன—சரக்கின் விலையை அபாரமாகச் சொல்லுதல் ஒன்று; அந்த விலையில் சிறிது குறைக்கும்படி நாம் கேட்க இட

http://acharya.org

மில்லாதபடி கறார் விலை என்று கட்டளைப்படுத்துவது ஒன்று; அதிக விலையும் கறார் விலையுமாயிருந்தாலும் இருக்கட்டும்; தற்காலம் கடனாகக் கொடுத்தால் நாலுநாள்பொறுத்து விலை கொடுத்து விடுவோமென்றால் அதற்கும் இசையாமல் 'இன்றைக்கு ரொக்கம் நாளைக்குக் கடன்' என்பது ஒன்று. ஆக இப்படிப்பட்ட மூவகையான அஸௌகரியங்கள் அமைந்த கடையை ஒப்பன் எம்பெருமான்; ஏனெனில் மோக்ஷமாகிற சரக்குக்கு விலையை அபாரமாக விதித்துவைத்தான்; ஞானங்கனிந்த நலங்கொண்டு நாடொறும் நையவேண்டுமென்கையாலே இந்த விலையை எல்லாரும் செலுத்த முடியாதாகையால் விலை அதிகம். இதில் சிறிது குறைத்துக் கொள்வோமென்றால் இசைகிறானில்லை; நாடொறும் நைபவர்க்கே வானங் கொடுப்பேனென்கிறான்; இப்படிப்பட்ட நிலைமை இவ்விருள் தருமாஞாலத்தில் உண்டாவது அருமை, முன்னடி எங்களை மோக்ஷத்திற்கு அனுப்பிவிடு; அவ்விடத்திற்போய் இந்த விலையைச் செலுத்திவிடுகிறோமென்று கடன் வேண்டினால், 'இந்தக் கடையில் கடன்கட்டில்லை; இங்கேயிருந்து ஞானங் கனிந்த நலங்கொண்டு நாடொறும் நைபவர்களைத்தான் மோக்ஷத்துக்கு அனுப்புவேன்' என்கிறான். ஆகையாலே மூன்று வகை அஸௌகரியங்கள் நிறைந்த கடையாம் எம்பெருமான். எம்பெருமானாகிற கடையில் எவ்வகையான அஸௌகரியமுமில்லை; மோக்ஷமென்னும் சரக்குக்கு அவர் விலை விதிப்பதேயில்லையாகையால், அதிக விலை யென்றாவது கறார்விலை யென்றாவது கைவிலை யென்றாவது சொல்லக்கூடிய கஷ்டங்களுக்கு ப்ரஸக்தியே இல்லை; ஆகையாலே, மோக்ஷம் விரும்புகின்றவர்களே! நீங்கள் எம்பெருமானைப்பணிந்து வருந்தாமல் எம்பெருமானாரைப் பணிந்து ஸுகப்படுங்கள்—என்று இப்பாட்டால் உபதேசித்தாராயிற்று.

வல்வினையேன் மனத்திலீனங்கடிந்த என்பதற்கு—மாதவனை அடிபணிந்து வருந்துகையாகிற ஈனத்தை எனக்குத் தவிர்த்த எம்பெருமானார் என்று உரைக்கவுமாம். .... ... (கூகூ)

சரணமடைந்த தருமனுக்கா * பண்டுநூற்றுவரை
மரணமடைவித்தமாயவன் * தன்னை வணங்கவைத்த
கரணமிவையுமக்கன்றென் றிராமாநுச னுயிர்கட்கு
அரணங்கமைத்திலனேல்* அரணார்மற்றிவ் வாருயிர்க்கே. (கூஎ)

http://acharya.org

| பதம் | பொருள் |
|---|---|
| சரணம் அடைந்த தருமனுக்கு ஆ | தன்னைச் சரணம் பற்றின தர்ம புத்ரருக்காக |
| பண்டு | முற்காலத்திலே |
| நூற்றுவரை | துரியோதனன் முதலிய நூறுபேர்களை |
| மரணம் அடைவித்த மாயவன் | சாகும்படிசெய்த எம்பெருமான் |
| தன்னை வணங்க வைத்த காரணம் இவை | தன்னை வழிபடுவ தற்காகவே ஏற் படுத்திவைத்த இந்திரியங்களாம் இவை ; |
| உமக்கு அன்று | உங்களுக்கு உரிமைப் பட்டவையல்ல ; |
| என்று | இவ்வாருக உபதேசித்து |
| இராமாநுசன் | எம்பெருமானார் |
| உயிர்கட்கு | ஆத்மாக்களுக்கு |
| அரண் அமைத்திலன் ஏல் | ரக்ஷையைக் கற்பித்திலராகில் |
| இ ஆர் உயிர்க்கு | இந்த அருமையான ஆத்மாக்களுக்கு |
| மற்று அரண் ஆர் | வேறு ரக்ஷகராவார் ஆர்? (ஆருமில்லை.) |

* * *—தன்னைச் சரணமடைந்த தர்மபுத்திரர்க்காகப் படாப் பாடுகள்பட்டு துரியோதநாதிகளான நூற்றுவரைப் பாரதப் போரில் முடித்தருளின எம்பெருமான் செவி வாய் கண் மூக்கு முதலிய இந்திரியங்களையும் அவற்றுக்கு இருப்பிடமான உடலையும் உங்களுக்குத் தந்தருளினது, தன்னைவழிபட்டு உஜ்ஜீவிப்பதற்காகவேயன்றி உங்கள் மனம்போனபடி விஷயாந்தரங்களை அநுபவிப்பதற்காகவல்ல என்கிற இவ்வர்த்தத்தை எம்பெருமானார் திருவவதரித்து எல்லார்க்கும் உபதேசிக்கவே நாமெல்லாம் உஜ்ஜீவிக்கலாயிற்று ; அவர் இப்படி உபதேசித்திராவிட்டால் நமக்கு என்ன கதி ! வேறுயார் நம்மைத் திருத்தவல்லவர் ?—என்றாராயிற்று.

தருமனுக்கா என்று தர்மபுத்திரரைமாத்திரஞ் சொன்னது பஞ்சபாண்டவர்கட்கும் பாஞ்சாலிக்கும் உபலக்ஷண மென்க. தன்னை வணங்கவைத்த கரணமிவை என்றவிடத்து "ஜிஹ்வே ! கீர்த்தய கேசவம் முராரிபும்" என்ற முகுந்தமாலை ச்லோகத்தை யோஜித்துக் கொள்வது. பெரியதிருமொழியில் நீணாகஞ்சுற்றி என்கிற திருமொழியையும் கூட்டிக்கொள்வது. கரணம்—வடசொல்; இந்திரியம். .... .... ... .... .... (கூஎ)



http://acharya.org

ஆரெனக்கின்று நிகர்சொல்லில் * மாயனன்றைவர்தெய்வத்
தேரினில்செப்பிய கீதையின்செம்மை * பொருள்தெரியப்
பாரினில்சொன்ன விராமாநுசனைப் பணியும்நல்லோர்
சீரினில்சென்றுபணிந்தது * என்னாவியும் சிந்தையுமே. (௮௨)

| | |
|---|---|
| மாயன் | ஆச்சர்ய சேஷ்டிதங்களையுடைய எம்பெருமான் |
| அன்று | முற்காலத்தில் |
| ஐவர் | பஞ்சபாண்டவர்களுடைய |
| தெய்வம் தேரினில் | தெய்வத்தன்மை பொருந்திய தேரின்மீது (இருந்துகொண்டு) |
| செப்பிய | அருளிச்செய்த |
| கீதையின் | பகவத் கீதையினுடைய |
| செம்மை பொருள் | ஸ்வரஸமான அர்த்தத்தை |
| தெரிய | (அனைவரும் எளிதாகத்) தெரிந்து கொள்ளும்படி |

| | |
|---|---|
| பாரினில் | இப்பூமியிலே |
| சொன்ன | (கீதா பாஷ்ய முகத்தாலே) அருளிச்செய்த |
| இராமாநுசனை | எம்பெருமானாரை |
| பணியும் | ஆச்ரயித்திருக்கிற |
| நல்லோர் | விலக்ஷண புருஷர்களுடைய |
| சீரினில் | கல்யாண குணங்களிலே |
| என் ஆவியும் சிந்தையும் | எனது ஆத்மாவும் மநஸ்ஸும் |
| சென்று பணிந்தது | சென்று சேர்ந்துவிட்டன; |
| சொல்லில் | சொல்லுமளவில் |
| இன்று | இக்காலத்தில் |
| எனக்கு ஆர் நிகர் | எனக்கு ஆர் ஒப்பாவார்?. |

* * *—எம்பெருமான் அன்றொருகால் பார்த்தஸாரதியாயிருந்துகொண்டு அவனுக்கு உபதேசித்த கீதையின் பொருளை ஸ்பஷ்டமாக அனைவரும் தெரிந்துகொள்ளும்படி ஸ்ரீ கீதாபாஷ்யமருளிச்செய்த எம்பெருமானாரை யாவர் ஆச்ரயித்திருக்கிறார்களோ, அந்த மஹான்களுடைய திருக்குணங்களிலேயே என்னுடைய ஸகல இந்திரியங்களும் அவகாஹித்துவிட்டன; எம்பெருமானைப் பணிவதற்கே இசையாத இவ்வுலகில் தத்தாஸதாஸர்களைப் பணியும்படியான பரிபாகம்பெற்ற எனக்காரும் நிகரில்லை என்றாராயிற்று.

**மாயன்**=ஸர்வேச்வரனை தான் அர்ஜுநனுக்குத் தேர்ப்பாகனாய்த் தாழநின்ற ஆச்சரியன். தெய்வத்தேர்=அர்ஜுநனு

http://acharya.org

டைய தேர் பெரியதிருவடியின் அம்சமாதல் அறிக. செம்மைப் பொருள்=ருஜுவான அர்த்தம். ... .... ... (சுஅ)

சிந்தையினோடு கரணங்கள்யாவும் சிதைந்து * முன்னாள்
அந்தமுற்றாழ்ந்தது கண்டு * அவையென்றனக் கன்றருளால்
தந்தவரங்கனும் தன்சரண்தந்திலன் தானது தந்து *
எந்தையிராமாநுசன் வந்தெடுத்தனனின்றென்னையே. (சுகூ)

| | |
|---|---|
| முன் நாள் | ஸ்ருஷ்டிக்கு முற்காலத்தில் |
| சிந்தையினோடு கரணங்கள் யாவும் சிதைந்து | சிந்தையும் இந்திரியங்களுமெல்லாம் அழிந்து |
| அந்தம் உற்று ஆழ்ந்தது கண்டு | உபஸம்ஹாரத்தையடைந்து அசேதநப்ராயமாயிருப்பதைப் பார்த்து |
| என் தனக்கு | (அப்படி அசேதந ப்ராயராய்க் கிடந்தவர்களில் ஒருவனான) எனக்கு |
| அவை | அந்த கரண களேபரங்களை |
| அன்று | அக்காலத்தில் |
| அருளால் தந்த அரங்கனும் | க்ருபையாலே உண்டாக்கின எம்பெருமானும் |
| தன் சரண் தந்திலன் | தனது திருவடிகளைக் காட்டிக் கொடுத்து உஜ்ஜீவிப்பிக்கவில்லை. |
| | (அக்குறை நீங்க) |
| எந்தை இராமாநுசன் | ஸ்வாமி எம்பெருமானார் |
| தான் வந்து | தாமாகவே வந்து |
| அது தந்து | அந்தத் திருவடிகளைத் தந்தருளி |
| இன்று என்னை எடுத்தனன் | இன்று என்னை ஸம்ஸாரத்தில் நின்றும் உத்தரிப்பித்தார். |

* * *—பிரளயகாலத்தில் ஸகல ஆத்துமாக்களும் இறகொடிந்த பக்ஷிபோலே கரணகளேபரங்களை இழந்து வருந்தும் நிலைமையிலே எம்பெருமான் பரமகாருணிகனாகிக் கரணகளேபரங்களைக் கொடுத்தருள்கின்றான் என்கிற நூற்கொள்கையின்படி—அடியேனும் கரணகளேபரசூந்யனாய் வருந்திக்கிடந்த காலத்துத் திருவுள்ளமிரங்கி அவற்றைக்கொடுத்து உதவின எம்பெருமான் இவ்வுலகில் என்னை ஒரு மநுஷ்யனாக ஸ்ருஷ்டித்து விட்டானேயொழியத் தனது திருவடிகளை எனக்குக் காட்டிக் கொடுத்து உஜ

http://acharya.org

ஜீவிக்கச் செய்யவில்லை; அக்குறைதீர எம்பெருமானார் என்னை உஜ்ஜீவிப்பித்தார் என்கிறார்.

அந்தம்—வடசொல்; நாசம். .... .... .... (சுசு)

என்னையும் பார்த்தென்னியல்வையும்பார்த்து* எண்ணில்பல்குணத்த
உன்னையும்பார்க்கில் அருள்செய்வதேநலம் * அன்றியென்பால்
பின்னையும்பார்க்கில் நலமுளதேயுன் பெருங்கருணை
தன்னையென்பார்ப்பர் * இராமாநுசா உன்னைச் சார்ந்தவரே. (எ0)

| | |
|---|---|
| இராமாநுசா | எம்பெருமானாரே! |
| என்னையும் பார்த்து | (ஒரு குணமுமில்லாமல் குற்றமே நிறைந்திருக்கிற) என்னையும் நோக்கி |
| என் இயல்வையும் பார்த்து | (இனிமேலும் எவ்விதநன்மையும் ஸம்பாதித்துக் கொள்ள முடியாமலிருக்கிற) என்னுடைய தன்மையையும் நோக்கி |
| எண் இல் பல் குணத்த உன்னையும் பார்க்கில் | எண்ணிறந்த பல திருக்குணங்களையுடைய தேவரீரையும் நோக்குமளவில் |
| அருள் செய்வதே நலம் | (இப்போது போல எப்போதும்) அருள் செய்திருப்பதே நல்லது; |
| அன்றி | இதுவொழிய |
| பின்னையும் பார்க்கில் | மேலும் ஆராயுமளவில் |
| என்பால் நலம் உளதே | என்னிடத்தில் ஏதாவது நன்மையுண்டோ? (சிறிதும் இல்லை) |

(நன்மையொன்றுமில்லாவிடில் நாம் அருள் செய்யலாகாதென்று திருவுள்ளம் பற்றினால்)

| | |
|---|---|
| உன்னை சார்ந்தவர் | தேவரீரை ஆச்ரயித்தவர்கள் |
| உன் பெரு கருணை தன்னை என் பார்ப்பர் | தேவரீருடைய கிருபையைப் பற்றி என்ன நினைப்பர்கள்? (இளப்பமாக நினையார்களோ.) |

* * *—ஸ்வாமிந்!, அடியேனுடைய நிலைமை எப்படிப்பட்டதென்றால், ஸம்ஸாரஸம்பந்திகளான விஷயாந்தரங்களையே நச்சி உழல்பவன் நான்; தேவரீருடைய நிலைமை எப்படிப்பட்டதென்றால் அடியவர்களுடைய குற்றங்களையும் நற்றமாகக் கொண்டு அங்கீகரிப்பவர் தேவரீர். ஆகவிப்படி இருவருடைய நிலைமையையும்

http://acharya.org

நோக்குமளவில், தேவரீருடைய நிர்ஹேதுக க்ருபைக்கு அடியேனைப் பாத்திரமாக்குவதே தகுதி. இப்போது என்மீது நிர்ஹேதுக க்ருபைபண்ணி அங்கீகரித்திருப்பது போலவே இனிமேலும் ஒரு நாளும் கைவிடாமல் காத்தருளவேணும். ‘உன்னைநான் கைப்பற்றியிருப்பதற்கு உன்னிடத்தில் என்னநன்மை இருக்கிறது?’ என்று தேவரீர் விமர்சிக்கக் கூடாது; என்னிடத்தில் ஒரு நன்மையும் கிடையாது. அப்படி நன்மையைக்கண்டே ரக்ஷிக்க வேணுமென்று நிர்ப்பந்தம் வைத்துக்கொண்டால் தேவரீருடைய திருக்குணங்களுக்கு உபயோகமேயில்லாமற் போய்விடும். “இவ்வளவுதானா எம்பெருமானுருடைய குணங்கள்” என்று தேவரீருடைய அடியவர்கள் குறைவாகநினைக்க நேர்ந்துவிடும். ஆகையாலே என்பக்கல் எவ்விதமான நன்மையையும் எதிர்பாராமல் தேவரீருடைய நிர்ஹேதுக க்ருபையையே பற்றாசாகக் கொண்டு இதுவரையிலும்போல் என்றைக்கும் காத்தருளவேணுமென்றாராயிற்று. ... (எ0)

சார்ந்ததென்சிந்தை யுன்தாளிணைக்கீழ் * அன்புதான்மிகவும்
கூர்ந்ததத் தாமரைத்தாள்களுக்கு * உன்தன் குணங்களுக்கே
தீர்ந்ததென்செய்கை முன்செய்வினைநீ செய்வினையதனால்
பேர்ந்தது * வண்மை யிராமாநுசா! எம்பெருந்தகையே. (எக)

| | |
|---|---|
| வண்மை | ஔதார்ய முடையரும் |
| எம் | எமக்கு ஸ்வாமியும் |
| பெரு தகை | பெருந்தன்மை யுடையருமான |
| இராமாநுசா | எம்பெருமானாரே! |
| என் சிந்தை | எனது நெஞ்சு |
| உன் தாள் இணை கீழ் சார்ந்தது | தேவரீருடைய உபய பாதங்களின் கீழ் அமர்ந்துவிட்டது; |
| அன்புதான் | பக்தியும் |
| அத் தாமரை தாள்களுக்கு | அந்தத் திருவடித் தாமரைகள் விஷயத்திலேயே |
| மிகவும் கூர்ந்தது | மிகவும் அதிகரித்தது. |
| என் செய்கை | எனது செயலும் |
| உன் தன் குணங்களுக்கே தீர்ந்தது | தேவரீருடைய திருக் குணங்களுக்கே அற்றுத் தீர்ந்தது; |
| முன் செய் வினை | முன்னேசெய்த பாவங்களெல்லாம் |
| நீ செய் வினை அதனால் பேர்ந்தது | தேவரீர் செய்தருளின (கடாக்ஷமாகிற) காரியத்தாலே தொலைந்து போயின. |

http://acharya.org

* * *—கீழ்ப்பாட்டில் இவர்தாம் பிரார்த்தித்ததற்கு எம்பெருமானார் இசைந்தாற்போ லிருக்கக்கண்டு, ஸந்தோஷாதிசயத்தாலே தாம்பெற்ற பேறுகளைப் பேசுகிறார் இதில்.—ஸ்வாமிந்! என்னுடைய ஜ்ஞாநபக்திகள் தேவரீர் திருவடிகளில் ஊன்றி நின்றன; என்னுடைய கரணங்கள் தேவரீருடைய திருக்குணங்களில் ஈடுபட்டுக் கைங்கர்யம் பண்ணத்தொடங்கின. தேவரீருடைய கடாக்ஷமாத்ரத்தாலே என்னுடைய பூர்வஸஞ்சித பாபங்களெல்லாம் பறந்துபோயின. இத்தனையும் தேவரீருடைய திருவருளின் பலன் என்றாராயிற்று. ... ... ... ... .... (எக)

கைத்தனன்தீய சமயக்கலகரை * காசினிக்கே
உய்த்தனன் தூய மறைநெறிதன்னை * என்றுன்னியுள்ளம்
நெய்த்தவன்போ டிருந்தேத்தும் நிறைபுகழோருடனே
வைத்தனனென்னை * இராமாநுசன்மிக்க வண்மைசெய்தே. (எஉ)

| | |
|---|---|
| இராமாநுசன் | எம்பெருமானார் |
| மிக்க வண்மை செய்து | தமது ஔதார்ய குணத்தை அதிகமாகக் காட்டி, |
| தீய சமயம் கலகரை | துஷ்ட மதங்களிலிருந்துகொண்டு கலஹஞ் செய்கிறவர்களை |
| கைத்தனன் | ஒழித்துவிட்டார்; |
| தூய | பரிசுத்தமான |
| மறை நெறி தன்னை | வேதமார்க்கத்தை |
| காசினிக்கு உய்த்தனன் | பூமியிலே ஸ்தாபித்தருளினார்; |
| என்று உன்னி | என்று அநுஸந்தித்து |
| உள்ளம் நெய்த்து | நெஞ்சு கனிந்து |
| அவ்வன் போடு இருந்து | அந்த ப்ரீதியோடே கூடியிருந்து |
| ஏத்தும் | (அவரை) ஸ்தோத்ரம் பண்ணுகிற |
| நிறை புகழோருடனே | புகழ் நிறைந்த மஹான்களோடே |
| என்னை வைத்தனன் | (என்னையும் ஒருவனாக எண்ணும்படி) என்னை வைத்தருளினார். |

* * *—கீழ்ப்பாட்டில், தாம் பெற்ற சிலபேறுகளைப் பேசினார்; அவற்றுள் முக்கியமான ஒரு பேற்றைத் தனிப்படப் பேசுகிறார் இதில்.

http://acharya.org

"ஸ்வாமி, துஷ்டமதஸ்தர்களை யெல்லாம் தொலைத்து வேத மார்க்கத்தைப் பிரதிஷ்டாபநஞ் செய்தருளினார்" என்று இந்த வைபவத்திலே யீடுபட்டு நெஞ்சு கனிந்திருக்கின்ற மஹான்களோடே என்னையும் ஒருவனாக எண்ணலாம்படி ஒரு பொருளாக்கி வைத்தார் எம்பெருமானார்; இப்படியும் ஒரு ஔதார்ய முண்டோ? என்று உருகுகின்றார்.

நிறைபுகழோருடனே வைத்தனன்—அஸத்துக்களோடே பழகிக்கிடந்த என்னை ஸத்துக்களோடே கூட்டிவைத்தார் என்னவுமாம். .... ... .... ... ... (எ௨)

வண்மையினாலும் தன்மாதகவாலும் * மதிபுரையும்
தண்மையினாலு மித்தாரணியோர்கட்கு * தான்சரணாய்
உண்மைநன்ஞான முரைத்தவிராமா நுசனையுன்னும்
திண்மையல்லாலெனக்கில்லை * மற்றோர்நிலை தேர்ந்திடிலே.

| | |
|---|---|
| தன் வண்மையினாலும் | தம்முடைய ஔதார்ய குணத்தாலும் |
| மா தகவாலும் | பரமக்ருபையாலும் |
| மதி புரையும் தண்மையினாலும் | சந்திரனையொத்த திருவுள்ளக் குளிர்ச்சியாலும் |
| இத்தாரணியோர்கட்கு | இப் பூமியிலுள்ளவர்களுக்கு |
| தான் சரண் ஆய் | தாமே ரக்ஷகராய்க் கொண்டு |
| உண்மை நல் ஞானம் உரைத்த இராமா நுசனை | யதார்த்தமாய் விலக்ஷணமான ஞானத்தை உபதேசிக்கிற எம்பெருமானாரை |
| உன்னும் திண்மை அல்லால் | சிந்திப்பதாகிற அத்யவஸாய மொன்று தவிர |
| தேர்ந்திடில் | ஆராயுமளவில் |
| எனக்கு மற்று ஓர் நிலை இல்லை | அடியேனுக்கு வேறொரு அத்யவஸாயமில்லை. |

* * *:—தம்முடைய அத்யவஸாயத்தின் உறைப்பை உரைக்கிறார் இதில். எம்பெருமானாரை இடைவிடாது சிந்திப்பதே நன்று என்று கொண்டிருக்கையாகிற அத்யவஸாயந் தவிர வேறு எந்த அத்யவஸாயமும் எனக்கில்லை யென்கிறார். மற்றபேர்களைவிட்டு எம்பெருமானாரையே சிந்திப்பதற்கு யாது காரணமென்னில்;—பொருளின் சீர்மைபாராமல் உபதேசிப்பதற்கு உறுப்பான ஔதார்ய குணத்தாலும், பிறருடைய துர்க்கதியைக்கண்டு பொறுக்கமாட்

http://acharya.org

டாத பரம க்ருபையாலும், குளிர்ந்த திருவுள்ள முடைமையாலும் ஒருவருடைய அபேக்ஷையில்லாமல் தாமாகவே ரக்ஷகராகி யதார்த்தமான விலக்ஷண ஞானத்தை உபதேசிப்பவர் அவ்வெம் பெருமானாரொருவரேயன்றோ; ஆகையால் அவர் தம்மையே சிந் திப்ப தென்கிற உறுதி எனக்கு உண்டாயிற்று. .... (எஎ)

தேரார்மறையின் திறமென்று * மாயவன் தீயவரைக்
கூராழிகொண்டு குறைப்பது * கொண்டலனையவண்மை
ஏரார்குணத்தெம் மிராமாநுசனவ்வெழில்மறையில்
சேராதவரைச்சிதைப்பது * அப்போதொரு சிந்தைசெய்தே.

| | |
|---|---|
| மறையின் திறம் தேரார் என்று | (இப்பாவிகள்) வேதஞ் சொல்லுகிற வழியை நிரூபித்தறிகிறதில்லை யென்று |
| தீயவரை | பாவிகளை |
| மாயவன் | எம்பெருமான் |
| குறைப்பது | தண்டிப்பது |
| கூர் ஆழி கொண்டு | கூர்மையான தனது திருவாழியாலே; |
| கொண்டல் அனைய வண்மை | மேகம்போன்ற ஔதார்யகுண முடையவரும் |
| ஏர் ஆர் குணத்து | (மற்றும் பல) நல்லகுணங்க ளுடையவரு மான |
| எம் இராமாநுசன் | ஸ்வாமி எம்பெருமானார் |
| அ எழில் மறையில் சேராதவரை சிதைப்பது | அந்த சிறந்த வேதத்தில் அந்வயியாதவர் களை பங்கப் படுத்துவது (எப்படி யென்றால்) |
| அப்போது ஒரு சிந்தை செய்து | அப்போ தப்போது ஒவ்வொரு யுக்தியைக் கொண்டாம். |

* * *:—எம்பெருமான் தனது ஆஜ்ஞாரூபமான வேதங் களின் கட்டளைப்படி நடவாத கொடியவர்களைத் தனது திருவாழி யைக் கொண்டு த்வம்ஸம்பண்ணிவிடுவன்; எம்பெருமானாரோவென் னில் அவ்வளவு ஆயாஸம் எடுத்துக்கொள்வதில்லை; வேதங்களை அடியோடு ஒப்புக்கொள்ளாத பாஹ்யர்களையும், வேதங்களைப் பிரமாணமாக ஒப்புக்கொண்டு அவற்றில் அபார்த்தங்களைப் பண்ணுகிற குத்ருஷ்டிகளையும் வாதப்போரில் அப்போதப்போது திருவுள்ளத்தில் ஸ்புரிக்கின்ற நல்லயுக்திகளைக்கொண்டு கண்டித்து விடுவர்.

http://acharya.org

இதனால், துஷ்டர்களை நிரஸிக்கும்வகையில் எம்பெருமானாருடைய சாதுரியம் ஒப்பற்றதென்று சொல்லிற்றாயிற்று. (௭௪)

செய்த்தலைச்சங்கம் செழுமுத்தமீனும் * திருவரங்கர்
கைத்தலத்தாழியும் சங்கமுமேந்தி * நங்கண்முகப்பே
மொய்த்தலைத்துன்னை விடேனென்றிருக்கிலும் நின்புகழே
மொய்த்தலைக்கும்வந்து * இராமாநுசாவென்னை முற்றுநின்றே.

| | |
|---|---|
| செய் தலை | வயல்களில் |
| சங்கம் | சங்குகளானவை |
| செழு முத்தம் | அழகிய முத்துக்களை |
| ஈனும் திரு அரங்கர் | உண்டாக்கு மிடமான திருவரங்கமா நகரில் எழுந்தருளி யிருக்கும் பெருமாள் |
| கை தலத்து | தமது திருக்கையிலே |
| ஆழியும் சங்கமும் ஏந்தி | திருவாழி திருச்சங்குகளைத் தரித்துக் கொண்டு |
| நம் கண் முகப்பே | நமது கண்ணெதிரில் |

| | |
|---|---|
| மொய்த்து | வந்து நெருங்கி |
| அலைத்து | புத்தியைக் கெடுத்து |
| உன்னை விடேன் என்று இருக்கிலும் | 'உன்னை விடமாட்டேன்' என்று இருந்தாலும், |
| இராமாநுசா | எம்பெருமானாரே! |
| நின் புகழே | தேவரீருடைய திவ்ய குணங்களே |
| என்னை வந்து முற்றும் மொய்த்து நின்று | என் பக்கல் வந்து சூழ்ந்துகொண்டு |
| அலைக்கும் | ஆகர்ஷிக்கின்றன. |

* * *:—எம்பெருமான் தனது விலக்ஷணமான அழகைக் காட்டிக் கொண்டு வந்து என் கண்ணெதிரே நின்றாலும், என்னை விடாதே வலியப்பற்றினாலும் அவனது அழகில் நான் மோஹிக்கப் பெறுவதில்லை; தேவரீருடைய திருக்குணங்களே என்னை ஈடுபடுத்துகின்றன; பகவத் குணங்களுக்கு நான் ஈடுபடுவதில்லையென்கிறார்.

"செய்த்தலைச்சங்கம் செழுமுத்தமீனும்" என்கிற விசேஷணம்—திருவரங்கர் என்பதன் பகுதியாகிய திருவரங்கத்தில் அந்வயிக்கும். திருவரங்கம் எப்படிப்பட்டதென்றால், முத்துக்களை யுதிர்க்கும் சங்குகள் நிறைந்த வயல்சூழ்ந்தது என்றவாறு. ஈனுதல்—பிரஸவித்தல்.



http://acharya.org

எம்பெருமானரிடத்தில் * தேவுமற்றறியாத பத்திப்பெருங் காதல் தமக்கு உள்ளமை இப்பாட்டில் சொல்லப்பட்ட தென்க.

நின்றவண் கீர்த்தியும் நீள்புனலும் * நிறைவேங்கடப்பொற்
குன்றமும் வைகுந்தநாடும் குலவிய பாற்கடலும் *
உன்றனக் கெத்தனை யின்பந்தரு முன்னிணைமலர்த்தாள்
என்றனக்குமது * இராமாநுசா இவை யீந்தருளே. (எசு)

| | |
|---|---|
| இராமானுசா | எம்பெருமானரே!, |
| நின்ற வண் கீர்த்தியும் நீள் புனலும் நிறை | நிலைநின்ற பெரும் புகழும் அதிகமான நீர்ப்பெருக்கும் நிறைந்துள்ள |
| வேங்கடம் பொன் குன்றமும் | திருவேங்கட மென்னும் அழகிய திருமலையும் |
| வைகுந்தம் நாடும் | ஸ்ரீவைகுண்டமாகிய திருநாடும் |
| குலவிய பால் கடலும் | கொண்டாடத்தக்க திருப்பாற்கடலும் |
| உன் தனக்கு | தேவரீருக்கு |
| எத்தனை இன்பம் தரும் | எவ்வளவு ஆநந்தத்தை விளைக்குமோ |
| உன் இணை மலர் தாள் | தேவரீருடைய உபய பாதாரவிந்தங்கள் |
| என் தனக்கும் அது | எனக்கும் அவ்வளவு ஆநந்தத்தையுண்டாக்கும்; |
| இவை | இப்படிப்பட்ட திருவடிகளை |
| ஈந்தருள் | அடியேனுக்குத் தந்தருளவேணும். |

* * *—கீழ்ப்பாட்டில் அமுதனார் விளக்கிய பரமபக்தியை அறிந்த எம்பெருமானார் மிகவும் உகந்தருளி 'இவர்க்கு நாம் எதைச் செய்வோம்' என்றிருப்பதாகக் கண்ட அமுதனார், ஸ்வாமிந்! அடியேனுக்கு தேவரீர் வேறொன்றும் செய்தருளவேண்டா; அடியேனுக்கு ஸர்வஸ்வமாகிய இந்தத் திருவடித்தாமரைகளைத் தந்தருளவேண்டுமெத்தனை யென்கிறார்.

"நின்றவண் கீர்த்தியும் நீள்புனலும்நிறை" என்னுமளவும் திருவேங்கடத்துக்கு விசேஷணம். பாவங்களைப் போக்கவல்ல தென்று நிலைநின்ற புகழ்பெற்றதும் * தெழிகுரலருவிகளை யுடையதுமான திருமலையென்ன, பரமபதமென்ன, திருப்பாற்கடலென்ன, ஆகிய இந்த ஸ்தலங்களெல்லாம் ஸ்வாமிந்! தேவரீருக்கு எப்படிப்பட்ட ஆநந்தத்தை விளைக்குமோ அப்படிப்பட்ட ஆநந்தத்தை அடியேனுக்கு தேவரீருடைய திருவடிகள் விளைக்கும்.

http://acharya.org

"தெழிகுரலருவித் திருவேங்கடத்து எழில்கொள் சோதி எந்தை தந்தை தந்தைக்கு—ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி வழுவிலாவடிமை செய்யவேண்டும் நாம்" என்று நம்மாழ்வார் பாரித்தாற்போலத் திருமலையப்பனுக்குக் கைங்கரியம் பண்ணவேணுமென்று அடியேன் விரும்பவில்லை; நம்மாழ்வாருகந்த விஷயமென்று தேவரீர் உகந்திருக்கலாம். "மாகவைகுந்தங் காண்பதற்கு என் மனமேக மெண்ணு மிராப்பகலின்றியே" என்று ஆழ்வார் விரும்பின திருநாட்டிலும் அடியேனுக்கு விருப்பமில்லை. அதையும் ஆழ்வாருகந்த திருநாடென்று தேவரீர் உகந்திருக்கலாம். "பொங்கிய பாற்கடல் பள்ளிகொள்வானைப் புணர்வதோராசையினால், என்கொங்கை கிளர்ந்து குமைத்துக் குதுகலித்து ஆவியை ஆகுலஞ்செய்யு மங்குயிலே!" என்று ஆண்டாள் விரும்பினாற்போலத் திருப்பாற்கடல் நாதனோடு அணையவேணுமென்கிற விருப்பமும் அடியேனுக்கில்லை; அதனையும் நம் தங்கை உகந்த விஷயமென்று தேவரீர்உகந்திருக்கலாம்; உண்மையில் அடியேன் உகந்த விஷயம் எது வென்றால் "எம்பெருமானார் திருவடிகளே சரணம்" என்பதொன்றேயாம். ஆனபின்பு அடியேனுக்கு இத்திருவடிகளையே சேமவைப்பாகத் தந்தருளவேணுமென்று பிரார்த்தித்தாராயிற்று. .... .... .... .... .... (எசு)

ஈந்தனனீயாதவின்னருள் * எண்ணில்மறைக்குறும்பைப்
பாய்ந்தனனம்மறைப்பல்பொருளால் * இப்படியனைத்தும்
ஏய்ந்தனன் கீர்த்தியினா லென்வினைகளை வேர்பறியக்
காய்ந்தனன் * வண்மை யிராமாநுசற்கென் கருத்தினியே?

| | |
|---|---|
| ஈயாத | (இதற்கு முன்பு ஒருவர்க்கும்) அருளாத |
| இன் அருள் | விலக்ஷணமான க்ருபையை |
| ஈந்தனன் | அடியேனுக்குச் செய்தருளினவரும், |
| எண் இல் மறை குறும்பை | எண்ணிறந்த வேத விரோதிமதங்களை |
| அ மறை பல் பொருளால் பாய்ந்தனன் | அந்த வேதங்களின் அர்த்தங்களையே கொண்டு கண்டித்தவரும், |
| கீர்த்தியினால் | தமது கீர்த்தியாலே |
| இ படி அனைத்தும் எய்ந்தனன் | இப்பூமியெங்கும் வியாபித்தவரும் |
| என் வினைகளை | எனது கருமங்களை |

http://acharya.org

| | |
|---|---|
| வேர் பறிய காய்ந்தனன் | வேரோடே அறும் படி போக்கின வரும் |
| வண்மை | ஔதார்யமே வடிவுகொண்ட வருமான |
| இராமாநுசற்கு | எம்பெருமானார்க்கு |
| இனி என் கருத்து | இன்னமும் (செய்யத் தக்கதாகத்) திருவுள்ளத்தில் ஏதேனு முண்டோ ?. |

* * *—கீழ்ப்பாட்டில் தாம் அபேக்ஷித்தபடியே திருவருளைத் தந்தருளப்பெற்று, க்ருதக்ருத்யராய், அவர் செய்தருளின உபகாரங்களை அநுஸந்தித்து, இவையெல்லாம் செய்தபின்பு இன்னமும் செய்தருள்வதாகத் திருவுள்ளம்பற்றியிருப்பது ஏதுவோ? என்கிறார்.

எம்பெருமானார் என்னுடைய பாவங்களையெல்லாம் வேரோடே பறித்தெறிந்து தம்முடைய பரமகிருபைக்கு என்னைப் பாத்திரமாக்கி யருளினார். இவ்வகையாலே எனக்குமாத்திரம் உபகாரம் செய்தாரல்லர்; வேதங்களுக்குப் புறமதத்தவர்கள் சொல்லும் அபார்த்தங்களை உண்மைப் பொருள்களாலே கண்டித்து எல்லாரையும் உஜ்ஜீவிப்பித்தாரென்கிற புகழ் உலகமெங்கும் பரவப் பெற்றார். ஆனபின்பு இனிமேல் அவர் செய்யத்தக்கது ஒன்றுமில்லை. இல்லையாயினும் அவர் திருவுள்ளத்தை நோக்குமிடத்து, மேன்மேலும் ஏதோ நன்மைகளைச்செய்து போரப் பாரித்திருப்பதாகவே காண்கிறது; இன்னும் என்னசெய்யப்போகிறாரோ தெரியவில்லையென்கிறார்.

மறைக்குறும்பாவது—வேதத்திற்கு மாறாகச்சொல்லும் தப்புப் பொருள்கள். ஈந்தனன், பாய்ந்தனன், ஏய்ந்தனன், காய்ந்தனன் என்பவற்றை வினைமுற்றாகவே கொண்டு உரைத்தலுமாம். (௭௭)

கருத்தில்புகுந்துள்ளில்கள்ளங்கழற்றி * கருதரிய
வருத்தத்தினால் மிகவஞ்சித்து * நீயிந்தமண்ணகத்தே
திருத்தித்திருமகள் கேள்வனுக்காக்கியபின் என்னெஞ்சில்
பொருத்தப்படாது * எம்மிராமாநுச ! மற்றோர் பொய்ப்பொருளே.

| | |
|---|---|
| எம் இராமாநுச | எம்பெருமானாரே !, |
| நீ | தேவரீர் |
| கருத அரிய வருத்தத்தினால் மிக வஞ்சித்து | நெஞ்சால் நினைக்க முடியாத பரிச்ரமங்கள் பட்டு என்னை நன்றாக ஏமாத்தி |

http://acharya.org

| | |
|---|---|
| கருத்தில் புகுந்து | (எனது) நெஞ்சிலே வந்து புகுந்து |
| உள்ளில் கள்ளம் கழற்றி | உள்ளேயிருந்த ஆத்மாபஹார தோஷத்தைப் போக்கி |
| திருத்தி | சிக்ஷித்து |
| இந்த மண் அகத்தே | இந்த லோகத்திலே |
| திரு மகள் கேள்வனுக்கு ஆக்கிய பின் | திருமாலுக்கு ஆளாம் படி பண்ணினபின்பு |
| மற்று ஓர் பொய் பொருள் | (இதற்கு மாறான) வேறு எந்த தப்புவிஷயமும் |
| என் நெஞ்சில் | என் மனத்தில் |
| பொருத்தப் படாது | பொருந்த மாட்டாது. |

* * *—எம்பெருமானார் தம்மைத் திருத்துகைக்காகப் பட்ட பாடுகளை எடுத்துச்சொல்லி, இப்படி என்னைத் திருத்தி தேவரீருக்கு உத்தேச்யமான விஷயத்திலே ஆட்படுத்தினபின்பு இனி வேறு எந்த விஷயமும் என்னெஞ்சுக்கு இசையமாட்டாதென்கிறார்.

ஸ்வாமிந்!, 'நாம் தூர இருந்தால் இவனைத் திருத்தமுடியாது' என்றும், 'இவனுக்குத் தெரியும்படியாக அருகிலிருந்தால் இவன் விலக்குவான்' என்றும் கருதி எனக்குத்தெரியாமல் என்மனத்துள் புகுந்து மறைந்துநின்று அஹங்காரம் மமகாரம் முதலிய மனக்குற்றங்களை யடங்கலும் அகற்றி இவ்வகையாலே மெதுவாகத் திருத்தி, தேவரீருக்கு உகப்பான பகவத்விஷயத்திலே ஆட்படுத்தியருளிற்று. இப்படி திருந்தின நான் இனி ஸ்வரூபவிருத்தங்களான விஷயங்களை நெஞ்சிலும் நினையேன் என்றாராயிற்று. (எஅ)

பொய்யைக்சுரக்கும் பொருளைத்துரந்து * இந்தப் பூதலத்தே
மெய்யைப்புரக்குமிராமாநுசன்நிற்க * வேறுநம்மை
உய்யக்கொள்ள வல்லதெய்வமிங்கியாதென் றுலர்ந்துஅவமே
ஐயப்படா நிற்பர் * வையத்துள்ளோர் நல்லறிவிழந்தே. (எகூ)

| | |
|---|---|
| இந்த பூதலத்தே | இப்பூமியிலே |
| பொய்யை சுரக்கும் பொருளை துரந்து | பொய்யான விஷயத்தையே மேன்மேலும் வெளிப்படுத்துகிற (புறமதத் தவர்களின்) அர்த்தங்களைக் கண்டித்து |

http://acharya.org

| | |
|---|---|
| மெய்யை புரக்கும் | ஸத்யத்தை ரக்ஷிக்கிற |
| இராமாநுசன் | எம்பெருமானார் |
| நிற்க | எழுந்தருளியிருக்கும்போது |
| | (இவரைக் கணிசியாமல்) |
| வையத்து உள்ளோர் | இப்பூமியிலுள்ளவர்கள் |
| நம்மை உய்யக் கொள்ள வல்ல | 'நம்மை உஜ்ஜீவிக்கச் செய்யக்கூடிய |
| வேறு தெய்வம் இங்கு யாது என்று | வேறு ஏதாவது தேவதை இவ்வுலகில் உண்டோ?' என்று (விசாரித்துக் கொண்டு) |
| உலர்ந்து | மன வருத்தத்தாலே உடம்பு உலர்ந்து |
| நல் அறிவு இழந்து | (எம்பெருமானார் திருவடிகளே சரணம் என்றிருக்கையாகிற) நல்ல ஞானம்பெறாமல் |
| அவமே | வீணாக |
| ஐயம் படா நிற்பர் | ஸம்சயப்படா நின்றார்கள். ஐயோ!. |

* * *—உலகத்தில் மனிசர் பலவகைப்படுவர்: சாஸ்த்ரமில்லை, தெய்வமில்லை, பரலோகமில்லை என்று நாஸ்திகராய்த் திரிவார்பலர்; எல்லாம் உண்டு; புண்யபாபங்களுக்கு நாம் கட்டுப்பட்டு நடக்க வேணும்; நல்ல வழியில் நின்று உஜ்ஜீவிக்கும் வகை தேடவேணும் என்று கொண்டு ஆஸ்திகராயிருப்பார் சிலர்; முதற் சொன்ன நாஸ்திகர்களைப்பற்றி நமக்குக் கவலையில்லை. ஆஸ்திகராயிருப்பவர்கள் எப்படியாவது உஜ்ஜீவித்துப் போகவேணுமென்கிற ருசியுடையரா யிருந்துவைத்து எம்பெருமானாருடைய திவ்யப்ரபாவங்களைக் கண்டு வைத்தும் இவர் திருவடிகளில் ஆச்ரயித்து எளிதில் உஜ்ஜீவித்துப் போகாதே 'எந்த தெய்வத்தினிடத்தில் ஆச்ரயித்தால் நாம் உஜ்ஜீவித்துப்போகலாம்?' என்று விசிகித்ஸை பண்ணிக்கொண்டு வீண்காலம் கழிக்கிறார்களே! அந்தோ! இஃது என்ன அவிவேகம்!! என இரங்கினாராயிற்று.

பொய்யைச் சுரக்கும் பொருளென்றது—பொய் தவிர வேறில்லாத அர்த்தம் என்றபடி. "ஸர்வம் அஸத்யம்" என்கிறவர்களாகையாலே அஸத்யமயம். மெய்யைப் புரக்கு மிராமாநுசன்=

http://acharya.org

" யதார்த்தம் ஸர்வவிஜ்ஞாநம் " என்று ஸ்தாபித்தருளினவர். புரத்தல்—காப்பாற்றுதல். .... ... (எகூ)

நல்லார்பரவு மிராமாநுசன் * திருநாமம் நம்ப
வல்லார்திறத்தை மறவாதவர்கள் யவர் * அவர்க்கே
எல்லாவிடத்திலு மென்றுமெப் போதிலுமெத்தொழும்பும் *
சொல்லால்மனத்தால் கருமத்தினால் செய்வன் சோர்வின்றியே.

| | |
|---|---|
| நல்லார் பரவும் இராமாநுசன் | ஸத்துக்களாலே கொண்டாடப்படுகிற எம்பெருமானாருடைய |
| திரு நாமம் | திருநாமத்தை |
| நம்ப வல்லார் திறத்தை | (தங்களுக்குத் தஞ்சமாக) நம்பியிருக்க வல்லவர்களுடைய படிகளை |
| மறவாதவர்கள் எவர் | மறவாமல் எப்போதும் சிந்திப்பவர்கள் யாரோ, |
| அவர்க்கே | அப்படிப்பட்ட ஸ்ரீராமாநுஜ பக்த பக்தர்களுக்கே |

| | |
|---|---|
| எல்லா இடத்திலும் | ஸகல தேசங்களிலும் |
| என்றும் | ஸகல அவஸ்தைகளிலும் |
| எப்போதிலும் | ஸகல காலங்களிலும் |
| எத் தொழும்பும் | ஸகலவித கைங்கரியங்களையும் |
| சொல்லால் மனத்தால் கருமத்தினால் | மனமொழி மெய்களென்னும் த்ரிகரணங்களாலும் |
| சோர்வு இன்றி செய்வன் | பிரியாதே யிருந்து செய்வேன். |

* * *—தம்முடைய நிலைநின்ற நிஷ்டையைப் பேசுகிறார் இதில். ஸத்துக்களனைவரும் கொண்டாடும்படியான எம்பெருமானாருடைய திருநாமங்களையே தங்களுக்குத் தஞ்சமாக நம்பியிருக்கிற மஹான்களையே எப்போதும் சிந்தித்துக் கொண்டிருக்கிற ஸ்ரீராமாநுஜ பக்தபக்தர்களுக்கே அடியேன் * ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா வடிமைகள் செய்யக்கடவேனென்றாராயிற்று. தொழும்பு=அடிமை. ... ... (அ0)

சோர்வின்றியுன்றன் துணையடிக்கீழ் * தொண்டுபட்டவர்பால்
சார்வின்றிநின்ற வெனக்கு * அரங்கன்செய்ய தாளிணைகள்
பேர்வின்றியின்று பெறுத்து மிராமாநுச வினியுன்
சீரொன்றிய கருணைக்கு * இல்லைமாறு தெரிவுறிலே. (அக)

http://acharya.org

| | |
|---|---|
| உன் தன் துணை அடி கீழ் | தேவரீருடைய உபயபாதங்களின்கீழே |
| சோர்வு இன்றி தொண்டு பட்டவர் பால் | சோராமல் அடிமைப் பட்டவர்கள் விஷயத்தில் |
| சார்வு இன்றி நின்றஎனக்கு | பொருத்தமில்லாமலிருந்த எனக்கு |
| இன்று | இன்றைத்தினத்தில் |
| அரங்கன் செய்ய தாள் இணைகள் | பெரிய பெருமாளுடைய சிவந்த திருவடியிணைகளை |
| பேர்வு இன்றி பெறுத்தும் இராமாநுசா | ஒருகாலும் விட்டு நீங்காதபடி சிரோபூஷணமாகத் தந்தருளின எம்பெருமானாரே! |
| இனி | இப்படியான பின்பு |
| தெரிவுறில் | ஆராயுமளவில் |
| உன் | தேவரீருடைய |
| சீர் ஒன்றிய கருணைக்கு | சிறந்த திருவருளுக்கு |
| மாறு இல்லை | ஒப்பு இல்லை. |

* * *—ஸ்ரீராமாநுஜ பக்தபக்தர்களுக்கே ஆட்செய்வேனென்று கீழ்ப்பாட்டில் கூறின அமுதனார், இப்படிப்பட்ட உறுதி எனக்கு இன்று உண்டாயிற்றேயொழிய இதற்கு முன்பு உண்டாகாமலே யிருந்தது; அப்படியிருந்தவென்னை தேவரீர் திவ்ய க்ருபையாலே திருத்தி தேவரீருகந்த விஷயத்திற்கு ஆட்படுத்திற்றே! இஃது என்ன ஒப்பற்ற திருவருள்! என்று ஆச்சரியப் படுகிறார்.

ஸ்வாமிந்! தேவரீருக்கு அடிமைப்பட்ட பெரியோர்கட்கு ஒரு நொடிப் பொழுதும் ஆளாகாமல் ஸம்ஸாரத்திலே கைகழிந்துபோன என்னை தேவரீர் நிர்ஹேதுக க்ருபையாலே அழகிய மணவாளனுடைய திருவடிகளுக்கு ஆளாக்கி வைத்தது; இப்படிப்பட்ட தேவரீருடைய திருவருளுக்கு ஒப்பு இல்லை என்றாராயிற்று. (அக)

தெரிவுற்றஞானம் செறியப்பெறாது * வெந் தீவினையால்
உருவற்றஞானத் துழல்கின்ற வென்னை * ஒருபொழுதில்
பொருவற்ற கேள்வியனாக்கி நின்றானேன்ன புண்ணியனோ
தெரிவுற்றகீர்த்தி * இராமாநுசனேன்னும் சீர்முகிலே. (அஉ)

| | |
|---|---|
| தெரிவு உற்ற ஞானம் செறிய பெறாது | தெளிவான ஞானத்தைச் சேரப்பெறாமல் |
| வெம் தீ வினையால் | மிகவுங் கொடிதான கருமத்தாலே |

http://acharya.org

உரு அற்ற ஞானத்து உழல்கின்ற என்னை — உபயோகமற்ற ஞானத்தையுடையனாய் (ஒன்றிலும் நிலையில்லாமல்) திரிகிற என்னை

ஒரு பொழுதில் — ஒரு க்ஷணகாலத்தில்

பொருவு அற்ற கேள்வியன் ஆக்கிநின்றான் — ஒப்பற்ற பஹுச்ருதனாக ஆக்கியருளினவரும்

தெரிவு உற்ற கீர்த்தி — ப்ரஸித்தமானபுகழையுடையவரும்

சீர் முகில் என்னும் — (ஔதார்யத்தில்) சிறந்த மேகமென்னத்தக்கவருமான

இராமாநுசன் — எம்பெருமானார்

என்ன புண்ணியனோ — என்ன தார்மிகரோ? [ஒப்பற்ற தர்மிஷ்டரென்றபடி.]

* * *—இது நல்லது, இது தீயது என்று பகுத்தறியமாட்டாமல் மஹாபாபத்தினால் விபரீத ஞானத்தைக்கொண்டு ஸம்ஸாரத்தில் நின்றவிடத்தில் நில்லாமல் ஓய்வின்றித் திரிந்துகொண்டிருந்த எனக்கு ஒரு க்ஷணத்திலே எம்பெருமானார் அரிய பெரிய அர்த்தவிசேஷங்களை உபதேசித்தருளி 'பஹுச்ருதன்' என்னும்படியாக என்னை ஆக்கிவிட்டார்; இப்படி இரும்பைப் பொன்னாக்குகிற மஹாநுபாவர் வேறு யாரேனுமுண்டோ? என்கிறார்.

பொருவற்ற கேள்வியனாக்கி நின்றான்=அமுதனாரைப்போலே விஷயங்கள் கேட்டவர் இவ்வுலகில் யாருமில்லையென்னும்படி செய்தருளினார்; பஹுச்ருதனென்றால் பல பெரியோர்களிடத்தில் பலவாறாகப் பல விஷயங்களைப் பலகால் கேட்டுணர்ந்தவனென்று பொருள். பொருவு—ஒப்பு. ... ... ... (அஉ)

சீர்கொண்டு பேரறம்செய்து * நல்வீடு செறிதுமென்னும்
பார்கொண்ட மேன்மையர் கூட்டனல்லேன் * உன்பதயுகமாம்
ஏர்கொண்ட வீட்டை யெளிதினிலெய்துவ னுன்னுடைய
கார்கொண்ட வண்மை * இராமாநுசா! இது கண்டுகொள்ளே.

இராமாநுசா — எம்பெருமானாரே!,

சீர் கொண்டு — சமம் தமம் முதலிய குணங்களையுடையராய்

பேர் அறம் செய்து — சிறந்த தருமமாகிய சரணாகதி யோகத்தை யநுஷ்டித்து

நல் வீடு செறிதும் என்னும் — பரம புருஷார்த்தமான மோக்ஷத்தை அடைந்திடுவோம் என்றிருக்கிற

18

http://acharya.org

பார் கொண்ட மேன்மையர் கூட்டன் அல்லேன் { ப்ரஸித்தமான ப்ர பாவத்தையுடைய ப்ரபந்நர்களுடைய கோஷ்டியில் நான் சேர்ந்தவ னல்லேன் ;

உன் பதயுகம் ஆம் { தேவரீருடைய உபய பாதங்களாகிற

ஏர் கொண்ட வீட்டை { பரம விலக்ஷணமான மோக்ஷத்தை

எளிதினில் எய்துவன் { ஸுலபமாக அடைந்திடுவேன் ;

கார் கொண்ட { (ஔதார்யத்தில்) மேகத்தை வென்றிருக்கிற

உன்னுடைய தேவரீருடைய

வண்மை இது { ஔதார்யம் இப்படிப்பட்டது ;

கண்டுகொள் { தேவரீரே இதனைக் கண்டு கொள்ளலாம்.

[அடியேன் சொல்லவேணுமோ ?]

* * *—சரமச்லோகத்திலே கண்ணபிரான் நியமித்தபடியே நாம் சரணாகதியை அநுஷ்டித்து விட்டோமாகையால் நமக்கு மோக்ஷம் கைபுகுந்துவிட்டதேயாமென்று அறுதியிட்டிருக்கும் மஹான்களில் அடியேன் சேர்ந்தவனல்லேன் ; அப்படி அடியேன் ஒன்றும் அநுஷ்டிக்கவில்லை. தேவரீருடைய திருவடிகளாகிற மோக்ஷத்தை அடைந்திடத் தடையில்லை யென்கிற மனவுறுதியே அடியேனுக்குள்ளது என்றாராயிற்று.

"ப்ரபத்திः பரமோ தர்மः" என்று சாஸ்த்ரம் சொல்லுகையாலே பேரறம் என்றார். வீடு என்று கைவல்யத்துக்கும் வாசகமுண்டாகையாலே பரமபதமென்கிற வாசிதோற்ற நல்வீடு என்றார். பதயுகம்—வட சொல் ; யுகம் என்றால் இரண்டு. இது கண்டு கோள்=ஔதார்யத்தின் சீர்மை உதாரர்களுக்குத் தெரியாது ; யாசகனுக்கே தெரியுமாதலால் அடியேன் உணர்த்த தேவரீர் உணர்க—என்கிறாராகவுமாம். .... .... .... (அரு)

கண்டுகொண்டே னெம்மிராமா நுசன்றன்னைக் காண்டலுமே *
தொண்டுகொண்டே னவன் தொண்டர்பொற்றாளில்*என் தொல்லை [வெந்நோய்
விண்டுகொண்டேனவன் சீர்வெள்ளவாரியை வாய்மடுத் தின்று
உண்டுகொண்டேன் * இன்னமுற்றனவோதி லுலப்பில்லையே. (அசு)

எம் இராமா நுசன் தன்னை { ஸ்வாமி எம்பெருமானாரை

இன்று கண்டு கொண்டேன் { இன்று (உள்ளபடி) தெரிந்து கொண்டேன் ;

http://acharya.org

| | |
|---|---|
| காண்டலுமே | இப்படி தெரிந்து கொண்ட வளவிலே |
| அவன் தொண்டர் பொன் தாளில் | அவரது பக்தர்க ளுடைய அழகிய திருவடிகளில் |
| தொண்டு கொண்டேன் | அடிமைப்பட்டேன்; (அதனால்) |
| என் தொல்லை வெம் நோய் | எனது பழைய கொடுவினைகளை |
| விண்டு கொண்டேன் | நீக்கிக்கொண்டேன்; |
| அவன் சீர் வெள்ளம் வாரியை | அவருடைய கல்யாணகுண ப்ரவாஹமாகிற கடலை |
| வாய் மடுத்து உண்டு கொண்டேன் | வாயார அநுபவிக்கப் பெற்றேன்; |
| இன்னம் உற்றன | இப்படியாக இன்னமும் நான்பெற்ற நன்மைகளை |
| ஓதில் | சொல்லத் தொடங்கினால் |
| உலப்பு இல்லை | (அதுக்கு) ஒரு முடிவு கிடையாது. |

* * *—இனிமேலும் எம்பெருமானார் திருவருளால் நான் பெறப்போகிற நன்மைகள் அளவற உண்டு; எனினும், இன்றளவும் நான் பெற்ற பேறுகளுக்கு எல்லையுண்டோ வென்கிறார்.

எம்பெருமானாரை நம்போன்ற ஒரு மனிசராகவே ஸாமாந்யர் நினைத்திருப்பாராயினும் அடியேன் அப்படி நினைக்கவில்லை; 'இவர் மநுஷ்யரல்லர்; உலகத்தை வாழ்விக்க ஸ்ரீ வைகுண்டத்தில் நின்றும் வந்தவதரித்த நித்யஸூரிகளிலே ஒருவராவர்' என்று தெரிந்துகொண்டேன்; ["இராமாநுசன்றன்னைக் கண்டு கொண்டேன்" என்பதற்கு இது கருத்து.] அங்ஙனம் தெரிந்துகொண்டவுடனே அவரிடத்தில்வைத்த பக்தி அவரடியார்களளவுஞ்சென்று அவருடைய பக்தர்களின் திருவடிகளில் கிஞ்சித்கரிக்கப் பெற்றேன்; அதனால் என்னுடைய பாவங்களெல்லாம் தீரப்பெற்றேன். இப்படிப்பட்ட எனக்கு அவ்வெம்பெருமானாருடைய திவ்ய குணாநுஸந்தானமே * உண்ணுஞ் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையு மெல்லாமாகப் பெற்றேன். இப்படியாக நான்பெற்ற நன்மைகளில் இவை சில; எல்லாவற்றையும் பூர்த்தியாகச் சொல்லில் பெரிய பாரதமாம் என்றவாறு. உலப்பு—முடிவு. .... (அசு)

http://acharya.org

ஓதியவேதத்தி னுட்பொருளாய் * அதனுச்சி மிக்க
சோதியைநாத னெனவறியா துழல்கின்ற தொண்டர் *
பேதைமைதீர்த்த விராமாநுசனைத் தொழும் பெரியோர்
பாதமல்லாலென்றன் னாருயிர்க்கு * யாதொன்றும் பற்றில்லையே.

| | |
|---|---|
| ஓதிய வேதத்தின் உள் பொருள் ஆய் | அத்யயநம் பண்ணப்படுகிற வேதங்களின் உட்பொருளாயும் |
| அதன் உச்சி மிக்க சோதியை | அந்த வேதங்களின் முடிவாகிய உபநிஷத்துக்களிலே மிகவும் விளங்கு பவனுயுமுள்ள ஸ்ரீமந் நாராயணனை |
| நாதன் என அறியாது | ஸர்வ சேஷியென்று தெரிந்து கொள்ளாமல் |
| உழல்கின்ற தொண்டர் | கண்ட விடங்களிலும் அடிமைசெய்து திரிகின்ற பாமரர்களுடைய |
| பேதைமை | அவிவேகத்தை |
| தீர்த்த | போக்கடித்த |
| இராமாநுசனை | எம்பெருமானாரை |
| தொழும் | ஸேவிக்கின்ற |
| பெரியோர் | மஹான்களுடைய |
| பாதம் அல்லால் | திருவடிகள் தவிர |
| என் தன் ஆர் உயிர்க்கு | எனது அருமையான ஆத்மாவுக்கு |
| யாது ஒன்றும் பற்று இல்லை | வேறு ஏதேனும் புகலிடமில்லை. |

* * *—கீழ்ப்பாட்டில் "அவன் சீர் வெள்ளவாரியை வாய் மடுத்து உண்டு கொண்டேன்" என்றும் "அவன் தொண்டர் பொற்றாளில் தொண்டு கொண்டேன்" என்றும் சொன்ன இரண்டு விஷயங்களுள் முதற்சொன்ன விஷயமே [அதாவது—ஸ்ரீராமாநுஜ பக்தர்களுக்கு பக்தனாயிருப்பதே] எனக்குச் சிறந்த உத்தேச்யமென்கிறார் இதில்.

ஸகல வேதங்களாலும் பிரதிபாதிக்கப் படுபவனும், கருமகாண்டங்களிற்போல் இந்திரன், அக்நி, வருணன் முதலிய சப்தங்களையிட்டு அத்தேவதைகட்கு அந்தர்யாமியென்று (தலையைச் சுற்றிப்) பிரதிபாதிக்கப் படுகையன்றியே வேதாந்தமான உபநிஷத்துக்களில் ஸாக்ஷாத்தாகவே பிரதிபாதிக்கப்படுபவனுமான ஸர்வேச்வரனை சேஷியென்று தெரிந்துகொள்ளாமல் தேவதாந்தரங்களைத் தொழுதும் நீசரான அரசர்களைப் பணிந்தும் ஸம்ஸாரத்தில் அழுந்திக்கிடக்கிற ஸம்ஸாரிகளுடைய அஜ்ஞாநத்தைப் போக்கின

http://acharya.org

எம்பெருமானாரை அடிபணிந்த மஹாநுபாவர்கள் தாம் எனக்கு சரண்யர் என்றாராயிற்று.

வேதத்தின் நுண் பொருள் என்றும் பிரிக்கலாம். .... (அரு)

பற்று மனிசரைப்பற்றி * அப்பற்று விடாதவரே
உற்றாரென வுழன்றோடி நையேனினி * ஒள்ளியநூல்
கற்றார்பரவு மிராமாநுசனைக் கருது முள்ளம்
பெற்றார்யவர் * அவரெம்மை நின்றாளும் பெரியவரே. (அசு)

| | | | |
|---|---|---|---|
| பற்று மனிசரை பற்றி | உபயோகமற்ற மநுஷ்யர்களைப் பற்றி | ஒள்ளிய நூல் கற்றார் | சிறந்த சாஸ்த்ரங்களைக் கற்றவர்களாலே |
| அப் பற்று விடாது | அந்தப் பற்றுதலை விடாமல் | பரவும் | கொண்டாடப்படுகிற |
| அவரே உற்றார் என | அவர்களையே உறவினராகக் கொண்டு | இராமாநுசனை | எம்பெருமானாரை |
| உழன்று | அவர்கள் பின்னே அலைந்து | கருதும் உள்ளம் பெற்றார் யவர் | அநுஸந்திக்கும்படியான நெஞ்சையுடையோர் யாவரோ, |
| ஓடி | அவர்களிட்ட காரியங்களைச் செய்ய ஓடி | அவர் | அந்த மஹான்களே |
| இனி நையேன் | இனிமேல் துவள மாட்டேன் ; | எம்மை | நம்மை |
| | | நின்று ஆளும் பெரியவர் | சாச்வதமாக அடிமை கொள்ளும் மஹாத்மாக்கள். |

* * *—நேற்றுவரையில் நான் உபயோகமற்ற சிறு மனிசரையெல்லாம் சரணம்பற்றி, அவர்களே நமக்கு ரக்ஷகர் என்றெண்ணி அவர்களது மனைக்கடைதோறும் கிடந்து உழன்றேன் ; இனி ஒருநாளும் அப்படி கெட்டுப்போகமாட்டேன்; பல பல பண்டிதர்களாலே கொண்டாடப்படுகின்ற எம்பெருமானாரைச் சிந்திப்பவர்கள் யாவரோ அந்த ஸ்ரீராமாநுஜ பக்தர்களுக்கே அடியேன் ஆட்பட்டவனாக ஆய்விட்டபடியால் * பற்றுமனிசரை உற்றாரென உழன்றோடி நையேன் இனி.

பற்று மனிசர்=ஒரு ஆபத்தைப் போக்கவும் ஸம்பத்தைக் கொடுக்கவும் சக்தி போராதவர்கள் என்கை. "அப்பற்று விடாதவரே" என்றவிடத்து 'விடாது அவரே' என்று பிரிக்காமல்

http://acharya.org

விடாதவரே என்று ஒரு சொல்லாகவே கொண்டு உரைத்தலுமாம்; பற்றா மனிசரை நான் பற்றவில்லை; பற்றாமனிசரைப் பற்றி அப் பற்றை விடாதவர்கள் சிலருண்டு, அவரை நான் உற்றாரெனப் பற்றினேன் என்றவாறு. இதனால், மூர்க்கரிலும் கடைகெட்ட மூர்க்கனாயிருந்தே னென்றதாம்.

ஒள்ளிய நூல்—"சுடர்மிகு சுருதி" என்றார் ஆழ்வாரும்.

பெரியவர்பேசிலும் பேதையர் பேசிலும் * தன்குணங்கட்கு
உரியசொல்லென்று முடையவனென்றென்று*உணர்வில் மிக்கோர்
தெரியும்வண்கீர்த்தி யிராமாநுசன் மறை தேர்ந்துலகில்
புரியுநன்ஞானம் * பொருந்தாதவரைப் பொரும் கலியே. (௮௭)

| | | | |
|---|---|---|---|
| பெரியவர் பேசிலும் | ஞானசக்திகளால் நிறைந்த மஹான்கள் பேசினாலும் | உணர்வில் மிக்கோர் தெரியும் | சிறந்த ஞானிகள் அநுஸந்திக்கிற |
| | | வண் கீர்த்தி | திவ்யகீர்த்தியை யுடையரான |
| பேதையர் பேசிலும் | ஒன்றுந் தெரியாதவர்கள் பேசினாலும் | இராமாநுசன் | எம்பெருமானார் |
| | | மறை தேர்ந்து | வேதங்களை ஆராய்ந்து |
| தன் குணங்கட்கு உரிய சொல் என்றும் உடையவன் என்று என்று | தனது திருக் குணங்களுக்கு ஏற்றசொற்களை எப்போதும் உடையவரென்று பலகாலுஞ் சொல்லி | உலகில் | இவ்வுலகத்தில் |
| | | புரியும் | உபதேசித்தருளின |
| | | நல் ஞானம் பொருந்தாதவரை | நல்ல ஞானத்தில் சேராதவர்களை |
| | | கலி பொரும் | கலிபுருஷன் பீடிப்பன். |

* * *—கீழ்ப்பாட்டிற் கூறின அத்யவஸாயம் எனக்குக் கலியின் கொடுமையினால் ஒரு காலத்தில் மாறிவிடக் கூடுமென்று நினைக்கிறீர்களோ, அப்படி நினைக்கவேண்டா ; இராமாநுசனடியார் திறத்தில் கலிபுருஷன் ஒரு கொடுமையும் செய்யமுடியாதவன் ; மற்றவர்களைத்தான் கலிபுருஷன் கெடுப்பன். எனது அத்யவஸாயம் நெடுநாளளவும் நிலைநிற்கக் கூடியதே என்றாராயிற்று.

[பெரியவர் பேசிலும் இத்யாதி.] இதன் கருத்து யாதெனில் எம்பெருமானாருடைய திருக்குணங்களை மஹா ஞானிகள் தாம்

http://acharya.org

பேசி முடிக்கவல்லவர்கள், அற்பஞானிகள் நம்மால் பேசமுடியா தென்று பின்வாங்கக் கூடியவர்கள்—என்பதில்லை; “தங்களன் பாரத் தமது சொல்வலத்தால் தலைத்தலைச்சிறந்து பூசிப்ப” என் றும் “பேசுவார் எவ்வளவுபேசுவர் அவ்வளவே வாசமலர்த்துழாய் மாலையான்—வடிவு” என்றும் சொன்னாற்போல, பெரியோர் சொன் னாலும் சிறியோர் சொன்னாலும் அவரவர்களுடைய யோக்யதைக் குத் தக்கபடி சொல்லித் துதிக்கத்தகுந்தவர் எம்பெருமானார் என்று பெரியோர்கள் தெரிந்துகொண்டு, நாம் நமது சக்திக்குத் தக்கபடி ஸ்தோத்ரம் பண்ணுவோமென்று துதிக்கின்றார்களென்கை. அப் படி துதிக்கப்படுகின்ற எம்பெருமானார் உபதேசித்த ஞானத்தை அநாதரித்து அவ்வுபதேசத்தின்படி நடவாதவர்களே கலிதோ ஷத்தினால் வருந்துவார்களென்றதாயிற்று. ... ... (அஎ)

கலிமிக்க செந்நெல் கழனிக்குறையல் * கலைப்பெருமான்
ஒலிமிக்க பாடலையுண்டு தன்னுள்ளம் தடித்து * அதனால்
வலிமிக்கசீய மிராமாநுசன் மறைவாதியராம்
புலிமிக்கதென்று * இப்புவனத்தில் வந்தமை போற்றுவனே.

| | |
|---|---|
| கலி மிக்க | நிலவளம் மிகுந்த |
| செந்நெல் கழனி | செந்நெல்கழனிகளையுடைய |
| குறையல் | திருக்குறையலூரில் அவதரித்த |
| கலை பெருமான் | சாஸ்த்ர மென்னும் படியான திவ்யப்ரபந்தங்களை யருளிச் செய்த பெருமைவாய்ந்த திருமங்கை யாழ்வாருடைய |
| மிக்க ஒலி பாடலை | அதிசயித்த இசையையுடைய பெரிய திருமொழியை |
| உண்டு | அநுபவித்து |
| தன் உள்ளம் தடித்து | தமது திருவுள்ளம் பூரித்து |
| அதனால் வலி மிக்க | அத்தால் மிடுக்கு அதிகரித்த |
| சீயம் | சிங்கம்போன்ற |
| இராமாநுசன் | எம்பெருமானார், |
| மறை வாதியர் ஆம் புலி மிக்கது என்று இப் புவனத்தில் வந்தமை | வேதத்தில் துர்வாதங்கள் பண்ணுகிற குத்ருஷ்டிகளாகிற புலிகள் அதிகமாய் விட்டனவென்று (அவற்றைத் தண்டிப்பதற்காக) இவ்வுலகில் அவதரித்தபடியை |
| போற்றுவன் | புகழ்ந்திடக் கடவேன். |

http://acharya.org

* * *—திருக்குறையலூரில் திருவவதரித்துத் திருமொழி முதலான ஆறு திவ்யப் பிரபந்தங்களை அருளிச்செய்த திருமங்கை மன்னனுடைய ஸ்ரீஸூக்திகளை அநவரதம் அநுஸந்தித்துக் கொண்டு அதனாலே மனக்களிப்புற்ற எம்பெருமானார் இவ்வுலகத்தில் குத்ருஷ்டி மதங்களைக் கண்டிப்பதற்காக அவதரித்தார்; எப்படி அவதரித்தார்; குத்ருஷ்டிகளாகிற புலிகளைப் கபளீகரிக்க வந்த சிங்கமோ என்னும்படியாக அவதரித்தார். இப்படி அவதரித்தபடியை நான் போற்றுவேன் என்றாராயிற்று.

கலிமிக்க செந்நெற்கழனி=கலியாவது ஆரவாரம்; உழுவது நடுவது அறுப்பதாய்ச் செல்லுகிற கோலாஹலம். திருமங்கையாழ்வாருடைய திருவவதாரஸ்தலம் திருக்குறையலூரெனப்படும். "கலைப்பெருமான்" என்று சிறப்பித்துக் கூறியது அவருடைய நாவீறு விளங்குதற்கென்க. புவனம்—வடசொல். ... (அஅ)

போற்றரும் சீலத்திராமாநுச * நின்புகழ் தெரிந்து
சாற்றுவனேல் அதுதாழ்வதுதீரில் * உன்சீர் தனக்கோர்
ஏற்றமென்றே கொண்டிருக்கிலுமென் மனமேத்தி யன்றி
ஆற்றகில்லாது * இதற்கென்னினைவா யென்றிட் டஞ்சுவனே

| | | | |
|---|---|---|---|
| போற்ற அரு சீலத்து | புகழ்ந்து தலைக்கட்ட முடியாத சீலகுணத்தை யுடைய | உன் சீர் தனக்கு ஓர் ஏற்றம் | தேவரீருடைய திருக்குணங்களுக்கு மேன்மையாகும் |
| இராமாநுச | எம்பெருமானாரே; | என்றே கொண்டு இருக்கிலும் | என்று நான் தெரிந்து கொண்டிருந்தாலும் |
| நின் புகழ் | தேவரீருடைய திருக்குணங்களை | என் மனம் | எனது நெஞ்சானது |
| தெரிந்து சாற்றுவனேல் | உணர்ந்து பேசுவேனாகில் | ஏத்தி அன்றி | (தேவரீருடைய திருக்குணங்களைப்) புகழ்ந்தல்லது |
| அது | (நீசனாகிய நான்) பேசுகிறவது | ஆற்ற கில்லாது | தரித்திருக்க மாட்டாது; |
| தாழ்வு | (தேவரீருக்கு) அவத்யமாம்; | இதற்கு | இவ்விஷயத்திலே |
| அது தீரில் | அப்படி நான் பேசுவது தவிர்ந்தால் | என் நினைவாய் என்றிட்டு அஞ்சுவன் | தேவரீர் என்ன நினைக்குமோவென்று பயப்படுகின்றேன். |

http://acharya.org

* * *—கீழ்ப்பாட்டில் "போற்றுவனே" என்றதும் எம்பெருமானாரைப் போற்றுதற்குஉரிய யோக்யதை நமக்கு உண்டோ? என்று ஆராய்ந்து பார்த்தார்; யோக்யதை சிறிதுமில்லையென்றறிந்தார்; யோக்யதையில்லாத நாம் இந்த ஸாஹஸத்தில் கைவைப்பதானது அவரைப் பழிப்பதாகத் தலைக்கட்டுமேயன்றிப் புகழ்வதாக ஆகாது, ஆனபின்பு நாம் வாயைமூடிக்கொண்டிருப்பதே நன்று என்று கொண்டு வெறுமனிருக்கப்பார்த்தார்; நெஞ்சு கேட்கவில்லை; எம்பெருமானார் விஷயமாக எதையாவது சொல்லிக்கொண்டேயிருக்கவேணுமென்று நெஞ்சு பதறுகின்றபடியால் வாய்மூடியிருக்க முடியவில்லை; அந்தோ! என்செய்வேன்? போற்றவோ யோக்யதையில்லை; போற்றாமலிருக்கவோ மனமில்லை; போற்றியே தீரும்படி நேருகிறது. இவன் ஆற்றாமையாலே போற்றுகிறானென்று தேவரீர் நினைக்குமோ? அன்றி அஹங்காரத்தாலே போற்றுகிறானென்று நினைக்குமோ? எப்படிநினைக்குமோ? மிகவும் அஞ்சுகின்றேன் ஸ்வாமீ! என்றாராயிற்று. .... (அகூ)

நினையார் பிறவியை நீக்கும்பிரானை * இந்நீணிலத்தே
எனையாள வந்த விராமாநுசனை * இருங்கவிகள்
புனையார்புனையும் பெரியவர் தாள்களில் பூந்தொடையல்
வனையார் * பிறப்பில் வருந்துவர்மாந்தர் மருள்சுரந்தே. (கூ0)

| | |
|---|---|
| பிறவியை நீக்கும் பிரானை | ஸம்ஸாரத்தை யொழிக்கும் உபகாரகராயும் |
| இ நீள் நிலத்தே | இப்பெரிய பூமியிலே |
| எனை ஆள | என்னை அடிமை கொள்வதற்கே |
| வந்த | அவதரித்தவராயுமுள்ள |
| இராமாநுசனை | எம்பெருமானாரை |
| நினையார் | சிந்தியாதவர்களாயும், |
| இரு கவிகள் புனையார் | (அவர்விஷயமாக) நல்ல பாடல்களைப் பாடாதவர்களாயும் |
| புனையும் பெரியவர் தாள்களில் | (ஏதோபாக்கியத்தாலே) பாடல்களைப்பாடுகிற மஹான்களின் திருவடிகளில் |
| பூ தொடையல் வனையார் | புஷ்ப மாலைகளை ஸமர்ப்பியாதவர்களாயுமுள்ள |
| மாந்தர் | மனிசர்கள் |
| மருள் சுரந்து | அஜ்ஞானம் அதிகமாகப் பெற்று |
| பிறப்பில் வருந்துவர் | ஸம்ஸாரத்திற் கிடந்து துன்பப்படுவர்கள். |



http://acharya.org

* * *—கீழ்ப்பாட்டில், அஞ்சுவனே என்றவிவருடைய அச்சம் தீரும்படி குளிரக் கடாக்ஷித்தார் எம்பெருமானர்; அந்தக் கடாக்ஷ வைபவத்தாலே அச்சம் தீரப்பெற்றுத் தேறுதலடைந்து, மநோவாக்காயங்களில் ஏதேனுமொன்றால் எம்பெருமானர் விஷயத்தில் ஒரு நன்மைசெய்து வாழ்ந்துபோகலாமாயிருக்க, பாவிகள் அதுசெய்யாதே பாழாய்ப்போகிறார்களே! என அநுதபிக்கிறார் இதில்.

ஸம்ஸாரத்தில் பிறவியைப் போக்க வல்லவராய், விசேஷித்து அடியேனை ஆட்படுத்திக்கொள்ளுதற்காக இவ்வுலகில் அவதரித்தவரான எம்பெருமானரை இந்தப் பாழும் ஸம்ஸாரிகள் நெஞ்சாலே நினைக்கவாவது நினைக்கலாம்; அல்லது வாய்வந்தபடி சில சொற்களைச் சொல்லித் துதிக்கவாவது துதிக்கலாம்; அதுவுமல்லாமல், அவரைத் துதிக்கின்ற மஹான்களின் திருவடிகளில் பூவிட்டு வணங்கவாவது வணங்கலாம். இப்படிப்பட்ட மனமொழி மெய்களின் காரியங்களில் ஒன்றையுஞ் செய்யாமல் ஸம்ஸாரத்தைப் பூண் கட்டிக்கொள்ளுகிறார்களே பாவிகள்!. புனைதல்—தொடுத்தல். வனைதல்—ஸமர்ப்பித்தல். .... .... .... (கூ0)

மருள் சுரந்தாகம வாதியர்கூறும் * அவப்பொருளாம்
இருள் சுரந்தெய்த்த வுலகிருள்நீங்க * தன்னீண்டியசீர்
அருள் சுரந்தெல்லா வுயிர்கட்கும்நாத னரங்கனென்னும்
பொருள் சுரந்தான் * எம் மிராமாநுசன் மிக்கபுண்ணியனே. (கூக)

| | | | |
|---|---|---|---|
| ஆகமம் வாதியர் | (சிவன்சொன்ன) சைவ ஆகமத்தைப் பிரமாணமாகக் கொண்டு வாதம்பண்ணுகிற பாசுபதர்கள் | அவம் பொருள் ஆம் இருள் சுரந்து | நீசமான அர்த்தங்களாகிற இருள் மேலிட்டு (அதனால்) |
| | | எய்த்த | கெட்டுப்போன |
| | | உலகு | உலகத்தவர்களுடைய |
| மருள் சுரந்து | அஜ்ஞானம் அதிகரிக்கப் பெற்று | இருள் | அஜ்ஞாநாந்தகாரமானது |
| | | நீங்க | போகும்படியாக |
| கூறும் | (சிவனுடைய பாத்துவ விஷயமாகச்) சொல்லுகிற | தன் | தம்முடைய |
| | | ஈண்டிய சீர் அருள் சுரந்து | விலக்ஷணமான க்ருபையைப் பெருக்கி |

http://acharya.org

| | |
|---|---|
| எல்லா உயிர்கட்கும் நாதன் அரங்கன் என்னும் பொருள் | 'எல்லாப் பிராணிகளுக்கும் ஸ்வாமி ஸ்ரீ ரங்கநாதனே' என்கிற அர்த்தத்தை |

| | |
|---|---|
| சுரந்தான் | வெளியிட்டவரான |
| எம் இராமாநுசன் | ஸ்வாமி எம்பெருமானார் |
| மிக்க புண்ணியன் | சிறந்த புண்யாத்மா. |

* * *—இந்த ஸம்ஸாரிகள் இப்படி விமுகராயிருக்கச் செய்தேயும் இவர்களைத் தம்பேறாக உஜ்ஜீவிக்கச்செய்வதற்காக எம்பெருமானார் முயன்றதைச் சிந்தித்து அவரைக் கொண்டாடுகிறார்.

ஆஸுரப்ரக்ருதிகளை மோஹிக்கச்செய்வதற்காக ருத்ரன் சொன்ன சைவ ஆகமத்தையே முக்கியமாகக் கொண்டு பாசுபதர்கள் சொல்லுகிற அபார்த்தங்களைக் கேட்டு உலகத்தார் வழி திகைத்து ஸம்ஸாரத்தில் உழலாநிற்க, அப்பொழுது எம்பெருமானார் அவதரித்து அந்த அபார்த்தங்களைக் கண்டித்துத் தமது திருவருளாலே ஸ்ரீரங்கநாதனே ஸர்வ ஸ்வாமியென்னும் தத்துவப் பொருளை உபதேசித்தார்: ஓ ஜனங்களே! இந்த மஹா தார்மிஷ்டனையே நீங்களும் ஆச்ரயித்து உஜ்ஜீவித்துப்போங்கள் என்றாயிற்று.

மிக்க புண்ணியனை எம்மிராமாநுசன்......பொருள் சுரந்தான் என்றும், பொருள் சுரந்தவனை எம்மிராமாநுசன் மிக்க புண்ணியன் என்றும் இரண்டுபடியும் யோஜிக்கலாம். .... (கூக)

புண்ணியநோன்பு புரிந்துமிலேன் * அடிபோற்றி செய்யும்
நுண்ணருங்கேள்வி நுவன்றுமிலேன் * செம்மைநூற் புலவர்க்கு
எண்ணருங்கீர்த்தி யிராமாநுச இன்று நீபுகுந்தென்
கண்ணுள்ளும் நெஞ்சுள்ளும் * நின்றவிக்காரணம் கட்டுரையே.

| | |
|---|---|
| செம்மை நூல் புலவர்க்கு | நல்லசாஸ்த்ரங்களைக் கற்றுக் கவிசொல்ல வல்லவர்களுக்கும் |
| எண்ண அரு கீர்த்தி | அளவிட முடியாத கீர்த்தியையுடைய |
| இராமாநுச | எம்பெருமானாரே!, |

| | |
|---|---|
| புண்ணியம் நோன்பு புரிந்தும் இலேன் | புண்ணியமான ஒரு விரதத்தையும் அடியேன் அநுஷ்டிக்கவில்லை; |
| அடி போற்றி செய்யும் | தேவரீருடைய திருவடிகளை வாழ்த்துகைக்கு உறுப்பான |

http://acharya.org

நுண் அருங் கேள்வி — ஸூக்ஷ்மமாய் அருமையான ச்ரவணத்தை
நுவன்றும் இலேன் — (செய்யவேணுமென்று வாயாலே) சொல்லவுமில்லை. (இப்படியிருக்க;)
இன்று — இன்று
என் கண்ணுள்ளும் நெஞ்சுள்ளும் — அடியேனது கண்ணினுள்ளேயும் நெஞ்சினுள்ளேயும்
புகுந்து நின்ற இக் காரணம் கட்டுரை — புகுந்து எழுந்தருளியிருப்பதற்குக் காரணமருளிச் செய்யவேணும்.

* * *—ஸ்வாமிந்! சிறந்த கவிகளாலும் தேவரீருடைய திவ்ய கீர்த்திகள் அளவிட்டு வருணிக்க முடியாதவை; ஆகவே, தேவரீருடைய மாஹாத்மியம் எல்லையற்றது. இப்படிப்பட்ட தேவரீர் பாவியேனுடைய நெஞ்சையும் கண்ணையும்விட்டு அகலாது எப்போதும் அடியேனை விஷயீகரித்திருப்பதற்கு யாதுகாரணமென்று அடியேன் எவ்வளவுசிந்தித்தும் காரணம் புலப்படவில்லை அடியேன் ஏதாவது நல்ல காரியத்தைச் செய்திருந்தேனாகில் அது காரணமாயிருக்கலாமென்று நினைத்துக்கொள்ளக்கூடும்; அப்படி ஒரு நற்கருமமும் செய்திலேன். தேவரீருடைய திருவடிகளைப் போற்றுவதற்குப்பாங்கான விஷயங்களைக் காதால் கேட்டதுமில்லை; கேட்கவேணுமென்ற விருப்பமிருப்பதாக வாய் கொண்டும் ப்ரஸ்தாவம் செய்வதில்லை. இப்படிப்பட்ட என்னை இன்று தேவரீர் விஷயீகரித்தது என்னோ? என்கிறார். நிர்ஹேதுக கிருபையாலே விஷயீகரித்தருளிற்று என்றவாறு. கட்டுரை=இது முழுச்சொல்லு; சொல் என்றபடி. .... ... ... (கூஉ)

கட்டப்பொருளை மறைப்பொருளென்று * கயவர் சொல்லும்
பெட்டைக்கெடுக்கும் பிரானல்லனே * என் பெருவினையைக்
கிட்டிக்கிழங்கொடு தன்னருளென்னு மொள்வா ளுருவி
வெட்டிக்களைந்த * இராமாநுச னென்னும் மெய்த்தவனே.

கிட்டி — அடியேன்பக்கல் வந்து நெருங்கி
தன் அருள் என்னும் ஒள் வாள் உருவி — தம்முடைய கிருபையாகிற அழகிய வாளை உறையில் நின்றுங் கழற்றி (அதனால்)
என் பெரு வினையை கிழங்கொடு வெட்டி களைந்த — எனது மஹா பாபங்களை வேரோடே அறுத்தொழித்த
இராமாநுசன் என்னும் — எம்பெருமானாரென்கிற

http://acharya.org

| | |
|---|---|
| மெய் தவன் | மாமுனிவர் (எப்படிப்பட்டவரென்றால்) |
| கயவர் | துஷ்டர்களான குத்ருஷ்டிகள் |
| கட்டம் பொருளை மறை பொருள் என்று சொல்லும் பெட்டை | தப்பான அர்த்தங்களை வேதங்களின் அர்த்தமாகக் கொண்டு சொல்லுகிற பிரட்டுப் பேச்சுகளை |
| கெடுக்கும் பிரான் அல்லனே | கண்டித்தொழித்த மஹாநுபாவரன்றோ. |

* * *—கீழ்ப்பாட்டில் "இராமாநுச! இன்று நீ புகுந்து என் கண்ணுள்ளும் நெஞ்சுள்ளும் நின்றவிக்காரணங்கட்டுரையே" என்றதற்கு அவர் ஒரு உத்தரமும் அருளிச்செய்யாதிருக்கவே, நிர்ஹேதுக க்ருபையாலே செய்தருளினாரென்று தாமே தெளிந்து கொண்டு "என்னுடைய வலிய பாவங்களைத் தமது கருணையாலே அறுத்தருளின எம்பெருமானார், ஒருவரும் அபேக்ஷியாமலிருக்கத் தாமேவந்து குத்ருஷ்டிமதங்களைக் கண்டித்த மஹாநுபாவரன்றோ; அவர் செய்யுமவையெல்லாம் நிர்ஹேதுகமாகவன்றோ இருப்பதென்கிறார்.

கட்டம்—கஷ்டம்; கட்டப்பொருளென்றது கஷ்டப்பட்டுச் சொல்லும் பொருள் என்றபடி. மதாந்தரஸ்தர்கள் சொல்லும் பொருள்கள் அஸ்வரஸமாகையால் க்லிஷ்டங்களாயிருக்குமென்க. கயவர்—நீசர், துஷ்டர். பெட்டு=பிறரை வஞ்சிக்கச் சொல்லும் பொய்ப்பேச்சு. மெய்த்தவன்=தவமாவது சரணாகதியோகம்.

தவந்தருஞ் செல்வும் தகவுந்தரும் * சரியாப்பிறவிப்
பவந்தருந் தீவினை பாற்றித்தரும் * பரந்தாமமென்னும்
திவந்தரும் தீதிலி ராமாநுசன் தன்னைச் சார்ந்தவர்கட்கு
உவந்தருந்தேன் * அவன்சீரன்றி யானொன்று முள்மகிழ்ந்தே.

| | |
|---|---|
| தீது இல் இராமாநுசன் | எவ்வகைக் குற்றமும் அற்றவரான எம்பெருமானார் |
| தன்னை சார்ந்தவர் கட்கு | தம்மைவந்து அடைந்தவர்களுக்கு |

http://acharya.org

| | |
|---|---|
| தவம் தரும் | சரணாகதி நிஷ்டையைக் கொடுத்தருள்வர் ; |
| செல்வும் தகவும் தரும் | பக்தியாகிறசெல்வத்தையும் தமது அருளையும் கொடுத்தருள்வர் ; |
| சரியா பிறவி பவம் தரும் தீவினை | நிவர்த்திக்கமுடியாத ஜந்ம ஸம்ஸாரங்களை உண்டாக்குகின்ற கொடு வினைகளை |
| பாற்றி தரும் | போக்கடித்தருள்வர் ; |
| பரம் தாமம் என்னும் திவம் தரும் | பரமபதமென்று சொல்லப்படுகிற வானுலகத்தை அளிப்பர் ; (ஆனபின்பு) |
| யான் | அடியேன் |
| அவன் சீர் அன்றி | அவ்வெம்பெருமானுருடைய திருக்குணங்களைத் தவிர்த்து |
| ஒன்றும் | வேறொன்றையும் |
| உள் மகிழ்ந்து உவந்து அருந்தேன் | மனக் காதலோடே விரும்பி அநுபவிக்க மாட்டேன். |

* * *—நான் இனி எம்பெருமானுருடைய திருக்குணங்களைத் தவிர்த்து வேறொன்றையும் அனுபவிக்க மாட்டேன். அவ்வெம்பெருமானுர்க்கு என்ன விசேஷமென்கிறீர்களோ? அவர் தம்மையாச்ரயித்த பக்தஜநங்களுக்கு ஆதியிலே சரணாகதி நிஷ்டையை உண்டாக்கி அதன்மேல் ஸ்வரூபாநுரூபமான பக்தியைப் பிறப்பித்து ஜநநமரண ரூபமான ஸம்ஸாரத்துக்கு ஹேதுவான அநாதி பாபங்களையெல்லாம் போக்கிக் கடைசியில் ஸ்ரீவைகுண்டத்தையும் தந்தருள்பவர், ஆகையாலே அவருடைய திவ்ய குணங்களே எனக்கு ஸர்வதா போக்கியம்.

இப்பாட்டில், தரும் என்னும் பதம் ஐந்து இடங்களில் வருகின்றது. இரண்டாமடியின் முதலிலுள்ள தரும் என்பது மாத்திரம் தீவினைக்கு விசேஷணம்; மற்ற நான்கும் எப்பெருமானுர் பக்கல் அந்வயிக்கும் வினைமுற்றுக்கள்.

“சலியாப்பிறவி, சரியாப்பிறவி” என்பன பாட பேதங்கள். பவம்—வடசொல். பரந்தாம—வடசொல். திவம்—வடசொல் விகாரம்.

உண்ணின் றுயிர்களுக் குற்றனவேசெய்து * அவர்க்குயவே
பண்ணும் பரனும் பரிவிலனும்படி * பல்லுயிர்க்கும்
விண்ணின் தலைநின்று வீடளிப்பானெம் மிராமாநுசன்
மண்ணின் தலத்துதித்து * உய்மறைநாலும் வளர்த்தனனே.

http://acharya.org

| | |
|---|---|
| உயிர்களுக்கு உள் நின்று | எல்லா ஆத்மாக்களுக்கும் அந்தர்யாமியாயிருந்து கொண்டு |
| உற்றனவே செய்து | ஹிதமானவற்றையே நடத்திக்கொண்டு |
| அவர்க்கு | அவ்வாத்மாக்களுக்கு |
| உயவே பண்ணும் பரனும் | உஜ்ஜீவநத்தையே பண்ணிக்கொண்டிருக்கிற எம்பெருமானும் |
| பரிவு இலன் ஆம் படி | (ஆத்மாக்களிடத்தில் எம்பெருமானாரைப்போல்) ப்ரீதியுடையவனல்லன் என்ன வேண்டும்படியாக |
| பல் உயிர்க்கும் | ஸகல ஆத்மாக்களுக்கும் |
| வீடு அளிப்பான் | மோக்ஷத்தை அருள்வதற்காக |
| எம் இராமாநுசன் | ஸ்வாமி எம்பெருமானார் |
| விண்ணின் தலை நின்று | ஸ்ரீ வைகுண்டத்தில் நின்றும் |
| மண்ணின் தலத்து உதித்து | இப்பூதலத்திலே அவதரித்து |
| உய் மறை நாலும் | எல்லார்க்கும் உஜ்ஜீவநஹேதுவான நான்கு வேதங்களையும் |
| வளர்த்தனன் | குறைவின்றி வளரச் செய்தருளினார். |

* * *—ஸகல ஆத்மாக்களுடையவும் ஹ்ருதயத்திலே எப்போதும் இருந்துகொண்டு அவர்களை நல்வழியில் நடத்துகைக்கு உரிய செயல்களைச்செய்து உஜ்ஜீவிப்பிக்கின்ற ஸர்வேச்வரன்படியையும் இவ்வெம்பெருமானார்படியையும் பார்த்தால், இவ்விருவர்களுள் எம்பெருமானார்தாம் ஸம்ஸாரிகள் விஷயத்தில் அதிகமான அன்பு உடையவர்; எம்பெருமானுக்கு இவ்வளவு அன்பு இல்லை என்னும்படியாக இவர் எல்லார்க்கும் மோக்ஷமளிப்பதற்காகப் பரமபதத்தில் நின்றும் பூலோகத்திற்கு இறங்கி வந்து வேதமார்க்கத்தைப் பிரதிஷ்டாபநஞ் செய்தருளினர் என்றதாயிற்று. எம்பெருமான் ஸ்வதந்த்ரனாகையாலே நிக்ரஹத்துக்கும் அநுக்ரஹத்துக்கும் பொதுவாயிருப்பன்; எம்பெருமானார் அப்படியல்ல. அநுக்ரஹமே வடிவுகொண்டவரென்னலாம்படியாய் அனைவர்க்கும் முக்தியளிப்பவர் என்பது தேர்ந்த கருத்து.

இப்பாட்டின் ஈற்றடியை "மண்ணின்தலத்துதித்து மறைநாலும் வளர்த்தனனே" என்றே அத்யாபகர்கள் ஓதுவர்கள். "நேர்பதினாறே" என்ற கட்டளைக் கலித்துறையின் இலக்கணப்படி பதினாறெழுத்து ஒத்திருந்தாலும் தளைதட்டுகிறபடியாலும்,

http://acharya.org

ஸ்ரீ மணவாளமாமுனிகளுரையில் "ஸர்வோஜ்ஜீவந சாஸ்த்ரமான" என்கிற ஒரு வாக்கியம் வ்யர்த்தமாகவேண்டி வருகையாலும் இவ்விரண்டு குறைகட்கும் இடமறும்படி "....உய் மறைநாலும்" என்கிற ப்ராசீந பாடம் கொள்ளத்தக்கது. உய் என்பதற்குப் பொருளாகவே மணவாள மாமுனிகள் "ஸர்வோஜ்ஜீவந சாஸ்த்ரமான" என்கிற வாக்கியமருளிச் செய்தாரென்க. ... .... (௬௫)

வளரும்பிணிகொண்ட வல்வினையால் * மிக்க நல்வினையில்
கிளருந்துணிவு கிடைத்தறியாது * முடைத் தலையூன்
தளருமளவும் தரித்தும் விழுந்தும் தனிதிரிவேற்கு
உளரேம்மிறைவர் * இராமாநுசன் றன்னை யுற்றவரே. (௬௬)

| | |
|---|---|
| வளரும் பிணி கொண்ட வல்வினையால் | அளவற்ற துன்பங்களை யுண்டாக்க வல்ல கொடிய கருமங்களாலே |
| மிக்க நல் வினையில் | பரம தர்மமான சரணாகதியில் |
| கிளரும் துணிவு கிடைத் தறியாது | மஹாவிச்வாஸம் கிடைக்காததனால் |
| முடை தலை ஊன் தளரும் அளவும் | கெட்ட நாற்றங்களுக்கு இருப்பிடமான சரீரம் கட்டுக் குலையும்வரையில் |
| தரித்தும் விழுந்தும் | ஒருவாறு தரித்திருந்தும் (சப்தாதி விஷயங்களிலே) போய்விழுந்தும் |
| தனி திரிவேற்கு | துணையின்றித் திரிகிற எனக்கு |
| இறைவர் | ஸ்வாமிகள் (யாரென்றால்) |
| எம் இராமாநுசன் தன்னை உற்றவர் | நம் எம்பெருமானாரை ஆச்ரயித்த மஹான்கள் |
| உளர் | இருக்கிறார்கள். |

* * *—"மறைநாலும் வளர்த்தனன்" என்ற அமுதனாரை நோக்கிச் சிலர், எம்பெருமானார் மறைநாலும் வளர்த்தது உண்மை தான்; அவர் சேதநர்கட்கு உஜ்ஜீவநோபாயமாக வேதாந்தக் கட்டளையிலே அருளிச்செய்தவை பக்தியும் ப்ரபத்தியும்; இவற்றில் உமக்கு எந்த வுபாயத்தில் ஊற்றம்? என்று கேட்க, எனக்கு அவ்விரண்டும் உபாயமல்ல; ஸ்ரீராமாநுஜ பக்தர்களுடைய அபிமானத்திலே ஒதுங்கி வாழ்பவன் அடியேனென்கிறார்.

என்னுடைய அநாதி பாபத்தினால் எனது நெஞ்சில் பக்தியும் பிறக்கவில்லை; ப்ரபத்திக்குவேண்டிய மஹாவிச்வாஸமும் பிறக்க

http://acharya.org

வில்லை. மிகவும் ஹேயமான சரீரத்தைப் போஷித்துக்கொண்டு சப்தாதி விஷயங்களிலே ஊன்றினவனாயிருந்தேன். இப்படி கதியற்ற எனக்கு எம்பெருமானாருடைய அந்தரங்க பக்தர்களே ரக்ஷகராவாராகையால் நான் ததீயாபிமாந நிஷ்டனானேன் என்றாராயிற்று.

மிக்க நல்வினை=வினை, நல்வினை, மிக்க நல்வினை என்று மூன்றாக்கி, வினையென்று ஸாமாந்ய பக்தியைச் சொல்லுகிறதாகவும், நல்வினையென்று விசேஷ பக்தியைச் சொல்லுகிறதாகவும, மிக்க நல்வினையென்று ப்ரபத்தியைச் சொல்லுகிறதாகவும் பெரியோர் கூறுவர். முடைத்தலையூன்=தலை என்று இடம்; முடையாவது துர்நாற்றம்; துர்நாற்றத்திற்கு இருப்பிடமான சரீரம் என்றபடி. "ஈண்டாவழும்பும் செந்நீரும் சீயும் நரம்பும் செறி தசையும், வேண்டா நாற்றம் மிகுமுடல்" (திருவரங்கக் கலம்பகம்) என்றார் இவரது திருக்குமாரர். ... ... .... (௯௬)

தன்னையுற்றாட்செய்யும் தன்மையினோர் * மன்னு தாமரைத்தாள்
தன்னையுற்றாட்செய்ய வென்னையுய்த்தா னின்று * தன்தகவால்
தன்னையுற்றாரன்றித் தன்மையுற்றா ரில்லை யென்றறிந்து
தன்னையுற்றாரை * இராமாநுசன் குணம் சாற்றிடுமே. (௯௭)

| | |
|---|---|
| இராமாநுசன் | எம்பெருமானாரானவர், |
| தன்னை உற்றார் அன்றி தன்னை உற்றாரை குணம் சாற்றிடும் தன்மை உற்றார் இல்லை என்று அறிந்து | தம்மைப்பற்றியிருப்பாருண்டேயொழிய தம்மைப் பற்றியிருப்பவர்களுடைய குணகீர்த்தனம் பண்ணும் ஸ்வபக்தபக்தர்கள் ஒருவருமில்லையென்று திருவுள்ளம்பற்றி |
| என்னை | அடியேனை |

| | |
|---|---|
| இன்று | இன்றைத்தினத்தில் |
| தன் தகவால் | தமது அருளாலே (என்ன செய்தாரென்றால்) |
| தன்னை உற்று ஆள் செய்யும் தன்மையினோர் | தம்மையடைந்து கைங்கரியம் பண்ணும் ஸ்வபாவமுடையரான ஸ்வபக்தர்களுடைய |
| மன்னு தாமரை தாள் தன்னை உற்று ஆள் செய்ய | ஒன்றோடொன்று சேர்ந்த திருவடித் தாமரைகளை நான் அடைந்து ஆட்செய்யும்படி |
| உய்த்தான் | வைத்தருளினார். |

* * *—எம்பெருமானார் என்னைத் தம்மிடத்து ஆட்படுத்திக்கொள்ளாமல் தம்மை அடுத்தவர்கள் பக்கல் என்னை ஆட்படுத்



http://acharya.org

தினார். இதற்கு என்ன காரண மென்கிறீர்களோ? எல்லாரும் நம்மையே நேராகவந்து ஆச்ரயிக்கிறார்களேயொழிய நம்மை ஆச்ரயித்தவர்களை ஆச்ரயிப்பார் ஆருமில்லையே; இவ்வமுதனார், நம்மை ஆச்ரயித்தவர்களை ஆச்ரயிக்கிற அதிகாரியாக இருக்கட்டும்—என்று திருவுள்ளம்பற்றிச் செய்தார்.

இப்பாட்டின் அந்வயக்ரமம் சிறிது வருத்தப்படுத்தும்; ஜாகரூகராயிருந்து அந்வயித்துக்கொள்க;—தன்னையுற்றாரன்றித் தன்னையுற்றாரைக் குணம் சாற்றிடுந் தன்மையுற்றாரில்லை யென்றறிந்து, இராமாநுசன், தன்னையுற்றாட்செய்யுந் தன்மையினோர் மன்னு தாமரைத்தாள் தன்னையுற்று ஆட்செய்யத் தன்தகவால் இன்று என்னையுய்த்தான்—என்று அந்வயம்.

சாற்றிடும் என்கிற விசேஷணபதம் பாட்டின் முடிவில் வந்து நின்றது அபூர்வப் பிரயோக மென்பர். என்னையுற்றான்—என்று ஓதுவர்கள். ... .... ... ... (கூஎ)

இடுமேயினிய சுவர்க்கத்தில் * இன்னம் நரகிலிட்டுச்
சுடுமேயவற்றைத் தொடர்தரு தொல்லை * சுழல்பிறப்பில்
நடுமேயினிநம் மிராமாநுசன் நம்மை நம்வசத்தே
விடுமேசரண மென்றால் * மனமேநையல் மேவுதற்கே. (கூஅ)

நம் இராமாநுசன் — நம் எம்பெருமானார்,

சரணம் என்றால் — உமது திருவடிகளே சரணமென்று நாம் சொல்லி விட்டோமானால்

இனிய சுவர்க்கத்தில் இடுமே — (சிலர்க்கு) இனிதாகத் தோற்றுகிற ஸ்வர்க்கத்திலே நம்மைக்கொண்டு சேர்த்திடுவரோ?

இன்னம் — அல்லது

நரகில் இட்டு சுடுமே — நரகத்திலே கொண்டு தள்ளி தஹிக்கச் செய்வரோ?

அவற்றை தொடர்தரு — அந்த ஸ்வர்க்கநரகங்களைத் தொடர்ந்து கிடக்கிற

தொல்லை சுழல் பிறப்பில் — அநாதியாயும் சுழன்று வருவதாயுமுள்ள ஜன்மத்திலே

நடுமே — நிறுத்துவரோ?

இனி — மேலுள்ள காலங்களில்

நம்மை — நம்மை

நம் வசத்தே விடுமே — நாம்போகிறவழியே விட்டுவைப்பரோ?

(இவைசெய்யமாட்டாரான பின்பு)

மனமே! — ஓநெஞ்சே!

மேவுதற்கு — பேறுபெறும் விஷயமாக

நையல் — நீ கரையவேண்டா.

http://acharya.org

* * *—மனமே! இனி நீ 'நமக்குப் பேறு கிடைக்குமோ கிடைக்காதோ?' என்று அவ்விஷயத்தில் சிறிதும் கவலைப்படாதே. நாம் 'ஸ்வர்க்கலோகம் போகநேருமோ? நரகம்போக நேருமோ? இந்த ஸம்ஸாரத்தில்தான் கிடந்து உழலும்படி நேருமோ?' என்று சிந்தித்து இனி நீ வருந்தவேண்டா; 'எம்பெருமானார் திருவடிகளே சரணம்' என்று ஒருதடவை சொல்லிவிட்டால் அந்த எம்பெருமானார் நம்மைக் கைவிடுவரோ? சிலநாளிருந்து இன்பம் நுகர்ந்து மீள்வதற்குறுப்பான சுவர்க்கத்திலே நம்மைக் கொண்டுபோகப் பார்த்திருப்பரோ? துன்பங்களையே அநுபவிப்பதற் கிடமான நரகத்திலே நம்மைக்கொண்டுபோய் ஹிம்ஸிக்கப் பார்த்திருப்பரோ? இன்பதுன்பங்களை மாறிமாறி அநுபவிப்பதற்கு இடமான இவ்விருள்தருமா ஞாலத்திலேதான் வைப்பரோ! இந்நிலத்தில் சிலநாள் நம்மை வைத்திருந்தாலும் தந்தலைவெட்டியாய் நம்மை வைத்திடுவரோ? பின்னை என் செய்வார்? தம்முடைய பாதங்களில் சேரும்படி தாமே அங்கீகரித்திடுவர்! அதற்காக நீ எள்ளளவும் கரையவேண்டா என்று தமது திருவுள்ளத்தை நோக்கிச் சொன்னாராயிற்று.

அவற்றைத் தொடர்தரு தொல்லைச் சுழல்பிறப்பு=சுவர்க்கம் போனாலும் நரகம் போனாலும் மாறிமாறிப் பலபிறப்பும் பிறக்க வேண்டுகையாலே ஸ்வர்க்க நரகங்களைத் தொடர்ந்தேயிருக்குமாம் பிறப்பு.

நையல்—முன்னிலை யெதிர்மறை வினைமுற்று. .... (கூஅ)

தற்கச் சமணரும் சாக்கியப்பேய்களும் * தாழ்சடையோன்
சொற்கற்ற சோம்பரும் சூனியவாதரும் * நான்மறையும்
நிற்கக் குறும்புசெய் நீசரும்மாண்டனர் நீணிலத்தே
பொற்கற்பகம் * எம்மிராமாநுச முனி போந்தபின்னே. (கூகூ)

| | |
|---|---|
| தற்கம் சமணரும் | தர்க்கம் பண்ணுகிற சமணர்களும் |
| பேய் | பேய்போலே பிடித்தபிடி விடாதே நிற்கிற |
| சாக்கியர்களும் | பௌத்தர்களும் |
| தாழ் சடையோன் சொல் கற்ற சோம்பரும் | ருத்ரனுடைய சொல்லாகிய சைவாகமத்தைக் கற்ற தாமஸர்களான சைவர்களும் |

http://acharya.org

| | |
|---|---|
| சூனிய வாதரும் | சூந்யவாதிகளும் |
| நால் மறையும் நிற்க | நான்கு வேதங்களும் விளங்கிக் கொண்டிருக்கச்செய்தே |
| குறும்பு செய் நீசரும் | (அவற்றுக்குச் சேராத) அபார்த்தங்களைப் பண்ணுகிற குத்ருஷ்டிகளும் |
| மாண்டனர் | ஒழிந்தார்கள் ; |

(எப்போது ? என்றால்)

| | |
|---|---|
| பொன் கற்பகம் எம் இராமாநுச முனி | சிறந்த கல்ப வ்ருக்ஷம்போலே உதாரரான ஸ்வாமி எம்பெருமானார் |
| நீள் நிலத்தே போந்த பின் | விசாலமான இப்பூமியிலே திருவவதரித்த பின்பு. |

* * *—ஸகலமான அர்த்தங்களையும் அளிக்கவல்ல எம்பெருமானார் இவ்வுலகத்தில் திருவவதரித்தபிறகு ஜைநர், பௌத்தர், சார்வாகர், பாசுபதர், அத்வைதிகள் முதலிய மதாந்தரஸ்தர்கள் எல்லாரும் மாண்டுபோனார்கள் ; இனி அவர்களால் எவ்விதமான கெடுதியும் உலகத்துக்கு விளையமாட்டாது என்றாராயிற்று.

சமணர்—'ஆர்ஹதர்' என்று வழங்கப்படுகிற ஜிநமதத்தவர்கள். சாக்கியர்—புத்தமதத்தவர்கள் : இவர்கட்குக் கொண்டது விடாமையாகிற பிடிவாதம் அதிகமாகையாலே "சாக்கியப் பேய்களும்" என்றார். சூனியவாதர்—'ஸர்வம் சூந்யம்' என்று வாதிப்பவர்கள். ... .... ... ... ... (கூகூ)

போந்ததென்னெஞ்சென்னும்பொன்வண்டு * உனதடிப்போதி
ராந்தெளிதேனுண் டமர்ந்திட வேண்டி * நின்பாலதுவே [லொண்சீ
ஈந்திடவேண்டு மிராமாநுச இதுவன்றி யொன்றும்
மாந்தகில்லாது * இனி மற்றொன்றுகாட்டி மயக்கிடலே. (கoo)

இராமாநுச — எம்பெருமானாரே !

| | |
|---|---|
| என் நெஞ்சு என்னும் பொன் வண்டு | எனது நெஞ்சாகிற அழகிய வண்டானது |
| உனது அடி போதில் | தேவரீருடைய திருவடித் தாமரைகளில் |
| ஒண் சீர் ஆம் தெளி தேன் உண்டு அமர்ந்திட வேண்டி | அழகிய குணங்களாகிற தேனைப்பருகி நித்யவாஸம் பண்ணவிரும்பி |
| நின் பால் | தேவரீரிடத்தில் |
| போந்தது | வந்து சேர்ந்தது ; |
| அதுவே | அத்திருக்குணங்களையே |

http://acharya.org

| | |
|---|---|
| ஈந்திட வேண்டும் | அளித்தருள வேணும்; |
| இது அன்றி | இத்திருக்குணங்களைத் தவிர |
| ஒன்றும் | வேறொன்றையும் |
| மாந்த கில்லாது | (நெஞ்சு) புஜிக்க மாட்டாது; |
| இனி | இப்படியான பின்பு |
| மற்று ஒன்று காட்டி | வேறொரு விஷயத்தைக்காட்டி |
| மயக்கிடல் | மயக்கவேண்டா. |

* * *—ஸ்வாமிந்! அடியேனுடைய நெஞ்சு தேவரீருடைய திருக்குணங்களையே எப்போதும் அநுபவிக்க விருப்பங்கொண்டு மேல்விழுந்து தேவரீரிடம் வந்து சேர்ந்தது. இது இனி வேறொன்றை விரும்பாது; தேவரீரும் இனி இதை ஸம்ஸாரத்தில் போகவொட்டாமல் தேவரீரிடத்திலேயே நிலைநிறுத்திக் கொள்ள வேணும்.

தமது நெஞ்சை ஒரு வண்டாக ரூபணம் பண்ணினதற்கு ஏற்ப எம்பெருமானாருடைய திவ்யகுணங்களை மதுவாக ரூபணம் பண்ணினார். இந்த வண்டுக்கு அந்தத் தேன் தவிர வேறொன்றும் ரஸிக்கமாட்டாது.

மயக்கிடல்=முன்னிலை யெதிர்மறை வினைமுற்று. (க00)

மயக்கு மிருவினை வல்லியிற்பூண்டு * மதிமயங்கித்
துயக்கும் பிறவியில் தோன்றியவென்னை * துயரகற்றி
உயக்கொண்டு நல்கு மிராமாநுசவென்ற துன்னை யுன்னி
நயக்குமவர்க் கிதிழுக்கென்பர்*நல்லவரென்று நைந்தே. (க0க)

| | |
|---|---|
| மயக்கும் | "அஜ்ஞானத்தை விளைக்க வல்ல |
| இரு வினை | புண்ய பாபமென்னும் இருகருமங்களாகிற |
| வல்லியில் | விலங்கில் |
| பூண்டு | அகப்பட்டுக் கொண்டு |
| மதி மயங்கி | அறிவுகெட்டு |
| துயக்கும் | ப்ரமிக்கச் செய்கிற |
| பிறவியில் | ஸம்ஸாரத்திலே |
| தோன்றிய என்னை | பிறந்த அடியேனை |
| துயர் அகற்றி உய கொண்டு | துக்கங்களைப் போக்கி உஜ்ஜீவிக்கச்செய்து |
| நல்கும் | அருள்செய்கின்ற |
| இராமாநுச | எம்பெருமானாரே!" |

http://acharya.org

என்றது இது — என்று தேவரீருடைய பாவநத்வத்தைப்பேசுகையாகிற இது
என்றும் நயக்குமவர்க்கு — எப்போதும் ஆசையுடனிருப்பவர்களுக்கு
உன்னை உன்னி நைந்து — தேவரீரை அநுஸந்தித்து உருகி
இழுக்கு என்பர் நல்லவர் — தகாதது என்று ஸத்துக்கள் சொல்லுவர்கள்.

* * *—எம்பெருமானார்க்கு, பாவநத்வம் என்றும் போக்யத்வம் என்றும் இரண்டு படிகள் உண்டு. பாவநத்வமாவது— பக்தர்களுடைய பாவங்களைப்போக்கிப் பரிசுத்தப்படுத்தல். போக்யத்வமாவது எப்போதும் அநுபவிக்கக் கூடியவராயிருக்கை. இவ்விரண்டில் பாவநத்வத்தைவிட போக்யத்வமே சிறந்தது; ஏனென்றால், நம்முடைய பாவங்களைப் போக்கினாரென்கிற காரணத்தாலே நாம் அவரைப் பாவநர் என்று அநுஸந்திக்கவேண்டும்; இது ஒரு உபாதியைப்பற்றி வருவது. போக்யத்வத்தை அநுஸந்திப்பது இப்படிப்பட்டதல்ல. அது ஸ்வரூபப்ராயுக்தம். ஆகையாலே, பாவநத்வத்தை அநுஸந்திப்பதைவிட போக்யதையை அநுஸந்திப்பதே சிறந்தது. அப்படியிருக்க இவ்வமுதனார் இப்பிரபந்தத்தில் அடிக்கடி எம்பெருமானாருடைய பாவநத்வத்தை அநுஸந்தித்தார்; 'என்னுடைய பாவங்களையெல்லாம் போக்கினார், என்னுடைய குற்றங்களையெல்லாம் நீக்கினார்' என்று அடிக்கடி சொல்லியிருக்கிறார். அப்படி சொன்னதற்கு அநுதாபப்படுகிறார் இப்பாட்டில். போக்யதையில் ஈடுபட்டுப் பேசவேண்டியிருக்க, பாவநத்வத்தில் ஈடுபட்டமை தோற்றப் பேசினது பிசகு என்று பெரியோர்கள் சொல்லுவர்கள் என்றாராயிற்று. .... (கoக)

நையும் மனமுன் குணங்களையுன்னி * என்னாவிருந்தேம்
ஐயனிராமாநுச னென்றழைக்கும் * அருவினையேன்
கையும் தொழும் கண்கருதிடுங்காணக் கடல்புடைசூழ்
வையமிதனில் * உன்வண்மை யென்பாலென் வளர்ந்ததுவே.

(எம்பெருமானாரே!)
மனம் — எனது நெஞ்சானது
உன் குணங்களை உன்னி — தேவரீருடைய திருக்குணங்களைச்சிந்தித்து

http://acharya.org

| | |
|---|---|
| கையும் | கரைகின்றது ; |
| என் நா | எனது வாக்கானது |
| இருந்து | நிலைநின்று |
| எம் ஐயன் இராமாநுசன் என்று அழைக்கும் | எமக்கு ஸ்வாமியான எம்பெருமானாரே ! என்று அழைக்கின்றது. |
| அரு வினையேன் | மஹாபாபியான என்னுடைய |
| கையும் | கைகளும் |
| தொழும் | அஞ்ஜலிபண்ணுகின்றன ; |
| கண் | கண்களானவை |
| காண கருதிடும் | (தேவரீரை) ஸேவிக்க ஆசைப் படுகின்றன ; |
| கடல் புடை சூழ் வையம் இதனில் | சுற்றிலும் கடல் சூழப்பெற்ற இம்பூமண்டலத்தினுள்ளே |
| உன் வண்மை | தேவரீருடைய ஔதார்ய குணம் |
| என்பால் வளர்ந்தது என் | அடியேன்மீது (இவ்விதமாக) வளர்ந்ததற்குக் காரணம்யாதோ?. |

* * *—ஸ்வாமிந்! அடியேனுடைய நெஞ்சு தேவரீருடைய குணாநுபவத்தில் ஊன்றி ‘இப்படியும் சில குணங்கள் இருப்பதே!’ என்று உருகிப்போகின்றது. எனது நாவானது தேவரீருடைய திருநாம ஸங்கீர்த்தனத்திலே ஆழ்ந்துவிட்டது, எனது கைகள் தேவரீருக்கு அஞ்ஜலி பண்ணுவதில் ஆழ்ந்தன. கண்கள் தேவரீரை இப்போது ஸேவித்துக் கொண்டிருப்பதுபோலவே என்றைக்கும் ஸேவித்துக்கொண்டிருக்க ஆவல்கொண்டன. ஆக இப்படி எனது கரணங்களெல்லாம் தேவரீர்பக்கல் ஊன்றும்படி தேவரீருடைய வள்ளல்தனம் அடியேனொருவன்மீது ஏறிப்பாய்ந்தவிது சொல்லுந் தரமன்று—என்றாராயிற்று. ஐயன் இராமாநுசன்—அண்மைவிளி. முதல் வேற்றுமையாகவே கொண்டால், அழைக்கும் என்றது ‘வ்யவஹரிக்கும்’ என்றபடியாம். ... .... ... (க0உ)

வளர்ந்தவெங்கோப மடங்கலொன்றாய் * அன்று வாளவுணன்
கிளர்ந்தபொன்னாகம் கிழித்தவன் * கீர்த்திப் பயிரெழுந்து
விளைந்திடுஞ்சிந்தை யிராமாநுச னென்றன் மெய்வினைநோய்
களைந்து நன்ஞானமளித்தனன் * கையில் கனியென்னவே.

| | |
|---|---|
| அன்று | முன்னொரு காலத்தில் |
| வளர்ந்த வெம் கோபம் மடங்கல் ஒன்று ஆய் | உக்ரமான கோபம் மேலிடப்பெற்ற ஒரு நரஸிங்க மூர்த்தியாகி |
| வாள் அவுணன் | வாளையுடைய ஹிரண்யாஸுரனது |
| கிளர்ந்த | செருக்கினால் நெறித்திருந்த |

http://acharya.org

| | | | |
|---|---|---|---|
| பொன் ஆகம் | பொன்போன்ற மார்வை | இராமாநுசன் | எம்பெருமானார் |
| கிழித்தவன் | கிழித்துப் பொகட்டவனான எம்பெருமானுடைய | என் தன் மெய் வினை நோய் களைந்து | எனதுடலைப்பற்றியிருக்கிற வினை நோய்களையெல்லாமொழித்து |
| கீர்த்தி பயிர் எழுந்து | திருப்புகழ்களாகிற பயிர் வளர்ந்து | கையில் கனி என்ன | கையிலங்கு நெல்லிக் கனிபோலே ஸுலபமாக |
| விளைந்திடும் சிந்தை | விளையப்பெற்ற திருவுள்ளத்தையுடையரான | நல் ஞானம் அளித்தனன் | விலக்ஷணமான ஞானத்தைத் தந்தருளினார். |

* * *—கீழ்ப்பாட்டிற் சொன்னபடியே தம்முடைய கரணங்கள் எம்பெருமானார் விஷயத்தில் ஊன்றுகைக்குக்காரணம் என்னவென்று கேட்பார்க்கு விடை கூறுவதுபோலும் இப்பாட்டு. நரசிங்கவுருக்கொண்டு இரணியனுடலைப்பிளந்த பிரானுடைய திருக்கல்யாண குணங்களை எப்போதும் சிந்தித்துக்கொண்டிருக்கிற எம்பெருமானார் என் பாவங்களைப்போக்கி நல்லறிவை நல்கினார்; ஆகையால்தான் என்னுடைய கரணங்கள் அவர்பக்கலிலேயே ஆழங்காற்பட்டுவிட்டன—என்றாராயிற்று.

மடங்கல்—ஆண் சிங்கம். இரணியன் எம்பெருமானளவில் எவ்வளவு தீமை செய்திருந்தாலும் எம்பெருமானுக்குக் கோபம் உண்டாகாது; பரமபாகவதனான ப்ரஹ்லாதனளவில் அளவற்ற தீமைகள் புரிந்ததனால் * வளர்ந்த வெங்கோப மடங்கலொன்றாயினனென்க. கீர்த்திப்பயிரெழுந்து விளைந்திடுஞ் சிந்தை=பகவத்குணமாகிற பயிர் எம்பெருமானாருடைய திருவுள்ளமாகிற க்ஷேத்திரத்திலே சிறப்பாக விளைந்தோங்குமென்றது—எம்பெருமானாரைப்போல் பகவத் குணாநுபவம் பண்ணிக் களிப்பார் வேறு ஆருமில்லையென்றவாறு.

கையிற்கனியென்னவே=ஸ்பஷ்டமாக என்று கருத்து. "கரதலாமலகம்" என்பர்—வடநூலாரும். ... .... (கoரு)

கையில்கனியென்னக் கண்ணனைக் காட்டித்தரிலும் * உன்தன்
மெய்யில்பிறங்கிய சீரன்றி வேண்டிலன் யான் * நிரயத்
தொய்யில்கிடக்கிலும் சோதிவிண் சேரிலும் இவ்வருள்நீ
செய்யில்தரிப்பன் * இராமாநுச என்செழுங் கொண்டலே. கoசு)

http://acharya.org

| | |
|---|---|
| செழு கொண்டல் | (ஔதார்யத்தில்) விலக்ஷணமான மேகம்போன்ற |
| என் இராமாநுசா | எம்பெருமானாரே!, (தேவரீர்) |
| கண்ணனை | எம்பெருமானை |
| கையில் கனி என்ன | உள்ளங்கை நெல்லிக் கனிபோலே |
| காட்டி தரினும் | காட்டிக் கொடுத்தாலும் |
| உன் தன் மெய்யில் பிறங்கிய சீர் அன்றி யான் வேண்டிலன் | தேவரீருடைய திருமேனியில் விளங்குகிற ஸௌந்தரியம் முதலிய குணங்களைத் தவிர வேறொன்றிலும் நான் கண்வைக்க மாட்டேன்; |
| நிரயம் தொய்யில் | ஸம்ஸார நரகக்குழியில் |
| கிடக்கிலும் | அழுந்திக் கிடந்தேனாகிலும் |
| சோதி விண் சேரிலும் | சோதிமயமான பரம பதத்தை அடைந் தேனாகிலும் |
| இவ் அருள் | (தேவரீருடைய திருமேனியழகை அநுபவித் திருக்கைக்கு உறுப்பான) கிருபையை |
| நீ செய்யில் | தேவரீர் செய்தருளி னால் தான் |
| தரிப்பன் | (ஸம்ஸாரத்திலோ மோக்ஷத்திலோ) கால்பாவிநிற்பேன். |

* * *—அடியேன் அபேக்ஷிப்பவற்றையெல்லாம் குறையறக் கொடுத்தருள்கின்ற ஸ்வாமீ!, தேவரீர் அடியேனுக்கு எம்பெருமானை ஸுலபமாகக் காட்டிக் கொடுத்தருளினாலும் தேவரீருடைய திருமேனியழகை அநுபவிப்பதில் அடியேனது நெஞ்சு ஊன்றியிருக்குமேயொழிய அவ்வெம்பெருமானை விரும்பவே மாட்டாது. தேவரீருடைய திருமேனியின் அநுபவம் அடியேனுக்கு வாய்த்திக்குமாகில் இவ்விருள் தருமாஞாலத்தில் இருப்பும் எனக்குத் துயரை விளைக்கமாட்டாது. இவ்வநுபவம் இல்லாவிடில் பரமபதமும் எனக்கு ஆநந்தத்தை விளைக்கமாட்டாது. இவ்வநுபவம் மாறாமல் வாய்த்திக்குமிடமே எனக்குப் பரமபோக்யமானது. அது ஸம்ஸார பூமியாகவுமாம், நரகமாகவுமாம்; பரமபதமாகவுமாம். ஆகையால் அடியேனுக்கு தேவரீருடைய திவ்யமங்கள விக்ரஹாநுபவமே இடைவிடாது செல்லும்படி அருள்புரியவேணுமென்று வேண்டினாராயிற்று.

நிரயத்தொய்யில்=நிரயமாவது நரகம். இந்த ஸம்ஸாரநிலமே நரகமெனப்படும். தொய்யில் — சேறு. ஏழனுருபு தொக்கியிருக்கிறது. தொய்யல் என்பாருமுளர். ... .... (கOச)



http://acharya.org

செழுந்திரைப் பாற்கடல் கண்டுயில்மாயன் * திருவடிக்கீழ்
விழுந்திருப்பார் நெஞ்சில் மேவுநன்ஞானி * நல்வேதியர்கள்
தொழுந்திருப் பாத னிராமாநுசனைத் தொழும்பெரியோர்
எழுந்திரைத் தாடுமிடம் * அடியேனுக் கிருப்பிடமே. (க0௫)

| | |
|---|---|
| செழு திரை பால் கடல் | அழகிய அலைகளையுடைய திருப்பாற் கடலில் |
| கண் துயில் | பள்ளிகொண்டிராநின்ற |
| மாயன் | ஸர்வேச்வரனுடைய |
| திரு அடி கீழ் | திருவடிகளின் கீழே |
| விழுந்து இருப்பார் | விழுந்துகிடக்கும் மஹான்களுடைய |
| நெஞ்சில் மேவும் | ஹ்ருதயத்திலே பொருந்தி யெழுந்தருளி யிருக்கிற |
| நல் ஞானி | சிறந்த ஞானியாயும் |
| நல் வேதியர்கள் தொழும் திரு பாதன் | நல்ல வைதிகர்களால் ஸேவிக்கப்பட்ட திருவடிகளை யுடையராயு மிருக்கிற |
| இராமாநுசனை | எம்பெருமானாரை |
| தொழும் | ஸேவிக்கின்ற |
| பெரியோர் | மஹாத்மாக்கள் |
| எழுந்து இரைத்து ஆடும் இடம் | உடம்பு இருந்த விடத்தில் இராமல் கிளர்ந்து கோஷித்துக் கொண்டு கூத்தாடும் இடம் |
| அடியேனுக்கு இருப்பு இடம் | அடியேன்வஸிக்கு மிடமாகும். |

* * *—கீழ்ப்பாட்டில் "நிரயத் தொய்யில் கிடக்கிலும் சோதிவிண் சேரிலும்" என்று ஸம்ஸாரத்தையும் பரமபதத்தை யும் வாசியற்றதாகச் சொன்ன அமுதனாரை நோக்கிச் சிலர், 'உலகத்தில் எல்லாரும் ஸம்ஸாரத்தை வெறுத்துப் பரமபதத்தை ஆசைப்படாநிற்க நீர் ஸம்ஸாரத்தையும் பரமபதத்தையும் துல்ய மாகக்கருதிப் பேசுகின்றீரே, உமக்கு உத்தேச்யமான ஸ்தானம் எது? சொல்லும்' என்ன; ஸ்ரீராமாநுஜபக்தர்கள் களித்துக் கூத்தாடுகின்ற இடமே எனக்குப் பரமோத்தேச்யமான ஸ்தானம் என்கிறார்.

திருப்பாற்கடல்நாதனை ஸ்ரீமந்நாராயணனை அடிபணிந்தவர் களும் அவ்வெம்பெருமானை உபேக்ஷித்துவிட்டு எம்பெருமா னாரையே நெஞ்சில் தியானிப்பர்களாம். அப்படிப்பட்ட எம்பெரு மானாரை ஆச்ரயித்த மஹான்கள் எம்பெருமானாரை அநுபவித் ததனாலுண்டாகும் மகிழ்ச்சி தலைமண்டை கொள்ளப் பெற்று

http://acharya.org

உடம்பு இருந்த விடத்திலிராதே கிளர்ந்து கடலிரைத்தாற்போலே இரைத்துக்கொண்டு தலைகால் தெரியாமல் எங்கெங்குக் கூத்தாடுவர்களோ அங்கங்கெல்லாம் அடியேன் உவந்து இருப்பேன்; அவ்விடமே எனக்கு முக்திஸ்தானம் என்றாயிற்று. (௧௦௫)

[சாற்றுப் பாசுரங்கள்.]

இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம் * மாலிருஞ்சோலையென்னும்
பொருப்பிடம் மாயனுக்கென்பர் நல்லோர் * அவைதன்னொடும் வந்
திருப்பிடம் மாய னிராமாநுசன்மனத் தின்றவன்வந்
திருப்பிடம் * என்ற னிதயத்துள்ளே தனக்கின்புறவே. (௧௦௬)

| | |
|---|---|
| மாயனுக்கு | ஸர்வேச்வரனுக்கு |
| இருப்பு இடம் | வாஸஸ்தானம் (எவையென்றால்) |
| வைகுந்தம் | பரமபதமும் |
| வேங்கடம் | திருவேங்கடமலையும் |
| மாலிருஞ் சோலை என்னும் பொருப்பு இடம் | திருமாலிருஞ் சோலையென்கிற திருமலையும் (ஆகிய இவையாம்) |
| என்பர் நல்லோர் | என்று ஸத்துக்கள் சொல்லுவர்கள். |
| மாயன் | (இவற்றை இருப்பிடமாகவுடைய) ஸர்வேச்வரன் |

| | |
|---|---|
| அவை தன்னொடும் வந்து இருப்பிடம் | அந்த ஸ்ரீவைகுண்டம் முதலிய வற்றோடே கூடவந்து எழுந்தருளியிருப்பது |
| இராமாநுசன் மனத்து | எம்பெருமானாருடைய திருவுள்ளத்திலேயாம்; |
| அவன் | அவ்வெம்பெருமானார் தாம் |
| இன்று வந்து | இப்போது வந்து |
| தனக்கு இன்பு உற இருப்பிடம் | தமக்கு ஆநந்தமாக எழுந்தருளியிருப்பது |
| என் தன் இதயத்துள்ளே | அடியேனுடைய ஹ்ருதயத்தினுள்ளேயாம். |

* * *—கீழ்ப்பாட்டிற் கூறியபடியே அமுதனாருடைய எல்லை கடந்த ப்ராவண்யத்தை அறிந்த எம்பெருமானார் 'நம்மேல் இவ்வளவு காதல்கொண்டிருக்கிற இவருடைய நெஞ்சை நாம்விட்டு நீங்கலாகாது' என்று கொண்டு அமுதனாருடைய திருவுள்ளத்தை மிகவும் விரும்பியருள, அதனைக்கண்டு மகிழ்ந்து பேசுகிறார்.

எம்பெருமான் எங்கே எழுந்தருளியிருப்பனென்றால், ஸ்ரீவைகுண்டத்திலும் திருவேங்கடமலை திருமாலிருஞ்சோலைமலை

http://acharya.org

முதலிய திவ்ய தேசங்களிலும் எழுந்தருளியிருப்பனென்று நல்லோர்கள் சொல்லுவர்கள். அப்படிப்பட்ட எம்பெருமான் அந்த ஸ்ரீ வைகுண்டம் முதலிய இடங்களையும் பேர்த்துக்கொண்டு எம்பெருமானார் திருவுள்ளத்திலே வந்து நித்யவாஸம் பண்ணுகின்றான். அப்படிப்பட்ட எம்பெருமானார் என்னுடைய நெஞ்சத்திலே நித்யவாஸம் பண்ணுகின்றார்.

பெரிய திருவந்தாதியில், "புவியுமிருவிசும்பும் நின்னகத்த, நீயென்செவியின் வழிபுகுந்து என்னுள்ளாய்—அவிவின்றி, யான் பெரியன் நீ பெரியை என்பதனை யாரறிவார், ஊன்பருகு நேமியா யுள்ளு." என்ற பாசுரம் இங்கே நினைக்கத்தகும். உபய விபூதி விசிஷ்டனான எம்பெருமான் உடையவர் திருவுள்ளத்திலே உள்ளான்; உபயவிபூதி விசிஷ்டனைக் கபளீகரித்த அந்த உடையவரையும் அடியேன் கபளீகரித்தவன்—என்றதாகிறது.

பொருப்பு—மலை. .... ... ... (௧௦௬)

இன்புற்றசீலத் திராமாநுசா * என்று மெவ்விடத்தும்
என்புற்றநோ யுடல்தோறும் பிறந்திறந்து * எண்ணரிய
துன்புற்று வீயினும்சொல்லுவ தொன்றுண்டுன் தொண்டர்கட்கே
அன்புற்றிருக்கும்படி * என்னையாக்கியங் காட்படுத்தே (௧௦௭)

| | |
|---|---|
| இன்பு உற்ற | ஆநந்தபூர்ணரா யெழுந்தருளி யிருக்கிற |
| சீலத்து இராமாநுசா | ஸௌசீல்ய குணமுடைய எம்பெருமானாரே!, |
| சொல்லுவது ஒன்று உண்டு | தேவரீரிடத்தில் அடியேன் விஜ்ஞாபிக்க வேண்டிய விஷயம் ஒன்றுண்டு; |
| (அஃது என்னவென்றால்) | |
| என்பு உற்ற நோய் உடல் தோறும் | எலும்பிலே உறைந்து நலியக்கூடிய வியாதிகளுக்கு இருப்பிடமான சரீரங்களிலெல்லாம் |
| பிறந்து இறந்து | பிறப்பதும் இறப்பதுமாகி |
| எண்ண அரிய துன்பு உற்று வீயினும் | எண்ணமுடியாத துன்பங்களையநுபவித்து முடிந்து போனாலும் |
| என்றும் | எல்லாக் காலங்களிலும் |
| எவ் இடத்தும் | எல்லாவிடங்களிலும் |
| உன் தொண்டர்கட்கே | தேவரீருடைய பக்தர்கள் விஷயத்திலேயே |
| அன்பு உற்று இருக்கும்படி என்னை ஆக்கி | பக்தனாயிருக்கும்படி அடியேனைச் செய்தருளி |
| அங்கு | அந்த பக்தர்களிடத்தில் |

http://acharya.org

ஆள் படுத்து { (அடியேனை) ஆட்படுத்தி யருளவேணும்; | (இதுவே அடியேனுடைய வேண்டுகோள்.)

* * *—கீழ்ப்பாட்டிற் கூறியபடியே தம்மிடத்தில் வ்யாமோஹங்கொண்டிருக்கிற எம்பெருமானாரை நோக்கி 'ஸ்வாமிந்! தேவரீருக்கு அடியேன் விண்ணப்பம் செய்யவேண்டிய விஷயம் ஒன்றேயுள்ளது. அதாவது—பலவகை நோய்களுக்குக் கொள்கலமான சரீரத்தில் பிறப்பதும் இறப்பதுமாயிருந்துகொண்டு எவ்வளவோ துக்கங்களை அநுபவிக்கும்படியாக நேர்ந்தாலும் நேரட்டும்; எந்த நிலைமையிலும் அடியேன் தேவரீருடைய அந்தரங்க பக்தர்களுக்கே அடிமைசெய்யப் பெறவேணுகில் அதுவே போதுமானது. ஆகையாலே அடியேனுக்கு வேறொன்றும் பிரார்த்திக்கத் தக்கதில்லை. எத்தனை பிறவிகள் நேர்ந்தாலும் அந்த நிலைமைகளில் அடியேனை தேவரீருடைய பக்தர்களுக்கே அடிமைப்படுத்தியருளவேணும்—என்பதொன்றையே பிரார்த்திக்கின்றேனென்றுராயிற்று. ... .... ... .... ... (கoஎ)

அங்கயல் பாய்வயல் தென்னரங்கன் * அணியாகமன்னும்
பங்கய மாமலர்ப் பாவையைப்போற்றுதும் * பத்தியெல்லாம்
தங்கிய தென்னத் தழைத்துநெஞ்சே நந்தலைமிசையே
பொங்கிய கீர்த்தி * இராமாநுசனடிப் பூமன்னவே. (கoஅ)

நெஞ்சே — ஓ மனமே!

பத்தி எல்லாம் தங்கியது என்ன தழைத்து { பக்தியெல்லாம் நம்மிடத்திலே குடிகொண்டதென்று சொல்லும்படியாக வீறுபெற்று,

பொங்கிய கீர்த்தி இராமாநுசன் அடிப் பூ { பாரந்த புகழையுடையரான எம்பெருமானாருடைய திருவடித் தாமரைகள்

நம் தலை மிசையே மன்ன { நமது தலைமேலே நித்யவாஸம் பண்ணும்படியாக,

(நாம் செய்யவேண்டிய காரியம் என்னவென்றால்)

அம் கயல் பாய் வயல் தென் அரங்கன் { அழகிய கயல் மீன்கள் பாய்கிற கழனிகள்சூழ்ந்த தென்னரங்கத்தில் உறையும் பெருமானுடைய

அணி ஆகம் மன்னும் { அழகிய திருமார்பிலே நித்யவாஸம் பண்ணுகிறவளாய்

பங்கயம் மா மலர் பாவையை { சிறந்த தாமரைப் பூவில் பிறந்த பதுமை போன்றவளான ஸ்ரீமஹாலக்ஷ்மியை

போற்றுதும் — வாழ்த்துவோம்.

http://acharya.org

# இராமாநுச நூற்றந்தாதி—அடிவரவு.

1. பூமன் கள்ளார் பேரிய லென்னை,
எனக் கியலும் மொழி வருத்து மிறை மன் சீர்.
2. சீரிடம் செய்யும் கதி சோரா தாழ்,
முனி யெய்தற் குறு வாரப்பொழில் நிதி.
3. நிதி கார்த்தி வைப்பா மொய்த்த காரேய்,
திக்குக் கொள்ள நெஞ்சில் கூட்டு மின்ப மாண்டு.
4. ஆண்டு பொரு மடையார் நில நயவேன்,
அடல் படி யாக்கிப் பொருளும் சேம மண்.
5. மண் ஆயி சுரச் சொல்லார் பேறு,
கூறு மிறை நிக ரான துதிப் படி.
6. அடி பார்த் தற்புத நாட்டி கண் கோக்குலம்,
மற்றொரு பேதையர் கடலுணர் கொழுந்து.
7. கொழு விரும் பிடியைப் பண்டரு வாழ் ஞானம்,
சரண மாரெனச் சிந்தை யென்னையும் சார்.
8. சார் கைத்த வண்மை தேர் செய்த்தலை நின்ற,
ஈந்தனன் கருத்தில் பொய்கை நல் சோர்வி.
9. சோர் தெரிவுற்ற சீர் கண் போதி பற்று,
பெரியவர் கலிமிக்க போற்றரும் நினையார்.
10. நினையார் மருள் புண்ணணி கட்டத் தவ முண்ணின்,
வளரும் தன்னையுற் றிடும் தற் போந்த.
11. போந்ததென் மயக்கும் நையும் வளர்ந்த,
கையிற் செழுந்திரை யிருப் பின்பங்கயல்பூ.

## அறிவிப்பு.

இயற்பா உரை மூன்று ஸம்புடமாக வகுக்கப்பட்டுள்ளது. முதல் ஸம்புடம்—நான்கு திருவந்தாதிகள். இரண்டாம் இரண்டாம் ஸம்புடம்—நம்மாழ்வார் திவ்ய ப்ரபந்தங்களாகிய, திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி. மூன்றாம் ஸம்புடம்—திருமங்கையாழ்வார் பிரபந்தங்களான திருவெழுகூற்றிருக்கையும் திருமடல்களும், இராமாநுச நூற்றந்தாதியும். இவை தனித் தனிப் புத்தகமாகவும் கிடைக்கும்.

http://acharya.org

# இராமாநுச நூற்றந்தாதிச் செய்யுளகராதி.


| செய்யுள் | பக்கம். | செய்யுள் | பக்கம். | செய்யுள் | பக்கம். |
|---|---|---|---|---|---|
| அங்கயல் | 165 | கள்ளார் | 18 | நிலத்தை | 78 |
| அடல்கொண்ட | 81 | காரேய் | 50 | நினையார் | 145 |
| அடியை | 100 | கார்த்திகை | 45 | நின்றவண் | 130 |
| அடையார் | 58 | கூட்டும் | 54 | நெஞ்சில் | 52 |
| அற்புதன் | 102 | கூறும் | 95 | நையும்மனம் | 158 |
| ஆக்கியடிமை | 84 | கைத்தனன் | 126 | படிகொண்ட | 83 |
| ஆண்டுகள் | 56 | கையிற்கனி | 160 | பண்டரு | 116 |
| ஆயிழையார் | 89 | கொழுந்து | 112 | பற்றுமனிசரை | 141 |
| ஆரப்பொழில் | 43 | கொள்ள | 52 | பார்த்தான் | 101 |
| ஆரெனக்கின்று | 122 | கோக்குலம் | 105 | பிடியை | 115 |
| ஆனதுசெம்மை | 98 | சரணமடைந்த | 120 | புண்ணிய | 147 |
| இடங்கொண்ட | 34 | சார்ந்தது | 125 | பூமன்னுமாது | 16 |
| இடுமே | 154 | சிந்தையினோடு | 123 | பெரியவர் | 142 |
| இயலும் | 26 | சீரிய | 33 | பேதையர் | 109 |
| இருந்தேன் | 114 | சீர்கொண்டு | 137 | பேரியல் | 20 |
| இருப்பிடம் | 163 | சுரக்கும் | 90 | பேறொன்று | 93 |
| இறைஞ்சு | 96 | செய்த்தலை | 129 | பொய்யை | 133 |
| இறைவனை | 30 | செய்யும் | 35 | பொருந்திய | 57 |
| இனியென் | 14 | செழுந்திரை | 162 | பொருளும் | 85 |
| இன்பந்தரு | 55 | சேமநல்வீடும் | 87 | போந்ததென் | 156 |
| இன்புற்ற | 164 | சொல்லார் | 92 | போற்றரும் | 144 |
| ஈந்தனன் | 131 | சொல்லின் | 13 | மண்மிசை | 88 |
| உணர்ந்த | 111 | சோராத | 38 | மயக்குமிருவினை | 157 |
| உண்ணின்று | 150 | சோர்வின்றி | 135 | மருள்சுரந்து | 146 |
| உதிப்பன | 99 | ஞானங்கனிந்த | 118 | மற்றொரு | 108 |
| உறுபெறும் | 42 | தவந்தரும் | 149 | மன்னிய | 32 |
| எய்தற்கு | 41 | தற்கச்சமணரும் | 155 | முனியார் | 40 |
| எனக்குற்ற | 23 | தன்னை | 153 | முன்னைவினை | 9 |
| என்னைப்புவியில் | 22 | தாழ்வொன்று | 39 | மொய்த்த | 49 |
| என்னையும் | 124 | திக்குற்ற | 50 | மொழியை | 27 |
| ஓதிய | 140 | தெரிவுற்ற | 136 | வண்மையினாலும் | 127 |
| கடலளவாய | 110 | தேரார்மறை | 128 | வருத்தும் | 29 |
| கட்டப்பொருளை | 148 | நயந்தரு | 10 | வளரும்பிணி | 152 |
| கண்டவர் | 104 | நயவேன் | 80 | வளர்ந்த | 159 |
| கண்டுகொண் | 138 | நல்லார் | 135 | வாழ்வற்றது | 117 |
| கதிக்கு | 37 | நாட்டிய | 103 | வைப்பாய | 47 |
| கருத்திற்புகுந்து | 132 | நிகரின்றி | 97 | | |
| கலிமிக்க | 143 | நிதியை | 44 | | |


PRINTED AT THE MODEL PRESS, RATTAN BAZAAR ROW, MADRAS.

http://acharya.org